ஜெபமாலை

வேதநாயக வேதசாஸ்திரியார்

மின்னூல் கோர்வை: **எஸ்.கே. இராசன்,** டக்கரம்மாள்புரம்.

Publisher's Note

Vedanayagam Sastriyar, arguably the greatest Tamil Christian poet, demonstrated extraordinary punditry in poetry, music and drama. Tutored by the peerless Prussian missionary Christian Friedrich Schwartz, Sastriyar acquired a commendable grasp of various subjects like musicology, botany, theology, geography, physiology, biology, astronomy, philosophy and sociology - to say nothing about his more than nodding acquaintance with the English, German and Latin languages; besides, he was comfortable with the usage of Sanskrit too . And his works covered the entire human life cycle - from lullaby to elegy - and even went beyond to describe heaven!

Sastriyar's manuscripts and books can be found in major centres of literature, arts, academia and theology around the world, most notably in the British Library - London, the French National Library - Paris, the Lutheran Museum - Halle, the United Theological College - Bangalore and the Saraswati Mahal Library - Thanjavur. His lyrics form the major portion of the book of Tamil Christian songs used widely for worship in Tamil Christian congregations the world over.

Unfortunately, only a handful of his 130 books is available to the public today and it has been my desire for some years to put his works in cyberspace for easy access by those interested, with only a few clicks of the mouse, touch of fingers or perhaps even voice commands. Even if you remember only a line or title, you should be able to search digitally and find the complete stanza. And what better book to start with than ஜெப மாலை! It is a veritable treasure strung together with varied versification styles and is a store house of Bible knowledge, a testament of faith, a denunciation of superstition, a tool for evangelization and a rhapsody of worship.

So here it is, reproduced in its entirety, complete with the original Preface. Production of the work in this form did pose some challenges, as the printed book of 1974 available for reference was not itself quite error free. I am grateful to Mary Ambrose of Voice of the Shepherd - Vellore for the initial typing work. If this effort has succeeded today, many thanks must go to my cousins the Johnsons and Chellas, my son Rabin and my mother Sarojini Vincent, not forgetting Rev. Dr. Johnson Rethinasamy of the Immanuel Lutheran Church, New York for his wholehearted encouragement and ready acceptance to host this work on his website dedicated to Sastriyar.

Another 129 books or so to go!

Judah S.G. Vincent September 2014

Blog : **www.judahsjottings.com**

செய்யுள் அட்டவணை

ஜெபமாலை

இதிலே அந்திசந்தி தேவனைத் துதிக்கிற பாடல்கள் அடங்கியிருக்கிறது

இரண்டு வகுப்பு

1. வகுப்பு . . . . 31 ஜெபமாலை
2. வகுப்பு. . . . . 10 ஜெபமாலை

சங். 96:2
கர்த்தரைப் பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்தரித்து நாளுக்கு நாள் அவருடைய ரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்.

சங். 88:1
என் இரட்சிப்பின் தேவனாகிய கர்த்தாவே, இரவும் பகலும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.

இஃது
தஞ்சை மாநகரில்
திருநெல்வேலிச் சுவிசேடகவிராய
வேதநாயக வேதசாஸ்திரியார் பாடியது

ஜெபமாலை

முன்னுரை

வேதநாயக சாஸ்திரியார் Fabricius ஐயர் மொழிபெயர்த்த German ஞானப்பாட்டுகளிருந்து கருத்துகளை எடுத்து எழுதி இருக்கிறார். ஆங்கில பாடல்கள் இசைக்கு ஏற்ப கீர்த்தனைகளை இயற்றி இருக்கிறார். தியாகராஜர் முதலியவர்களின் கீர்த்தனை இராகங்களையும் உபயோகித்து பாடல்களை எழுதி இருக்கிறார். பொதுப்பட கிறிஸ்து சபையின் பிரயோஜனத்திற்கென்று ஒவ்வொரு விசுவாசியின் பக்தி அப்பியாசத்திற்கும், வளர்ச்சிக்கும் தமிழ் மொழியில் மாணிக்கவாசகர் முதலியவர்கள் எழுதிய திருப்புகழ், விருத்தம், கழிநெடில் முதலிய இலக்கிய முறையில், தம்முடைய ஆழ்ந்த, உயர்ந்த ஆவிக்குரிய அனுபவங்களை தன்னுடைய ஜீவிய காலத்தின் நீண்ட பகுதியை உபயோகித்து, திருச்சபையின் பக்தி விருத்தியினால் தேவநாமம் மகிமைப்பட இந்நூலை இயற்றி பிரதிஷ்டை செய்திருக்கிறார். பூர்வ பக்திப் பாடல்களைப் படிப்பது புது இலக்கிய விருத்திக்கு அத்தியாவசியமாயிருக்கிறது. இதற்கு ஜெபமாலை மிகவும் பிரயோஜனமானது.

மெய்யான கடவுளை ஆராதித்து, எல்லாவற்றிற்கும் மேலான சத்தியத்தைத் தம்முடைய காவியங்களில் எழுதுவதே தனக்கு அமைந்த சிறப்பு என்று அறிவிக்கிறார். Dr. தேவநேசன் வே. சா. வின் சரித்திரத்தில், **மாணிக்கவாசகரின் 'திருவாசகம்'** முதலிய செய்யுட்களிலிருந்து சிலவற்றை எடுத்து, அதனோடு **'ஜெபமாலை' No. 13:8** முதலிய கவிகளையும் **No. 6:3** முதயலியவைகளையும் **ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்**. **ஜெபமாலையில் கருத்தும், இசைச் சுவையும், செய்யுட் சுவையும் மிகுந்துள்ளன**. Internal rhyme – உள் எதுகை நிறையப் பெற்று ஆத்துமாவைக் கவர்ந்து கொள்ளை கொண்டு போகிறது என்று எடுத்துக் காட்டுகிறார்.

செய்யுள் அட்டவணை

சில பாகங்கள் (உ–ம்) No. 21 முதலியவை **‘வேதநூல் ஜெபங்கள்’** என்று சொல்லப்படும். இவைகளிலும் சொற்சுவை தெளிவாக வளருவதைக் காணலாம். (உ–ம்) 4 –ஆம் கவி

‘கருத்தனே நீரென் உதட்டினைத் திறவும்
கனதுதி என்றனாப் புரியும்’

No. 2. ’கும்பிடுகிறேன் நான்’,
No. 31 ‘கொண்டாட்டு’ (உ–ம்)

‘சுந்தர சீவக்காவே திருமந்திர தேவக்கோவே’ – இவை கும்மி இராகங்களோடு சேர்ந்தவை.

No.23 ஜெபமாலை ‘பிறப்பின்பேரிலே’ பாடினது. பக்தி விநயமாகவும் பாடலாம்.
(உ–ம்) No.10, 13 கவிகள் **உரக்க, அழுத்தமாக, கெம்பீரமாக, கட்டியம் முழக்கமாகவும் வழங்கலாம்.**

No.10, 11 ‘அகப்பற்று’, ‘மன்றாட்டு’, **உருக்கமாக பாடத்தக்கது.**

No.6 ‘தேவஇலட்சணம்’ **ஆசிரிய விருத்தங்களாக எழுதப்பட்டுள்ளது.** ஆண்டவருக்குத் தகுந்த சிறப்பு மொழிகளால் தொடுக்கப்பட்டது.
(உ–ம்) 8 ம் கவி:

‘துக்கத்தில் என் ஆறுதல்
வாழ்வில் என் களிப்பு
துன்பத்தில் எனதின்பம் நீ’

No.7 ‘தேவ சுபாவ மகிமை’யின் பேரிலே, உபயாயார்த்தமாக அதாவது **ஒரே விதமான தொனியில் மற்றொரு அர்த்தங்கொண்டதாக எழுதப்பட்டது.** இது ஒரு சிறந்த கவித் திறம். **ஒவ்வொரு கவிக்கும் கீழே அர்த்தமும் கொடுத்திருக்கிறார்.**

‘பொன்னாட்டவர்கள் வணங்கானே
பொன்னாட்டவர்கள் வணங்கானே’

பொன் (பொருள்) நாட்டமுள்ளவர்களால் ஆராதிக்கப்படாதவர், வானாட்டார் வணங்கப் பெற்றவனே என்றவாறு அர்த்தங்கொள்ள வேண்டும். அர்த்தமும் நெடுகிலும் கொடுத்திருக்கிறார்.

No.14 பாவசங்கீர்த்தனம் ஆகும். **“துணையில்லையே எனக்காதியாம் திருப்பாவா”** என்ற கீர்த்தனையைப் பார்க்கிலும் இசையிலும், கருத்திலும் உருக்கமானது.
(உ-ம்) No. 10 கவி:

‘மறுதலித்து லோக வாழ்வு முழுதையும் வெறுக்கவும்
வானகத்தி னாசையால் மூவாசையை யொறுக்கவும்’

No.4 எளிதாகப் பாடக்கூடியது. சொற்சுவையும் கருத்தும் நிறைந்தது.

‘திருவானொளிவே தெருளே பொருளே
தேவேகாவாவே
திரமே யுரமே வரமே பரமே
சீவாயே யோவா’

No.25 நிந்தாஸ்துதி. **“கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து வெட்கப்படேன். அவரையே அன்றி வேறொன்றையும் அறியேன்”** என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறபடி கிறிஸ்துவின் தாழ்மையினூடே அவருடைய மகத்துவத்தையும், சிறுமையினூடே அவருடைய சிறப்பையும் விசுவாசி காணவேண்டும் என்று இவ்விதமான கவியையும் இயற்றி இருக்கிறார்.

இரண்டாங் காண்டம் 10ஆம் ஜெபமாலை **‘திருச்சபை ஊஞ்சல்’**. இதில் கவிராயருடைய மனப்பான்மை, வேத அறிவு, தேவ துதி இவை பொங்கி வழிவதைக் காணலாம். உள்ளான அர்த்தத்தையும் அறிவது பிரயோஜனமாகும். கடைசி மூன்று கவிகளில் கிறிஸ்துவினால் அனுபவிக்கும் சந்தோஷங்களையும் சிறப்புகளையும் பாடியுள்ளார்.

செய்யுள் அட்டவணை

8, 9 ஆம், கவிகள்:

> **'உண்டான நன்மையெல்லாம் நமக்குண்டாச்சு**
> **உம்பரமும் அம்பரமும் நமக்கென்றாச்சு'**
> **'யேசுவினால் மேன்மை பெற்றோம் கிருபை பெற்றோம்**
> **இன்பமுறப் பரிசுத்தாவியையும் பெற்றோம்'**

கிறிஸ்துவினால் மீட்கப்பட்டவர்கள் **ஜெபமாலையை இசையோடும் ஆவியோடும் பாடி, பரவசமாகி ஆவியில் வளர்ந்து தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்பதே எமது நம்பிக்கையும் விண்ணப்பமுமாகும்**.

கடைசியாக இப்புத்தகத்தை அச்சிட முன்வந்து பதிப்பிக்க உதவி புரிந்த **மாரநாதா அச்சக உரிமையாளர் கனம் D. Henry Joseph** அவர்களுக்கு எம் நன்றி உரித்தாகும். அதோடு இதை அச்சிடபண உதவி புரிந்த **உறவினருக்கும் எம் நன்றி**.

தஞ்சாவூர் — இப்படிக்கு

ஜனவரி, 1974 — **வே. சேம் வேதநாயகம் சாஸ்திரியார்**

Venerable **VEDANAYAGA SHASTRIYAR**
Evangelical poet of Tanjore

Born: **7 September 1774**, in **Tinnevelly**

Promoted to glory: **25 January 1864**, in **Tanjore**

PREFACE

These hymns are drawn up like the excellent hymns of Europeans for public worship. They are entitled Jepamalai or Rosary of Prayers because they are intended to accompany daily prayer, both morning and evening.

Part I consists of 31 Jepamalai in number, adapted for 31 days of the month, setting forth the glories of the triune God, the Father, Son and the Holy Ghost, the divine attributes, the work of salvation and meeting the prejudices of heathenism. It also contains praises to be used on occasions of joy, of affliction, of death, fifteen prayers for congregational use, the Litany and other admonitions appertaining to piety.

Part II contains Hymns in the Viruttam Metre numerically from one to twelve, on the facts of scripture narrative. If priests, catechists, and schoolmasters could get it by heart, they would be able to give proper answers to the questions posed to them, from the Old and New Testaments.

In ancient times, David, Asaph, & co., inscribed their names to the Psalms they composed. In like manner Vedanayagam has thought fit to inscribe his name at the end of each Japamalai, not from motives of pride or vain glory, but from a desire of being remembered at the throne of grace, as also that the readers may know the author, vide Exodus, Ch. 28 verses 9 to 12 and 29.

O Brethren, the members of Christ's church who use this book of prayer! Vedanayaga Veda Shastri, observing that a guide for maintaining decency and order in the prayer meeting was needed for you to agreeably use in the mode of your worship, i.e. after the manner of Common Prayer now in use among the Europeans, has composed this work with great labor and attention; he was engaged in this matter for the space of 45 years, that is from 1810 to 1855, and presents it to you now as a monument of his love with a request that you and your children and your children's children may remember him and love him and his descendants for the sake of the Lord.

VEDANAYAKA SHASTRY

செய்யுள் அட்டவணை

முகவுரை

இப்புஸ்தகம் ஐரோப்பியருடைய உன்னதமான பாடல்களாகிய பிரார்த்தனைப் புஸ்தகத்துக்கொப்பாய்ச் செய்யப்பட்டது.

இஃது நாடோறும் காலைமாலை ஜெபத்தில் ஜெபப்பிரமாணத்தைப்போல வழங்கப்பட்டு வருவதினால் இதற்கு ஜெபமாலையென்று பெயராயிற்று.

முதற்பாகத்திலே பிதா, சுதன், பரிசுத்தரூபியென்ற திரியேக பராபரனுடைய தேவசுபாவமகிமைகளையும், தேவலட்சணங்களையும், இரட்சிப்பின் கிரியைகளையும் விக்கிரக தேவர்களின் துன்மார்க்கங்களையும் மகிழ்ச்சியின் காலத்துக்கும், உபத்திரவ காலத்துக்கும், மரணகாலத்துக்கும், நித்தியத்துக்கும் அடுத்த சில தோத்திரங்களையும் சபையில் வழக்கமான பதினைந்துஜெபங்களையும், இலித்தானியாகிய சமுதாய விண்ணப்பங்களையும் தேவபக்திக்கடுத்த சில உபதேசங்களையும் பற்பல பாவினங்களாய்ப் பாடி அங்கங்கேஸ்தாபித்து நிதமொன்றாக மாதத்தின் முப்பத்தொரு தேதிக்குச் சரியான முப்பத்தொரு ஜெபமாலைகள் உண்டு.

இரண்டாம் பாகத்திலே பன்னிரண்டு விருத்தமாய்ப் பாடப்பட்ட பன்னிரண்டு இலக்க தோத்திரத்தில் வேதத்தின் பிரதான சங்கதிகள் எல்லாம் அடங்கியிருக்கும்.

குருக்கள் உபதேசிகள் முதல் வாத்திமார்மட்டும் மனப்பாடம் செய்திருந்தால் வேதாகமங்களிற் கேட்ட கேள்விக்கெல்லாம் ஏற்ற மறுமொழி கொடுக்கச் சமர்த்தராயிருப்பார்கள்.

பூர்வத்தில் தாவீது ஆசாப்பு முதலானவர்கள் பாடின சங்கீதங்களில் தங்கள் பெயரை நாட்டினது போல், இங்கேயும் ஜெபமாலைக்கு ஜெபமாலை அதின் அந்தத்தில் வேதநாயகன்

தன்பெயரை நாட்டினான். அது பெருமையினால் அல்ல. கிருபாசனத்தின் நினைப்புக்கென்றும் இதைச்செய்தவன் இன்னானென்று விரும்பினோர் அறிந்துகொள்ளவுந்தானே.
யாத். 28:9–12, 29.

இச்செபப் பிரமாணத்தை வாசிக்கிற கிறிஸ்துவின் அவயவங்களாகிய திருக்கூட்டங்களே! ஐரோப்பியருடைய தேவாராதனைத் திட்டங்களைக்காட்டுஞ் ஜெபப்பிரமாணத்துக்கு ஒப்பாக உங்களுக்கும் உங்கள் தேசாசாரத்தின்படி யாதொரு தேவாராதனைத் திட்டம் இருக்க வேண்டுமென்று சிந்தித்து வேதநாயக வேதசாஸ்திரி மிகுந்த கருத்தோடும் பிரயாசத்தோடும் 1810 முதல் 1855 மட்டுஞ்சென்ற 45 வருடக்காலத்தில் வருடாந்திரங் கொஞ்சம் இந்த ஜெபமாலையை உண்டுபண்ணி இப்போது உங்களுக்குக் காணிக்கையாக அனுப்பி, நீங்களும் உங்கள் பிள்ளைகளும் பிள்ளைகளின்பிள்ளைகளும் தன்னையுந் தன் பின்னடியாரையும் கர்த்தர் நிமித்தயமாக நினைக்கவும் சிநேகிக்கவும் மன்றாடிக் கொள்கிறான்.

சுவிசேட கவிராய
வேதநாயக சாஸ்திரி

செய்யுள் அட்டவணை

INDEX OF SUBJECTS

ஜெபமாலை முதற்காண்டத் தலைவரிசை அட்டவணை

காப்பு 1

முத்தோத்திரம் 4

தேவாரம் 5

கிறிஸ்து வருகைப் பதிகம் 6

1. கடவுள் வணக்கம் 10
2. தேவதோத்திரம் 17
3. ஒம்பிரணவம்–இருக்கிறோம் 21
4. கிறிஸ்துவின் துதி 24
5. தேவமகத்துவம் 30
6. தேவலட்சணம் 36
7. தேவசுவாபமகிமை 46
8. கிறிஸ்துவின் சுவாப மகிமை 58
9. பரிசுத்தாவியின் சுவாப மகிமை 60
10. அகப்பற்று 64
11. மன்றாட்டு 69
12. சத்துரு நாசம் 73
13. கிறிஸ்துவின் தாழ்மை 77

14. பாவசங்கீர்த்தனம்...81
15. பாவசங்கீர்த்தனகலம்.. 85
16. கிறிஸ்துவின் பாடுகளின் தேவாரம்...92
17. உபவாச நாளின் தேவாரம்...97
18. மனவாஞ்சை.. 101
19. வேதநூற் ஜெபங்கள் 108
20. வீண்பத்திநாசம் 116
21. சமுதாயவிண்ணப்பம் 125
22. பரமானுபூதி..136
23. கிறிஸ்து பிறப்பின் பேரிலே சந்த விருத்தம்..........................147
24. கிறிஸ்துவின் சரித்திராதிந்தம்..159
25. ஆத்துமப்பெண் நிந்தாஸ்துதி..176
26. திருச்செயல் 185
27. திருவிளையாட்டூஞ்சல் 193
28. சிலுவைத்தியானம் 197
29. பாவவிமோசனம்.. 209
30. ஆரோக்கியசந்தவெண்பா...213
31. கொண்டாட்டு 216

செய்யுள் அட்டவணை

இரண்டாம் காண்டத்
தலைவரிசை அட்டவணை

1) பன்னிரண்டிலக்கதோத்திரம் 227
2) பிரார்த்தனைச் சமுதாய விண்ணப்பம் 234
3) கிருத்தியம் 243
4) முச்சத்துருநாசம் 250
5) உபத்திரவிமோசனம் 254
6) செபவண்ணம் 258
7) வேதநூற் ஜெபங்கள் 264
8) அத்தனாசி விசுவாசப் பிரமாணம் 273
9) நிசியா சங்கத்தின் விசுவாசப் பிரமாணம் 280
10) திருச்சபையூஞ்சல் 283

INDEX OF VERSES

ஜெபமாலை முதற்காண்டச் செய்யுள் அட்டவணை

1) அகிலபுவ னங்களெல்லாம் அமைத்தார் வந்தார்...................... 6

2) அதிநவநிறையொளிவே யமரர்கடொழுமொளிவே................ 5

3) அந்த ரம்பரம் அம்பர மும்படைத்... 4

4) அறிவே மெஞ்ஞான ஒளிவே விணாடர்....................................... 64

5) அனந்ததயை நிறைந்தவி ருதயம்பெருக.................................. 209

6) ஆக மங்கள் புகழ் வேதா நமோநமோ.. 30

7) ஆதியு மந்தமு மில்லாய் சரணம்.. 10

8) ஆதியே யாதிமுன் அனாதியி லனாதியே.................................. 36

9) இரக்கமுந் தயவு முடைத்த தற்பரனே.. 85

10) உன்னதக் கிருபைமேவும்..197

11) ஒன்றுமில் லாமையில் நின்றுலகம் யாவையும்.......................185

12) கருத்த ரருளிச் செய்த பத்துக்... 108

13) கும்பிடுகி றேனான் கும்பிடுகிறே னெங்கள்....................................17

14) சீர்சிறந்தகட லேவளைந்தசெக...147

15) சீர்தந் துவிண் கதிதந்து நன்...73

16) சீர்மிகும் பிதாவாம் ஒருபரா பரனின்..176

செய்யுள் அட்டவணை

17) சீரிலங்கும் ஆதியானின் சேயனேஎன் னாயனே 81
18) சீரு லவுதி ரித்துவ தேவனே 58
19) சீருயருந்திரி யேகபரன்றிரு 1
20) சுந்தர சீவக் காவே – திரு 216
21) ஞானா விணாடரதி காராப ராபரனின் 69
22) திருக்க ருணைப்பிரானே 97
23) திருமறை மீறும் ஆதிமா னிடரின் 159
24) திருமனு டவதாரத்தை 92
25) திருவருள் பெருகிய விணின் விபுதர்கள் 101
26) திருவா னொளிவே தெருளே பொருளே 24
27) துங்கமிகுந் தேவபரி 213
28) துங்கமிகும் வானாடும் புவியுந் தந்த 193
29) தேவனானநீ மனுடனாகினை 77
30) நீடுங் கிருபா சனநீ தியனை 136
31) பொற்புறு பரமானந்த 60
32) பொற்புறு வானும் பூமியும் அதனிற் 125
33) பொன்னாட்டவர்கள் வணங்கானே 46
34) பொன்னுல குச்சிதப் புகழ்ச்சி யோம்நமா 21
35) மாசிலா மனத்தாய் ராசவிற் பனத்தாய் 116

இரண்டாங் காண்டச்
செய்யுள் அட்டவணை

1. அத்தியந்த திரித்துவ ஏகவஸ்......234
2. ஆதி யானஅச ரீரி மாகிருபை......243
3. ஆவியுய்த்து வாழ்வதற் கியாரெனும் விரும்பினாற்......273
4. ஒருவழியான் ஒருமறையான்......227
5. கடல் சுற்றிய தராதலம் வானுலகட்ட......259
6. திங்களுடு செஞ்சுடரி லங்குபுவி யங்கெனது......254
7. திவிய பிதாச்சுதனாவியுமான......280
8. பொன்னுலகும் பூவுலகும் படைத்தானந்த......283
9. மதியேகன நிதியேயுயிர் வழியேதிரு விழியே......250
10. மனுடசீவத் தயாபரனே......264

ஜெபமாலை

1. காண்டம்

காப்பு

சீருயருந்திரி யேகபரன்றிரு
நாமவளஞ் சொலியே
தேவர்களெண்டிசை யோருமறிந்திட
நாவது கொண்டுரமாய்
நேருயருந்தவி தோதிவணங்கிய
நேர்மைய தின்படியே
நேயமுடன்செப மாலைமொழிந்திட
நீணிரை யந்தனிலே
போருயருங்கன பேய்கள்விழுந்துபொ
லாதகொ டுங்கனியே
பூருவமங்கதம் ஏவையருந்திய
தீதற வுந்தயவா
யேருயருங்குரு சேறிமடிந்திச
றேலையு வந்தருளும்
யேசுவையென்றனி னாவலடங்கவெ
நாளுமி றைஞ்சுவனே

2. வேலைவிடுத்திச றேலைநடத்திய
வேளைம கத்துவமாய்
மேகதறிக்கிடை யேறியமித்திரர்
வீழ்கவ ழித்துடனே
பாலைவிடுத்தடர் சோலைவனத்திடை
பாரம லைக்குவடே
பாதகமற்றிட வேதமளித்தப
ராபரன் மெய்ச்சுதனா
ரோலைவிடுத்துமுன் னூலைமுடித்துல
கோரையு யிர்க்கவுமே

யோகையுடைத் தவீதுபடைத்திரு
கோலைய டுத்துரமாய்
மாலைவிடுத்துநம் மாலையுதித்துரு
மாலையெ டுத்ததனான்
மாலைகொடுத்திட ஞானதிருச்செப
மாலைவ ழுத்துவனே

(எ-து) வேலைவிடுத்து = சமுத்திரத்தைப் பிரித்து;
இசறேலை நடத்திய = இசறாவேலை நடத்திப்போன;
வேளை மகத்துவமாய் = வேளை மேன்மையாய்;
மேக தறிக்கிடை = மேகத் தூணிலே (யாத். 14:19, 24);
ஏறி அமித்திரர் = ஏறியிருந்து பகைவர்;
வீழ்க வழித்துடனே = விழுந்தமிழ்ந்த வழித்துடனே;
பாலை விடுத்து = பாலை நிலத்தைக் கடந்து; அடர் = நெருங்கிய;
சோலை வனத்திடை = மரஞ் செறிந்த வனாந்திரத்தினடுவே;
பார மலைக்குவடே = பாரமான மலையுச்சியிலே;
பாதகமற்றிட = துரோமற்றுப்போக;
வேதமளித்த = வேதங்கொடுத்த பராபரன்;
மெய்ச்சுதனார் = பராபரனுடைய மெய்யான குமாரன்;
ஓலை விடுத்து = கலியாண வோலையனுப்பி;
முன்னூலை முடித்து = முந்தின ஞாயப் பிராணத்தை நிறைவேற்றி;
உலகோரையுயிர்க்கவுமே = உலகத்தாரை யுயிர்ப்பிக்கதக்கதாக;
ஓகையுடைத்த = களிப்புடைய;
தவீது படைத்திரு = தாவீதிராசா கொண்டிருந்த இரண்டு;
கோலையடுத்துரமாய் = செங்கோலையடுத்து ஊக்கமாய்;
மாலை விடுத்து = இருளை நீக்கி;
நம்மாலை யுதித்து = நம்முடைய நிமித்தியமாகப் பிறந்து,
உருமாலை யெடுத்ததனால் = உருவங்கொண்டதனால்;
மாலை கொடுத்திட = மணமாலை கொடுக்கத்தக்கதாக;
ஞானத்திருச்செப = ஞானம்பொருந்திய திவிய செபமாகிய;
மாலை வழுத்தவனே = மாலையைச் சொல்வேன் என்க

3. சீருற்றமணி பரமவெருசலேமணி யர்ச்சய
தேவதேவத் திருமணி
திரித்துவதத் துவமகத்துவவே கத்துவமணி
சிகாமணி மனோமயமணி
பாருற்றவரு வமணியுருவமணி யருபரு
பாமணி பராபரமணி
பரிசுத்ததுத்திய வுத்தமசத்திய வேதமணி
பரமகிரு பாசனமணி
யேருற்றவேத நாயகன்மந்திரமணி சுந்தர
வேகாந்தமணி யம்மணி*
யெந்தைமணி தந்தைமணி விந்தையானந்தமணி
யிங்கணென்றன் கண்மணி
நேருற்றதேசுமணி மாசிலாமணி யரிய
நேசமணி யேசுநாத
நீதிமணியடியரின் பாவவினை தீர்த்தமணி
நித்தியசி வத்தின்மணியே

*அம்மணி = அழகானமணி

தலைவரிசை அட்டவணை

முத்தோத்திரம்

கட்டளைக்கலிப்பா

அந்த ரம்பரம் அம்பர மும்படைத்
தாண்டு காக்கும்அ னாதி பிதாவெனுந்
தந்தை யும்பர்தொ ழுங்கிரு பாசனன்
சத்திய வேதத யாகரு ணாம்பரன்
மைந்த னைக்கொடுத் தேநமை மீண்டவன்
வல்ல பத்தின்ம கத்துவ வஸ்தொரு
எந்தை யேகதி ரித்துவ வர்சய
யேயோ வாசரு வேசர்க்கிஸ் தோத்திரம்

2. ஆதி யேவைசெய் தீவினை தீர்ப்பதற்
காவி யாற்கனி யாஸ்திரி வித்தினில்
நீதி யோடுதித் துப்பிறந் தாரணம்
நீடி யற்புதஞ் செய்துபி லாத்துமுன்
வாதை யாயரும் பாடுபட் டோர்சிலு
வையிற் றொங்கிம ரித்துயிர்த் தேபரஞ்
சோதி யான்வல பாகமி ருந்தினந்
தோன்று மேசுசு வாமிக்கிஸ் தோத்திரம்

3. முத்தி யேகதி ரித்துவந் தன்னிலே
மூன்ற தாண்முது ஞானவ ரத்தினர்
பக்தி யோர்களின் றேற்றர வாளனர்
பார்க்கு மக்கினிக் காட்சியர் பாவிகள்
சித்த மேயுரு கக்குணஞ் செய்பவர்
தேவ னார்சுத னாருடன் மேவுவர்
சத்தி யப்பரி சுத்தவ ரூபியாஞ்
சாந்த னாதிசு யம்புக்கிஸ் தோத்திரம்

செய்யுள் அட்டவணை

தேவாரம்

அதிநவநிறையொளிவே யமரர்கடொழுமொளிவே
கதிநவமிகுமொளிவே கதிர்படுதிருவொளிவே
மதிநவமலையொளிவே மறையதிசயவொளிவே
ததிநவமருளொளிவே சரண்மலரடிதொழுதேன்

2. கனமிகுகுருவடிவே கனிதருவினைமடிவே
மனமிகுயிருள்விடிவே மறைமுழுவதின்முடிவே
சனமிகுதவிதுறவே தவறறுகதிநிறைவே
தினமிகுபவமறவே திருமணவடிதொழுதேன்

3. ஒலிதருமறைவிதியே யுயர்சுரர்தொழுதுதியே
வலிதருநரபதியே மதுரகருணைநதியே
பலிதருதிருநிதியே படிநரர்பெறுகதியே
கலிதருதுயரறவே கடிமலரடிதொழுதேன்

தலைவரிசை அட்டவணை

கிறிஸ்து வருகைப் பதிகம்

விருத்தம்

அகிலபுவ னங்களெல்லாம் அமைத்தார் வந்தார்
ஆதியிலே யிருந்தவார்த் தையுமே வந்தார்
சகலசரா சரங்களெல்லாந் தந்தார் வந்தார்
தானாக நின்றதயா பரனார் வந்தார்
புகலரிய வேதபோ தகனார் வந்தார்
பூரணசற் குணமிகுபுண் ணியனார் வந்தார்
உகமுடியு மூழிவரை நிற்பார் வந்தார்
உன்னதப்ப ராபரனே வந்தார் தாமே

2. அனைத்துலகங் காக்கும்அரு ளாளர் வந்தார்
அண்டமெல்லாம் படைத்திரட்சித் தாள்வார் வந்தார்
கனத்தபர மண்டலத்தின் கர்த்தா வந்தார்
காரணப்ப ராபரனார் மைந்தன் வந்தார்
தனைப்பலியாய்ப் படைத்துலகை மீட்டார் வந்தார்
தம்மையன்றித் தேவனில்லாச் சாமி வந்தார்
எனைக்கிருபை யாய்நோக்குங் கண்ணார் வந்தார்
இம்மானு வேலரசே வந்தார் தாமே

3. முத்திவழி காட்டுவிக்கு முன்னோன் வந்தார்
மூவுலகும் படைத்தளிக்கு முதல்வன் வந்தார்
சத்தியவே தத்தைவிரித் துரைக்க வந்தார்
சருவசீ வாற்றும தயாலு வந்தார்
பத்தருக்குப் பதநான்கும் பகுப்பார் வந்தார்
பரிசுத்த வேதபரி பாலன் வந்தார்
எத்திசையும் கொள்ளாத இறைவன் வந்தார்
இம்மானு வேலரசே வந்தார் தாமே

செய்யுள் அட்டவணை

4. பொன்னுலகம் வீற்றிருக்கும் புகழார் வந்தார்
பூரணசற் குணபொறுமை யாளர் வந்தார்
தன்னிகரில் லாதசரு வேசன் வந்தார்
சத்தியவே தாந்தசாஸ் திரியார் வந்தார்
முன்னிருந்தார் பின்னிருந்தார் முடியார்வந்தார்
மூன்றாளு மொன்றான மூர்த்தி வந்தார்
இந்நிலத்துக் கொளிவுதிக்கும் எம்மான் வந்தார்
இம்மானு வேலரசே வந்தார் தாமே

5. ஆறிலக்க ணச்சொருப ஐயன் வந்தார்
ஆராலு மளவிடக்கூ டாதார் வந்தார்
பேறுதரும் பாக்கியசம் பன்னார் வந்தார்
பிசகாத சத்தியவா சகனார் வந்தார்
நூறுலட்சங் கோடிசங்கத் தலைவர் வந்தார்
நூதனபு ராதனநூ லாசான்வந்தார்
மாறுதலி லாதமகா தேவன் வந்தார்
மானுவேல் கிறிஸ்தரசே வந்தார் தாமே

6. ஓசையா உயிரையா ஒழியார் வந்தார்
உன்னதபத் திராசனத்தி லுயர்ந்தார் வந்தார்
ஆசையா அன்பையாஅருளாய் வந்தார்
அனாதிபிதா வின்சுதனா யாண்டார் வந்தார்
மேசையா நேசையா மெய்யாய் வந்தார்
மிக்காரும் ஒப்பாரு மில்லார் வந்தார்
யேசையா கிறிஸ்தையா இந்தோ வந்தார்
இம்மானு வேலரசே வந்தார் தாமே

7. ஒன்றுமில்லா ஊழிகா லத்தார் வந்தார்
ஒப்பில்லாப் பரமநா யகனார் வந்தார்
அன்றுமின்று மென்றுமிருப் பவரே வந்தார்
அர்ச்சயஅர்ச் சயப்பரிசுத் தாவி வந்தார்

தலைவரிசை அட்டவணை

நன்றறியார்க் கருள்புரியும் நாதன் வந்தார்
நாசரேத் துக்கலிலே நாட்டார் வந்தார்
வென்றிதரும் ஞானபோ தகனார் வந்தார்
மேசியா கிறிஸ்தரசே வந்தார் தாமே

8. மட்டளவில் லாதஒரே வஸ்து வந்தார்
வானவரெ லாம்வணங்கு மகத்துவன் வந்தார்
வெட்டவெளி யாயிருக்கும் விமலன் வந்தார்
வேதாந்த சித்தாந்த விநோதன் வந்தார்
கட்டழகர் கண்ணழகர் கதையாய் வந்தார்
கருணாக டாட்சம்வைத்துக் காக்க வந்தார்
எட்டியுமெட் டாதபரப் பொருளே வந்தார்
இம்மானு வேலரசே வந்தார் தாமே

9. நல்லவர்க்குந் தீயவர்க்கும் நடுவர் வந்தார்
நாட்டவர்க்குங் காட்டகர்க்கும் நட்பாய் வந்தார்
பல்லவர்க்கும் பாவிகட்கும் பரிவாய் வந்தார்
பத்தருக்குஞ் சுத்தருக்கும் பரிந்து வந்தார்
புல்லருக்கும் பொடியருக்கும் பொறுக்க வந்தார்
புரவலர்க்கு மிரவலர்க்கும் பொதுவார் வந்தார்
எல்லார்க்கும் ஏழையர்க்கும் இரங்க வந்தார்
இம்மானு வேலரசே வந்தார் தாமே

10. பாட்டகர்க்குப் பலனளிக்கும் பத்தா வந்தார்
பரவிகட்கெல் லாம்பாவ நாசர் வந்தார்
கேட்டவர்க்கு மோட்சகதி கிடைக்க வந்தார்
கெட்டவர்க்கெல் லாங்கிருபைக் கிறிஸ்து வந்தார்
மாட்டகத்தி னாட்டகத்தின் வடிவார் வந்தார்
மாறாத பெருங்கருணை வைத்தார் வந்தார்
ஏட்டகத்தி லென்னகத்தை யெழுதார் வந்தார்
இம்மானு வேலரசே வந்தார் தாமே

11. ஆகநாய கன்றிருச்சே யானார் வந்தார்
ஆபிரகா மைப்பெயரிட் டழைத்தார் வந்தார்
நீதநாய கன்றரும நிலையார் வந்தார்
நித்தியரா சாங்கநன்னி தானார் வந்தார்
போதநாய கன்பொறுமை யாளார் வந்தார்
புண்ணிய சொரூபபூ பதியே வந்தார்
வேதநாய கன்பாட்டுக் கட்டார் வந்தார்
மெய்யான கிறிஸ்தரசே வந்தார் தாமே

தலைவரிசை அட்டவணை

1. ஜெபமாலை

கடவுள் வணக்கம்

ஆதியு மந்தமு மில்லாய் சரணம்
அதுமுன் னதுமுன் அதுமுன் சரணம்
அல்பா வோமே காவே சரணம்
அடியே நடுவே முடிவே சரணஞ்
சாதிச னங்க ளில்லாய் சரணந்
தானா வானா ஞானா சரணஞ்
சருவ வியாபி சருவவல் லவனே
சரணஞ் சருவே சுரனே சரண
மாதர்கள் மைந்தர்க ளில்லாய் சரண
மனுடவ தாரகு மாரா சரண
மாசில் லாத மணியே சரண
மன்னா பொன்னா மின்னா சரணம்
ஏத மேது மில்லாய் சரணம்
இறையே நிறையே பொறையே சரணம்
எனை மீண்டவனே யெனை யாண்டவனே
யேசு நாதா சரணஞ் சரணம்

2. சத்திய வேதத் தொளிவே போற்றி
சயமே நயமே மயமே போற்றி
தன்முன் னொன்று மில்லாய் போற்றி
சற்குரு ஞானச் சாமி போற்றி
பத்துரை வேதப் பொருளே போற்றி
பரனே கிருபா கரனே போற்றி
பரமும் புவியும் பாதலம் யாவும்
பணியப் பெருமை பெற்றாய் போற்றி
சுத்த திருச்சுவி சேடா போற்றி
தோன்றுஞ் சபையின் றுணைவா போற்றி

செய்யுள் அட்டவணை

சொல்லும் புகழுக் கேற்றாய் போற்றி
துங்கா புங்கா சங்கா போற்றி
யெத்திசை யோரும் ஈடே றிடவே
யிரட்சக னாக வந்தாய் போற்றி
யெனை மீண்டவனே யெனை யாண்டவனே
யேசு நாதா போற்றி போற்றி

3. ஊழியு முடியா தவனே சரணம்
ஒருவெண் ணங்கி தரித்தாய் சரணம்
உயர்பொற் கச்சை யணிந்தாய் சரணம்
ஒளியோன் பார்வைக் குயர்வான் சரணங்
காழெரி வன்னிக் கண்ணா சரணங்
கனசல வொலியின் றொனியா சரணஞ்
காயு முலையின் சொகுசா வொத்த
காலா சீலா ஞாலா சரணஞ்
சூழ்ந்திரு நற்கர மதிலே வேழு
சுடருடு வேந்திக் கொண்டாய் சரணஞ்
சுற்றிய விருபுற முங்கூ ருளவாள்
தோன்றிய வாயா தூயா சரணம்
ஏழு விளக்குத் தண்டா சரணம்
இணைபஞ் சுறைமிஞ் சகனே சரணம்
எனை மீண்டவனே யெனை யாண்டவனே
ஏசு நாதா சரணஞ் சரணம்.

(வெளி. 1:12–16)

4. முந்திய பிந்திய எந்தாய் போற்றி
முதலுங் கடையு நீயே போற்றி
முச்சுட ரொன்றா மூர்த்தி போற்றி
முன்னா பின்னா கொன்னா போற்றி
சிந்த விறந்தும் எழுந்தாய் போற்றி
திருநடு விடவினம் வருவாய் போற்றி

தலைவரிசை அட்டவணை

தீ நரகம ரணங்களி னுடைய
திறவு கோலைக் கொண்டாய் போற்றி
சுந்தர சீவ விருட்ச்சக் கனியைச்
சுகமாய்த் தின்கத் தருவாய் போற்றி
சுற்று மிரண்டா மரணம்வ ராமற்
றுரிதாய்க் கிட்டிக் காப்பாய் போற்றி
யெந்தையு வந்துன் மகவா யெனைநீ
யென்று மேவல் கொள்வாய் போற்றி
யெனை மீண்டவனே யெனை யாண்டவனே
யேசு நாதா போற்றி போற்றி

5. ஆருந் திறவா தடைக்குஞ் சரணம்
அடைக்கா தெவருந் திறக்குஞ் சரணம்
அரசன் றவிதின் மைந்தா சரணம்
அன்னான் றிறவு கோலா சரணம்
நேருஞ் சத்திய நாதா சரணம்
நித்திய பரிசுத் தாவி சரணம்
நீதியி னுத்தம சாட்சி சரணம்
நிமலா விமலா வமலா சரணஞ்
சேருஞ் சிஷ்டிக் காதி சரணஞ்
சென்ன மனைத்துக் காமன் சரணந்
திருவுள மேயுன் றாளே சரணந்
தேவே கோவே பாவே சரணம்
ஏருந் திறமுஞ் சயமும் புகழும்
என்று மென்று முளனே சரணம்
எனை மீண்டவனே யெனை யாண்டவனே
ஏசு நாதா சரணஞ் சரணம்

6. அருமைக் குருவே திருவே போற்றி
யருவே யுருவே தருவே போற்றி
யற்புத ஞானக் கடலே போற்றி
யையா மெய்யா துய்யா போற்றி

யொருமெய்ப் பொருளே யருளே போற்றி
யுச்சித வுச்சித பட்சா போற்றி
யோங்கிய வானத் தொருவா போற்றி
யுன்னத வுன்னத மன்னா போற்றி
பெருமைப் பரனின் மகனே போற்றி
பெரியா யரியாய் தெரியாய் போற்றி
பேசிய வேதத் துரையே போற்றி
பெந்தா யெந்தாய் தந்தாய் போற்றி
யிருமைப் போதும் நீயே போற்றி
யிங்கு மங்கு மெங்கும் போற்றி
யெனை மீண்டவனே யெனை யாண்டவனே
யேசு நாதா போற்றி போற்றி

7. ஏழுடு வேந்திய கையா சரணம்
ஏழா வியையு முடையாய் சரணம்
ஏழு விளக்கி னிடையே சரணம்
ஏழ்மொழி குருசி லிசைத்தாய் சரணம்
ஏழு முத்திரை யாளா சரணம்
ஏழெக் காளத் தொனியா சரணம்
ஏழு குமுற லெழுதாய் சரணம்
ஏழு கோபக் கலையா சரணம்
ஏழு தூதர்க் கிறையே சரணம்
ஏழா நாளின் றேவா சரணம்
ஏழப் பத்தற் புதனே சரணம்
ஏழ்சா தியைமுன் கொன்றாய் சரணம்
ஏழு சபையி னிருபா சரணம்
ஏழ்மன் றாட்டைத் தருவாய் சரணம்
எனை மீண்டவனே யெனை யாண்டவனே
யேசு நாதா சரணஞ் சரணம்

வெளி. 2:1; 8:1, 2; 3:1; 1:4; 4:5; 5:1; 10:3; 16:1

தலைவரிசை அட்டவணை

8. சருவே சுரனின் றேவா லயமாய்ச்
சமைத்தே யெனக்குள் ளிருப்பாய் போற்றி
தயவா யென்முன் ராப்போ சனமே
தான்செய் தருள வருவாய் போற்றி
திரமாய் பரனா லயம்விட் டேகாச்
செல்வித் தூணெனன் றாக்கும் போற்றி
திருநக ரின்பெயர் கடவுள ரின்பெயர்
சேர்த்துன் பெயருந் தீட்டாய்போற்றி
நரனென வென்னைச் செய்தாய் போற்றி
ஞான மனைத்துந் தருவாய் போற்றி
நல்வழி காட்டி நிற்பாய் போற்றி
நானே நீயென் றெண்ணும் போற்றி
யிருதய மீதிற் பரிசுத் தாவியின்
எல்லா வரமும் ஈவாய் போற்றி
எனை மீண்டவனே யெனை யாண்டவனே
யேசு நாதா போற்றி போற்றி

9. அளிப்பா யுன்னோ டுன்னா சனமே
அடியே னுட்கார்ந் திருக்கச் சரணம்
அழகிய வெண்ணிற யங்கிய திட்டே
அந்தா திக்குஞ் சொல்வாய் சரணம்
ஒளிப்பிட மன்னாத் தருவாய் சரணம்
உயர்வெண் கல்லொன் றருள்வாய் சரணம்
ஒருவரு மறியா நூதன நாமம்
ஒன்றிட் டென்னை யழைப்பாய் சரணங்
களிப்புட னாளச் சாதிகள் மேலே
கனவதி காரம் ஈவாய் சரணங்
கதிரொளி வீசும் விடிவெள் ளியையுங்
காரண மாகத் தருவாய் சரணம்
இளிப்பாய்ச் சீவ பொஸ்தகம் விட்டே

யென்பெயர் கிறுக்கிப் போடாய் சரணம்
எனை மீண்டவனே யெனையாண் டவனே
யேசு நாதா சரணஞ் சரணம்

(வெளி. 2:7, 17, 26; 3:5, 12, 21)

10. விண்ணதின் வாழ்வைத் தருவாய் போற்றி
வினைபல நீக்கி விடுவாய் போற்றி
வேதனை நோயைத் தீர்ப்பாய் போற்றி
வேளை யறிந்து வருவாய் போற்றி
மண்ணதின் வாழ்வும் பகுத்தாள் போற்றி
மன்றாட் டேழுங் கொடுத்தாள் போற்றி
மரண மதளவுங் காப்பாய் போற்றி
மறுமயி லுன்பால் வைப்பாய் போற்றி
கண்ணறி வொன்றுங் கழலதி ரண்டுங்
காயம தைந்துங் கருதாய் போற்றி
கவலைகள் மூன்றுங் கெடவிடு போற்றி
கதிப்பத நான்கும் பெறவருள் போற்றி
யெண்ணின வெண்ண முடிப்பாய் போற்றி
யென்பவம் யாவும் பொறுப்பாய் போற்றி
யெனை மீண்டவனே யெனை யாண்டவனே
யேசு நாதா போற்றி போற்றி

கண்ணறிவு = ஞானம்; கழல் = பாதம்;
கவலை மூன்று = மண், பெண், பொன்;
கதிப்பதம் நான்கு = மோட்சப்பதவி –
சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்

11. திருநெல் வேலித் தேவச காயன்
சேயென வென்னைச் செய்தாய் சரணஞ்
சிறியனை வேத நாயக னென்றே
சித்தத் தடிமை கொண்டாய் சரணந்

[தலைவரிசை அட்டவணை](#)

தருசெப மாலை முப்பத் தொன்றுந்
தயவாய் நித்தங் கேட்பாய் சரணந்
தாவீ தருளுஞ் சங்கீ தத்தைச்
சரியொத் திதையுங் கொள்வாய் சரணங்
குருமறை யோரும் பெரியவ ராருங்
கோவில் கடோறுஞ் சொல்லச் சரணங்
குவலய மெல்லா நின்னைப் பாடிக்
கொண்டே வாழ்கப் பண்ணுஞ் சரணம்
எருசலை யதிபா ஒருசரு வேசா
என்றூ ழிக்கும் நின்றாள் சரணம்
எனை மீண்டவனே யெனை யாண்டவனே
யேசு நாதா சரணஞ் சரணம்

ஜெபமாலை 1–க்கு செய்யுள் 11

செய்யுள் அட்டவணை

2. ஜெபமாலை

தேவதோத்திரம்

விருத்தம்

அம்புவி யனைத்துந் தாங்கி யாண்டு காத்தளிக்கும் வல்ல
வும்பரும் பணிந்து போற்றும் ஒருவனை யுவமை யில்லா
நம்பர மனைநம் மேசு நாதனைத் திரு ரட்சிப்பின்
கொம்பினைத் தம்ப மென்று கும்பிடு கின்றே னானே (1)
சாத்திரத் திறமை யோனைச் சமஸ்தவல் லவனை யூதர்
கோத்திரத் தரசைத் தேவ குமாரனை யளவில் லாத
நேத்திரக் கிருபை யானை நித்திய பிதாவை மேலாஞ்
சூத்திர கிறிஸ்தை யாவைத் தோத்திரிக் கின்றே னானே (2)

கும்பிடுகி றேனான் கும்பிடுகிறே னெங்கள்
குருவேசு நாதர் பதங் கும்பிடுகிறேன்

1. அம்புவி படைத்தவனைக் கும்பிடுகிறேன் – எனை
யாண்டவனை மீண்டவனைக் கும்பிடுகிறேன்
நம்புமடி யார்க்கருளைக் கும்பிடுகிறேன் – பவ
நாசனைக் கிருபாசனைக் கும்பிடுகிறேன்
தம்பமெனக் கானவனைக் கும்பிடுகிறேன் – நித்திய
சருவ தயாபரனைக் கும்பிடுகிறேன்
உம்பர்தொழும் வஸ்துவையே கும்பிடுகிறேன் – தொனித்
தோசன்னா வோசன்னா வென்று கும்பிடுகிறேன் – கும்.
தோத்திரிக்கி றேனான் தோத்தரிக்கிறேன் தேவ
சுந்தரக் கிறிஸ்து வேந்தைத் தோத்திரிக்கிறேன்

2. சேத்திரத் தொரேயோவாவைத் தோத்தி – கன
திவ்வியதி ரித்துவத்தைத் தோத்திரிக்கிறேன்
பாத்திரமாக் கிக்கொண்டோனைத் தோத்திரிக்கி – உயர்
பரமண்ட லாதிபனைத் தோத்திரிக்கிறேன்

நேத்திரக் கிருபாநதியைத் தோத்திரிக்கிறேன் – சதா
நித்தியம கத்துவத்தைத் தோத்திரிக்கிறேன்
கோத்திரத் திசறாவேலைத் தோத்திரிக்கிறேன் – யூதர்
கொற்றவனைப் பெற்றவனைத் தோத்திரிக்கிறேன் – தோ

3. ஒருசரு வேசுரனைக் கும்பிடுகிறேன் – ஒன்றும்
ஒப்பதில்லா மெய்ப்பொருளைக் கும்பிடுகிறேன்
திருவுரு வானவனைக் கும்பிடுகிறேன் – தவிது
சிம்மாச னாதிபனைக் கும்பிடுகிறேன்
குருவென வந்தவனைக் கும்பிடுகிறேன் – யூதர்
குலகுல தேவதையைக் கும்பிடுகிறேன்
அருமையி ரட்சகனைக் கும்பிடுகிறேன் – என
தாற்றும நேசர்தனைக் கும்பிடுகிறேன் – கும்.

4. மனுவுரு வானவனைத் தோத்திரிக்கிறேன் – மோட்ச
வாசலைத் திறந்தவனைத் தோத்திரிக்கிறேன்
கனிவினை தீர்த்தவனைத் தோத்திரிக்கிறேன் – யூதர்
காவலனை யாவலுடன் தோத்திரிக்கிறேன்
அனைமனு மைந்தனையே தோத்திரிக்கிறேன் – மே
சையாவை மெய்யாகத் தோத்திரிக்கிறேன்
எனைஇ ரட்சித்தவனைத் தோத்திரிக்கிறேன் – கிறிஸ்
தேசுநச ராதிபனைத் தோத்திரிக்கிறேன் – தோத்.

5. சங்கையின் ராசாவைக் கும்பிடுகிறேன் – உயர்
சாலேமின் ராசாவைக் கும்பிடுகிறேன்
இங்கிதத் தவிதுவேந்தைக் கும்பிடுகிறேன் – சொந்த
விசறவே லாதிபனைக் கும்பிடுகிறேன்
மங்களங்கள் பாடிப்பாடிக் கும்பிடுகிறேன் – இம்
மானுவேலை வேலையாகக் கும்பிடுகிறேன்
பங்கமறப் பங்கமறக் கும்பிடுகிறேன் – ஞானப்
பத்தாவைக் கத்தாவைக் கும்பிடுகிறேன் – கும்

செய்யுள் அட்டவணை

6. வித்தகனை யுத்தமனைத் தோத்திரிக்கிறேன் – கன
விற்பனனை யுற்பனனைத் தோத்திரிக்கிறேன்
நித்தியப்பி தாமகனைத் தோத்திரிக்கிறேன் – யேசு
நிச்சயனை யச்சயனைத் தோத்திரிக்கிறேன்
சத்தியவே தத்தொளிவைத் தோத்திரிக்கிறேன் – ஏசு
சக்கராதி பதிதனைத் தோத்திரிக்கிறேன்
துத்தியந் துத்தியமென்று தோத்திரிக்கிறேன் – சுப
சோபனங்கள் சொல்லிக்கொண்டு தோத்தி – தோத்

7. ஆச்சரிய மானவனைக் கும்பிடுகிறேன் – பர
மானந்த மெய்ச்சுடரைக் கும்பிடுகிறேன்
தீட்சைதந்து சேர்த்தவனைக் கும்பிடுகிறேன் – ஞானத்
திரவிய மீந்தவனைக் கும்பிடுகிறேன்
காட்சிதரும் பாதனைக் கும்பிடுகிறேன் – இரு
கண்ணிலுங் கண்ணானவனைக் கும்பிடுகிறேன்
சூட்சவழி காட்டினனைக் கும்பிடுகிறேன் – குருச்
சொன்னவனை முன்னவனைக் கும்பிடுகிறேன் – கும்

8. அண்டர்களி னாயகனைத் தோத்திரிக்கி. – அதற்
கப்புறத்தை யப்புறத்தைத் தோத்திரிக்கிறேன்
மண்டல மெலாமறியத் தோத்திரிக்கிறேன் – முழு
வானவரும் பார்த்துநிற்க தோத்திரிக்கிறேன்
தெண்டனிட்டுத் தெண்டனிட்டுத் தோத்திரிக்கிறேன் – மனச்
சிந்தையினால் விந்தையினால் தோத்திரிக்கிறேன்
தொண்டனடி யேனென்று தோத்திரிக்கிறேன் – என்றன்
துன்பமெல்லாந் தீருமென்று தோத்திரிக்கிறேன் – தோத்

9. பந்தமுறப் பட்டவனைக் கும்பிடுகிறேன் – கன
பாடுபட்ட வாண்டவனைக் கும்பிடுகிறேன்
நிந்தையுற்ற கத்தர்பதங் கும்பிடுகிறேன் – அன்று
நெடுங்குரு சேறினனைக் கும்பிடுகிறேன்

தலைவரிசை அட்டவணை

ஐந்துதிருக் காயனைக் கும்பிடுகிறேன் – எனக்
காகவுயிர் விட்டவனைக் கும்பிடுகிறேன்
சந்ததமுஞ் சந்ததமுங் கும்பிடுகிறேன் – நின்று
சாஷ்டாங்க தெண்டன்பண்ணிக் கும்பிடுகிறேன் – கும்

10. சாவழித் துயிர்த்தவனைத் தோத்தி. – பேயின்
தலையை மிதித்தவனைத் தோத்திரிக்கிறேன்
சீவனோ டெழுந்தவனைத் தோத்திரிக்கிறேன் – எங்கள்
தேவாதி தேவனைத் தோத்திரிக்கிறேன்
மேவிய பரப்பொருளைத் தோத்திரிக்கிறேன் – விண்ணின்
மேலெழுந் திருந்தவனைத் தோத்திரிக்கிறேன்
ஆவலுட னாவலுடன் தோத்திரிக்கிறேன் – நடு
வன்றிடும் ஞாயாதிபனைத் தோத்திரிக்கிறேன் – தோத்

11. காத்திரப் பராபரனைக் கும்பிடுகிறேன் – என்றன்
கண்மணியை விண்மணியைக் கும்பிடுகிறேன்
தோத்திரந் தோத்திரமென்று கும்பிடுகிறேன் – சுத்த
சுவிசேட போதகனைக் கும்பிடுகிறேன்
நாற்றிசையும் நோக்கிநின்று கும்பிடுகிறேன் – வேத
நாயகனின் பாட்டனைக் கும்பிடுகிறேன்
சாத்திர விதத்துடனே கும்பிடுகிறேன் – தவிது
சங்கீர்த் தனங்கள்சொல்லிக் கும்பிடுகிறேன் – கும்

ஜெபமாலை 2 வரை செய்யுள் 22

செய்யுள் அட்டவணை

3. ஜெபமாலை

ஓம்பிரணவம்–இருக்கிறோம்

யாத். 3:14 வெளி. 1:8

பொன்னுல குச்சிதப் புகழ்ச்சி யோம்நமா
பூரண காரணப் புதுமை யோம்நமா
தன்னிக ரொன்றிலாத் தாதை யோம்நமா
தற்பர மெய்பர சுயம்ப தோம்நமா
இந்நிலம் புரக்குமி ரட்சிப் போம்நமா
இசறவே லதிபதி யேசு வோம்நமா
நன்னிலை யிருக்கிறோம் ஓகோம் நமோநமோ
நாயனா ஓசனா நமஸ்த னாதியே

2. அந்தமா தியுமிலா ஆம னோம்நமா
அனைத்தையுந் தாங்கும்அந் தாதி யோம்நமா
சிந்தனைக் கடந்தவான் றெருட்சி யோம்நமா
சேனையின் கத்தனோந் திரித்துவ மோம்நமா
மைந்தனைத் தந்தவா சனத்த னோம்நமா
மானிட சொரூபமா சேன னோம்நமா
நந்தனோ மிருக்கிறோம் ஓகோம் நமோநமோ
நாயனா ஓசனா நமஸ்த னாதியே

3. துங்கவா னவர்தொழுஞ் சோதி யோம்நமா
துல்லிப ஞானமோந் தூய்மை யோம்நமா
மங்கள சோபன மகிழ்ச்சி யோம்நமா
மாசிலா வுன்னத வஸ்து வோம்நமா
சங்கையி னரசனோந் தகமை யோம்நமா
சத்திய வுத்தம சாட்சி யோம்நமா
நன்குவோ மிருக்கிறோம் ஓகோம் நமோநமோ
நாயனா ஓசனா நமஸ்த னாதியே

4. அடிமைகொண் டாண்டவற் புதத்த னோம்நமா
வளவிட முடிவிலா ரணத்த னோம்நமா
படும்வினை தவிர்க்குமெய்ப் பரத்துவ மோம்நமா
பாசமே மிகுமுழுப் பட்ச மோம்நமா
கொடுமைய தொன்றிலாக் குணபத்தி ரோம்நமா
கூறுமி ரட்சிப்பின் கொம்ப தோம்நமா
நடுவனோ மிருக்கிறோம் ஒகோம் நமோநமோ
நாயனா ஓசனா நமஸ்த னாதியே

5. வரமிகும் நன்மண வாள னோம்நமா
வார்த்தையா யிருந்தமத் திஸ்த னோம்நமா
தீரமிகுந் தவிதுசெங் கோல தோம்நமா
சேட்டன்யூ தாவெனுஞ் சிங்க மோம்நமா
பரமசால் மோன்பகல் வெள்ளி யோம்நமா
பராபரன் றன்பரி சுத்த மோம்நமா
நரபதி யிருக்கிறோம் ஓகோம் நமோநமோ
நாயனா ஓசனா நமஸ்த னாதியே

6. செம்மறிக் குட்டிநற் சேய னோம்நமா
சீவனின் விருட்சமெய்த் தெரிசி யோம்நமா
தம்மையே பெலியிடுந் தனிமை யோம்நமா
தவிதிறை வங்கிஷத் தனைய னோம்நமா
எம்மையாட் கொண்டதோ ரிரக்க மோம்நமா
யேயோவாக் கிறிஸ்திம்மா னுவேல்மன் னோம்நமா
நம்முத லிருக்கிறோம் ஓகோம் நமோநமோ
நாயனா ஓசனா நமஸ்த னாதியே

7. எண்ணிய படிதரும் ஏகனோம் நமா
என்றுமா றாதொளிர் இரவி யோம்நமா
கண்ணதிற் காண்கொணாக் காட்சி யோம்நமா
கருணைவா ருதியெனுங் கடவு ளோம்நமா
அண்ணாலோ மரூபியோம் ஆதிக் காதியோம்
அட்சய வுச்சித அருமை தேவனோம்

செய்யுள் அட்டவணை

நண்ணலோ மிருக்கிறோம் ஓகோம் நமோநமோ
நாயனா ஓசனா நமஸ்த னாதியே

8. ஆதியோம் நடுவதோம் அந்தத்தந்த மோம்
ஐயனோ மெய்யனோம் அனந்த ஞானியோம்
நீதியோம் நித்திய நிலைமைக் குன்றதோம்
நேற்றுமின் றென்றுமாய் நின்ற ஒன்றதோம்
ஓதியோ மகத்துவத்து யர்ந்த ஒல்லியோம்
உண்மையி லுண்மையோம் உடன்ப டிக்கையோம்
நாதனோ மிருக்கிறோம் ஓகோம் நமோநமோ
நாயனா ஓசனா நமஸ்த னாதியே

9. தொன்மையோம் பன்மையோஞ் சூட்சி யாட்சியோம்
சோதியோம் நீதியோஞ் சொருப ரூபியோம்
வன்மையோந் தன்மையோ மயசு ராரியோ
மானியோந் தானியோ மகாநி தானியோம்
புன்மைய தின்மையோம் பொறுமைச் சாமியோம்
புண்ணிய தன்மியோம் பூரி மூரியோம்
நன்மையோ மிருக்கிறோம் ஓகோம் நமோநமோ
நாயனா ஓசனா நமஸ்த னாதியே

10. வேதநா யகன்சொல்வே தாந்த னோம்நமா
மேசியாக் கிறிஸ்துவிண் வேந்த னோம்நமா
தாதையோந் தற்சுவா பத்தச் சோம்நமா
சருவசீ வாற்றும தயாலு வோம்நமா
காதலோங் கன்மலைக் கழுக தோம்நமா
காரிய துரந்தர காரி யோம்நமா
நாதனோ மிருக்கிறோம் ஓகோம் நமோநமோ
நாயனா ஓசனா நமஸ் தனாதியே

கழுகு – யாத். 19:4; உபா. 32:11, 12
செபமாலை 3 வரை செய்யுள் 32

தலைவரிசை அட்டவணை

4. ஜெபமாலை

கிறிஸ்துவின் துதி

திருவா னொளிவே தெருளே பொருளே
தேவே காவாவே
திரமே யுரமே வரமே பரமே
சீவா யேயோவா
ஒருவா இருவா நடுவா முடிவா
ஓரே கோனாரே
ஒழியா நிலையே வழியே விழியே
ஓமோ மூவாரே
தருவே குருவே பரிபூ ரணமே
தாதா வேநீயே
சருவே சுரனே தயவா யிருநீ
தானா னேதானே
அருவே யுருவே சுரார்பூ பதியே
ஆலே ஆலேலோ
அமலா சரணே மனுவே லரசே
ஆலே ஆலேலோ

சுரர் = தூதர்

2. கனிமா துண்பா தகமா றவுமே
காடு டாவீடே
கவிவா னவர்பா டியுமா டவுமே
காலாய் மாலாய்நீ
தனையே பலியே தரவே வருவாய்
தாதா வேதாவே
சயமே நயமே தவிதா திபனே
சாலேம் வாழ்கோவே
உனையே தொழுகா தவர்வாழ் குவரோ

செய்யுள் அட்டவணை

ஊழார் பாழாரே
ஒழியா நரகா னதில்வீழ் குவரே
ஓயா தோயாதே
அனைமா மரியா ளொருபா லகனே
ஆலே ஆலேலோ
அமலா சரணே மனுவே லரசே
ஆலே ஆலேலோ

ஊழார் = பழவினையர்

3. பொருளே புகழே பொறையே நிறையே
பூமா னேதேனே
புவிபா தலம்வா னிறைவே மறைவே
போதா மாவேதா
இருளோ டவுமே யெழுமா தவமே
யேகா ஓமேகா
இணையே துணையே யிதமே சிதமே
யீசா ராசாவே
மருளே கெடவா மடிதீர் மிடிதீர்
வானா திகாரா
மணியே யணியே மதியே கதியே
வானோர் கோமானே
அருளே தெருளே அழகே அமுதே
ஆலே ஆலேலோ
அமலா சரணே மனுவே லரசே
ஆலே ஆலேலோ

4. துதியே கிருபா நதியே நிதியே
சூர்சே ராதானே
சுபமே நவமே தவமே சிவமே
தோமா வோடேநூல்
விதியே சொலியே வெளியா னவனே
வேதா வேநாதா
விடிவே வடிவே விரிவே தெரிவே

மேலா வோலோலா
கதியே கருணா கரதே சிகனே
கானா னாடாள்வோய்
கலையே யலையே கனமே தனமே
காவா யோகோவே
அதிதூ தர்கடா டொழுமே சையனே
ஆலே ஆலேலோ
அமலா சரணே மனுவே லரசே
ஆலே ஆலேலோ

சூர் = துன்பம்

5. தொண்டர் பவத்தைக் கொண்டு பொறுத்துச்
சூதோர் வாதாலே
துன்ப மிகுத்துச் செம்புனல் விட்டுச்
சோர்வா யேவாளே
பண்டு பறித்துத் தின்ற கனிக்குப்
பாடா யீடாயோர்
பங்க மரத்திற் றொங்கி மரித்துப்
பாதா ளமேதாழ்
வண்டர வத்தைத் தண்டிமி தித்தப்
பாலே வானேபோய்
வந்துல கத்தைச் சிந்த வழித்துச்
சீறாய் மாறாதே
அண்டர் துதிக்கக் கண்ட கருத்தர்க்
காலே ஆலேலோ
அன்பின் மகத்துவத் தெங்கள் கிறிஸ்துக்
காலே ஆலேலோ

வண்டரவம் = குற்றமுடைய சர்ப்பம்

6. தந்தைய னாதியர் தந்தசு தாகர
தாதா நீயாமே
சம்பிரம நீடிய வும்பர் பராபர
சாலேம் ராசாவே

சுந்தர மேவிய சந்தகு ணாகர
தூயா வேநேயா
துங்கவி ணோர்நவ சங்கமு லாவிய
சூரா மாவீரா
மைந்தர் களால்வரு நிந்தைய டாமலே
வாராய் பாராயோ
வந்துனை யேபலி தந்த தயாபர
வாகா தெய்வீகா
அந்தர வானுல குந்தரு வேதர்க்
காலே ஆலேலோ
அம்பர தேவசி தம்பர நாதர்க்
காலே ஆலேலோ

சிதம்பரம் = ஞானமுள்ள பராபரம்

7. நெறிநிறை வாகர சருவதயா வொடு
நின்றாய் சீமானே
நிமலநி ராதர அமலம யேசுர
நின்பால் வாழ்வோமே
பொறிவழி யாய்வரும் வெறியுட தீவினை
பொங்கா தோர்நேராய்ப்
பொறையொடு மாகிரு பையினொடு பாவிகள்
பொன்றா தேகாவே
மறியினி லேறியும் எருசலை மாநகர்
வந்தாய் சீயோனே
மகிழவு நீடவு மணமது சூடவு
மந்திரா நீதானே
அறிவினு லாவிய திரிமுத லேயுயர்
அன்பே ஆலேலோ
அருளும னோகர பரமசு தாகர
இன்பே ஆலேலோ

வெறி = பிசாசு; மறி = குட்டி

8. பரமசு யாதிப தரும குணாதிப
பண்டார் பாவாரே
பகரரி தாமுயர் சகலகு ணாகர
பண்பார் சீராரே
ஒருவரு மேயள விடமுடி யாமுதல்
ஒன்றாம் யோவாவே
உலகதி லேவரு திருவடி வேகதி
உன்றாள் சேர்வோமே
எருசலை நீடிய விசறலர் நாடிய
எங்கோ மானாரே
இடியது போல்விழு கவலையி னான்மனம்
எஞ்சா தேகாவே
அருமறை யேகன தவிதிறை யேயக
ளங்கா ஆலேலோ
அதிசய மேதவ சிவசொரு பாவதி
துங்கா ஆலேலோ

அகளங்கன் = கடவுள்; எஞ்சல் = குறைதல்

9. வலமைமி குத்தம கத்துவ பொற்புச்
சொல்லே மாறானே
மனுடர்க ளுக்கொரு மித்த கருத்துக்
கிவ்வா றேநீயே
தலைமக ளுத்தமி கற்பிலு தித்துத்
தள்ளா தேதீயோர்
தமையரு ளுற்றுந யத்தின டத்திச்
சல்லா பநூலார்
கலைகள னைத்தும் வருத்தியி தத்திற்
கல்லா தோர்தாமே
கனவறி வுற்றுல கத்தைவி ளக்கக்
கைதூ வாமையால்
அலைகடல் பட்டம ரத்தரு சத்தத்

தையா ஆலேலோ
அனைய வுயிர்க்களி னித்திய தத்தத்
தல்லா ஆலேலோ

பொற்பு = அழகு
கைதூவாமை = ஒழியாவொழுக்கம்

10. சாதி யாவுமி டேறம னோகர
தாதா வேநேயா
தாழ்வி லாதம காபர மேசுர
சாகா வோரேகா
மாது மாமரி யாளிட மேவிய
மாதே வாசீவா
மாசி லாஅுவ தாரம னாகன
வாகா நீவாகா
வேத நாயகன் ஓதிய பாடலின்
மேலா மேலாவே
மேசி யாகரு ணாநதி யேததி
மீள்வா யாள்வாயே
ஆதி யேதிரி யேக பராசர
ணாலே ஆலேலோ
ஆம னாமனு வேலர சேசரண்
ஆலே ஆலேலோ

ஜெபமாலை 4 வரை செய்யுள் 42

5. ஜெபமாலை

தேவமகத்துவம்

திருப்புகழ்

ஆக மங்கள் புகழ் வேதா நமோநமோ
வாகு தங்கு குரு நாதா நமோநமோ
ஆயர் வந்தனை செய் பாதா நமோநமோ – அருரூபா
மாக மண்ட லவி லாசா நமோநமோ
மேக பந்தி யினு லாசா நமோநமோ
வான சங்கம் விசு வாசா நமோநமோ – மனுவேலா
நாக விம்ப முயர் கோலா நமோநமோ
காக மும்பணி செய் சீலா நமோநமோ
நாடும் அன்ப ரனு கூலா நமோநமோ – நரதேவா
ஏக மந்திர முறு பூமா நமோநமோ
யூக தந்திர வதி சீமா நமோநமோ
யேசு வென்ற திரு நாமா நமோநமோ – இறையோனே

மாகமண்டலம் = ஆகாயம்; பூமான் = மணவாளன்

எ–து. வேதசாஸ்திரங்கடுதிக்கும் வேதனே தோத். தோத்.
அழகு தங்கிய குரு நாதனே தோத். தோத்.
மேய்ப்பர் ஆராதனை செய்யும் பாதாம்புயனேதோ. தோ.
அரூபா ரூபனே ஆகாய மண்டல விலாசனே தோ. தோ.
மேக வரிசையினுலாசனே தோத். தோத்.
வானோர் சங்கத்தின் விசுவாசனே தோத். தோத்.
மனுவேலா மலை வட்டத்தினுயர்ந்த வழகனே தோ. தோ.
காக்கையும் ஏவற் செய்யும் நல்லொழுக்க மானவனே தோ. தோ.
தேடிய சினேகிதர்க் கனுகூலனே தோத். தேர்த்.
மனுட தேவனே ஒரே மந்திரமுடைய ஏக சக்கராதிபதியே தோத்.
தர்க்க வுபாயங்களின் அதிக செல்வத்தோனே தோ. தோ.
இயேசு வென்ற தேவாபிதானனே தோ. தோ. – கடவுளே

செய்யுள் அட்டவணை

2. அறிவி னுருவா கிய மூலா நமோநமோ
மறைய வாகடே டிய நூலா நமோநமோ
அதிச யபரா பர சீலா நமோநமோ – அருளாளா
பொறிவி னையுறா தச ரீரா நமோநமோ
குறைய ணுவிலா தகு மாரா நமோநமோ
புவன முழுதாள் அதி காரா நமோநமோ – புதுவேதா
நிறைவ ழியின்மே விய கோனே நமோநமோ
முறைக டவறா தவி ணோனே நமோநமோ
நிதிபெ ருகுமா ரச தேனே நமோநமோ – நெறிநீதா
இறைத வீதுபா டிய கீதா நமோநமோ
பறைகள் பலகூ டிய போதா நமோநமோ
எருச லையினீ டிய தூதா நமோநமோ – இறையோனே

பொறி வினை = பஞ்ச பொறியின் தீவினை
எ–து. அறிவின் வடிவாகிய ஆதிமுலமே தோத். தோத்.
சாத்திரிகடேடிய கல்வி நூலனே தோத். தோத்.
அதிசயமான பராபரனுடைய குணா தீதமே தோ. தோ.
கிருபையாளனே பஞ்சந்திரியங்களின் தீவினையடராத சரீரனே
தோத். தோத்.
குற்றம் அணுவேனு மற்ற சுபுத்திரனே தோத். தோத்.
உலகடங்கலும் ஆளுமாதிபத்தியனே தோத். தோத்.
புதேற்பாட்டனே நீதிமார்க்கத்தின் மேவிய இராசனே
தோத். தோத்.
ஒழுக்கந்தப்பாத வானவனே தோத். தோத்.
நிறைவு பெருகிய வதிரசமே தேனே தோத். தோத்.
நீதிமார்க்கத்தானே தாவீதரசன் பாடிய சங்கீதனே தோத். தோத்.
பல வாத்தியங்களோடிசைந்த ஞான போதனே தோத். தோத்.
எருசலேமிநீடித்த பரம தூதனே தோ. தோ. – கடவுளே

3. பாட்டு விந்தை யது யர்ந்தாய் நமோநமோ
நீட்டு சந்த மதி சைந்தாய் நமோநமோ

பார்க்க அந்த மோடெ முந்தாய் நமோநமோ – பரதேவா
மாட்டு மந்தை யிடை வந்தாய் நமோநமோ
காட்டு நிந்த னைய டைந்தாய் நமோநமோ
வாழ்த்து நந்த ரைம கிழ்ந்தாய் நமோநமோ – மனுரூபா
சூட்டு கந்தை யத ணிந்தாய் நமோநமோ
நாட்டு வந்த னைநி றைந்தாய் நமோநமோ
சூட்ச தந்தி ரம றிந்தாய் நமோநமோ – சுவிசேடா
ஏட்டு மந்தி ரமி குந்தாய் நமோநமோ
மீட்டு மைந்த ரையு வந்தாய் நமோநமோ
ஏற்ற தந்தை முனி ருந்தாய் நமோநமோ – இறையோனே

4. கருணை பெருகி யத யாளா நமோநமோ
உரிமை யுளநன் மண வாளா நமோநமோ
கதிர்கள் படர்சு டரின் வாளா நமோநமோ – கலையாளா
பெருமை மகிமை யுள நாதா நமோநமோ
மரிய மதலை தொழு பாதா நமோநமோ
பிரிய முளவெ னது தாதா நமோநமோ – பெரியோனே
அருமை அடிய வர்க ணேசா நமோநமோ
பரம எருச லைவி லாசா நமோநமோ
அறிவி னுடைய சரு வேசா நமோநமோ –அதிகாரா
இருமை வினைபொ டிசெய் சூரா நமோநமோ
தரும நெறியி னுப சாரா நமோநமோ
இருடி யர்களெ முது தீரா நமோநமோ– இறையோனே

இருமை வினை = இம்மை மறுமைத் துன்பம்

5. அதிசய மிகுமொரு சொல்லாய் நமோநமோ
கதிருடு வுடன்வரும் வல்லா நமோநமோ
அசடரை நரகிடும் அல்லா நமோநமோ – அசரீரி
விதிமுனி வர்கடொழும் நல்லாய் நமோநமோ
பதிதர்க டமதிடை செல்லாய் நமோநமோ
வெறிகொளு புலையர்மு னில்லாய் நமோநமோ – மிகுநீதா

செய்யுள் அட்டவணை

சதுர்நடு வினிலெழு மெய்யா நமோநமோ
மதிகெட வெனைவினை செய்யா நமோநமோ
தடிமடை யர்களிடை வையாய் நமோநமோ – தவரூபா
இதிமுடி நடமிடு துய்யா நமோநமோ
நிதியமு தருளிய கையா நமோநமோ
இருடிய ரெழுதுமே சையா நமோநமோ – இறையோனே

இதி முடி = பிசாசின் தலை

6. ஆதி யந்த மற்ற திரி யேகா நமோநமோ
சோதி தங்கு பொற்பின் மிகு தேகா நமோநமோ
வாக மங்க ளுக்க திவி வேகா நமோநமோ – அருணீதா
மாதர் வஞ்ச னைகுண் மன நாடாய் நமோநமோ
தாதை பந்து மக்க ளென நீடாய் நமோநமோ
மாசு றுந்து ரிச்சை வழி கூடாய் நமோநமோ – வரதேவா
தீது மிஞ்சு சர்ப்ப வினை தீராய் நமோநமோ
கோது துன்ப முற்று மற வாராய்நமோநமோ
தேவ னுன்றி ருத்தயவு கூராய் நமோநமோ – திரியேகா
ஏத மொன்றும் அற்ற வதி தூயா நமோநமோ
வேத மந்தி ரத்து மணி வாயா நமோநமோ
ஏசு வென்ற கத்த விய நேயா நமோநமோ – இறையோனே

7. திருவச னத்துமது ரத்தாய் நமோநமோ
யுரியசெ பத்துடர சத்தாய் நமோநமோ
திடமிகும் உத்தமவ ரத்தாய் நமோநமோ – திருரூபா
அருண்மிகு சித்தருறை வெற்பே நமோநமோ
பொருளுணர் பத்தர்தொழு கற்பே நமோநமோ
அதிபரி சுத்தமுள பொற்பே நமோநமோ – அருடேவா
ஒருகுறை யற்றதவ வித்தே நமோநமோ
இருகலி லுற்றநெறி பத்தே நமோநமோ
ஒளிர்விடு ரத்தினமணி முத்தே நமோநமோ – உயர்தேவா
எருசலை மக்களின்ம கத்துவா நமோநமோ

பரவெளி யுக்குளுயர் தத்துவா நமோநமோ
இனிமையின் முக்கியதி ரித்துவா நமோநமோ – இறையோனே

8. கட்டான வேதநி தானா நமோநமோ
சிட்டோர்க ளாதிப கோனா நமோநமோ
கற்றோர்கள் போதக ஞானா நமோநமோ – கனயூகா
மெட்டான வானவர் கோவே நமோநமோ
அட்டாவ தானிகள் பாவே நமோநமோ
மிக்கான ஞானிகள் தேவே நமோநமோ – வினைநாசா
தட்டான போதுச காயா நமோநமோ
கெட்டோர்கண் மீதுந னேயா நமோநமோ
தப்பாத வாதிலு பாயா நமோநமோ – சருவேசா
எட்டாத சோதியின் வாசா நமோநமோ
நெட்டான வீதிவி லாசா நமோநமோ
எக்கோடி சாதிந ரேசா நமோநமோ – இறையோனே

9. சருவாதி காரணப ராபரா நமோநமோ
நெறியோது தாரணத ராதரா நமோநமோ
தயைஞான பூரணச ராசரா நமோநமோ – தனிவேதா
குறையாத சீர்மீகுகு ணாகரா நமோநமோ
திரியேக ரானகிரு பாகரா நமோநமோ
குருரூப மாய்வரும னோகரா நமோநமோ – குலதேவா
அறிவான தேவதிரு வாசனா நமோநமோ
வெறிதீதி யாவையும்வி மோசனா நமோநமோ
அழியாதசீ வனுறு போசனா நமோநமோ – அதிநேயா
இறையாக மேவியத போதனா நமோநமோ
சிறியேனை யாளதுகொள் சாதனா நமோநமோ
இசறேலி ராசர்கள்சி மாசனா நமோநமோ – இறையோனே

10. தேவாதி தேவசங்க நாட்டனே நமோநமோ
மூவரணி மீதுதங்கு பாட்டனே நமோநமோ
சீயோனின் மாதுகண்கள் தேட்டனே ந. ந. – திறலோனே

செய்யுள் அட்டவணை

காவாதி சேயர்தங்கள் பாத்திரா நமோநமோ
தாவீதி ராசதந்தை கோத்திரா நமோநமோ
கானானு தேசமென்ற கேத்திரா நமோநமோ – கலிலேயா
மாவேத ஞானமந்திர சூத்திரா நமோநமோ
பாவாண ரோதனந்த சாத்திரா நமோநமோ
வானோர்கள் பாடிவந்த காத்திரா நமோநமோ – மறுரூபா
ஏவாள்செய் பாதகங்க டாத்திரா நமோநமோ
பாவேத நாயகன்சொல் தோத்திரா நமோநமோ
ஏகாதி பாலரெங்க ணேத்திரா நமோநமோ – இறையோனே

கேத்திர = கெடிஸ்தலம்; தாத்திரம் = கோடாலி

ஜெபமாலை 5 வரை செய்யுள் 52

6. ஜெபமாலை

தேவலட்சணம்

ஆசிரியவிருத்தம்

ஆதியே யாதிமுன் அனாதியி லனாதியே
அரூபியே சுயசொரூபியே
ஆசையே யருள்ஞான பூசையே யோசையே
அருமையே மனதொருமையே
ஓதியநி தானமறை யுத்தியே புத்தியே
உண்மையே கனவண்மையே
உச்சிதப் பதவியே நிச்சயத் துதவியே
உயர்கேண்மை யேஆண்மையே
சோதிநிதி யேவான சூட்சியே காட்சியே
சுவிசேட சபைசாட்சியே
தூய்மையே வாய்மையே தொன்மையே நன்மையே
சுகசீவியச் செவ்வியே
சாதிகள்சு யாதிபதி யேகனதி யேதேவ
சத்தியத் துறுதிதருவாய்
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே

அனாதியிலனா = துவக்கமில்லாமையிற் பராபரன் தமது பெயரின்படி அனாதியாயிருக்கிறார்
பதவி = கதி; கேண்மை = நட்பு; தூய்மை = சுத்தம்;
செவ்வி = அந்தம்; கனதி = கனம்

2. ஞானமே கருணையா னந்தமே சொந்தமே
நந்தர்கள் கணாபந்தமே
நாதாந்த மேய்ந்தமே தொந்தமே தந்த
னந்தமே தருசந்தமே
மோனமே பிரதான மேதிவிய பானமே

செய்யுள் அட்டவணை

முக்கியமே மிகுசக்கியமே
மூலமே யோலமே சீலமே கோலமே
மோக்கிஷ பக்கிஷபொக்கிஷமே
மானமே யபிமான மேயதின மேபுதின
மார்க்கமே கனதீர்க்கமே
மாணிக்க மேமுத்த மேபத்த மேசீவ
மாமகுட மேகனகமே
தானமே பேரின்ப மேதம்ப மேதேவ
சத்தியத் துறுதிதருவாய்
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே

நந்தர் = இடையர்; கணாபந்தம் = கூட்டத்திணுறவு;
சக்கியம் = அன்பு; தம்பம் = தூண்

3. தேவாதி தேவேஅ னாதிவாழ் வேநித்திய
சீவகா வேயுவாவே
செய்யபூ வேஞான பாவே யமாவே
திவியபிதா வேநமாவே
ஏவாள்சு தாவேகு தாவேயீ சாவேயிஸ்ப்
பிரீத்துவே மேசையாவே
ஏகதா தாவேபு றாவேசொ ரூபே
எனாவினா வேமனாவே
ஆவாவை யாவேஅ லாவே யுலாவே
அவாவேஅல் லேலூயாவே
அல்பாவே ஒமேகா வேரட்சி யும்ஒச
னாவேஅ டர்ந்துவாவே
தாவீது கோவேச காவேச மாவே
தயாலுவே யேயோவாவே
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே

உவா = நிறைவு; அமா = அம்மா, அழகிலழகு;
நமா = வணக்கம்; குதா = அல்லா; அவா = ஆசை;
சகா = தோழன்; சமா = வகுப்பு

4. ஆதிமுடி யாமறையின் ஆமனடி யாவரூபி
யாவுரூபி யாசொரூபியா
ஆசரணை யாவடிமை யாதரியை யாகருணை
யாகிருபை யாபொறுமையா
வேதமறை யாதிறமை யாமுறைமை யாமரண
வேளைவரு வாய்முனமெயா
மேசையா வேசையா வாசாரி யாவலமை
மேவுகலி லேநசரையா
ஓதுமுரை யாதரும நீதிநெரி யாஉரிமை
யாவருமை யாபெருமையா
ஓசகா யாநியாயா வுபாயா செயா
ஒல்லியா அல்லேலூயா
சாதிநே யாபுயசு யாவலமை யாதயா
தலைமையா பரமராயா
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

ஒல்லியான் = கடவுள்; சுயா = சொந்தம்

5. அனையுநீ மனையுநீ அருளுநீ பொருளுநீ
அணிகலப் பொக்கிடமுநீ
அறமுநீ திறமுநீ சூட்சாதி சூட்சநீ
ஆனந்த ஆச்சரியநீ
மனமும் விற்பனமுநீ நினைவு முற்பனமுநீ
வாணிபமும் ஆணுவமுநீ
மந்திரநீ தந்திரநீ சிந்தையின் கருமநீ
மரபுநீ யாதரவுநீ
கனமுநீ தனமுநீ நயமு நிச்சயமுநீ
காரணமும் ஆரணமுநீ

கதியுநீ மதியுநீ தெரிவுநீ பரிவுநீ
கருணைகுரு குலதெய்வநீ
சனமுநீ யினமுநீ சகலசாம் பிராச்சியநீ
சத்தியத் துறுதிதருவாய்
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே

அணிகலம் = ஆபரணம்; தந்திரம் = உபாயம்;
சாம்பிராச்சியம் = சக்கரவர்த்தித்தன்மை

6. அப்பனீ யையனீ அண்ணனீ தம்பிநீ
அண்ணாவியுங் குருவுநீ
அன்பனீ நண்பனீ என்பிராண நாயகனும்
ஆண்டவனு மீண்டவனுநீ
ஒப்புரவுனீ திறவனீ குரவனீ யுயிர்க்
குதவிய வயித்தியனுநீ
உரியபிணை யாளிநீ அரியமத் திஸ்தனீ
உத்தமா சாரியனுநீ
செப்புமுன் றூதனீ யாயனீ நாயனீ
சேனாபதித் தலைவனீ
செங்கோலி ராசனீ என்பாவ நாசனீ
தேவதே வப்பிரபுநீ
தப்பிலா மெய்ப்பரம ரட்சகனு நீதேவ
சத்தியத் துறுதிதருவாய்
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே

திறவன் = வலியவன்; குரவன் = குரு

7. பொரும்படைக் காயுதம் வானத்தின் அப்பம்
புராதனமனா தங்கிவாழ்
பொன்னரண் மனையெனைச் சோடிக்கும் உடைசீவ
புட்கரங் கருணாகரங்
கருங்கட லில்வழி தோற்றிய சமுக்காமரக்
கலமெழ நடத்துசுக்கான்

தலைவரிசை அட்டவணை

காற்கொந்த ளிப்பினங் கூரஞ் சலப்பிரவா
கத்தில்அக்க ரைசெல்வங்கம்
அரும்பிணிக் கவிழ்தம் இராவி னட்சத்திரம்
அரியசீ வனின்விருட்சம்
அன்பான போசனஞ் செல்வபூங் காவனம்
ஆனந்த தீவிதாட்சி
தருஞ்சுகந் தம்படர் குளிர்ந்த பூஞ்செடியுநீ
சத்தியத் துறுதிதருவாய்
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே

சீவபுட்கரம் = சீவதண்ணீர்; மரக்கலம் = கப்பல்;
கால் = காற்று; வங்கம் = மரக்கலம்;
தீவிதாட்சி = முந்திரிகை

8. துக்கத்தில் ஆறுதலென் வாழ்விற் களிப்புநீ
துன்பத்தி லெனதின்பநீ
தொறுவும் வேலையின் அலுவல்பகலி லென்சிந்திப்பு
தூக்கத்தி லென்சொர்ப்பனம்
பக்கத்தி ராவினில் அடைக்கலம் இருளதிற்
பகவத்தி யெனதுசத்தி
படுகுறை யிலைசுவ ரியங்கசப் பினிலமுது
பலதாழ்வி லெனதுவாழ்வு
மிக்கபெல யீனத்தி லென்பெலன் றொய்வுற்ற
மெலிவதனி லெனதுவலிமை
விழிப்பிற் குறிப்புற வின்ஞான பானந்தீ
விமோசனம் பவநாசனம்
தக்கயோக் கியமனோக் கியசலாக் கியமுநீ
சகலபாக் கியமுநீயே
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே

தொறுவல் = தொழிற் பயில்வு; பகவத்தி = தீவட்டி

செய்யுள் அட்டவணை

9. ஞானதம் ஆரகஞ் சிந்தும் ஆபேல்பேழை
நல்கியுயிர் காத்தநோவா
நற்கோத்திர ஆபிரகாம் பொறுதியுறுதி கொள்யோபு
ராசகுரு மெல்கிசேதேக்
கானாதி யந்தஞ் சுதந்தர வீசாக்குயூ
தாச்சிங்க மந்திரியோசேப்
அடுஞ்சிறை விடுத்தமோ சேசுமுன் பிரதான
ஆசாரியான ஆறோன்
சேனாதி பன்யோசு வாபெலிஸ்த ரையெலாஞ்
சிதறடிக்குஞ் சீம்சோன்
செயபராக் கிரமதா வீதுனத சாலமோன்
தீர்க்கனெலி யாவுக்கிரன்
தானாக மீனாணை யானயோ னாஞான
தானியேல் இம்மானுவேல்
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே

ஆரகம் = இரத்தம்; மீனாணை = மீனடையாளம்

10. ஒருதெய்வ நீயுன் சுவாப மோதானாய்
அனாதியாய் உடலிலாமை
ஓங்கும் பிதாச்சுதன் பரிசுத்த ரூபியென்
றுனதுதிரி யேகமகிமை
அறியவுன் றிருலட்ச ணத்தாதி யந்தமில்
லாதவன் மாறாதவன்
அனையசரு வத்துக் கும்வல்ல வனெல்லாம்
அறிந்தஅள வற்றஞானன்
பரவியெங் குநிறைந் தோன்மிக்க சத்தியன்
பரிசுத்த னீதியுடையோன்
பக்கிஷ முங்கிருபை யுமுள்ள வன்றொழிலோ
படைத்தளித் துவனிப்பவன்
தருமாதி வினைதீர உருவாகி யரிதான

சகலபா டேற்றததீகந்
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே

உவனித்தல் = தூய்தாக்கல்

11. அந்தரநி ரந்தர துரந்தர சுதந்தர
அனந்தர சுதாரிதாரி
ஆரியவ தாரியச ரீரியுப காரிஅதி
காரிஆ சரிஅகாரி
மந்திரப யங்கர பரம்பர கருணாம்பர
வசந்தசாந் திரநரேந்திர
மாதிரத யாபரப ராபரகிரு பாகர
மனோகர பதாரதீர
சுந்தரச வுந்தரகு ணேந்திரதெய் வேந்திர
சுகமங்களகல் யாணிபாணி
சுயாதிப சயாதிப தயாதிப நியாதிப
சுகாதிப சொரூபிரூபி
தந்திரவி யந்தர மடங்களத டங்குறு
தடாரி சங்காரிகோரி
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே

எ–து. அந்தர = ஆகாயம்; நிரந்தர = நெருக்கம்;
துரந்தர = வல்லபம்; சுதந்தர = உரிமை;
அனந்தர சுதாரி = அளவில்லா அரசரினுதாரி;
தாரி = உடையோன்; ஆரி = மேன்மை;
அவதாரி = மனுடவதாரி; அசரீரி = அரூபி;
உபகாரி = ஈகையாளன்; அதிகாரி = அதிபதி;
ஆசரி = ஆசாரி; அகாரி = கடவுள்;
மந்திர = ஆலோசனை; பயங்கர = அச்சம்;
பரம்பர = வமிச பாரம்பரை;
கருணம்பர = கிருபா சமுத்திரம்;

வசந்த = சுகந்தம்; சாந்திர = மிகுதி; நரேந்திர = அரசன்;
மாதிர = மலை; தயாபர = கிருபை யுடையோன்;
பராபர = கடவுள்; கிருபாகர = கிருபை யுடைய;
மனோகர = சந்தோஷம்; பதார = தெப்பம்;
தீர = மனத் தைரியம்; சுந்தர = அழகு; சவுந்தர = அழகு;
குணேந்திர = குணமுள்ள ராசா;
தெய்வேந்திர = தேவராசன்;
சுகமங்கள = நல் வாழ்த்து;
கலியாணி = கலியாணமுடையோன்;
பாணி = கீதம்; சுயாதிப = சக்கரவர்த்தி;
சயாதிப = வெற்றி யுடையவன்;
தயாதிப = கிருபை யுடையோன்;
நியாதிப = நீதியுடையோன்;
சுகாதிப = வாழ்ந்திருக்கின்றவர்;
சொரூபி = சுரூபி; ரூபி = உரூபி; தந்திர = உபாயம்;
வியந்தர = பிசாசம்; மடங்கள் = மூடத்துவம்;
அடங்குறு = அடங்கப்பண்ணும்; தடாரி = பேரிகை;
சங்காரி = சங்கரிக்கிறவர்; கோரி = விரும்புதல்

12. துங்காஅ னங்காபிர சங்காத ரங்கா
துரந்தர புரந்தரீகா
தூதாஅ தீதாவி னோதாஎ னாதா
சுமுத்திரமித் திரசமுத்திரா
அங்காநி சங்காதி கந்தாசு கந்தா
அகண்டபர மண்டலாதிபா
ஆசாவு லாசாசரு வேசாந ரேசா
அனந்தயோ சனைவிலாசா
புங்காந லங்காவ ணங்காம ணங்கா
புகழ்த்துசொற் பிரவடீகா
புராணாகல் யாணாபிர தானாநி தானா
புராதனா கிருபாசனா

தலைவரிசை அட்டவணை

தங்காதி சங்காதி ரித்துவகாத் திராவேத
சாஸ்திரி வழுத்துதோத்திரா
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே

எ–து. துங்கா = உயர்ந்தவனே;
அனங்கா = சரீரமில்லானே;
பிரசங்கா = வியாக்கியானியே; தரங்கா = கடலே;
துரந்தர = வல்லபா; புரந்தரீகா = காக்கிறவனே;
தூதா = சமாதானம் பேசுவோனே;
அதீதா = எட்டாதவனே;
வினோதா = அதிசயமானவனே;
எனாதா = என்னாதனே;
சுமுத்திர = நிதான; மித்திர = சிநேக;
சமுத்திரா = சமுத்திரமே;
அங்கா = வேதாங்கமே; நிசங்கா = இணக்கமே;
திகந்தா = திக்கின் முடிவே; சுகந்தா = நறுமணமே;
அகண்ட = எல்லா;
பரமண்டலாதிபா = பரமண்டலங்களினரசே;
ஆசாவுலாசா = ஆமரணத்தைப் பாக்கியமாக்கினவா;
சருவேசா = சருவேசுரா; நரேசா = இராசாவே;
அனந்த = அளவிலாத; யோசனை = ஆலோசனை;
விலாசா = விலாசமே; புங்கா = உயர்ந்தவனே;
நலங்கா = நல்ல சரீரனே;
வணங்கா = மற்றொருவர்க் கடங்காத;
மணங்கா = ஆட்டுக் குட்டியே;
புகழ்த்து சொற்பிரவடீகா = புகழ்ச்சி சொற்களின் பேரழகே;
புராணா = சுவிசேட புராணா;
கலியாணா = கலியாண சோபனா;
பிரதானா = விசேடமானவா; நிதானா = நிச்சயமானவா;
புராதனா = பழமையானவனே; கிருபாசனா =

கிருபையினாசனனே;
தங்காதி சங்கா = தங்கிய ஆதிச் சங்கத்தானே;
திரித்துவ = திரித்துவமே; காத்திரா = காத்திரமானவனே;
வேத சாஸ்திரி = வேதநாயக சாஸ்திரி;
வழுத்து = துதிக்கும்; தோத்திரா = தோத்திரமே

13. காலமே வாமிகத் தாமதஞ் செய்யாது
கடுசீக்கிரம் விரைவாகவா
கவனமாய்ச் செய்திகளே லாத்தையுங் கேளுனது
காதுசாய்த் துறுதியாய்க்கேள்
வேலையிலென் னலுவலாய் நில்லுபத் திரமாயென்
வீட்டை முழுதுங்காத்திரு
வெளியினான் போகையிற் கூடவா மீள்கின்ற
வேளையு மெனைப்பின்றொடர்
சோலிவைக் காதெனக் காகவேண்டி யதெலாஞ்
சுறுசுறுப் புடனுடனேசெய்
தூங்காதி ராப்பகற் கண்விழிப் பாய்நின்று
சொன்னபடி யெல்லாநட
சாலவே வேதநா யகனையுன் கவியென்று
சகலபேர்க்குஞ் சொல்லிவை
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே

சோலி = தொந்தரை; சுறுசுறுப்பு = விரைவு

செபமாலை 6 வரை செய்யுள் 65

7. ஜெபமாலை

தேவசுவாபமகிமை

உபையார்த்தம்

பொன்னாட்டவர்கள் வணங்கானே
பொன்னாட்டவர்கள் வணங்கானே
பூமிக்கான வாதவனே
பூமிக்கான வாதவனே
தன்னாட்டியத்தா வீதருளே
தன்னாட்டியத்தா வீதருளே
தாவானவர்க்குச் சாந்தானே
தாவானவர்க்குச் சாந்தானே
உன்னாட்டளவைக் கரியானே
உன்னாட்டளவைக் கரியானே
ஊழிக்கால முதியானே
ஊழிக்கால முதியானே
என்னாட்டியக்கந் தாரானே
என்னாட்டியக்கந் தாரானே
ஏயோவாவே காகாவே
ஏயோவாவே காகாவே

எ–து. வானாட்டார் வணங்கி நின்றவனே
பொன்னாட்டமுடையோர் வணங்காதவனே
உலகுக்கான சூரியனே
அழகு மிகுந்தவா தவத்தோனே
தன்னென்னும் நாட்டியத் தாவீதின் கிருபையே
தனது மனையாட்டியாகிய திருச்சபைக்குப் பிதாவே
இதைக் கொடேன் (இது, தாவீதுக்களித்த கிருபை)
வலியானவர்க்கு வாசனையானவனே

செய்யுள் அட்டவணை

கெட்டுபோனவர்க்குச் சாந்தமானவனே
உன்னிய செயலளவுக்கரிதானவனே:
உன்னாடுகளினாட் சாட்சியானவனே

(கரி = சாட்சி; நாட்சாட்சி = அன்றாடகச் சாட்சி)
முடியாக் காலத்தின் முதியவனே
பகையை இக்காலத்திலுதிக்கப் பண்ணாதவனே
என் கூத்தாகிய சதுர் பிரசங்கத்திற் பிரகாசிக்கும்
அழகியமாலையானே
எந்நாளுந்தியக்கந் தராதவனே
ஏயோ விடுதலையே பூங்காவனச் சோலையே
ஏயோவாவே காத்தருளுங் காத்தருளுமே

2. வல்லத்தடமா மாதங்கமே
வல்லத்தடமா மாதங்கமே
மலையாவலையா மாதங்கமே
மலையாவலையா மாதங்கமே
செல்லத்தருவா திருக்கானே
செல்லத்தருவா திருக்கானே
செப்பத்துரையே தானானே
செப்பத்துரையே தானானே
சொல்லத்தத்தந்தா தந்தையரே
சொல்லத்தத்தந்தா தந்தையரே
தொந்தத்தந்தந்தா நந்தலைவா
தொந்தத்தந்தந்தா நந்தலைவா
இல்லத்தனத்தா ரார்வலனே
இல்லத்தனத்தா ரார்வலனே
ஏயோவாவே காகாவே
ஏயோவாவே காகாவே

எ–து. வலிமையும் பெருமையுமுடைத்தான மகாமாதென்ற
சீயோன் குமாரத்தியின் வேதாங்கமே.

வலிய பொல்லாங்காம் ஏவையென்ற மாதின் பாவமே
மலையாத அலையாத மகா தங்கமே
மலை போலாசையான ஐயா பெருமை தங்கிய அழகே
செல்வ விருட்சமே கண்ணானவனே
கிட்டிச்செல்லத் தராதிருக்கானே
செவ்வையான துரையே தானானவனே
செப்பிய பத்துக் கற்பனைக்கேதானவனே
சொற்பொருளின் அழகனே தகப்பனே
புகழ வாக்குத்தத்தங் கொடுத்துள்ள ஐயரே
இருநூல்களின் முடிவனே செல்வக் கடவுளே வாருந்
தொடர்ந்த நன்மரணத்தைக் கட்டளையிடும்
நம்நாயகனே
இல்லாத் தன்மையோர்க் கன்பனே
வீட்டில் வருத்தாதவரார் வல்லவனே
ஏயோவாவே

3. அனைத்தும் வணங்கும் அசரீரி
அனைய வுயிர்க்கும் அதிகாரி
ஆர்க்கு மிரங்கும் உபகாரி
அன்பாய்ப் படைத்த ஆசாரி
நினைத்து முடியாத் தயைவாரி
நிதமுங் கிருபை பொழிமாரி
நெஞ்ச மகிழத் தரும்பூரி
நிருவி சாரநி ராதாரி
முனைத்த பகைஞர் விபகாரி
முழுதும் அடியார்க் கனுசாரி
முன்னா தனமா கியமூரி
முந்திரிகைப் பானத் திருவேரி
எனைத் தற்காரி சருவுதாரி
ஏக தாரிஅ காரிகரி
எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே

செய்யுள் அட்டவணை

எ–து. சகல வஸ்துகளுந் தொழும் அரூபியே
எல்லா வுயிர்க்குங் கர்த்தனே
யாவர்க்கு மிரங்கும் உபகாரியே
அன்பாய்ச் சிட்டித்த ஆசாரியே
எண்ணி முடியாத் தயைக் கடலே
அன்றாடகங் கிருபை பெய்யு மேகமே
மனங் களிக்கத் தரும் பொன்னே
கவலை யில்லா ஆதாரமற்ற கடவுளே
போரிடுஞ் சத்துராதிகளின் விபகாரியே
முற்றினும் பத்தருக்கனுசாரியே
முந்தின நிலைமையாகிய மகிமையே
முந்திரிகைரசத் திருவாசனையே
என்னைச் சங்கித்தவா சகலஉதாரியே
ஒரேவழியே காரியமற்றதே சாட்சியே
பிதாவாகிய பராபரனே வந்தருளும் வந்தருளுமே
ஏயோவாவே காத்தருளுங் காத்தருளுமே

4. அருமைக் கருணை மனுவேலா
அனாதி பிதாவின் திருப்பாலா
அறிவானந்தக் குருமூலா
ஐயா அடியார்க் கனுகூலா
ஒருமைக் குரிமைக் கதிர்காலா
உண்மை ஞானத் தொருநூலா
ஒன்றாகியகா ரணமாலா
உனதத்துனதத் துயர்மேலா
தருமப் பரமப் புரிசாலா
தாவீதரசன் செங்கோலா
சமஸ்த புண்ணியதே வகுணாலா
சருவ சீவ செயசீலா
இருமைப் பெருமைக் கோலோலா
இயேசுக் கிறிஸ்து இசறேலா
எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே

தலைவரிசை அட்டவணை

எ–து. அருமையான கிருபையுள்ள மனுவேலே
அனாதியாயிருக்கிற பிதாவின் திருக்குமாரா
அறிவின் மகிழ்ச்சியாயிருக்கிற குருமுதலே
ஐயாவே பத்தர்மேற் கிருபையானவனே
ஒற்றுமையோர்க் குரிமையான ஒளிவின் பாதனே
மெஞ்ஞானத்தினொரே வேதநூலனே
ஒன்றான பிரதான ஆசையே
உன்னதத்துக் குன்னதத்துயர்ந்த மேலவனே
அறத்தின் பரம இராச்சியத்துக்கு வருந்தி
அழைக்கிறவனே
தாவீதரசன் செங்கோற்குரியவனே
சகல புண்ணிய தேவ சுவாபத்தோனே
சருவ சீவாற்றுமாக்களின் வெற்றிப்பிரபுவே
இம்மை மறுமை வாழ்வுக் கொலித்தழைக்கிறவனே
இயேசுக் கிறிஸ்தென்கும் இசறாவேலே
பிதாவாகிய பராபரனே

5. ஆக மனத்துக் கடங்கானே
அவத்தத் தவத்தைத் தொடங்கானே
அனைத்தும் படைத்த தாதாவே
அறத்தை யுடைத்த வேதாவே
தேக சொரூபம் அல்லானே
செனன மரணம் இல்லானே
திரிதத் துவத்தில் ஒன்றானே
தேவா லயத்தில் நின்றானே
மாக முழங்க வழங்கோனே
வானோர் புழங்க வெழுங்கோனே
மகிமையுளனே வாகுளனே
மதுரமுளனே வாகுளனே
ஏக முதலேநி ராதரனே
என்கண் ணுதலேப ராபரனே
எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே

செய்யுள் அட்டவணை

எ–து. உடலிலு மனத்திலும் அடங்கானே
வீணான தவத்தின் முயலானே
சகலத்தையுஞ் சிஷ்டித்த பிதாவே
தருமமாயிருக்கிற வேதனே
உடலுருவ மல்லானே
பிறப்பிறப் பில்லானே
முத்தத்துவத்தில் ஒன்றானவனே
தேவஸ்தலத்தில் நிற்கின்றவனே
ஆகாயமொலியிட உலாவுவனே
வானோர் நடமாட எழுந்தருளும் இராசாவே
மகிமையுள்ளவனே அழகுள்ளவனே
இன்பமுள்ளவனே நன்மனத்தானே
ஒரே வஸ்துவே நிலையில்லானே
என் விருப்பமே பராபரனே
பிதாவாகிய பராபரனே

6. உனதமான ஒரு தேவே
ஊழியூழிக் குயர் கோவே
ஓதவரிய பெரும் பொருளே
உண்மைக் குருவே திருவருளே
தனது வளமை மிகுத்தோனே
சகல வுலகும் வகுத்தோனே
தானே யிருந்த தொனிச்சயம்பே
தயவா யெழுந்த தனிசுயம்பே
கனமுள் ளவனே வல்லவனே
கனிவுள் ளவனே நல்லவனே
காதற் குரிய பத்தாவே
காட்சிக் கரிய கத்தாவே
எனது வரவே போதரவே
இகலொப் புரவே ஆதரவே
எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே

தலைவரிசை அட்டவணை

எ–து. உன்னதமான ஏக தேவனே
நித்திய சதாகாலமாய் உயர்ந்த இராசாவே
சொல்லுதற்கரிதான பெரிய வஸ்துவே
உண்மையான குருவே தேவகிருபை
தனது மாட்சிமை மிகுத்தவனே
எல்லா உலகமும் படைத்தோனே
தானாக நின்ற ஓசைக்கடவுளே
கிருபையா யெழுந்தருளிய கலப்பில்லாத சுயம்பே
சங்கையுள்ளவனே வல்லமையுள்ளவனே
ஆசைக்குரிய மணவாளனே
தெரிசனைக் கரிதாகிய கருத்தனே
என் வருமானமே போதரவானதே
பகையை ஒப்புரவாக்குதலே ஆதரவே
பிதாவாகிய பராபரனே

7. ஞானப் பரமா சனத்தானே
நன்மைக் கிருபா சனத்தானே
நாதாந் தத்தா நந்தாதா
நந்தா வந்த நந்தாதா
மோனக் கருணா சமுத்திரமே
முனையு மிருணா சமுத்திரமே
முன்னா னவனே தானவனே
முன்னா னவனே தானவனே
வானத் தரமே அந்தரமே
மனதுத் தரமே அந்தரமே
மன்னா மன்னா மன்னாவே
மன்னா மன்னா மன்னாவே
ஈனக் கரவா கனன்றாதா
என்னக் கரவா கனன்றாதா
எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே

எ–து. ஞானமுள்ள பரம கூட்டத்தானே
நன்மையான கிருபை ஆசனத்தானே
ஞான நெறியாளனே நம்பிதாவே
மேய்ப்பனே அழகனே கெடாதவனே
மவுன கிருபைக் கடலே
முனையும் இருளை நாசப்படுத்திய மூன்று நிலையே
முன்னுதானவனே தானாயிருக்கிறவனே
நினையாத அற்புதனே கொடையாளனே
வானத்தின் தலையே தனிமையே
மனதான மறுமொழியே அழகானமலையே
பெருமையான இராசாவே
வானத்தினின் றிறங்கின மன்னாவே
நிலையான ஆமனென்ற நாமத்தைக் கொண்டவனே
நீச வாகனத்தான் பிதாவே
என்னெழுத்தானவனே சினக்காதவனே
பிதாவாகிய பராபரனே

எழுத்து = வேதாட்சரம்; யோவா. 5:36

8. தங்கு ஞானா பத்திரமே
சால மிகுத்த துபத்திரமே
சலத்தான் முனமே பாரதமே
சலத்தா லுனமே பாரதமே
பங்கு தருபா ரம்பரமே
படுமென் றுயர்பா ரம்பரமே
பத்தா வெனக்கார் தாபரமே
பரிவா யெனைப்பார் தாபரமே
பொங்கு பெருக்கத் தண்டலையே
புலமைப் பெருக்கத் தண்டலையே
பொன்னா டுறவோர் முன்னிலையே
புகழா டுறவோர் முன்னிலையே
எங்க ணிறைவா சகநாதா

தலைவரிசை அட்டவணை

ஏக நிறைவா சகநாதா
எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே

எ–து. தங்கிய ஞான நிருபமே
மிகவு மிகுதியாயிற்று உபத்திரமே
தண்ணீரினால் முன்னுலகைச் சங்கரித்ததே
சஞ்சலத்தினால் நினைவு நூறுகோடாகோடியே
பங்கு தருகின்ற பாரம்பரமானதே
படுகின்ற என் துயரத்தைப் பார் அழகான பராபரமே
நாயகனே எனக்கார் துணையே
அன்பா யெனைப் பாரும் தாரு மோட்சமே
பொங்கிய செல்வ பூங்காவனமே
வித்தாண்மைப் பெருக்கத்தில் அண்டிய கடலே
வானாட்டி லிருக்கின்றவர்களின் முன்னான நிலையே
புகழ் செய்கின்ற உறவோர் முகதாவிலில்லையே
எவ்விடத்து நிறைந்தோனே உலகத்தினாதனே
ஒரே நிறையான வசனத்தினாவைக் கொடும்
பிதாவாகிய பராபரனே

9. மெய்மா மறைக்குப் பகையானே
வீணா மறைக்குப் பகையானே
மேசியாவைத் தருவாயே
மேவுமரணத் தருவாயே
பொய்மாக் களின்கோட் கண்டாயே
பொற்றாள் பெறக்கோட் கண்டாயே
புகழ்பாக் கியசம் பத்தானே
புகல்வாக் கியமும் பத்தானே
செய்மாண் புடையா காவலனே
செயல்மாண் புடையா காவலனே
சீனா பதியே சீர்பதியே
சேனா பதியே சீர்பதியே
எய்மா லிகையே தந்தாளே

செய்யுள் அட்டவணை

இருமா லிகையே தந்தாளே
எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே

எ–து. மெய்யான மகா வேதத்துக்குப் பகையாதவனே
வீணான வார்த்தைக்குப் பகையானவனே
மேசியாவைத் தந்தவரே
எழுந்தருளும் மரணம் வருஞ் சமயத்திலே
பொய் மனுடரின் கோளைக் கண்டாயே
அழகிய பாதம் பெறக் குணமான கண்ணைத் தாவேன்
புகழும் பாக்கிய சம்பத்தானவனே
சொல்லிய கற்பனையும் பத்தானவனே
செய்யு மாட்சிமைத் திரட்சியானே இராசாவே
செயலிலழகுடையவனே காத்தருளும் வல்லவனே
சீனா மலையினிடமே கடவுளே
படைத் தலைவனே சீரைப் பதியுமே
சேருஞ்சூரிய ஒழுக்கமே தந்தாளனே
பெருமையான மண மாலையைக் கொடுத்தாளுமே
பிதாவாகிய பராபரனே

10. ஆர்க்கு மிரக்கத் திருக்குருவே
அலையா ரிரக்கத் திருக்குருவே
அகலா நிலையே அகநிலையே
அலையே கலையே அகநிலையே
பார்க்கு மனைத்தும் அடங்காயே
பகைக்கு மனத்தும் அடங்காயே
பாட்டைப் பிரியப் பட்டாயே
பாட்டைப் பிரியப் பட்டாயே
சேர்க்குந் தனமே தெரிசனமே
செய்வந் தனமே தெரிசனமே
திருநல் வேலி அன்பாவே
திருநெல் வேலி யன்பாவே

ஏர்க்கு மணியே திரவியமே
இருகண் மணியே திரவியமே
எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே

எ–து. யாவர்க்கும் இரக்கமாயிருக்கிற தெய்வ குருவே
அலையாதவர்கள் இரப்பிரக்கையிற் கண்வடிவே
அகலாத நிலைமையே கடவுளே
கடலே கல்வியே மனதினிலையே
பார்க்கின்ற சகலத்தினும் அடங்கானே
பகைக்கின்ற மனத்தின் மூடத்துவத்தைச்
சினந்தருளுமேன்
பாடலைப் பிரியப்பட்டாயே
துன்பத்தைப் பிரிந்திருக்கின்றாயே
சேர்கின்ற பொன்னே காட்சியே
செய்யும் ஆராதனையே தெரிந்த இனமே
தெய்வ நற்காவலே அன்பானவனே
திருநெல்வேலியானுடைய பாடலே
அழகுக் கழகே ஐசுவரியமே
இரண்டு கண்மணியே நிலைத்திருக்கின்ற பெருமையே
பிதாவாகிய பராரபரனே

11. வேத நாய கன்பாட்டா
மிகப்பா டுறுமோ ரன்பாட்டா
மெஞ் ஞானத்துக் காரணமே
மேலா னத்துக் காரணமே
பாது காவே பரிசனையே
பரம காவே பரிசனையே
பட்டா ரகர்முன் படையாரே
பட்டார் நிகர்முன் படையாரே
நீத முறையே கம்மறையே
நிரைய மறையே கம்மறையே
நிதானப் பரமே திரித்துவமே

செய்யுள் அட்டவணை

நேயப் பரமே திரித்துவமே
ஏத தான சொன்னாரே
இயேசு நாதர் சொன்னாரே
எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே

எ–து. வேதநாயகன் பாட்டானே
மிகவும் பாடுபட்ட ஓரன்புடைய ஆட்டை
யுடைத்தானவனே
மெஞ் ஞானத்துக்குக் காரணமானதே
மேலானதற்கு வேதமே
பாதுகாத்தருளும் பழக்கமே
பரம பூங்காவனமே பண்புடைய தாயே
தூதாக்களின் முன்படையானவனே
செத்தாருக் கொப்பானவர் முன்பில் அடையாதவனே
நீதியின் இரகசியமே தலையான சொல்லே
நரகத்தை மறையும் ஒரே வேதமே
நிச்சயமான பராபரமே முத்தத்துவமே
அன்பப்பரினழகே வலத்துவமே
காரணமான புகழ்ச்சியின் அன்பே
யேசுநாதர் சொன்னவரே
பிதாவாகிய பராபரனே

ஜெபமாலை 7 வரை செய்யுள் 76

8. ஜெபமாலை

கிறிஸ்துவின் சுவாப மகிமை

சீரு லவுதி ரித்துவ தேவனே
பாரு லாவும்இ யாவும்ப டைத்தவா
நேரு லாவுத வீதிறை நீடிய
ஏரு லாவும்இ றைக்கிறிஸ் தேசுவே

2. அந்த மாதியி லாதப ராபரன்
மைந்த னேநரர் மாங்கிஷ மாகியே
விந்தை யாயெனை மீண்டிரட் சித்தவா
எந்த யாபர னேகிறிஸ் தேசுவே

3. அண்ண லார்க்கும கிமையுண் டாகவும்
மண்ணி லேசமா தானம்வ ளரவும்
நண்ணு நற்பிரி யநரர்க் கெய்தவும்
எண்ண மானஇ றைக்கிறிஸ் தேசுவே

4. கனிய ருந்துக டும்பகை யால்வரும்
வினையொ ழிந்துவிண் வீடது றும்படி
மனுடர் சங்கம கிழ்ந்தெழ வந்தவா
எனையு வந்தஇ றைக்கிறிஸ் தேசுவே

5. வார்த்தை மாங்கிஷ மாய்மனு டர்க்கெலாங்
கோர்த்த பாவக்கொ டூரம னைத்தையுஞ்
தீர்த்தி ரட்சைபு ரிந்ததி றத்தினால்
ஏற்கமீட் பன்இ றைக்கிறிஸ் தேசுவே

6. ஆடு பட்டஅ ருங்கொலை யாகவே
பாடு பட்டுப் பருங்குரு சானதிற்

செய்யுள் அட்டவணை

கேடு கெட்டவ ருங்கிரு பைபெற
ஈடு பட் டிறந் தகி றிஸ் தேசுவே

7. அத்த னார்க்கடி யார்பிணை யாளியாய்
மத்திஸ் தனென வார்த்தைத ரும்படி
மெத்த வாதைய தாயுயிர் விட்டபின்
இத்த லத்தன்ன ழுங்கிறிஸ் தேசுவே

8. உற்ற பாதையும் உண்மையுஞ் சீவனும்
நற்ற வக்குரு வுநல் மேய்ப்பனும்
மற்ற ஞானவ யித்திய னாகவும்
இற்றை நின்றைஇ றைக்கிறிஸ் தேசுவே

9. ஞான நாயகன் நன்மண வாளன்மெய்
யான மைந்தன்அ ருமையி ரட்சகன்
மான தேவம கத்துவ தத்துவன்
ஈன மற்றஇ றைக்கிறிஸ் தேசுவே

10. மேசை யாமிசை யாஇச றாவேலின்
ஆசை யாநசை யாஅசை யாஅருள்
ஓசை யாஉசி யாசுசி யாநச
ரேசை யாஇசை யாகிறிஸ் தேசுவே

11. சாதி யாவையுந் தான் புரந்தாளவே
மாது மாமரி யாளிடம் வந்தவா
வேத நாயகன் பாடலை மேவிய
ஏத மற்றஇ றைக்கிறிஸ் தேசுவே

ஜெபமாலை 8 வரை செய்யுள் 87

தலைவரிசை அட்டவணை

9. ஜெபமாலை

பரிசுத்தாவியின் சுவாப மகிமை

பொற்புறு பரமானந்த
பூர்த்தியா னந்தவெள்ள
விற்பன ஞானசத்துவ
விமரிசைக் களவில்லாத
தற்பரா இஸ்பிரீத்துச்
சாந்துதற் சொயசொரூபா
அற்புதா பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே

பூர்த்தி = நிறைவு; விமரிசை = ஆராய்வு

2. காரணக் கருணாகாட்சிக்
கதிர்க்கொள் அக்கினிப்பிரகாசப்
பூரணக டாட்சதீட்ச
பூச்சியஅட் சயசற்சீலத்
தாரணத்தி ரித்துவத்துவ
சற்பிர சாதநீத
ஆரணப் பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே

பூச்சியம் = பூசித்தல்

3. பெரியமெய்த் தெய்வமான
பிதாச்சுத னிடநின்றெய்தி
உரியபா தகரைநீதி
உற்ப்பவித் திரமேசெய்து
தெரியநூன் முறையைக்காட்டித்

செய்யுள் அட்டவணை

திடவசப் படுத்தித்தேற்றும்
அரியவா பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே

பவித்திரம் = சுத்தம்

4. மூவரில் ஒன்றதான
மூர்த்தியே முடிவில்லாத
சீவனே மனதுக்கான
திவியசஞ் சீவியேநற்
காவலே களிப்பேதுப்பே
கதித்தமெய்ப் பலனேகற்றோர்க்
காவலே பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே

மூர்த்தி = தேவன்

5. திருந்திய பரமநூலே
சேணகர்த் திறவுகோலே
வருந்திய அடியார்மாலே
மகிழ்ச்சியின் எண்ணைக்காலே
பொருந்திய ஞானப்பாலே
பொழிந்துதா பரியன்பாலே
அருந்தவப் பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே

மால் = ஆசை; கால் = வாய்க்கால்

6. சோதியே சுடரேமிக்க
துய்யதுப் பரவேசுத்த
நீதியே நெறியேஅன்பர்
நெஞ்சகத் துறைந்தவாழ்வே
ஓதியே உயர்வேயுண்மைக்

தலைவரிசை அட்டவணை

குண்மையே ஊழியூழிக்
காதியே பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே

ஓதி = அறிவு

7. சூட்சியே வேதாசாரத்
தொன்மையே சுகிர்தநன்மைக்
காட்சியே சீடர்சென்னிக்
கண்ணின்அக் கினியினாக்கே
மாட்சியே மனதுக்கெட்டா
வாய்மையே மகத்துவத்துக்
காட்சியே பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே

சென்னிக்கண் = தலையிடம்; ஆட்சி = உரிமை

8. மதுரமே யின்பமேவா
னிதியமே மதியமேநற்
புதியநூ தனமேமாளாப்
பொக்கிஷபக் கிஷமேஞானத்
துதியபி ஷேகமேநற்
சுப்பரி மளமேசொல்லுக்
கதியமே பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே

9. மனுப்பயிர் தழைக்கத்தாவும்
வானகப் பனியேகாற்றே
தினத்தினமெஞ் ஞானஊற்றே
சீவதண் ணீரேநேரே
கனத்ததேற் றரவேகாதற்
கருணைமா நதியேபாவிக்
கனுக்கிரகப் பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே

செய்யுள் அட்டவணை

10. பத்தியே தெளிவேமோட்ச
பாதையின் துணையேபண்பே
முத்திமுத் திரையேவேத
முதல்நடு முடிவேஓங்குஞ்
சத்தியே மனதைமுற்றுந்
தான்குணப் படுத்தித்தேற்றும்
அத்தியா பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே

அத்தி = கடல்

11. போதமே இதமேமேலாம்
புத்தியோ சனையேபொற்பே
நாதமே சிதமேஞான
நன்மையே நலமேநட்பே
வேதநாய கனுக்கென்றும்
வெளிப்படு மெய்ப்புறாவே
ஆதமா பரிசுத்தாவி
அர்ச்சய தேவதேவே

ஜெபமாலை 9 வரை செய்யுள் 98

10. ஜெபமாலை

அகப்பற்று

அறிவே மெஞ்ஞான ஒளிவே விணாடர்
அரசே யனாதி முதலே
குறியா றுநாலு நெறியா றுநாலு
குணதே வதேவ சொரூபி
வெறியா டுபேயின் முறிகா ரனான
வினையே னையாள மனுவாய்
மறியே றிமேவு குருவேசு நாதர்
வரவே ணும்என்றன் அகமே

குறியாறு நாலு = இலட்சணம் பத்து;
நெறியாறு நாலு = பத்துக் கற்பனை

2. ஆதாம் விழுந்த வினையாலு லர்ந்த
அகிலம் புரந்த ருளவே
தீதே யகன்ற மனுவா யெழுந்து
திருவா சகங்கள் சொலியே
வேதா ளம்அஞ்ச நரகங்க லங்க
வெகுபா டடைந்திக லெலாம்
வாதா டிவென்ற குருவேசு நாதர்
வரவே ணும்என்றன் அகமே

3. இதமென் றுமாதா மயல்கொண்டு வாடி
எழுமந்த காரநீ னைவாற்
சதமென் றுவீணுட லைநம்பி நின்று
தவமொன் றெனுந்தொ றுவியே
பதமொன் றிவாழ்க அறிவின்றி மீறு
படுபஞ் சபாத கர்களின்
மதமன் றிநீடு குருவேசு நாதர்
வரவே ணும்என்றன் அகமே

தொறுவு = பயிற்சி

4. ஈராறு சீடர் அடிகண்டு தெண்ட
னிடநின் றுகா னாவிலே
ஓராறு சாடி யுதகம்பிர சஞ்செய்
தொருமுப்ப தாண்ட ளவிலே
பேராறு சென்று திவியதீட்சை பெற்றுப்
பிதாமைந் தன்என்றெ ருசலை
மாராறு கொண்ட குருவேசு நாதர்
வரவே ணும்என்றன் அகமே

உதகம் = நீர்; பிரசம் = முந்திரிகை ரசம்

5. உலகம் பசாசு கடலங்கொ டூரம்
உடனின் றெநேர முமெனைக்
கலகஞ் செய்தாலும் மனமஞ்சி டாது
கழலுண் டெனக்க ருதவே
பலசங் கசேனை தருசங்கை யோடு
பரமண் டலங்க ளதிலே
வலதின் கண்மேவு குருவேசு நாதர்
வரவே ணும்என்றன் அகமே

கழல் = பாதம்

6. ஊழித் துவாந்தத் துரோகப் பசாசுக்
குடன்பட் டழற்கெந் தகத்
தாழிப் பிரவாகத் தமுந்தாமல் மக்கள்
அனைவோ ரும்வான டையவே
ஏழைச் சொரூபத்தோ டேபெத்த லேமுக்கு
ளேயுற்ற கன்னிம ரியின்
மாழைக் குமார குருவேசு நாதர்
வரவே ணும்என்றன் அகமே

துவாந்தம் = இருள்; மாழை = அழகு

தலைவரிசை அட்டவணை

7. எட்டாத வானில் உறைகின்ற சோதி
எளியோ ரெலாங்க திபெற
ஒட்டார லூசி குலநாச மாக
உறவா யளித்தசு தனார்
கெட்டோ ரியாவர் பிணையாளி யான
கிருபையா வற்றினு டைய
மட்டேது மற்ற குருவேசு நாதர்
வரவே ணும்என்றன் அகமே

லூசி (இலத்தீன்வார்த்தை) = பசாசு

8. ஏகா மலாவி தடுமாறி நெஞ்சில்
எழமேற் சுவாச மதுற
லோகாசை யாவும் நினைவூடு தாவி
லோடாய மாய்ம னதெலாம்
வேகாமல் வெந்து புலனோ ஒடுங்கி
விழும்அந் தியகால மதிலே
வாகான தேவ குருவேசு நாதர்
வரவேணும் என்றன் அகமே

9. ஐயாறு வெள்ளி விலைகூறி விற்க
அநியாய நிந்தை களுறக்
கையே பிணைக்க வாரா லடிக்கக்
கடுவின் கிரீடம் இடவே
மெய்யே நடுங்கக் குருசூ டிறந்து
விலாவோ துளைக்க உலகின்
மையே தவிர்த்த குருவேசு நாதர்
வரவேணும் என்றன் அகமே

கடு = முள்; மை = இருள்

10. ஒருகாச தேனும் அடியாரை நாடி
உதவா உலுத்தன் உனது
திருவா சகங்கள் படியாத பாவி
ஜெபம்ஓத வுந்தெரி கிலேன்
பரிவாயுன் அன்பை உணராது கெட்ட
படுபாத கன்வி னையற
மரிபா லுதித்த குருவேசு நாதர்
வரவேணும் என்றன் அகமே

11. ஓசைக் கடற்குள் அலைமோதும் வாற
தொழியா விசார மதனால்
வேசைக் குலாமர் களைநாடி வாடி
மிகவே மெலிந்து ருகிமூ
வாசைக் குள்வீழ்ந்த கொடிதான பாவி
அடியேன் அகந்தை அறவே
மாசற்ற தேவ குருவேசு நாதர்
வரவேணும் என்றன் அகமே

12. ஔவைத் தயாபத் தொரேயொரே யோவா
அனாதி யிலிருந்த வார்த்தை
செவ்வைத் திரியேகத் திரண்டா வதாளன்
திருப்பி தாவின்கு மாரன்
எவ்வைப் பெண்அன்று கனிதின்ற பாவத்
திஸ்திரி வித்தானமு தல்வர்
வெளவப் படாத குருவேசு நாதர்
வரவேணும் என்றன் அகமே

ஔவை = தாய்; வெளவல் = கொள்ளை யிட்டு.

தலைவரிசை அட்டவணை

13. கூகா லம் ஆள வரும்ஆ மனான
அல்பா ஓமேகா வெனுஞ்
சொக்கா திமூல வஸ்தேக தேவ
சுயம்பா யிருந்த ஒளிவு
மிக்கா யுரைத்த கவிவேத நாய
கன்பாடு மேலாம் பொருள்
மைக்கா டறுத்த குருவேசு நாதர்
வரவேணும் என்றன் அகமே

ஜெபமாலை 10 வரை செய்யுள் 111

செய்யுள் அட்டவணை

11. ஜெபமாலை

மன்றாட்டு

ஞானா விணாடரதி காராப ராபரனின்
நாவே பிராண நதியே
கானா வாதானகலி லேயாவின் ஆதிபதி
காணாத ஆட தடியேன்
மீனாவி லேவிழுகும் யோனாவின் மேலருள்செய்
வேதா என்ஊழி வினைதீர்
வானாதி தேவகுரு வேயோச னாமனுடர்
வாழ்வே மகத்துவ பரனே

2. வீடே தெழிற்கொள்பல வாழ்வே தினச்சலுகை
வீறே தெனக்கு னையலால்
ஈடே தெனக்கிருபை யாலேவளர்த்தி விடில்
ஏகா உனைப்ப ணியனோ
காடே நடக்கமி சறாவே லருக்குவளர்
கானா வளித்த கரனே
மாடே கிடக்கும்வையின் மேலே படுக்குமனு
வாழ்வே மகத்துவ பரனே

வையின் = புல்லின்

3. நீதான் எனின்சலுகை நீதானென் இன்பநலம்
நீதான் எனின்ச கலமே
பேய்தா னெழுந்துமிக வேசீ றி யுங்கறுவு
பேர்தா னும்இங்கென செய்வார்
தீதான் வளைந்தபொழு தேமூவர் பங்கிலுறை
தேவே யடர்ந்தெ னிடம்வா
வாய்தான் மலர்ந்துமறை நேரேவி ளம்பியமெய்
வாழ்வே மகத்துவ பரனே

4. ஒப்பே தும்அற்றபர மப்போச னத்தையுண
ஒத்தாசை யுற்ற வுறவே
தப்பாத சத்தியமறை முப்போதும் வர்த்தனைசெய்
தற்சோதி யுற்ற மயமே
இப்போது நற்சமயம் இப்போதெ னக்கருள்செய்
இப்போ தெனக்குத வுவாய்
மப்பால் வெறித்தநொவை மிக்காய் வணக்கமிடும்
வஸ்தே மகத்துவ பரமே

மப்பு = மயக்கம்

5. ஒட்டா திடும்பரகம் விட்டோய் வதுங்கடினம்
ஒத்தே நடந்து கதியே
கட்டாக நின்றுபெற ஒப்பார்கள் வம்பரவர்
கற்றாலும் நன்று கருதார்
கெட்டோ னெனுஞ்சுதனை முச்சூடும் அன்புபுரி
கெட்டோர் களின்கி ருபையே
கட்டாய் நெருங்கென்வினை பட்டோட வந்தருள்செய்
வஸ்தே மகத்துவ பரனே

6. எந்தாய் தகப்பனுயிர் தந்தா தரித்தவரு
ளின்றே வசத்திய குருவே
பந்தான் மனக்கவலை மிஞ்சாதி ரக்கமொடு
பண்பாய் நடத்தி யெனையே
உந்தா மரைச்சரணம் அங்கேயி ருத்திமிக
வுங்காத லித்துநி லையாய்
வந்தா ளுனக்கபையம் அந்தாதி கத்தனருள்
மைந்தா மகத்துவ பரனே

7. ஒன்றோ அடர்ந்தவினை ஒன்றோ நெருங்குதுயர்
ஒன்றோ எனின் கவலைதான்
என்றோ துலைந்துவிழும் என்றோ வுனின்கழல்கள்
என்றோ பணிந்து மகிழ்வேன்

செய்யுள் அட்டவணை

அன்றாயர் நன்றயிர்க ளும்பால் கொணர்ந்துபதம்
அன்பாய் வணங்கும் அரசே
மன்றாட அம்பரன்முன் நின்றாள் அனந்தனருள்
மைந்தா மகத்துவ பரனே

8. ஐயா உனக்குமக வையா உனக்கடிமை
ஐயா உனைப் பரவலே
செய்யா திருக்கிலுல கெல்லா மெதிர்க்கும்அருள்
செல்லா திடுக்க னிடுமே
கையே குவித்தனெனை மெய்யா யுருக்கமிடு
கல்லோ உனக்கு மனது
மையார் குழற்கொண்மரி நல்லாய் வளர்க்கவளர்
வல்லாய் மகத்துவ பரனே

பரவல் = வணங்கல்; குழல் = பெண் மயிர்

9. எல்லாம் வனைந்துலகம் எல்லா நிறைந்திதையம்
எல்லாம் உணர்ந்த இறைவர்
பொல்லாத சிந்தனைகள் பொல்லாத நிந்தையுள
பொல்லாத வஞ்சன் எளியேன்
அல்லான் மயங்குபொழு தல்லா வுனின்சரணம்
அல்லா தியங்க வசமோ
வல்லாய் பு ரந்தருள வல்லாய் மிகுங்கிருபை
வல்லாய் மகத்துவ பரனே

10. உன்னா லெனக்குவளம் உன்னா லெனக்குநலம்
உன்னா லெனக்குறுதி யாம்
என்னா லுனக்குறுவ தென்னோபொன் னுக்குதவி
என்னாம் அ தைப்புனை வரான்
முன்னோ ரு ரைத்தபடி நன்னா வ லர்க்குள்வரு
முன்னோன் அ ளித்த பரனே
மன்னா ப ரத்தின்வளர் மன்னா கி றிஸ்தெமது
மன்னா மகத்துவ பரனே

தலைவரிசை அட்டவணை

11. நிலையாத மாகொடிய அநியாய வாழ்வதனை
நிசமாக நாடி நிதமே
துலையாத பாவவழி தனிலோடி வாடியுடல்
சுடுதீயில் வீழ்வ தியல்போ
கலையாது நேரடிகள் தவறாது பாடிவரு
கவிவேத நாய கனையே
மலையாது சீவனது பெறநீடு வாய்கருணை
மலையே மகத்துவ பரனே

ஜெபமாலை 11 வரை செய்யுள் 122

12. ஜெபமாலை

சத்துரு நாசம்

சீர்தந் துவிண் கதிதந்து நன்
செயல்தந் துபொன் முடிதந்து னின்
பேர்தந் தெனின் கலிவஞ் சகம்
பிணி யும்பல குறையுந் தவிர்
ஏர்தந் திசறே லின் றவி
திறை யன்பொடு நிறைசங் கிதச்
சார்தந் திறைஞ் சியபா தனே
சருவே சுரா சருவே சுரா

2. எனை யுன்றனின் மகவென் றுதான்
இக மும்பர மதுவும் சொலும்
பினை யுங்கடி எதிர்நின்று முன்
பெரு குஞ்சம ரிடநன் றதோ
அனை வந்துமுந் திரியின் ரசம்
அளி யென்றபோ தருள்விண் டவா
தனை யன்றனைத் தயைகொண்டு பார்
சருவே சுரா சருவே சுரா

3. நீயே கதி நீயே மதி
நீயே வழி நீயே விழி
பேயோ டுல கோர்கூ டியும்
பெலனா கவிங் கெனையென் செய்வார்
காயீ னையே கொலைசெய் வன்மேற்
கனமா மெழு பழியென் றவா
தாயாங் கனி மரியாள் தொழுஞ்
சருவே சுரா சருவே சுரா

4. கடிபட்ட பேய் கறுவித் தினம்
கவடத் திடும் வலையுக் குணான்
பிடிபட் டெனின் உயிர்கெட் டிடிற்
பேசார் களோ ஏசார் களோ
முடிபட்ட முண் முடிவைத் துமே
முகமக் கவே திகிரிக் கணுத்
தடிபட் டிட அடிபட் டவா
சருவே சுரா சருவே சுரா

திகிரி = மூங்கில்

5. பகரந் திகழ் மடமங் கையர்
பருவந் தனை நினைவுண் டவர்
மகரந் தனை நிசமென் றியான்
மருளா மலுன் அருள்கூ ரையா
சிகரந் தனில் எழநின் றுசெங்
கதிரின் றிரு உருகொண் டவா
தகரஞ் செறி சரணங் கொடு
சருவே சுரா சருவே சுரா

பகரம் = அலங்காரம்; மகரம் = சாயம்;
சிகரம் = மலையுச்சி; தகரம் = வாசனைப் பொருள்

6. சீலந் தருமறை யின் படி
செல்லா மல்யான் பொல்லா னெனக்
கோலங் கொளில் எவரென் புறங்
குணமென் றுகண் டுறவுஞ் செய்வார்
ஆலஞ் செநி மருடந் திரம்
அழியும் படி மனுவா கியே
தாலந் தனி லேவந் தவா
சருவே சுரா சருவே சுரா

7. விரணங் கொடு பலதுன் பமாய்
வினைமிஞ் சியே விழலன் கெட
மரணந் தொடு பொழுதென் றனின்
மனமஞ் சிடா தபையந் தரா
யிரணஞ் செய வருசங் கரீப்
பிதையம் பொடி படவென் றவா
தருணந் தனில் வுதவும் பரா
சருவே சுரா சருவே சுரா

விரணம் = புண்; இரணம் = போர்
2. இரா. 18, 19 அதி.

8. என்தா தைநீ என்தா யநீ
என்சீ வனீ என்தே வனீ
பெந்தான் மனம் நொந்தே துயர்
பெரு காமலுன் அருள்கூ ரையா
சிந்தூ டெழு நன்சீ டர்முன்
றென்பா கவந் தன்பா னவா
சந்தோ டசம் பனரா சனே
சருவே சுரா சருவே சுரா

9. பாபம் படு சாபம் பரன்
கோபங் கொடு பாரங் கியான்
சோபம் படு காதன் பொடு
துணை நின்றெனக் கறிவுஞ் சொலாய்
கூபம் படு நீர்தந் திடக்
குலமங் கைமுன் மொழிகின் றவா
தாபம் படு தோடந் தவிர்
சருவே சுரா சருவே சுரா

கூபம் = கிணறு

10. மாடும் படி பீடுங் கொடு
வாடுந் தமி யேனின் கன
பாடும் பல கேடுந் தவிர்
பாடுந் தமிழ் நாவுங் கொடு
சேடும் பொனின் றேடும் புனை
தேடும் பரி வாளன் பொடு
சாடும் புகழ் நாடும் பரா
சருவே சுரா சருவே சுரா

மாடு = செல்வம்; பீடு = பெருமை; சேடு = அழகு;
தோடு = காதணி; சாடு = சாதுரியம்

11. தினமா யசொற் பனவாழ் வையே
திடமா மென மடமா கிய
கனமா னபா தகன்மீ திலே
கடியால் வரு மிடிநீ ரையா
அனமாள் தரு மரிமைந் தனா
அடிவே தநா யகன்வந் தனா
சனமா னவா இனமா னவா
சருவே சுரா சருவே சுரா

ஜெபமாலை 12 வரை செய்யுள் 133

செய்யுள் அட்டவணை

13. ஜெபமாலை

கிறிஸ்துவின் தாழ்மை

தேவனானநீ மனுடனாகினை
திறமையானநீ சிறுமையாகினை
ஆவியானநீ சீவியாகினை
அருவமானநீ உருவமாகினை
பாவியாகினை தாழ்விலாதநீ
பாடதாகினை ஆடதாகவே
வீவிலாதநீ சாவுமாகினை
வேதநாயகா வேதநாயகா

2. உடுகணுற்றசாஸ் திரிகள்தேடவும்
உகம்வனைந்தநீ அமுததுண்கவும்
இடையர்வந்துகண் டடிதுதிக்கவும்
இரவிலேகுளிர் பனிமிகுக்கவும்
படிசிரிக்கநீ யழுதுகொண்டதும்
பரமசேனகள் பாடினின்றதும்
விடையின்முன்புவந் ததுவுமென்சொலாய்
வேதநாயகா வேதநாயகா

உடு = நட்சத்திரம்; உகம் = பூமி

3. மக்கண்மக்களும் எக்குலத்தரும்
மண்ணுளோர்களும் விண்ணுளோர்களுந்
தக்கபாதலத் தோரும்யாவருஞ்
சருவலோகமுஞ் சகலபேர்களும்
ஒக்கநின்றுகொண் டதிசயிக்கவே
உலகம்யாவையும் உண்டுசெய்தநீ
மிக்கவெட்கமற் றழுவதென்சொலாய்
வேதநாயகா வேதநாயகா

4. கல்லகத்தினர் கொல்லவெண்ணினாற்
காட்டகத்திடை மாட்டகத்திலுன்
வல்லபத்தினால் என்னசெய்யலா
மனம்விடாதெகிப் பத்திலேகுவாய்
புல்லகத்தரி யாதுபோர்த்தவே
போலிமாதிடஞ் சீலையேதுதான்
வெல்லைவூர்நமக் கெல்லையற்றதே
வேதநாயகா வேதநாயகா

வெல்லை = பெத்தலேகேம்

5. நித்திரைக்கெனத் தாயராட்டியும்
நீயழுங்குர லேமிகுப்பதென்
எத்ததிக்குநீ கூவிவாடினும்
ஏழைமாதிடம் ஏததுண்டுதான்
பெத்தலேமினில் உற்றபேரவர்
பெருமைக்கண்டுனக் கருமைசெய்யவே
மெத்தவுந்துயில் விழிகொள்ளப்பனே
வேதநாயகா வேதநாயகா

6. மனதிலேகொடும் பகையதாயுனை
வஞ்சகர்வியா ழத்தும்வெள்ளியுங்
கனவுபத்திர முறவதைத்ததுங்
கடினநிந்தைகள் படிறுசொன்னதும்
முனிவதாகமுக் காடதிட்டதும்
முழுதும்வேணகோ ரணிகள்கொண்டதும்
வினையமோநரர் செய்தபாவமோ
வேதநாயகா வேதநாயகா

7. தள்ளிவீக்கியுன் றனைவளைந்துமே
தறுகணர்க்குழா மிகவடித்தபின்
முள்ளுவன்கடு முடியழுத்தியே
முகமதிற்கறை படவுமிழ்ந்திடக்

கள்ளனொக்கவே தூடணிக்கினுங்
கருணையாளனீ சினமிலாமலே
வெள்ளையப்பனாய் மனமெடுத்தையோ
வேதநாயகா வேதநாயகா

8. தந்தைமைந்தனீ இந்தவேடமாய்ச்
சார்ந்ததேவினை யாவும்தீர்ந்ததே
உந்தன்ராச்சியம் எந்தன்ராச்சியம்
உனதுசெல்வம தெனதுசெல்வமே
சொந்தம்நீயெனக் குன்றனுக்குநான்
சொல்லவேறெனக் கில்லையையனே
விந்தையீதெலாம் உன்றனுண்மையே
வேதநாயகா வேதநாயகா

9. அருமையாளனீ உரிமைநாதனீ
அருளுசெல்வநீ அதிகவாழ்வுநீ
பெருமைஞானிநீ கருணைநண்பநீ
பெற்றதாயுநீ உற்றதந்தைநீ
தருமமந்திர குருவுமாகிநீ
தருணமானபோ துதவுதோழனீ
விரிவுசத்திய வேதம்யாவுநீ
வேதநாயகா வேதநாயகா

10. எண்ணுமாகினை இறையுமாகினை
ஏகமாகினை யாகமாகினை
கண்ணுமாகினை வழியுமாகினை
கதியுமாகினை பதியுமாகினை
பண்ணுமாகினை பாவுமாகினை
பரமுமாகினை வரமுமாகினை
விண்ணுமாகினை வெளியுமாகினை
வேதநாயகா வேதநாயகா

தலைவரிசை அட்டவணை

11. ஆதிநாயகா நீதிநாயகா
அளவில்லாதமெஞ் ஞானநாயகா
சோதிநாயகா இயேசுநாயகா
சொருபநாயகா அருபநாயகா
சாதிநாயகா தேவநாயகா
சருவநாயகா பொறுமைநாயகா
வேதநாயகா என்றெனக்கருள்
வேதநாயகா வேதநாயகா

ஜெபமாலை 13 வரை செய்யுள் 144

14. ஜெபமாலை

பாவசங்கீர்த்தனம்

சீரிலங்கும் ஆதியானின் சேயனேஎன் னாயனே
தீயபாவ மாறவந்த தேவதேவ தேவனே
நேரிலங்கு ஞானமங்கை நேயனேச காயனே
நேர்மையான தீர்வைகூறும் நீதனேஅ தீதனே
பேரிலங்கு சத்தியத்தின் ராசனேபிர காசனே
பேதையான பாவியென்றன் பாடல்கேட்டி ரங்கியே
ஏரிலங்கு வானநாடர் பேறுதந்த ருளவென்
றேகனுக்கு ரைக்கவேணும் இயேசுநாத சுவாமியே

2. அத்தனேஅ னாதியே சுத்தஞான ரூபியே
அண்டபிண்டம் யாவையும் விண்டமெய்ப்பிர தாபியே
கத்தனேகிரு பாசனா சத்தியவேத வாசனா
கண்கொள்ளாத காட்சியே விண்கொள்ளாத சூட்சியே
நித்தனே ம கத்துவனே முத்தொழிற்றி ரித்துவனே
நீசனான பாவியென்றன் மாசறுத்த கற்றியே
இத்தரையி லேதயவு வைத்திரங்க வேணுமென்
றேகனுக்கு ரைக்கவேணும் இயேசுநாத சுவாமியே

3. மண்ணிலேப வத்தினால்உ தித்துவந்த பாவியான்
மதலையான நாள்துவக்கி வன்பிலேந டந்தநான்
கண்ணினாலே செய்தபாவம் எண்ணினாலு முடியுமோ
காதொடைம்பொ றிவினைக ணக்கினைக் கடந்ததே
புண்ணியம ணுத்துணைய தேனுமற்ற வஞ்சகப்
புலையனான பாவியான்பு ரிந்தரண்ட கங்களாம்
எண்ணிறந்த கோடிபாவ மும்பொறுத்தீ டேற்றவென்
றேகனுக்கு ரைக்கவேணும் இயேசுநாத சுவாமியே

4. அங்கமுங்கி மங்கியேஅு லைக்கழிந்த பாவியான்
ஆசையிச்சை லட்சையின்அ கந்தைமிஞ்சு கன்மியான்
பெண்கள்சங்க வாஞ்சையிற்றி ரிந்தெனின்பெ ருமையால்
பெத்தரிக்கம் பேசியேபெ ரியவர்த மக்குமுன்
சங்கைசெய்து கீழ்ப்படிந்த டக்கமாயி ராதநான்
சாண்குழிபி ழைக்கவெகு தப்பறைகள் சொல்லியே
எங்கணும்வி னைபுரிந்த கேடனுக்கி ரங்கவென்
றேகனுக்கு ரைக்கவேணும் இயேசுநாத சுவாமியே

5. பொன்னைநாடு மாசையும் பொருளைநாடு மாசையும்
பூமிதேடு மாசையுஞ் சீமைதேடு மாசையுங்
கன்னிமாத ராசையுங் காமலீலை யாசையுங்
கட்புலன்க ளைந்ததின்க ணக்கில்லாத ஆசையும்
மின்னுமாடை யாடுமாடு வீடுவாச லாசையும்
மிக்கதந்தை தாயராசை மக்கள்பெந்தி னாசையும்
என்னையெண்ணும் ஆசையும்இ கழ்ந்தியான்பி ழைக்கவென்
றேகனுக்கு ரைக்கவேணும் இயேசுநாத சுவாமியே

6. வஞ்சமிஞ்சு பஞ்சபாவி நெஞ்சிலன்பி லாதவன்
வானவனு ரைத்தபத்து மறைதனைம றுத்தவன்
தஞ்சமென்ற டைந்தபேரைத் தள்ளிவிட்ட பாதகன்
தன்மநீதி ஞாயமுந்த வத்தையும றந்தவன்
அஞ்சலென்று னைப்பணிந்தி டாததுர்க்கு ணன்றனை
அக்கினிக்க டற்படுத்தி ஆக்கினையி டாமலே
எஞ்சலன்றி முற்றினும்இ ரங்கவேணு மென்பதா
யேகனுக்கு ரைக்கவேணும் இயேசுநாத சுவாமியே

7. மண்டலத்தில் மகதலாம ரிபவம கற்றினீர்
வலதுகள்ள னுக்கிரக்கம் வைத்துமே வழுத்தினீர்
கண்டுதிமிர் வாதரோகி கன்மபாவ மாற்றினீர்
கண்ணூறச்சீ மோனையுங்க டாட்சம்வைத்து நோக்கினீர்
தொண்டர்துன்பம் யாவையுந்து யர்க்குருசி லேற்றினீர்

செய்யுள் அட்டவணை

சொல்லுதற்க தீததீத துய்யதுய்ய துய்யனே
எண்டிசைக்கு ளென்பவத்தை யும்பொறுத்தி ரங்கவென்
றேகனுக்கு ரைக்கவேணும் இயேசுநாத சுவாமியே

8. தந்தைதாயி றந்தனர் பெந்துளோரி றந்தனர்
தரணிமன்னர் மாண்டனர் சகலபேரு மாண்டனர்
இந்தலோக சங்கடத்தில் ஆரிருந்து வாழ்ந்தனர்
ஏழையானும் வீயுநாள தின்றுநாளை யென்றிலை
விந்தையான மாயவாழ்வை அந்தமாக நாடியே
வீணிலேய லைந்துழன்று தீயிலேவி ழாமலே
எந்தநாளு மென்றனக்கி ரங்கியாத ரிக்கவென்
றேகனுக்கு ரைக்கவேணும் இயேசுநாத சுவாமியே

9. ஆரிருந்து மாவதென் தாயிருந்து மாவதென்
ஆனைசேனை யோடுகூடும் வாழ்விருந்து மாவதென்
பாரிருந்து மாவதென் ஊரிருந்து மாவதென்
பாவியாவி போகுநேரம் ஈதுவந்து தவுமோ
வேரிருந்த மூலநாடி ஊடழிந்து வீழ்ந்துமே
மேனியெங்கும் ரோகமுண்டு வேதனிட்ட தீர்வையால்
ஏரிருந்த ஜீவனாவி கூடுவிட்டு தங்குமுன்
ஏகனுக்கு ரைக்கவேணும் யேசுநாத சுவாமியே

10. மறுதலித்து லோகவாழ்வு முழுதையும்வெ றுக்கவும்
வானகத்தி னாசையால்மூ வாசையையொ றுக்கவும்
உறுதியுற்று வேதசத்தி யத்திலேயி ருக்கவும்
உண்மையோடு சீவன்மட்டும் நன்மையாய்ந டக்கவும்
பொறுதிவைத்து வந்ததுன்பங் களையறச்ச கிக்கவும்
புண்ணியவ ழியிலூன்றி விண்ணிலேறி வாழ்கவும்
இருதயத்தி லேசெபத்தின் ஆவியைய ளிக்கவென்
றேகனுக்கு ரைக்கவேணும் யேசுநாத சுவாமியே

11. ஆதியேவை செய்தபாவம் அகலவந்த தந்தையே
அவனிமீது மனுடனாக அவதரித்த விந்தையே
தூதர்சேனை பாடியாடு தோத்திரக்கரு ணாகரா
சோதியேஅ னாதியே தூயதற்ப ராபரா
வேதநாய கன்சொல்பாவின் மேலுலாவும் ஈசனே
மிக்கபாவ நாசனா பக்கிஷக்கிரு பாசனா
ஏதமன்றி வாழ்கவுன்ற னீதிகொண்டெ னைப்புரந்
தேகனுக்கு ரைக்கவேணும் யேசுநாத சுவாமியே

ஜெபமாலை 14 வரை செய்யுள் 155

செய்யுள் அட்டவணை

15. ஜெபமாலை

பாவசங்கீர்த்தனகலம்

அஃது
பாவமன்னிப்புக்காகச் செய்யும் விபரமான செபம்

இரக்கமுந் தயவு முடைத்த தற்பரனே
இடும்பவக் குறைகளால் நிறைந்த
மருட்படு மேழைப் பாவியா னொடுக்க
வணக்கமும் பணிவுமா யுனது
திருச்சதுர்க் கிருபா சனத்திடை வீழ்ந்து
சிறியனைத் தாழ்த்திசெய் திறைஞ்சிப்
பெருக்கவிண் ணப்பம் புரிவதற் கீண்டு
பெயர்ந்தனன் கருணையா திபனே

ஈண்டு = இவ்விடம்

2. பாவநித் திரையி னிருவி சாரத்தால்
பாதகன் சிறைவுறாப் படிக்குத்
தேவரீ ருமது பரிசுத்தா வியினாற்
றிறத்திலென் றனைப்புடைத் தெழுப்பிக்
காவலாய் விழிக்கச் செய்தெனின் பாவங்
களைப் பரதாபமாஞ் சீரை
மேவியா னுணரத் தக்கபுத் தியதும்
வெளிச்சமும் அருளுமா திபனே

புடைத்தல் = அடித்தல்

3. எந்தையென் னுட்சீ ருடன்புறச் சீரை
இயைந்துனின் றிருவுரைப் படியே
சந்தத மனவஞ் சனைமிலா தடியேன்

சார்ந்துசோ தனைசெயு மிடத்தென்
சிந்தையு மனச்சாட் சியுமெனைக் குத்திச்
சிறுமையன் செய்தஎண் ணிறந்த
நிந்தையின் பவங்கள் அனைத்தையுந் தூண்டிக்
காட்டுது நீதியா திபனே

4. என்மனத் தினுமுள் ளிந்திரி யங்க
ளினும்பெரு மிதவசுத் தத்தின்
துன்னிய ஆசைஇச் சைகள்வ யிற்றின்
துக்கமுங் கவலையும் பொருண்மேல்
உன்னுமா வல்களும் பெருமையு நானென்
றோங்கிய எண்ணமே லெழுச்சி
மன்னிய உலகச் சித்தையாங் காரம்
வன்பமு மிகுத்ததா திபனே

பெருமிதம் = மிகுதி

5. எரிப்புடன் கோப மற்றுமுண் டான
துர்க்குணங் களுமிகுத் தெனக்குள்
இருக்குதிப் பாவ வூறலி னின்றே
எழும்புபற் பலகண்ணிச் சைகளும்
வெருட்டரும் அழுக்குப் பேச்சுக ளுமக்கு
விரோதமற் றவர்க்குமே யிடறல்
பெருத்தசே தமுஞ்செய் வார்த்தைகள் திரளாய்ப்
புறப்படு தும்பரா திபனே

வெருள் = மயக்கம்

6. கையினாற் காலால் மற்றவய வத்தாற்
கருதியான் செய்தபா தகங்கள்
ஐயை யோகணக்கி லடங்குமோ ஏரா
ளப்பிர வாகமா னதலோ
பையவந் தரங்கத் தினும்பல ரறியப்
பராசியத் தினுமியா னிழைத்த

வெய்யபா வங்கள் மறைக்கினு முமக்கு
விபரமாய்த் தெரியுமா திபனே

ஏராளப் பிரவாகம் = மிகுதி; வெய்யது = பொல்லாதது

7. எண்ணில டங்கா இப்பெருங் குறைகட்
கெனைநர காக்கினைக் குளராய்த்
திண்ணமாய்த் தீர்த்தூ ழியுங்கடு மையினிற்
றெண்டினை யிடநெறி யன்றோ
அண்ணலே அடியேன் அனீதிகண் மிகவே
ஆடின தன்றியிங் குமக்குப்
பண்ணவேண் டியஊ ழியம்வழிப் பாடு
பரிந்திலேன் கருணையா திபனே

8. உத்தம விசுவா சத்தினே சத்தில்
ஓங்கிய தேவபக் தியினில்
மெத்தவும் ஜெபத்தில் அசதியா யிருந்துன்
மேன்மையின் வாக்கதை வெகுவாய்ப்
புத்தியற் றசட்டை பண்ணினே னென்பாற்
போட்டவே லைகளும் கெடுத்துச்
சுத்தமா யுண்மைத் தாட்சிகள் பண்ணிச்
சோம்பலாய்த் திரிந்தனா திபனே

9. நாட்களை வீணிற் போக்கியென் மீட்பை
நாடிநற் கருத்துடன் றேடி
வெட்புட னடப்பித் தேனிலைப் பிறரை
மேவிய நேசம்ஈ விரக்கங்
காட்புறக் காட்டி னேனிலை யதனாற்
கனிகொடா விருட்சமா மென்னை
வாட்கொடு வெட்டி எரிதழற் கிடுதல்
வாய்மையே நீதியா திபனே

வேட்பு = விருப்பம்; காழ்ப்பு = காரம்

10. பரிசுத்த நீதி யுடைய கர்த்தாவே
பாவிஎன் கண்களா னின்னைத்
தெரிசித்தே றெடுக்கத் துணிந்திடே னடுங்கித்
தியங்கியென் மார்பினி லடித்துக்
கரிசித்த பரனே பாவியென் னுடனே
கனிந்துற வாகுமென் றிறைஞ்சி
வரிசித்த பெருமுச் செறிந்துகெஞ் சுகின்றேன்
மனம்பொறுங் கருணையா திபனே

11. கருத்தனே எனக்கு இரட்சக ராகக்
கட்டளை யிட்டநின் னொன்றாந்
திருச்சுதன் றனைக்கொண் டொப்புர வான
திவ்விய தந்தைநீ ரன்றோ
பெருத்தவென் குற்றங் களைக்கொடும் பாரப்
பெருஞ்சுமை களையு மிங்கவரே
யுறுத்துடன் றம்மே லேற்றெனின் பிணையென்
றொப்பினர் கருணையா திபனே

12. எனக்கெனப் பிணைப்பட் டெனக்குறத் தகுங்கோ
பாக்கினை களையெனக் கீடாய்
மனத்திட னுடன்பட் டுத்தரித் தென்மேல்
வரத்தகு முமதுகோ பத்தின்
கனத்தஉக் கிரத்தைத் தமதுபுற் கலனிற்
கடினமாய் அனுபவித் திறுதித்
தினத்தள வெனக்காய்த் துயரமுற் றிருந்தார்
திவ்விய கருணையா திபனே

புற்கலன் = ஆத்துமா; இறுதி = சாவு

13. செம்புனல் வேர்த்து மரணவஸ் தையதாய்த்
தியங்கினர் பினும்பிடி பட்டே

செய்யுள் அட்டவணை

வம்பராற் கட்டுண் டனீதியாத் தீர்மா
னஞ்செயப் பட்டுமா நிந்தை
யும்பெருந் தூட ணங்களும் பொறுமை
யுடன்சகித் துவ்வியின் முட்கிரீ
டம்புனை யப்பட் டடிமிகப் பட்டா
னலமிகுங் கருணையா திபனே

செம்புனல் = இரத்தம்; உவ்வி = தலை

14. சிலுவையி லறைய ப்பட்டுவா னதற்குந்
திணைக்குமே நடுவினம் மணமாய்
மெலிவுறத் தொங்கிக் காயமைந் தடைந்து
வெள்ளமாய்க் குருதிகள் சிந்தித்
தலையுமே சாய்த்து மரணம தடைந்தித்
தகமையாய்த் தாசனை மீட்கும்
வலிமிகும் பொருட்டாற் றமதுசீ வனையு
மாய்த்தன்ன கருணையா திபனே

திணை = பூமி; குருதி = இரத்தம்

15. அங்கவர் பட்ட பாடுக ளனைத்தும்
அவர்திரு மரணமு நோக்கி
இங்கின மெனக்காய் அவருனின் வலது
பாரிசத் தினிலிருந் திறைஞ்சுஞ்
சங்கையின் மன்றாட் டுகளையுங் கேட்டென்
தப்பித மனைத்தையும் பொறுத்துப்
பங்கது பெறநின் பிள்ளையா யென்னைப்
பரிந்துகொள் கருணையா திபனே

16. எந்தயா பரனே துப்பிரு தயத்தை
எனக்குநீர் படைத்தெனி னிடத்தில்
உந்திய பாவ இச்சைகீழ்ப் படுத்தி

உன்றன்மே லுத்திபத் தியுமாஞ்
சிந்தையை யெனக்குத் தந்தரு ளினியான்
தீங்கினாற் சோதனைப் பட்டாற்
புந்திசம் மதிக்கா தகமெலாம் வெறுக்கும்
புலனருள் கருணையா திபனே

துப்பு = சுத்தம்; புந்தி = புத்தி; அகம் = பாவம்;
புலன் = அறிவு

17. ஐயனீ தானே பவத்தின்வல் லமையை
அழித்துநிர்த் தூழிய தாக்கி
மெய்யெனின் மனச்சாட் சியதுகண் மணிபோல்
விளங்கயான் காப்பதற் குமது
துய்யநற் பரிசுத் தாவியா லேவித்
துலாம்பரத் தெனைப்பலப் படுத்தி
நொய்யுமென் பெலயீ னத்திலொத் தாசை
நூங்குவை கருணையா திபனே
நூங்குதல் = செலுத்தல்

18. வந்தெனக் குதவி யாகநின் றடியேன்
மயக்குற இடறிவீழ்ந் தேனால்
எந்தையே முழுதுந் தள்ளிவிட் டகற்றா
திரக்கமாய் அதட்டிநின் கிருபை
யுந்திய கரத்தாற் றூக்கிவிட் டுதவி
யுனதறி வினுங்கிரு பையினுஞ்
சந்தத மடியேன் வளர்ந்துவர்த் திக்கத்
தயைபுரி கருணையா திபனே

19. நிசவிசு வாசத் தினுஞ்சினே கத்தும்
நீடிவர்த் தித்தென்னாற் றுமத்தின்
உசிதவீ டேற்றத் தினைத்துரு வுதலின்
உத்தசா கிர்தையோ டிருக்க

விசையநீ யருளி என்னய லார்க்கு
மெத்தன வையுமெனின் பகைவர்க்
கிசைவுறப் பொறையுங் காட்டயே சுவின்மா
திரிக்கெனை இணைசெய்யா திபனே

உசிதம் = உத்தமம்; துருவல் = தேடல்;
விசையம் = வெற்றி

20. உபத்திரவம் வந்தால் முறுமுறுக் காமல்
உத்தரித் துச்சயித் துனது
சுபத்தயிக் கத்தை விட்டக லாமற்
றுணிவுறு தியதெனைப் படுத்தி
விபத்தையி லாற்றித் தேற்றியென் மரண
வேளையான் அறிந்திலா தாலே
செபத்திலெப் போதும் விழித்திருப் பதற்குத்
திடனருள் கருணையா திபனே

விபத்தை = துன்பம்

21. கலக்கமற் றெனதாற் றுமத்தையுன் கையில்
கையளித் திவ்வுல கத்தை
விலக்கமாய்ப் பிரிந்து மோட்சராச் சியத்தில்
மேவியான் வீற்றிருந் தங்கே
துலக்கநித் தியசீ வனைச்சுதந் தரிக்கத்
துணையெனக் கருளுதி யையா
இலக்கண வேத நாயகன் பாடும்
எந்தையே கருணையா திபனே
இஃது தரங்கன்பாடித் தென்மார்க்கு மிசியோனாரிமார்
ஞானோபதேசக் குறிப்பிடத்தின்படி பாடினது.

ஜெபமாலை 15 வரை செய்யுள் 176

தலைவரிசை அட்டவணை

16. ஜெபமாலை

கிறிஸ்துவின் பாடுகளின் தேவாரம்

திருமனு டவதாரத்தை
விருத்தசே தனத்தையுன்றன்
அறியஞா னஸ்நானத்தை
அடைந்தசோ தனையைத்துன்பை
வருடமுப் பத்துமூன்றின்
வறுமையைஉ பவாசத்தை
இருதயத் தன்பைநோக்கி
இரங்குவா யேசுநாதா

2. சுந்தர ஒ லிவக்காவிற்
றூயவர் சூழ்கச்சென்றே
தந்தையம் பரனைநோக்கித்
தரையில்வீழ்ந் திறைஞ்சுநேரஞ்
சிந்திட உதிரவேர்வை
திகிலடைந்தாற் றுமம்நோக
எந்தைநீர் படுந்துன்பங்கண்
டிரங்குவா யேசுநாதா

3. முப்பது வெள்ளிக்காக
முத்தியால் யூதாசென்போன்
ஒப்புவித் திடஒன்னார்கள்
ஒருங்குடன் கரங்கள்பற்றிச்
சற்பனை யாகக்கட்டித்
தயங்கிட நடத்திச்சென்ற
இப்பெருந் துயரங்கண்டே
இரங்குவா யேசுநாதா

செய்யுள் அட்டவணை

4. வஞ்சகன் அன்னாமுன்னும்
வன்குருக் காய்பாமுன்னுந்
தஞ்சமற் றவராய்நின்றோர்
தறுகணன் கன்னமீது
வெஞ்சினத் தறையநொந்து
மிகும்பொய்ச்சாட் சிகளினாலே
எஞ்சலற் றுறுந்துன்பங்கண்
டிரங்குவா யேசுநாதா

5. வல்லவன் சுதனானென்ற
வார்த்தையால் மரணத்தீர்ப்பிட்
டல்லினி லிகழ்ச்சிகூறி
யசங்கத மடித்துக்குத்திக்
துல்லிப முகத்திற்றுப்பித்
துயருற முக்காடிட்டே
எல்லையற் றிடுந்துன்பங்கண்
டிரங்குவா யேசுநாதா

6. விம்மியே சேவல்இரண்டு
தரம்விளிப் பதற்குமுன்ன
மும்முறை மறுத்தசீமோன்
றனைமுகம் நோக்கினாப்போற்
செம்மையற் றொழுகும்பொல்லாத்
தீயபா தகரேயான
எம்மையுந் திருக்கண்ணோக்கி
இரங்கு வாயேசுநாதா

7. நிந்தனை யாகக்கட்டி
நடத்திநிஷ் டூரமாகப்
பொந்தியுப் பிலாத்துவின்பாற்
பூரியர ளித்தபோது

வந்தவீங் கிஷையகோர
வாதைவன் முறைப்பட்டாலும்
எந்தைநீர் படுந்துன்பங்கண்
டிரங்குவா யேசுநாதா

8. பத்தியற் றெரோதேமன்னன்
ஆகடி யங்கள்பண்ணிப்
பித்தனென் றுரைத்துத்தன்ரா
ணுவத்துட னிகழ்ந்துபேசிச்
சுத்தவெண் கவசமிட்டுத்
தூஷணித்த னுப்பச்செய்த
இத்துரி தங்கண்ணோக்கி
இரங்குவா யேசுநாதா

9. மன்னும்வெண் ணுடையைமாற்றி
வாரினால் அடித்துத்தீயோர்
மின்னிய சகலாத்தங்கி
வேந்தனென் றிகழ்ந்துபோர்த்துப்
பின்னுமுண் முடியதிட்டுப்
பெலத்தொரு தடியாற்றாக்க
இன்னமும் படுந்துன்பங்கண்
டிரங்குவா யேசுநாதா

10. பாதகன் பரபாவோடு
பணிவுற நிறுத்தினாலும்
வேதியர் கனன்றுகூவிக்
கும்பையும் எடுத்துவிட்டு
வாதையின் மரணத்தாலே
வன்குரு சேற்றுமென்ற
ஏதமே பொறுத்தவண்ணம்
இரங்குவா யேசுநாதா

செய்யுள் அட்டவணை

11. சேவகர் சேர்ந்துசொந்த
வஸ்திரஞ் சிறக்கச்சுட்டி
ஓவியச் சிலுவைதோண்மேற்
சுமத்தியுக் கிரத்தினோடு
சாவுறக் கொண்டுபோகுந்
நடத்தினிற் படுந்துன்பங்கண்
டேவையின் மக்களெம்மேல்
இரங்குவா யேசுநாதா

12. சிலுவையைச் சுமந்துசீமோன்
சிரேனைய னொருபாற்றாங்க
மெலிவினா னடந்துசெல்க
மெல்லியர் அழுதுநிற்கப்
பலநெறி யவர்கட்கோதிப்
பரதபித்த துபோலெம்மேல்
இலகும்நின் கருணைகூர்ந்தே
இரங்குவா யேசுநாதா

13. மள்ளர்கள் கொல்கதாவில்
வந்தபின் சிலுவைமீதில்
ஒள்ளிய கரங்கால்பற்றி
ஆணியா லுருவத்தைத்துக்
கள்ளர்கள் இருவர்தங்கள்
நடுவனிற் கடூரத்தேற்றி
எள்ளிய நிந்தைகண்டே
இரங்குவா யேசுநாதா

14. அவ்வழி யிற்செல்வோரும்
ஆரியர் தலைவமாருஞ்
சவ்வியக் கள்ளன்றானுந்
தறுகட்சே வகருமொய்த்துத்
திவ்விய அருளைச்சற்றுஞ்
சிந்தியா திகழ்ந்துசொன்ன

தலைவரிசை அட்டவணை

எவ்விதப் பழிச்சொல்லுங்கண்
டிரங்குவா யேசுநாதா

சவ்வியம் = இடப்பக்கம்; தறுகண் = வன்கண்

15. வாடியே ஆறாந்தாசு
துடங்கியொன் பதுமட்டாக
நீடிய துயராற்றாமல்
நெடுங்குரு சதனிற்றொங்கிப்
பாடுபட் டேழுவார்த்தை
பகர்ந்துகா டியுங்கொண்டாதிக்
கீடுசெய் திறத்தல்கண்டே
இரங்குவா யேசுநாதா

16. மரித்தபின் றிருவிலாவை
வஞ்சக னீட்டியாலே
திருத்தமாய்க் குத்தியீர்த்துத்
திறந்திடச் செந்நீர்நீரும்
பெருத்தெழ அடக்கப்பட்டுப்
பேறுதந் தெமைவானத்தில்
இருத்திட நினைத்தஅன்பால்
இரங்குவா யேசுநாதா

17. ஆதிமா னிடர்கள்செய்த
அகந்தையான் மனுடனாகிப்
பாதகம் அனைத்துந்தீர்க்கப்
பாடுபட் டுயிரைத்தந்து
வேதநா யகனும்வாழ்க
மிக்கநன் றியற்றினாப்போல்
ஏதுமற் றவரெம்மேலும்
இரங்குவா யேசுநாதா

ஜெபமாலை 16 வரை செய்யுள் 193

செய்யுள் அட்டவணை

17. ஜெபமாலை

உபவாச நாளின் தேவாரம்

திருக்க ருணைப்பிரானே
திவ்வியபி தாவின்மைந்தா
உருக்கமோ டுலகைமீட்க
உன்னதத் திருந்துவந்தோய்
குருக்களும் பகைவரானார்
கோவிலும் வேறதாயிற்
றிரக்கமே எங்கேநின்றாய்
எம்மையா ளேசுநாதா

2. அடுக்கடுக் காகவானத்
தண்டகோ ளங்கண்முட்ட
உடுக்களை நிரப்பிவைத்த
ஒப்பிலாக் கருணைத்தேவே
கொடுக்கவும் வகையற்றாயோ
குருசினில் எழுந்தகோவே
இடுக்கணுற் றுடைந்தோமையா
எம்மையா ளேசுநாதா

3. அத்தனேஅ னாதிவாழ்வே
அருமைரட் சகனேஐயா
மெத்தவுந் துயரப்பட்டோம்
வியாகுலம் அடைந்தோமுன்றன்
சித்தமே இரங்கொணாதோ
திருமுகம் நோக்கொண்ணாதோ
எத்தனை தரங்கூப்பிட்டோம்
எம்மையா ளேசுநாதா

4. ஒப்பிலாக் கிருபையோனே
யுன்றனக் கபையம்நாங்கள்
அப்பனே கைவிடாதே
ஆபத்துப் பெருகிற்றையா
கப்பலிற் றூங்கிறாயோ
கனக்கநித் திரைகொண்டாயோ
எப்பொழு தெழுந்திருப்பாய்
எம்மையா ளேசுநாதா

5. கங்குலும் பகலுமாகக்
கவலைகொண் டடியார்எல்லாம்
பங்கமா யுலகந்தூற்றப்
பாடுகள் மிகப்பட்டெங்கள்
சங்கையை இழந்தோம்பின்னுஞ்
சாதியி னலமுமற்றோம்
எங்கேபோ யிருந்தாயையா
எம்மையா ளேசுநாதா

6. வல்லமை யிலையோஎங்கள்
வறுமைகண் டறிந்திலாயோ
அல்லது மனதில்லாயோ
அடியர்மேல் அன்பிலாயோ
கல்லறைக் கிடமுமற்றுக்
காட்டினுக் ககற்றப்பட்டோம்
இல்லையோ இரக்கமையா
எம்மையா ளேசுநாதா

7. தன்னையே பெலியிட்டிந்தத்
தரணியைப் புரக்கவந்த
உன்னதப் பிதாவின்மைந்தா
உன்னைவிட் டெங்கேபோவோம்
பின்னொரு மீட்பனுண்டோ

செய்யுள் அட்டவணை

பெற்றவ னீயோவேறோ
என்னையா கவலையற்றாய்
எம்மையா ளேசுநாதா

8. அண்ணலே கிருபைகூரும்
அன்னிய ரானோம்நாங்கள்
கண்ணிலே கரிப்பாரில்லைக்
கடூரமாய்த் துரத்தப்பட்டோம்
பண்ணிய கொடூரமெத்தப்
பட்டபா டனேகமுண்டு
எண்ணியு முடியாதையா
எம்மையா ளேசுநாதா

9. காட்டிலே சிதறிப்போனோம்
கடூரமாய் அடிக்கப்பட்டோம்
கேட்டுரு கினவரில்லைக்
கேள்விகேட் பாருமில்லைப்
பாட்டினுக் குயர்ந்ததேவே
பாவிகள் பட்டபாடு
ஏட்டினும் அடங்காதையா
எம்மையா ளேசுநாதா

10. சங்கைபோர்ந் திலங்குதஞ்சைச்
சுவார்ச்சையர் சபைகள்நாங்கள்
மங்கியே துயரத்தாலே
வாடினோம் இரக்கங்காணோந்
தங்களைத் தங்கள்வீட்டைத்
தங்கள்பிள் ளைகளையன்றி
எங்களை நினைப்பாரில்லை
எம்மையா ளேசுநாதா

11. ஆதரவ ருளியெங்கள்
ஆபத்தை நீக்கிமேலுஞ்
சாதியி னிடறலன்றிச்
சபையெலாந் தழைக்கச்செய்து
வேதநாய கன்பாட்டெங்கள்
விண்ணப்பங் களைக்கேட்டன்பாய்
ஏதமே பொறுத்தெந்நாளும்
எம்மையா ளேசுநாதா

புதுக் குருமார் தமிழ்ச் சனங்களுக்குச் செய்த கொடுமையைப் பற்றிப் பராபரனை நோக்கிக் கூப்பிட்ட முறைப்பாடு – 1834

ஜெபமாலை 17 வரை செய்யுள் 204

18. ஜெபமாலை

மனவாஞ்சை

திருப் புகழ்ச் சந்தம்

திருவருள் பெருகிய விணின் விபுதர்கள்
தெரிசிய ரிருடியர் மறையறி ஞர்கள்
திடவர முளஅரி யவர்பெரி யவர் – சிறியோரும்
ஒருவரு மனநினை வினுமறி வினும்
உணர்விட வரிதென மகிமையி லுயர்
உரைமறை தருபர மகுமர னடி – உரமான
மருவியென் முழுஇரு தயமுரு கிட
மதிதரு ஜெபமணி யினையனு தினம்
மகிழ்வொடு பலதுதி களின்முறை சொல – வளமான
பெருகரு ணைகளிடு வரமிடு வளர்
பிரபையின் மலரடி யிடுனரு மைகள்
பெருமைக ளிடுசெய மிடுநய மிடு – பரதேவே

2\. ஆரண மறை யோதிய நேர்புவி
யாவையும் அறு நாளதி லாடிய
ஆதிப னர ரூபம தாகிய – அவதார
காரண மத னாலுயர் வானவர்
காயவிண் ணிலே யாடினர் பாடினர்
கானக முறு மாயர்க டேடினர் – கனிவாகப்
பூரண னுனை யானும நேரொடு
பூசனை செயு மாவ லினான்மிகு
போதக ஜெப மாலைக ளோதிய – புகழாலே
தாரண மருள் பாடிடு நாவருள்
தாபர மருண் மாரண மாகிய
சார்பரு ளுனி னாவியை யருளொரு – பரதேவே

காயம் = ஆகாயம்; தாரணம் = தப்பம்; தாபரம் =
ஆதாரம்; மருள் = மயக்கம்; மரணம் = கொலை

3. பரம நவவெரு சலமதி பதிசுரர்
பணிய நிறைதவி திறைகுல மதினொரு
பருவ கனிமரி உதரம துறுமதி – சயஞான
உரம துரைசதுர் வரமருள் கிருபைமுகில்
உலக முழுதையும் நிலைபெற உயிர்விடும்
உதய மிடுபொறை பெருகிய கணனென – உயர்தேவ
தரும தவசுப சமுகம தொளிரிரு
சரண மலரடி பிரியமுற் றொழுகிய
சகல முகடனை யவலனை வினைமிகு – தமியேனை
அருமை யுடனுன தடிமைகொள் மரணம
தளவு முனைநினை வறிவொடு பணிகுவன்
அதிக சவுரிய சருவவல் லபபர – குருதேவே

4. அனந்த ஞானந் தங்கிய கிருபையும்
அகண்ட நேயம் பொங்கிய பெருமையும்
அடைந்த பேர்தன் பங்கிடு சரணமும் – அதிருபுஞ்
சினந்த நீதங் கொண்டெழு மகிமைக
டிறங்க ளோடுஞ் சிந்தையி னடியவர்
ஜெபங்க ளோதும் பண்புக ளுணர்வுறு – செயலாலும்
புனைந்த பாவம் பொங்கிய வினைபல
புரிந்த தோடன் கண்டக னயலிடை
புகுந்து நாளுந் தஞ்சம தருளுதல் – புகழாகுங்
கனிந்த நாவுஞ் செஞ்சொலு முரைமரி
கனங்க ளோடுங் கொஞ்சிட வரும்வரை
கடந்த வேதந் தந்தரு ளியபர – குருதேவே

கண்டகன் = துட்டன்

5. துதிபெரு குகடவுள் பரநின்று லோகத்திலே
சுடரென வுமிருள கலவந்து தாபித்துமே
சொருபமொ டுவளர்வ யதிரண்டு மோர்பத்திலே – துடியோடு
சதுசெயர் கள்பரிசெ யர்கள்முன்பு மாதர்க்கமே

செய்யுள் அட்டவணை

தரஅவர் களதிச யமிகுந்து பூரிக்கவே
தருமம றைவிதிமி கஅறிந்து போதித்தவா – சருவேசா
அதிகக னமகிமை நெறிமிஞ்சும் ஞானத்தினால்
அலகைம தமதனி லுறைவஞ்சன் மேன்மெத்தவே
அருள்மெரு கியுனது மறைதந்து பாவித்ததே – அருளாமே
இதுவரை யுமுலகி னிடந்த மோசத்திலே
எனைவில கமிகவ ருள்புரிந்த நேசத்துளே
இனமுமெ னையடிமை கொளுயர்ந்த வானத்துலா – வியதேவே

 லூக். 2:46, 47

6. அடிமை யெனவேட நிந்தை யுந்த
அவனி மிசைதாழ்மை யின்கண் முந்த
அசடர் சிறைமீள வென்று வந்த – அருளாலே
கடுமை பலவாதை துன்ப மிஞ்சு
கசிவு பிரலாப சஞ்ச லங்கள்
கடுமுடி கள்காயம் ஐந்த டைந்து – கனமான
கொடுமை மரமீது நின்றி றந்து
குருதி வெளமோட வுந்தொ டர்ந்து
கொடிய னெனையாள அன்பு கொண்ட – குருநாதா!
நெடுமை நிழன்மேவு நண்ப னும்பர்
நினைவி னுடனாளும் அஞ்ச லுஞ்செய்
நிகரு வமையாவு மின்றி நின்ற – பரதேவே

(நிழல் = கிருபை)
மத். 27. அதி

7. மலைமுடி செறி கொண்டை முடித்திரு
வரியிட விழி கொண்டு மிரட்டியு
மயலிட வரு மங்கை யருக்கெனின் – மனம்வாடி
உலைமெழு கென நின்று தவிப்பதுன்
உயர்திரு விழி கண்டது தப்பிலை

உலகதி லுறு நிந்தை யிலிப்படி – யுலைவேனோ
அலைகட லது பொங்கி யுரத்தெழ
அதிரொலி பட விண்டு மடித்திட
அடிகளி னுட சங்க மரக்கலம் – அதின்மீது
நீலைதவ றிந டுங்கி யரற்றிட
நிசமென வுமு றங்கி விழித்தெதிர்
நிழலியி னொடு சிந்தைய தட்டிய – பரதேவே

விண்டு = காற்று;
அடிகளினுட சங்கம் = முனிவர் கூட்டம்;
மரக்கலம் = கப்பல்;
நிழலி = காற்று; சிந்து = கடல்
மத். 8:23–27

8. நறுமலர்க் கமழ் குழலிகள் கலவியை
நணுகிமுற் றினும் உடல்கெட இளமையி
னலமதற் றுறு பிணிகொடு நரகதின் – அடிவீழ்கும்
உறுதிகெட் டவர் களின்முடி வினைமன
துணரவைத் தருள் புரிமுன மிசறல
ரொடுபொரப் படை யுடன்வரும் அசடரை – உரமாக
இறுதிபட் டழி வுகள்பட முறிவுசெய்
தெழுதிவைத் தவர் வழிமர புகளையும்
எழின்முகச் சவு லரசனி னொடுசொலி – எரிவாக
அறுதியிட் டத மிடவரு ளியபடி
அபிமெலக் கரசனை வதை புரியினும்
அவகடச் சவு லையுமொரு வியபர – குருதேவே

பொர = யுத்தஞ் செய்ய
யாத். 17:8–16; 1சாமு. 15 அதி.

9. தேசமெங் கெங்கும் அலை வுற்று
நீசனென் றங்கு பல மக்கள்
சீறவுஞ் சிந்தை மதி வைத்த – திடமேகி

மோசமுங் கொண்டு பழி பட்டு
ரோசமும் பங்க மது முற்ற
மூடனென் றென்ற னையும் வைக்க – முறையாமோ
லாசரின் றங்கை மரி பற்று
நேசசொம் பங்கை இத யத்துள்
நாடவும் புந்தி தரு வித்து – நலமான
தாசனென் றுஞ்செய் மன மொத்து
லூசியும் பண்டு புக ழிட்ட
சாமியென் றென்று முடி வற்ற – பரதேவே

லூக். 10:42
 லூக். 8:28

10. பவ மதி லுழைத்துத் ததிப்
படி றுக ணடத்தித் துட்டப்
பய லென நடத்தப் பட்டிப் – படிமீதே
அவ ரவர் நகைக்கத் துப்பற்
றவ மதி படைத்துக் கெட்டிட்
டறி வழி பகைக்குட் சிக்கிட் – டலைவேனோ
கவை நகை யெடுத்துக் குட்டிப்
பசு வுறு படுத்திப் பற்றிக்
கன பறை முழக்கித் தட்டிக் – கடமீதே
சவை குடி மிகுத்துக் கொட்டத்
திட நட மடித்துக் கத்தச்
சமை யம தழிக்கப் பற்றுப் – பரதேவே

படி = பூமி
யாத். 32 அதி.

11. மாத ரார்தரும் இச்சை யின்பெரு
மாயை யான்மன மெத்த நொந்ததி
வாதை யாய்மத முற்ற ழிந்திட – மருளாலே

தீதி லேநிலை யுற்ற ருங்கடி
சேய னாயத மத்து றைந்தழல்
சேர வேமுகி வற்ற ழுந்திய – சிறைதீராய்
பாத மானது பற்றி யன்பொடு
பாவை யாடிரு சத்தி யங்கொடு
பாச மாய்மண மிட்டெ ழும்பிய – சுருளாலே
காத லோடுது வட்ட அங்கவள்
காமி யாய்முன்னி ழைத்த நிந்தைகள்
காட தோடஉ ரைத்த சம்பன – பரதேவே

லூக். 7:37, 38

12. கணப் பகையுட வலித்திற மொருவினை
கதித் துலகிடும் உபத்திர மொருவினை
கடத் துடல்செய்யும் இடக்குக ளொருவினை – கனமான
பணப் பகையிடு திருக்குக ளொருவினை
படிப் புகடரு மகத்துவ மொருவினை
பகைத் தெதிரிகள் நடத்துவ தொருவினை – பழியாக
மணப் பகையெழ முடிப்ப வரொருவினை
வதைத் திருதயம் உழற்றுவ தொருவினை
மனக் கவலைகள் கணக்கில தொருவினை – மருடீராய்
நிணப் பகைநினி வயர்க்கொரு முனியுட
னிசத் தழிவுகள் வருத்துவ மெனமறை
நிகழ்த் தினும்அருள் நினைத்த ருளியபர – குருதேவே

யோனா 4:10, 11

13. பொல்லாத பேய்களை யேதொழுத பாதகர்
கல்லாத மூடர்க ளாய்வளர்க போதிகள்
புல்லோர் கடீவினை யாளர்கள நீதர்கள் – புலையாளர்
எல்லாரும் வாரும்இ தோவெனது நீதியை
அல்லாது சீவனு றாதுகெடு வீர்நலம்
இல்லாத வேழைக ளேயெனவு சாவிய – இணையாளா

செய்யுள் அட்டவணை

உல்லாச மாயுல காசைகளி லேகன
சல்லாப மாய்விளை யாடியட மாய்மனம்
ஒல்காம லேதிரி பாவியெனை யாள்வதுன் – அருளாமே
சொல்வே தநாயகன் ஓதியம னோகர
நல்லாய னேசுசு வாமிகிரு பாகர
தொல்லாதி பாவவி மோசனசரு வேசுர – பரதேவே

மத். 11:28–30

ஜெபமாலை 18 வரை செய்யுள் 217

19. ஜெபமாலை

வேதநூற் ஜெபங்கள்

முதற் பங்கு
பத்துக் கற்பனைகள்

8 அடி

கருத்த ரருளிச் செய்த பத்துக்
கற்ப னைகளில் முந்தி னது
கடவு ளூனது பராபர னாங்
கருத்தர் தாமே நமக்கு முன்பாய்க்
கணீத்து வேறே தேவ ருனக்
குண்டா யிருக்கக் கடவ தன்று
ககனத் தினும் பூத லத்துமுல
கத்தின் கீழ்த்தண் ணீரி னிலுங்

ககனம் = வானம்

காணும் பொருட் கொத்தி ருக்குமொரு
சுரூப மெனும் விக்கி ரகமெனுங்
கண்டித் துனக் காயுண் டாக்க
வேண்டாம் அவை கடனைக் கருதிக்
கைகூப் பியுநீ நமஸ் கரித்துக்
கனிந்து சேவிக் கவும் வேண்டாங்
கட்டா யிரண்டாங் கற்ப னையோ
கருணா லையனுன் பரா பரனாம்

கருணாலயன் = கடவுள்

பெருத்த கருத்தர் திரு நாமம்
வீணில் வழங் கிப்பே சாதே

செய்யுள் அட்டவணை

பிரானார் தமது நாம மதை
வியர்த்த மாகச் சுவிக ரித்துப்
பிதற்று மவரைத் தெண்டி னைத்தான்
செய்யா துகுகார் பினை மூன்றிற்
பெருநா ளெனுஞ் சாபது நாளைப்
பிரியத் துடன்றூ யதாக் கநினை

பிரான் = கடவுள்; வியர்த்தம் = வீண்;
உகுதல் = விடுதல்; உகுகார் = விடார்

பிறங்கு நாலாங் கற்ப னைநீ
பெலத்து நன்றாய் இருப்ப தற்கும்
பெறுமுன் னாட்கள் பூமி யினிற்
பெருகி நீடித் திருப்ப தற்கும்
பிதாவை யுன துமா தாவைப்
பேணிக் கனஞ் செய்வா யாகப்
பிசகா வைந்தாங் கற்ப னையோ
கொலைசெய் யாதே பேத கத்தால்

பிறங்குதல் = பிரகாசித்தல்

விருத்தி யாறாங் கற்ப னைதான்
விப சாரம் பண்ணா யாக
மீண்டு மேழாங் கற்ப னையோ
மிகையாற் களவுசெய் யாதே
விதித்த எட்டாங் கற்ப னையில்
உன்ற னய லான்றன் மீது
விரோ தமா கப்பொய்ச் சாட்சி
விளம்பா யாக ஒன்ப திலோ

மிகை = கேடு; அயலான் = அடுத்தவன்

விரும்பி யாசித் துன தயலான்
வீட் டைஇச் சிக்கா யாக

மிக்க பத்தி லுனக் கடுத்தோன்
மேவு மனை யாள்மெய்ச் சேடன்
வேலைக் காரி யெனு மவன்றன்
விடையை நீச வாக னத்தை
வேறே அயலான் றனக் குளயா
தொன்றை யெனும் வேட்புற வேண்டாம்

விடை = எருது;
நீசவாகனம் = கழுதை; வேட்பு = விருப்பம்

ஒருத்த ரெனு மெய்க்காத் தரிந்தத்
தசகற் பனை களுக் காக
உரைத்த துனது பரா பரனாங்
கருத்தர் நாமுக் கிர வெரிச்சல்
உள்ள தேவ னமைப் பகைப்போ
ருக்கோ பிதாக்க ளவ நெறியை
ஓங்கு மகர்ப்பாற் றலை முறைகள்
ஒருமூன் றொரு நான்கள வாக

தச கற்பனை = பத்துக் கற்பனை; உரைத்தல்
= சொல்லல்; மகர்ப்பால் = பிள்ளைகளிடத்தில்

உறவி சாரித் தடிக் கிறவ
ராக விருக் கின்றோ மானால்
உவந்து நமை நேசித் தெமது
கற்ப னைகளைக் கைக்கொள் ளுவோர்க்
கோரா யிரமாந் தலை முறைமட்
டுருக்கத் தயவு பெருக்க வளிப்
போரா யிருக் கிறோ மென்றான்
ஒப்பி லாத ஒருமு தலே.

உறல் = கிட்டல்

விசுவாசப் பிரமாணம்

4 அடி

2. பரமண் டலமும் பூதலமும்
படைத்த சருவ வல்லபத்தின்
பான்மைப் பிதாவாம் ஏகபரா
பரனை விசுவா சிக்கின்றேன்
பாங்கா யவரின் ஒன்றான
பட்சச் சுதனம் முடநாதர்
பரிவி னேசுக் கிறிஸ்துவையான்
பணிந்து விசுவா சிக்கின்றேன்

(பான்மை = குணம்)

உரைகொண் டிவரோ பரிசுத்தா
வியினாற் கெற்ப மெனஉற்பவித்
துற்ற கன்னி மரியாள்பால்
நின்று பிறந்திவ் வுலகோர்க்காய்
ஓங்கும் பொந்திப் பிலாத்துவின்கீழ்ப்
பாடு பட்டோர் சிலுவைதனில்
உறவே யறையுண்டி றந்தடக்கப்
பட்டா ருடன்பா தலத்திறங்கி
இருண் மண்டிறந்தோ ரிடத்தினின்
றேமூன் றாநா ளுயிர்த்தெழுந்தார்
எங்கோன் பரமண் டலங்களிலே
ஏறிச் சருவ வல்லமையின்
எந்தை பரனார் வலப்பாகத்
திருக்கின் றாரங் கிருந்துயிரோ
டிருக்கி றவர்கள் மரித்தவர்கள்
ஏவையு நடுத்தீர்ப் பிடவருவார்
அருள்கொண் டுயரும் பரிசுத்தா
வியையான் விசுவா சிக்கின்றேன்
அரிய பொதுவாந் திருச்சபையும்

அரச் சீட்டவரின் பாகமதும்
அங்கப் பொறுத்தல் மேதையுயிர்த்
தானத் துடனித் தியசீவன்
ஆமுண் டென்று விசுவாசிக்
கின்றேன் ஆள்வா யொருமுதலே

இருண்மண்டிறந்தோர் = இருள் நெருங்கிய மரித்தோர்;
வலபாகம் = வலதுபக்கம்; பாகம் = பங்கு;
அங்கம் = குற்றம்; மேதை = சரீரம்

கர்த்தருடைய ஜெபம்

2 அடி

3. பரமண் டலங்களி லிருக்குமெங்கள்
பிதாஉன் னாமம் அர்ச்சிக்கப்
படவுன் றனின்ராச் சியம்வருகப்
பரத்துன் சித்தஞ் செய்வதுபோல்
தரைமண் டலத்துஞ் செய்யநித்தந்
தரும்எம் அப்பம் இன்றெமக்குந்
தாரு மெங்கள் கடன்காரர்
தமக்கு நாங்கள் பொறுப்பதுபோல்
நிரைகொண் டெமக்கும் பொறுத்துவிடும்
நெடுஞ்சோ தனைக்குட் படப்புரியாய்
நீக்கிக் தீங்கை இரட்சைசெயும்
நிலைராச் சியம்வல் லபமகிமை
உரைகொண் டுமக்கென் றென்றைக்குமே
உண்டா யிருக்கு தாமனென
ஓதச் செபத்தின் முறைமையெமக்
குரைத்தாய் வேதத் தொருமுதலே

அர்ச்சித்தல் = பூசித்தல்

செய்யுள் அட்டவணை

ஞானஸ்நானக் கட்டளை

2 அடி

4. யேசு நாதர் தம்முடைய
சீஷர் களுக்குக் கட்டளையிட்
டிசைத்த திருவாக் கதுநீங்கள்
எழுந்து லோகம் எங்கணும்போய்த்
தேசு பெறச்சா திகளையெல்லாஞ்
சீஷா ராக்கி அவர்களுக்குத்
திவிய பிதாச்சே பரிசுத்தா
வியினா மத்தி லேசிறந்து
பாசமு டன்ஞா னஸ்நானம்
பகுங்கோ விசுவா சமுளனாய்ப்
பரம தீட்சை பெற்றவனீ
டேற்றப் படுவான் பற்றிவிசு
வாசி யாத மானிடனோ
வருமாக் கினைத்தீர்ப் புக்குளராய்
வைக்கப் படுவா னென்றுரைத்தார்
மட்டி லாத ஒருமுதலே

இசைத்தல் = சொல்லல்; தேசு = அழகு;
பரமதீட்சை = ஞானஸ் நானம்;
பகுத்தல் = கொடுத்தல்

நற்கருணை கட்டளை

3 அடி

5. நமது நாதர் கிறிஸ்தேசு
காட்டிக் கொடுக்கப் பட்டஅன்றை
ராவி லப்பம் எடுத்தருளி
நண்பாய்ப் பிட்டுச் சீடருக்கு
நல்கி யுரைத்த திதைவாங்கிப்
புசியும் உமக்காய் நயந்தளித்த
எமது சரீர மாயிருக்கு
தென்னை நினைக்க இதைப்புரியும்

என்றான் பினையும் அப்படியே
இராப்போ சனஞ்செய் தானபின்னர்
இதைபாத் திரத்தை எடுத்தேத்தி
இஸ்தோத் திரஞ்செய் ததையவர்கட்
கமுத மாகக் கொடுத்துரைத்த
தாவ திதிலே எல்லவரும்
அன்பாய்க் குடியும் இதுபாவப்
பொறுத்த லதற்கென் றுங்கள்பொருட்
டாலே சிந்தப் படும்புதுஏற்
பாட்டி னுடைய எனதிரத்தஞ்
சமமாய் நீங்கள் இதைக்குடிக்குந்
தகுண மனைத்தும் எனைநினைக்குந்
தகமைக் காகச் செய்யுமெனச்
சாற்றித் திவ்விய நற்கருணை
தாபிற் தெமக்குப் பவப்பொறுத்தல்
தந்தாய் வேதத் தொருமுதலே.

நண்பு = நட்பு; நல்கல் = கொடுத்தல்;
நயந்து = சிநேகித்து

பாவ சங்கீர்த்தனம்

4 அடி

6. இரக்க முடைய பராபரனே
ஏழைப் பாவி யாகியநான்
இடுக்க ணடைந்திங் குமக்குமுன்பாய்
வீழ்ந்துன் கிருபை பொறையினையும்
என்பாற் றேட வந்தேன்யான்
இதயம் வாக்கென் நடக்கையினால்
எண்ணற் கரிய பவங்களெல்லாம்
இழைத்தே னென்று மனதுநொந்தேன்
பெருக்கக் கிருபைப் பராபரனே
பேதை யெனைநீ தியின்படியே

செய்யுள் அட்டவணை

பிளந்து நரகத் தழுத்தாமற்
பேணி யெனதி ரட்சகருன்
பிரிய சுதனே சுக்கிறிஸ்து
பிரலா பப்பா டவைகளையும்
பிரிந்த மரணத் தையும்பார்த்துப்
பிழையன் புரிந்த பவங்களெல்லாம்
உருக்கத் தயவாற் பொறுத்தருளி
யுவந்தே யிரட்சித் தெனைப்புரப்பா
யொன்றித் திரும்ப யான்பவத்துக்
குறச்சோ திக்கப் பட்டேனால்
உடந்தை யாயங் கதற்கடியேன்
ஒப்பி மனஞ்சம் மதியாமல்
ஒருவி யதனை அருவருத்தே
யுனக்காம் பிரிய மகவாகத்
திருக்கட் கெதிரே நடப்பதற்குத்
திவிய பரிசுத் தருபிகொண்டு
திடனும் புலனும் பெலனையுமே
தீர்க்க முடன்றந்தெ னையாள்வாய்
தீயனி னிச்சாம் போதுனது
சீவப் பரம ராச்சியத்திற்
சேரு வதற்கா யத்தமெனைச்
செய்வாய் வேதத் தொருமுதலே

இடுக்கண் = இக்கட்டு; இழைத்தல் = செய்தல்;
பிழையன் = குற்றக் காரன்; புரிதல் = செய்தல்;
ஒருவல் = நீக்கல்; மகவு = பிள்ளை;
திருக்கட் = திருக்கண்

இஃது தரங்கன்பாடித் தென்மார்க்கு மிசியோனாரிமார் ஞானோபதேசக் குறிப்பிடத்தின்படி பாடினது.

ஜெபமாலை 19 வரை செய்யுள் 223

20. ஜெபமாலை

வீண்பத்திநாசம்

கழிநெடில்

மாசிலா மனத்தாய் ராசவிற் பனத்தாய்
மகிமையின் கிருபையா சனத்தாய்
வலியமா சனத்தாய் பெலிசெய்போ சனத்தாய்
மட்டிலா வலமைசேர் கனத்தாய்
தேசுறுந் திரத்தாய் பேசரும் பரத்தாய்
திரித்துவ ஏகதத் துவத்தாய்
செய்யசுந் தரத்தாய் துய்யமந் திரத்தாய்
திடவரத் தாய்திரு வுரத்தாய்
பாசமே யுதித்தாய் நேசமே கதித்தாய்
பரமசத் துவமகத் துவத்தாய்
பாததோத் திரத்தாய் வேதசாத் திரத்தாய்
பாத்தியன் கோத்திரநேத் திரத்தாய்
ஏசறப் படைத்தாய் ஆசறத் துடைத்தாய்
எரிநர கக்கத வடைத்தாய்
என்னுரு வெடுத்தாய் பொன்னகர் கொடுத்தாய்
எந்தையே யேசுநா யகனே

2. கல்லதைச் செம்பை வெள்ளியைப் பொன்னைக்
கடவுளென் றடிதொழ மாட்டேன்
களிமண்ணால் மிதியிட் டுருவெனக் குயவன்
காட்டிய கோலமுங் கருதேன்
வல்லிரும் புருக்கால் வெண்கலத் தகட்டால்
மற்றுள பஞ்சலோ கத்தால்
வார்த்ததும் அடித்து வைத்தது மான
வன்சிலை களையெலா மதியேன்
செல்லரிக் காத மரத்தினைத் தெரிந்து

சித்திர வேலைக டீர்ந்த
சிறந்தபொம் மைகள்பற் பலபடங் களையுஞ்
சிந்தையிற் கனவிலு நினையேன்
எல்லையில் லாவெவ்வி தங்களா யினமும்
இருத்திய சுருபங்க ளனைத்தும்
எனக்கினி யாகா துனக்கியான் அடிமை
எந்தையே யேசுநா யகனே

3. வாயிருந் தாலும் பேசிடா தூமை
வலியகண் ணிருந்துநோக் காது
வன்குகுட தற்குச் செவியிருந் தாலும்
வார்த்தைகேட் டறிந்துகொ ள்ளாது
காயமோ டிருகை உண்டெனுந்தொ டாது
காலிருக் கினுநட வாது
கடியமூக் கிருந்து முகர்ந்திடா ததனின்
கண்டமும் ஓசைகாட் டாது
தீயினிற் போட்டால் எரிந்துபோம் வைது
திட்டியும் பொறுமையா யிருக்குஞ்
செத்ததோர் பிணம்போல் வைத்திடங் கிடக்குந்
திருடன்வந் தெடுக்கினு மெடுப்பான்
நீயெனை விடுவி என்றறி வழிந்து
நீசவச் சிலைகளைப் பணியேன்
நின்னையே பணிவேன் என்னையாண் டருள்வாய்
நித்தனே யேசுநா யகனே

கதித்தல் = மிகுத்தல்; சத்துவம் = வலி;
வெவ்விதம் = வேறு வேறு விதம்

4. குஞ்சினைத் திருடும் பருந்ததோ கருடன்
குலைக்குநாய் வயிரவ னூர்தி
குரங்கதோ அனுமார் பன்றியு மீனுங்
கூர்மமும் விஷ்டுணு வடிவந்

துஞ்சிடக் கடிக்கும் பாம்பதோ நாக
சுவாமிவிக் கினேசுரன் யானை
தோகையும் அனமுங் காகமுங் கிளியுந்
தூக்கிய தேவர்வா கனங்கள்
அஞ்சியே வளையிற் புகும்பெருச் சாளி
யானையைத் தூக்குமோ ஐயோ
ஆலிலை பதினா றாயிரம் பெண்கள்
அணைந்தவன் றனையெடுப் பதுவோ
வெஞ்சின மாடு நந்திகே சுரனோ
விபூதியும் அதினுட சாணி
வீணிழ வெனவே தோணினே னிதெலாம்
வேதனே யேசுநா யகனே

ஊர்தி = வாகனம்; கூர்மம் = ஆமை; தோகை = மயில்;
நந்திகேசுரன் = இடபவிக்கிரகம்

5. சூரியன் வடிவோ சந்திர னுடுவோ
தொகையிலா வான்பற வைகளோ
துன்னிய காற்றோ வன்னியோ முகிலோ
தோன்றிய பூமியோ மண்ணோ
பாரினி லூர்குஞ் சீவனோ செந்தோ
பற்பல நாலுகால் விலங்கோ
பசும்புலோ செடியோ அனந்ததா பரமோ
பயோததி நீந்துசங் கினமோ
ஏரியோ குளமோ ஆறதோ நதியோ
எண்ணிலா மலைகளோ சுனையோ
இடங்களோ விசேஷ தலங்களோ கோடி
இத்தனை இழவுமல் லாமற்
காரிய மெனவே நரகலை நீரைக்
கலந்த பெண்குறி யோடாண் குறியைக்
கடவுளென் றிருந்த மடையனா னையா
கருணைசெய் யேசுநா யகனே

செய்யுள் அட்டவணை

உடு = விண்மீன்; வன்னி = தீ; முகில் = மேகம்;
செந்து = உயிர்ப் பிராணி; தாபரம் = மரம்;
பயோததி = சமுத்திரம்; சுனை = நீருற்று; நரகல் = மலம்

6. புல்லது தெய்வம் ஆகினால் மாடு
புசிப்பதற் கியலுமோ அலது
போற்றிய மாடு தெய்வமே யானாற்
புலையன் எப்படி அதைப்பு சிப்பான்
அல்லது மாட்டின் சாணியுந் தெய்வம்
ஆகினால் அடுப்பினி லெரிப்ப
ததமலோ அதனைச் சாம்பல தாக்க
அக்கினிக் குப்பெல னுளதோ
வல்லஅக் கினியும் பகவனே யானால்
மழையினால் அழிந்துபோ வாரோ
வருணமும் பகவ னாகினால் அதிலே
வாய்கைகால் கழுவவும் படுமோ
கல்விகற் றறிந்த நல்லவ ரிதனைக்
கண்டறி யார்களோ கண்டாற்
கதிதரு முனைவிட் டநீதவீண் பொருளைக்
கைதொழார் யேசுநா யகனே

7. ஊரினிற் பெயர்கொண் டிருந்துசெத் தவர்க்கும்
உளவுபோய் மடிந்தகா முகர்க்கும்
உயிர்விட வலிய நான்றுகொண் டவர்க்கும்
உகந்துதீய்ப் பாய்ந்தநீ லிகட்கும்
பாரினிற் கணவன் றனக்கடங் காமற்
பதைத்திட நஞ்சினைத் தின்றும்
படுங்கயத் தினிலும் ஆற்றினும் வீழ்கப்
பைசாசுரு வானபா விகட்கும்
போரினிற் படையிற் பட்டவீ ரருக்கும்
புராதனத் திருந்தமன் னவர்க்கும்
புலையர் சக்கிலியர் குறவர்க ளீனப்

புதரையர் கழுவிலே றிகட்குந்
தேரினுங் கோவிற் புறத்தினு நடக்குந்
தெருவினுஞ் சிலையடித் திருத்தித்
தேவனென் றிருந்த பாவியா னினியுன்
திருவுளம் யேசுநா யகனே

உளவு = வேவு; கயம் = குளம்

8. அரிசிவன் பிரம னைங்கர னாறு
முகன்சதா சிவன்மயே சுரனோ
டையனார் வீர பத்திர னிருளன்
அனுமந்தன் காலசங் காரன்
பொருதடி மாடன் கருப்பண னிடும்பன்
புத்தனார் காத்தவ ராயன்
பொம்மன்றொட் டியச்சின் னுடன்சக் கதேவி
பொன்னியங் காளிகங் காளி
பெரியமா காளி ரணபத்திர காளி
பேச்சிசா முண்டியுத் தண்டி
பில்லிவாய்க் குறளி ஏகரி வீரி
பிடாரிகாட் டேரிதூத் தேரி
எரிதழன் மாரி வராகியோங் காரி
எமகண்டி சாமளை துற்கை
இன்னமு மனந்தம் பேய்களைப் பணிந்த
ஏழைநான் யேசுநா யகனே

ஐங்கரன் = விநா யகன்

9. கள்ளுடன் சாரா யங்களைப் படைத்துக்
கடாக்களை ரணபெலி கொடுத்துக்
கனக்கமா டாடுகள் சேவல்கள் அடித்துக்
கடலின்மீன் வகைகளும் பொரித்துப்
பிள்ளையார்க் கேற்ற தோசைகள் வடைகள்
பிட்டுகள் வட்டதி ரசங்கள்
பெலத்தமோ தகங்கள் அவற்பொரி யுண்டை

செய்யுள் அட்டவணை

பெரும்பணி யங்களிட் டெலிகள்
எள்ளுடன் பயறு கிழங்குகள் பழங்கள்
இனியபச் சரிசிதேங் காய்கள்
எண்ணெய்யோ நெய்யோ பால்களோ தயிரோ
எத்தனை விதங்களோ செய்துந்
தள்ளிநீ போடா குறைகளுண் டெனவே
சடுத்தமிட் டலறிநொந் திருக்குஞ்
சத்துரு பேயை முற்றினும் விட்டேன்
தயவுசெய் யேசுநா யகனே

10. காவடி சுமந்து தோளெலாந் தடித்துக்
கடும்பய ணங்களை நடந்து
கழுத்தினில் அரிகண்ட ங்களைப் போட்டுக்
கயிறுகள் செடில்குத் தியாடிக்
கூவியே தீயிற் குதித்துக்கொக் கரித்துக்
கொடியபந் தங்களாற் சுட்டுக்
கொண்டுகூத் தாடி உடம்பெலாங் கீறிக்
கோணியே வலித்துமா ரடித்து
யாவரு மறியத் தலையையுஞ் சிரைத்து
நடைவிளக் கேற்றியே தோளின்
நடுவினிற் சுட்டுச் செருப்பதிட் டடிக்க
ராமரா மாவெனக் கத்தி
மேவியங் கப்பிர தட்சண முருண்டு
விரதங்கள் நோன்புகள் பிடத்தும்
மெய்ப்பலன் காணா தப்பனே யடைந்தேன்
வினைதவிர் யேசுநா யகனே

11. வஞ்சகப் பாப்பான் றொட்டிய னாண்டி
வள்ளுவன் மற்றுள பேயர்
வழுத்திய குறிகோ டங்கிகள் கேட்டு
வாரமும் யோகமுந் தெரிந்து

சஞ்சல முறாதென் றெண்ணிமைந் தருக்குச்
சாதகம் எழுதிநாட் கணித்துத்
தக்கதோர் இராசிப் பலன்களும் பிரித்துச்
சடங்குகள் விதவிதஞ் செய்து
நெஞ்சினிற் பல்லி கத்தினும் அஞ்சி
நிமித்தமும் பொருத்தமுங் கண்டு
நெடுகிலும் வீண்சாத் திரங்களைப் பார்த்து
நிலையிலாப் பொய்களை நம்பிப்
பஞ்சமா பாவிக ளைக்குரு வென்று
பாழிலே பொருளெலாந் தோற்றுப்
பரதவித் துன்றன் சரணம்வந் தடைந்தேன்
பட்சம்வை யேசுநா யகனே

12. பிறந்தநாண் முதலாய்ச் சாகுநா ளளவும்
பிராமணர் பிதற்றிய பொய்யைப்
பிரியமாய்க் கேட்டுச் சுவாமியென் றவரைப்
பிசகற நம்பிவீழ்ந் திறைஞ்சிச்
சிறந்ததோர் கலியா ணங்களில் ருதுசாந்
தியங்களிற் சிறுவர்கள் பிறந்த
தினங்களிற் றிருநாட் களிற்பிதிர் இறந்த
திதிகளில் நன்மைதுன் மைகளில்
அறைந்தவர் சொன்ன படிக்கெல்லாங் கொடுத்தா
லயங்கள்சத் திரங்கள்சா வடிகள்
அனைத்தினும் அவரே முதன்மையாய் மறுமைக்
கவர்கையில் உண்டிகை பெற்றால்
இறந்தபின் பற்றிக் கொள்ளலா மெனவே
ஏய்த்ததாற் பேய்த்தன மாக
எண்ணிலாத் தானம் பண்ணியும் பலனொன்
றெய்தலை யேசுநா யகனே

13. தாடிகள் சடைகள் வளர்த்துருத் திராட்சத்
தாவடம் பலபல தரித்துத்

தண்டுடன் கமண்ட லங்களுங் கொண்டு
சாம்பலும் வீம்பதாய்ப் பூசி
ஆடிய மயிற்றோ கையது டன்காவி
ஆடையும் அயிணமுங் குறடும்
அங்கமாய்க் கொண்டு கவசகுண் டலமிட்
டரகரா வென்றுகூப் பிட்டு
காடுகள் மலைகள் கெபிகளிற் புகுந்து
கந்தமூ லங்களைப் பொசித்துக்
காயசித் தியதற் குடலையும் ஒறுத்துக்
கடுந்தவங் களையெலாம் புரிந்து
வாடியே யோகத் திருந்துமூச் சடக்கி
மவுனசா தனைகளுஞ் செய்தும்
வஸ்துவி னிலைகாண் பதற்கரி தெனவே
வந்தனன் யேசுநா யகனே

தண்டு = தண்டாயுதம்; கமண்டலம் = கெண்டி;
காவியாடை = காவி வஸ்திரம்; ஐணம் = மான்றோல்;
கவசகுண்டலம் = இருப்பு முதலியவற்றால்
இயற்றிய கவசம்; கந்தமூலம் = கிழங்கு

14. வானமும் புவியும் அனைத்தையும் படைத்த
மட்டிலாச் சருவவல் லபத்தின்
மகத்துவ தேவன் செகத்தினி லீனர்
வகுத்தமே னியில்இருப் பானோ
தானதா யிருந்தோன் ஒருவனோ ரண்டோ
சாற்றுவீர் சாத்திரி மாரே
சத்தியந் தப்பி அவரவர்க் கேற்ற
சாமிகள் செய்யவுந் தகுமோ
ஞானமுள் ளவர்கள் இல்லையோ நீதி
நடுவிலாத் தேசமோ கோகோ
நம்முட கையாற் சமைத்தவிக் கிரகம்
நமக்குநற் பதவியைத் தருமோ

தலைவரிசை அட்டவணை

ஏனிதைச் செய்தீர் பாதக மலவோ
இடர்வரும் பதனமென் றுரைக்க
என்றனை யிகழ்ந்தார் உன்றனை யடைந்தேன்
இரட்சியும் யேசுநா யகனே

15. ஆதிநா யகனே சோதிநா யகனே
அனந்தபே ரின்பநா யகனே
அரியநா யகனே பெரியநா யகனே
அர்ச்சய தேவநா யகனே
ஓதிநா யகனே நீதிநா யகனே
ஒப்பிலாப் பரமநா யகனே
உரிமைநா யகனே அருமைநா யகனே
உன்னத ஞானநா யகனே
போதநா யகனே நாதநா யகனே
புண்ணிய சொரூபநா யகனே
பொறுமைநா யகனே சருவநா யகனே
போற்றருங் கிருபைநா யகனே
வேதநா யகனே வேதநா யகன்பா
விளம்புசங் கீதநா யகனே
மிக்கநா யகனே முக்யநா யகனே
மேசியா யேசுநா யகனே

ஜெபமாலை 20 வரை செய்யுள் 238

21. ஜெபமாலை

சமுதாயவிண்ணப்பம்

கழிநெடில்

பொற்புறு வானும் பூமியும் அதனிற்
பொருந்துபற் பலபொருள் அனைத்தும்
புகழுடன் ஆறு தினமதில் அருளிப்
பொறைமிகக் காத்தருள் புரியும்
அற்புத னாதிப ரன்றிருப் புதல்வா
அருண்மிகுங் கிறிஸ்தி ரட்சகனே
அளவிலாச் சகல நன்மையின் கடலே
ஆண்டவா மேசியா அரசே
கற்புறுங் கிறிஸ்தோர் கூடிய வேதக்
களரியி னின்புக ழுரைக்கக்
கர்த்தனே யெனையுங் கேட்பவர் தமையுங்
காத்திரட் சித்தருள் புரிந்தே
விற்பனக் குருக்கள் சாஸ்திரி மார்கள்
வேந்தர்கள் துரைகண்மற் றெவரும்
வேதநா யகனென் பாடலுக் கிரங்க
மேன்மைசெய் யேசுநா யகனே

களரி = கூட்டம்

தேவலட்சணம்

2. சாற்றரும் பரம கடவுள்நீ தானாய்
அனாதியாய்ச் சரீரமில் லானாய்த்
தற்சுய சொரூப நித்திய பிதாவாய்ச்
சமஸ்தகா ரணதிரி முதலாய்த்
தோற்றரும் பரிசுத் தரூபியாய்த் தேவ

தலைவரிசை அட்டவணை

சுவாபலக் கணப்பகு திகளில்
துவக்கமு முடிவு மில்லனாய் மாறச்
சுயம்பதாய்ச் சருவவல் லவனாய்
ஆற்றிய தனைத்தும் அறிந்திருப் பவனாய்
அளவில்லா ஞானமுள் ளவனாய்
அனைத்துல கெங்கு நிறைவியா பகனாய்
அரியசத்தி யமுடைத் தவனாய்
மாற்றருந் தூய பரிசுத்த நீதி
மட்டிலாக் கிருபையோ டோங்கு
மகத்துவ தேவ திரித்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

இலிற்றானி

3. சருவவல் லபத்தின் கிருபையின் பிதாவே
தமியன்யான் கெட்டஆ டதுபோற்
சத்திய வழிவிட் டேசித றுண்டு
தவித்தரும் வனாந்தரத் தலைந்தேன்
கெறுவமோ டெனது சுயவிரு தயத்தின்
கெட்டயோ சனைகள்ஆ சைகளைக்
கேடுறத் தொடர்ந்து நடந்துனி ன்றூய
கெழுமரைக் கெதிர்த்திடர் புரிந்தேன்
திறமையாய்ச் செயத்தக் கவைகளை நீவிச்
செயத்தகா தவைகளைப் புரிந்தேன்
தேவனே எனக்குட் சுகமது மில்லைச்
சிறியனுக் கிரங்குவா யையா
மறைதரும் பிதாவாய்ச் சுதனுமாய் பரிசுத்
தாவியும் ஒன்றதாய் வளர்ந்த
மகத்துவ தேவதிரி த்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

கெழு = பிரகாசம்; நீவல் = தட்டுதல்

செய்யுள் அட்டவணை

4. கருத்தனே நீரென் உதட்டினைத் திறவுங்
கனதுதி என்றனாப் புரியுங்
கடாட்சம்வைத் தெனைத்தற் காக்கத்தீ விரித்துக்
கடுகவந் துதவியாய் நின்று
திருத்தமா யெனக்குன் இரக்கமே காட்டித்
திடவிரட் சிப்பையே அளித்துத்
தீவினைத் துயராற் கூப்பிடும் போதென்
சிறுமைகள் அனைத்தையுங் கேட்டு
விருத்தியாய்ச் சமாதா னத்தையே யளித்தெவ்
வேளையும் என்னையா தரிப்பாய்
மீண்டெனக் காகப் பரிந்துபோ ரிடுவோர்
வேறிலை யுனையலால் ஐயா
வருத்தியென் மனத்தைத் துப்பர வாக்கி
வசப்படு வதற்குன்ஆ வியைத்தா
மகத்துவ தேவ திரித்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

5. பரமதா தாவே நிர்ப்பந்த மான
பாவியாம் என்றனுக் கிரங்கும்
பாதகன் யான்செய் குற்றமு முன்னோர்
பண்ணிய குற்றமு நினையாய்
தரும்பவங் களுக்குத் தக்கநீ தியையே
சரிக்கட்டா திருந்திரு வுளமாய்த்
தப்புவித் தெனையே இரக்கமாய் நடத்துந்
தாங்கலென் றைக்கும்வை யாதே
நிரம்பிய பொல்லாப் புகட்கும்கே டுகட்கும்
நேரிடும் பலபவங் களுக்கும்
நிந்தனைப் பேயின் சோதனை களுக்கும்
நீடுமோ சங்கள்யா வுக்கும்
வருமுன்னுக் கிரத்தி னித்தியாக் கினைக்கும்

[தலைவரிசை அட்டவணை](#)

வலிமையாய்க் காத்தரு ளையா
மகத்து தேவ திரித்துவப் பொருளே
மாசிலா இயேசுநா யகனே

6. என்னிரு தயத்தின் அந்தகா ரங்கள்
எக்குருட் டாட்டம்ஆ ணவங்கள்
இடும்புகள் பெருமை வீண்புகழ்ச் சிகட்கும்
ஏய்க்குமா யங்கள தெவைக்குந்
துன்னிய காய்ம காரங்கள் பகைகள்
துர்க்குணங் களுக்கும்ஈ விரக்கந்
தோன்றிடா மைக்கும் வேசிமார்க் கங்கள்
தொடர்ந்த சாவானபா வங்கள்
பின்னையும் பிசாசும் உலகுமாங் கிஷமும்
பெய்திடுஞ் சகலதீ வினைக்கும்
பெருமிடி பெருங்காற் றுக்கும்வா தைக்கும்
பிரண்டெழும் வாரிக்காச் சலுக்கு
மன்னிய பஞ்சம் போர்கொலை அசுப்பில்
வருமர ணத்திலு மெனைக்கா
மகத்துவ தேவ திரித்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

7. அரசனின் விரோதத் துக்கும்அந் தரங்கக்
கட்டுப்பாட் டுக்குந்துர்க் கலகம்
அனைத்துக்கும் பொய்போ தகத்துக்கும் வீணக்
கியானசாஸ் திரசடங் குகட்கும்
இருளுறும் அமார்க்கம் வேதவின் னங்கள்
இருதய கடினமுன் வசனத்
தினியகற் பனையை அசட்டைபண் ணுதற்கும்
இன்னமற் றெவைக்குமென் றெனைக்கா
திருமனு டவதா ரச்சென னத்தாற்
சேதனத் தாலுன்றீட் சையினாற்
செயுமுப வாசம் பட்டசோ தனையாற்

செங்குரு திகளின்வேர் வையினால்
மரணவஸ் தையினாற் சிலுவையின் றுயரான்
மரித்துயிர்த் தெழுந்ததா லெனையாள்
மகத்துவ தேவ திரித்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

8. உலகி லெங்கணு மவைகிய வுனின்சபையை
ஒழுங்கினேர் வழியினி னடத்தும்
ஓங்கி யெங்களை யாள்அர சனையுனதுத்
தமவணக் கத்தினீ தியினும்
பலனு றும்பரி சுத்தந டக்கையினும்
பலப்படக் கிருபைசெய் துன்மேற்
பத்தி நம்பிக் கையா யிருந்துனக்குப்
பயந்தொழு கப்புரிந் தினமே
அலகி லாக்கண் காணிகள் குருக் களையும்
அரியபோ தகரையு முன்றன்
அருள்வ சனத்தின் சத்திய ஞானத்
தறிவிலும் உணர்விலுந் துலக்கி
வலமை யோசனைக் கத்தாக் களெப்பெரியோர்
மனத்தையும் அலங்கரித் தருள்வாய்
மகத்துவ தேவ திரித்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

அலகு = எண்

9. உந்திருச் சபைகள் அனைத்தையும் ஆசீர்
வதித்தெல்லாச் சாதிக ளுக்கும்
ஒருமை யைச்சமாதா னத்தையோர் மனதை
உதவியுன் றுன்னைநே சித்துச்
சிந்தையிற் பயமாய் உனதுகற் பனையிற்
றிடத்துடன் செலுமிரு தயத்தைச்
செய்துனின் சனமெலா முன்வாக்கி யத்தைச்

தலைவரிசை அட்டவணை

சினேகமும் பணிவுமாய்க் கொண்டு
சந்ததம் ஆவி யின்கனி களையே
தரக்கிரு பையின்வளர்த் தியைத்தா
தப்பிமோ சம்போ னவர்யாவ ரையுஞ்
சத்திய வழியிலுட் படுத்துய்
வந்திநிற் பவர்கள் தமைப்பெலப் படுத்தி
வலியிலீ னரையெலாந் திடத்தாம்
மகத்துவ தேவ திரித்துவ பொருளே
மாசிலா யேசுநா யகனே

வந்தி = வருத்தம்

10. விழுந்தவர் களைக்கை தூக்கியென் காலால்
வெறியினை யுதைக்கும் வீறளித்து
மிக்கமோ சத்தாற் சிறுமையாற் றுன்பான்
மெலிந்தவர்க் குதவிசெய் தாற்றி
அழுந்துநீர் நிலத்தில் யாத்திரை செய்வோர்
ஆகுலப் படுங்கெர்ப வதிகள்
அரும்பிணி யாளர் சிறுவர்க டமையும்
அன்பதாய்த் தாங்கியா தரித்துச்
செழுஞ்சிறைப் பட்டோர் காவலுற் றவர்மேற்
றிருவிரக் கந்தனைக் காட்டிச்
சேர்ந்துதாய் தகப்பன் அற்றசே யர்களைத்
திடனிலா விதவைக டம்மை
மழுங்கியா தரவற் றொடுக்கப்பட் டவரை
வளர்த்திமா னிடர்க்கெலாம் இரங்கும்
மகத்துவ தேவ திரித்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

வெறி = பிசாசம்; வீறு = பெருமை; துன்பு = துன்பம்;
ஆகுலம் = வருத்தம்; செழும் = வளமை

[செய்யுள் அட்டவணை](#)

11. சத்துருக் களுக்குந் துன்பமே படுத்துஞ்
சதியினர் தூஷணிக் கிறசண்
டாளர்க்கு மிரங்கி அவர்மனந் திருப்புந்
தரணியின் பலன்களை நயமா
யுற்றகா லத்தில் அனுபவிக் கத்தந்
துண்மையின் குணப்படு தலையீந்
தூன்றிய பவங்கள் அசதிகள் அறியா
மைகளுலோ பங்களைப் பொறுத்துச்
சுத்தஆ வியினால் எனையலங் கரித்துன்
றுய்யவா சகப்படி யெனது
துன்மனந் தனைச்சீர்ப் படுத்தியாண் டருளுஞ்
சோதியின் குமாரனே ஓலம்
மத்திஸ்தா உலகின் பவஞ்சுமர்ந் தொழிக்கு
மைமறிக் குட்டியே ஓலம்
மகத்துவ தேவ திரித்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

தரணி = பூமி; ஓலம் = அபயமிட்டழைத்தல்;
மைமறிக்குட்டி = செம்மறியாட்டுக்குட்டி

12. கடவுளே கேளுங் கிறிஸ்துவே கேளுங்
கருத்தனே கிறிஸ்துவே கேளுங்
கணக்கிலா வெனது பவங்களுக் காகக்
கடிந்துதக் கதையெனக் கியற்றாய்
இடறுமென் னச்சிர மங்கட்குச் சரிக்கட்
டாதிருங் கிருபையி னெந்தாய்
இடுக்கணுற் றுடைந்த மனத்தரின் பெருமூச்
சேக்கமுந் துயருறக் கூவு
மிடியர்வேண் டுதலையும் புறக்கணி யீர்
மிகவுபத் திரம்பல வருத்த
மேவியென் றனையே நெருக்கும்போ தடியேன்
விளம்புமன் றாட்டினுக் குதவு

மடிவதாய்ப் பேயு மனுடருஞ் செய்யும்
வஞ்சகம் அனைத்தையுந் தீர்த்தாள்
மகத்துவ தேவ திரித்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

இயற்றல் = செய்தல்

13. வெறுமையாக் குதற்குப் பிசாசுமா னிடரும்
விரோதமாய்ச் செய்கிற சூட்ச
வினைகடந் திரங்க ளானதீங் கினையுன்
விசாரணை யாற்சித றடித்துச்
சிறியனுன் றாச னாகிய நானெத்
தீங்கினுஞ் சேதமு றாமல்
தேவனுக் கிரகத் தாற்றிருச் சபையிற்
றினமுனக் கருச்சனை செய்யக்
கிருபையா யெனைக்கேட் டருளுமிச் சணமே
கிலேசமற் றிடவெழுந் தெனக்குக்
கெட்டியாய்ச் சகாயஞ் செய்துன்பேர் நிமிந்தங்
கிறிஸ்துவே இரட்சியும் ஐயா
மறைதருங் குருவே கேருபீன் களின்மேல்
வாசமா யிரக்கும்வல் லவனே
மகத்துவ தேவ திரித்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

14. ஐயனே யெனது பிதாக்கணா ளிலுமங்
கவர்க்குமுன் னானகா லத்தும்
ஆற்றுநின் மேன்மைக் கிரியையா வத்தும்
அவர்சொலக் காதினாற் கேட்டேன்
றுய்யகத் தாவே எழுந்திருந் தெனக்குத்
துணைசெயும் உனதுசங் கைக்காய்ச்
சூழ்ந்தெனைப் புரந்தாள் பிதாச்சுதன் பரிசுத்
தாவிக்குத் தோத்திரம் உண்டாக

உய்யுமா தியிலிப் போதும்எப் போதூ
ழியுமனா திசதா காலத்
துறும்பிர கார மாகவும் ஆமன்
உத்தம கிறிஸ்துவே யோலம்
வையமீ தென்சத் துருக்கள்கைக் கெனையே
வலிமையாய் நின்றுகா ஐயா
மகத்துவ தேவ திரித்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

15. பட்சமா யெனதுபத் திரங்களைப் பாரும்
பரிதவித் தென்னிரு தயத்திற்
படுந்துயர் நோக்கும் இரக்கமாய்ச் சனத்தின்
பாவங்கள் தனைப்பொறுத் தருளும்
உச்சிதன் பாலென்விண் ணப்பங்க ளைக்கேட்
டுயர்தவி தின்சுதா உருகும்
ஓசனா கிறிஸ்து வேயின்றும் என்றும்
உருக்கமாய் என்றனைக் கேளும்
அட்சய தேவ கிறிஸ்துவே கிருபை
யாயிருஞ் சுவாமியே கிருபை
யாயிரு மேசை யாவென்னாண் டவனே
அபையமே அபையமே ஐயா
வைத்த நம்பிக்கைக் குதவிசெய் துனது
மகிமைப் பிரதாபமே காண்பி
மகத்துவ தேவ திரித்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

அட்சயம் = கேடின்மை

16. ஏகனே யிரக்க மாயெனின் பெலயீ
னங்களைப் பார்த்துநீ தியதாய்
எனக்குற வேண்டுந் தீங்கனைத் தையுமுன்
னீட்டினா மத்தினால் விலக்கி

வேகமாய் வருமெல் லாவருத் தத்தில்
மிக்கநம்பிக் கைவீ ரியத்தை
மேலுன திரக்கத் துய்த்துனக் கன்பாய்
மெய்நலஞ் சங்கையும் விளைத்துத்
தாகமோ டென்றும் பரிசுத்த சன்மார்க்
கத்துனக் கூழியம் புரியத்
தயவுசெய் யெனதொன் றானமத் திஸ்தா
சமஸ்தகா ரியதுரந் தரனே
வாகுறுங் கர்த்தா வாகிய கிறிஸ்திம்
மானுவேல் மேசியா அரசே
மகத்துவ தேவ திரித்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

17. பரங்களி லிருக்கும் தயாபர பிதாவே
பணிந்தவிண் ணப்பமொன் றினங்கேள்
பத்தனான் சுவிசே டக்கவி ராயன்
பாடல்யா வுக்குநா யகனீ
இரங்கியா தரித்தெவ் வேளையு மெனைக்கேட்
டேணுகொண் டென்புறத் தினினின்
றிடரெலாந் தவிர்த்தெண் ணியபடி முடிக்கும்
என்குல தெய்வமா னதனாற்
றரங்கையி லெனக்குப் பரிந்துகொண் டிருந்த
தானியேல் சந்ததிக் கிரங்குஞ்
சந்தத மெனக்கும் ஞானப்பாட் டகர்க்குந்
தருமுப காரிகட் கெல்லாம்
வரங்களை யளியும் வேதநா யகனை
வழிவழி அடிமையாய்க் கொள்ளும்
மகத்துவ தேவ திரித்துவப் பொருளே
மாசிலா யேசுநா யகனே

ஜெபமாலை 21 வரை செய்யுள் 255

செய்யுள் அட்டவணை

கவனிப்பு

இலிற்றானியாகிய சமுதாய விண்ணப்பம் பன்மையிற் சொல்லப்பட்டாலும் ஜெபமாலை ஒழுங்கின்படி ஒருமையாக்கிற்று.

இலிற்றானி திருத்துவத்தின் முன்னிலைக்கிருக்கப் பாவின் முடிவாகிய மகுடத்தைப் பற்றி இயேசுவின் முன்னிலைக்குப் பாடப்பட்டது.

[1817 ஆடி மாதம் தரங்கன்பாடியில் சீட்டுக்கவித் தருக்கத்தாலுண்டான கலாதியில் இராயப்ப நாட்டையர் குமாரன் தானியேல் பிள்ளை எல்லாரிலும் விசேஷித்த பத்திவைராக்கியத்தைக் கொண்டிருந்த தரும சிந்தனையைப் பற்றி அவருக்கு மத். 26:13 வசனப் பிரகாரம் எழுதின உடன்படிக்கைப்படி இதின் அந்தம் 17–பாட்டில் அவர் பெயரை நாட்டிற்று]

22. ஜெபமாலை

பரமானுபூதி

காப்பு

பெருமான் கருணைப் பிரானேசு நாதன்
பரமானு பூதி படிக்கக் – கருமாயை
நீக்கி மறுசெனன நீடிப் புதுமனுட
னாக்கும் பரிசுத்த ரூபி

அனுபூதி = பிரமாணங்களைக் கொண்டறிந்த அறிவு

நீடுங் கிருபா சனநீ தியனை
நாடும் புகழ்பா டிடுநா வருள்வாய்
கூடுஞ் சபையின் குருவா கவுனைத்
தேடும் புலவோர் கள்சினே கிதனே

2. உனையே யொருநா ளுமுளத் துருகி
நினையே னினையும் பெலனீ யருள்வாய்
அனையே பணியும் பரிசுத் தரூபி
மனையே மனுவே கரவா கனனே

3. வல்லாண் மையினா லுலகாண் மனனே
எல்லாம் இதமா கவிசைத் தவனீ
பொல்லா னெனவே புறமென் னைவிடல்
நல்லா யுரையாய் நசரா பதியே

ஆதி. 1:31

4. மீனோ மதியோ மினலோ வெளியோ
பானோ பரமோ படியோ பலதோ
ஊனோ வுடலோ வுயிரோ கலவி
மானோ நிலையா னதுவா னவனே

பானு = சூரியன்

செய்யுள் அட்டவணை

5. அடரும் பரமா தரினா சையதுட்
படரும் பழிபட் டழியப் படுமோ
தொடரும் பலசத் துருதுன் றலையை
இடரும் படிவிட் டவிரட் சகனே

பரமாதர் = வேசி

6. கருமா யைகளைந் துலகத் திலுறும்
பெருமா யையடா துபிசா சுகளால்
வருமா யைஅறுத் துமயற் கனிமார்
தருமா யையுநீக் குதயா பரனே

7. சதியா மனமே யுலகைச் சதமாய்
மதியா தையிம்மா னுவேலின் கழலைக்
கதியாய் நினைகா யம்விழா தபடி
துதியாய்த் துதியாய் சுபசோ பனமே

கழல் = கால்

8. மணியா டையுலா சசியோன் மகளின்
பணியா டல்புரிந் தவளும் பணிய
அணியா சையளித் துவிவா கமிடுந்
தணியா வதிநீ ததயா பரனே

9. ஒட்டா ரமடந் தையரோ டுறவாய்
எட்டா மனடந் திவரின் பமெலாம்
விட்டா லும்விடா தவிருப் பமெனோ
கட்டா யுரையாய் கருணா கரனே

10. அமையுஞ் சதுரா யிரவா யனநற்
சமையம் புவிதோன் றினபின் றரையிற்
றமையுஞ் சகலோர் கள்பவந் தவிரச்
சிமயம் பெலிசெய் தசிரோ மணியே

சதுராயிரம் = நாலாயிரம்; ஆயனம் = வருடம்;
சிமயம் = மலை

தலைவரிசை அட்டவணை

11. தாமாய் மனுவா கியதற் பரனே
சீமான் மனைலா சருசெய் கையெனக்
காமா வலவா அதுசெய் திசுமா
போமா புகலாய் சுரர்பூ பதியே

அது செய்தி = தாமாய் மனிதனான இரகசியம்

12. ஆகா வுனையண் டியுமென் கலிகள்
போகா விதமே துபுகன் றருள்வாய்
ஏகா இனியா யினுமன் புசெயென்
மேகா சனனே வினைமோ சனனே

13. ஒருவன் றனியா யுயரம் பரமன்
றிருவன் புணரார் செயலின் பயனன்
றருவன் றயலன் றகமன் றடியன்
றுருவன் றுடலன் றுறையன் றினனே

14. எம்மா நிலமுந் தொழும்இரட் சகனெம்
இம்மா னுவேலிங் குமிருக் கையிலே
சும்மா விருகா துதுடித் துமனம்
அம்மா பதறிக் கொளலற் புதமே

15. மையார் குழன்மங் கையரின் பணியான்
மெய்யா யுனையா துவிடா மலுனை
ஐயா பணியக் கிருபையா யுதவி
செய்யாய் திரிலோ கசிகா மணியே

லூக். 7:36−50

16. நாமே நமையன் றியனா தியிலென்
றேமேன் மொழிஇட் டவுனைக் கருதி
வேமே மனமிஞ் சும்அவா வதனாற்
பூமேன் முகின்மேல் வருபூ ரணனே

அவா = ஆசைப் பெருக்கம்

17. அதிதூ தர்கடான் அறிவா லறியா
மதிமே வியவா னவனின் புதல்வா
துதிதே வழகா கமுகா நரகா
பதியாள் கணபூ தபயங் கரனே

கண பூத பயங்கரன் = பேய்க்கூட்டம் நடுங்கும் ஆண்டவன்; நரகாபதி = நரக ராச்சியம்

18. இதியா லிடர்தா வுமுனே தன்வனத்
ததிலா கியநால் வரமென் றருள்வாய்
மதிபா தமடந் தையைஅல் லதுபின்
மதியா விரதா மனுடா திபனே

இதி = பசாசு;
நால் வரம் = ஞானம், பரிசுத்தம், பாக்கியம், சாவாமை

19. பாரா சைபடப் படவென் சடலம்
போரா கமுடிந் ததுபோ துமையா
சீரா பலசீ மசனே யிரண
சூரா பரலோ கதுரந் தரனே

இரண சூரன் = யுத்தத்திற் பராக்கிரமன்

20. மறைசூ டியமா தவரின் கழலை
முறைசூ டுமுயற் சியெனக் கருள்வாய்
நிறைசூ டியபத் தர்கணெஞ் சமதிற்
சிறைசூ டியதே வசிமா சனனே

21. பொருதா டுபசா சுகள்போ லெரிய
இருதா ரமெடுப் பவருக் கிணையான்
குருதா தைகுணா சிலுவைத் துவச
விருதா சுவிசே டவிசித் திரனே

சிலுவைத் துவசம் = சிலுவைக் கொடி

22. வேதா பரலோ கவிலா சசபை
நாதா வுனைமெய் யெனநம் பினனான்
சூதா கவடா சொன தத் தனையுங்
கோதா நிசமா சொல்குணா கரனே

23. பெரிதா கியபா தகமும் பிணியும்
எரிதாழ் நரகுங் கெடஏற் றினவா
மரிதான் மணம்வைத் தபதத் தைநித
சரிதான் அளியாய் சருவீ சுரனே

ஏற்றம் = எதிர்த்தல்

24. கலைகெட் டிடவுங் கதறிக் கலியா
னிலைகெட் டிடவு நெறியோ நெறியோ
கொலைகொட் டலகைக் குடிகெட் டதின்வன்
றலைகெட் டிடவந் ததயா நதியே

25. நாளைக் கெனநல் கியாஈ கையிடர்
வேளைக் குதவா ததுமெய் யதுபோற்
சூளைக் குலமின் கள்சுகங் களிதென்
றேழைக் குரையா யிசறே லரசே

சூளை = வேசி

26. ஆராய் தலிலா தஅருட் கடலே
பாரா யர்பணிந் துதொழும் பதனே
வாரா யடியே னிடைவந் தென்வினை
தீராய் மனுவா கியதே சிகனே

பாராயர் = உலகத்தின் மேய்ப்பர்

27. பொய்யா னபுனற் குமிளிப் பவுசை
மெய்யா கவிரும் பிவிழப் படுமோ
துய்யா துணையற் றவெனைத் துயரஞ்
செய்யாய் திரியே கபரா பரனே

புனற் குமிளி = நீர்க்குமிளி; பவுசு = ஐசுவரியம்

28. ஏதா யினும்ஈ வையெனக் கருதி
வாதா டிவழுத் தியுநீ மறுசொல்
ஓதா மலிருப் பதுனக் கழகோ
சாதா ரணசத் தியதற் பரனே

29. மண்ணே தருகும் வலியோ பொருளோ
பெண்ணே தரும்ஆ வலதோ பினையோ
கண்ணே மணியே கதியே நிதியே
விண்ணே சொலுமெய்ப் பொருளா னதையே

30. மானார் கலவிக் குண்மடிந் தெனுயிர்
போனா லெனபுண் ணியமெய் துமுனக்
கானா லுமுன்னெஞ் சையறிந் தனையா
ஞானா கரனே நசரைப் பதியே

31. பொல்லா வுலகம் புகுமாக் களிலே
நல்லா ரிலையென் றதுஞா யமலோ
எல்லா ருமிதின் படியோக் கிலெனை
அல்லா தினிநல் லவரார் பரனே

32. நாயா னதுநற் றியவாழ் வினையொத்
தேயா னுமிருந் ததுபோ துமுனின்
மாயா தமெய்வாழ் வருளல் லவெனில்
நீயா யினும்வா ழிதிநித் தியமே

33. கொல்லென் றெழுகூ ளிகளால் வெருவி
வல்லென் றசரண் புகவந் தவெனை
அல்லென் றிடில்அப் புறமென் றுயரார்
சொல்லென் றருள்வார் கள்சுதா கரனே

34. கருவா யெனைஅன் னைகருக் குழியில்
உருவா யுரமே செய்துவந் தவனே
அருவா உருவா அமலா விமலா
பெருவாழ் வருளாய் பெரியோன் மகனே

35. வாதா டியமங் கையர்வஞ் சமனச்
சூதா னதைஎன் றுதொலைத் தருள்வாய்
பாதா ளம்அதிர்ந் துபயந் தலறி
வேதா ளம்வணங் கியவித் தகனே

36. நிறையும் பொறையு நிறமுந் திறமுந்
துறையுஞ் சுகமுங் குலமுந் துணிவும்
பறையும் பலதும் பறிவாம் பரனே
குறையென் றதுரோ கிகுறுக் கிடிலே

37. காவே றியடர் ந்துகெடுத் தகடி
மூவே தனைசெய் துமுடித் ததயா
பாவே பகர்வே னெனையாள் பரனே
கோவே செபமந் திரகுணா நிதியே

காவேறி = (ஏதேன்) தோட்டத்திற் புகுந்து

38. ஆடுங் கலியால் அடிபட் டுலைய
வாடுந் தமியே னைமறந் தனையோ
ஈடுந் திறமற் றஎனக் கெனவும்
பாடும் படலா னபரா பரனே

39. அந்தா தியளித் தவுரைப் படியே
எந்தா தைஎவர்க் கமிரட் சகனீ
வந்தா லெனைமாத் திரமீட் குமுதற்
றந்தா யிலையோ சருவே சுரனே

40. சிங்கா ரவனந் தனிலே செறியு
மங்கா வரநா லும்வகுத் தெனையாள்
புங்கா பரிபூ ரணபூர்த் தியனே
துங்கா நவசங் கதுரந் தரனே

41. ஏகா விசுவா சமுளோ னெவனுஞ்
சாகா னெனவே சொனசற் குருவே
யூகா பரிசே யரோடோ தியவா
நாகா திபஞா னகிருபா கரனே

நாகாதிப = விண்ணாதிப

42. இருளோ டஎழுந் தவிரட் சகனே
மருளோ டுறவிட் டுமயங் குவனோ
தெருளோ டுலகத் திரளோ டுவுமைப்
பொருளோ டருளோ டுபுரிந் தவனே

43. கன்னம் படுகள் ளனெனப் பலராற்
சின்னம் படுகா துதிடத் தயைசெய்
யுன்னம் படுமுன் னையுணர்ந் துதுய
ரின்னம் படலென் செயலே சயனே

உன்னம்படு = மனதிலே வாசமாயிருக்கிற

44. இறைவன் சுதனென் குருவென் பரனென்
றறைவன் றவசின் குணமிங் கருள்வாய்
துறைவஞ் சகருஞ் சகேயுந் தொடருங்
குறைவன் றியஞா னகுணா கரனே

தலைவரிசை அட்டவணை

45. வலையே படுவித் தமடத் தவரைக்
கலையே பெறுவித் தகருணா லையனே
நிலையே தவறிக் கெடுநீ தியெனக்
கிலையே யுனைரட் சகனென் றிடிலே

மடத்தவர் = மூடாற்றுமாக்கள்

46. காசா சைக்கொள்கா மிகளைக் கருதி
வேசா ரல்அடைந் ததுமெத் தவயா
நேசா கிருபைவா ருதியே நிதியே
ஈசா வனுபூ திஇயைந் தவனே

அனுபூதி = பிரமாணங்களைக் கொண்டறிந்த அறிவு

47. பொறியைப் பொருநன் புகலுந் திறனும்
நெறியைப் பொருது நிலையுந் தருவாய்
குறியைத் தொழுகுப் பைகளர்ச் சனைசெய்
வெறியைப் பொருதா டியவீ ரியனே

குப்பை = கூட்டம்

48. சதிகைப் படுசத் துருசற் பனையால்
வதிகைப் படுகா துமயங் குவனோ
நிதிகைப் படநீ டுநிரா ணியனே
துதிகைப் படுநித் தியசோ பனனே

வதிகைப் படுகாது = வழிதெரியாமல்;
நிராணியன் = பெருமை யில்லாதவர்

49. ஐயா றுறழ்நான் மறைஅர்ச் செயர்கட்
கையா றறிவித் தருள்அற் புதனே
ஐயா றுடனா றுதலைப் பரனே
ஐயா றொருமூ வயதா திபனே

ஐயாறுறழ் நான்மறை அர்ச்சயர்கள் = நான்கை

முப்பதிற் பெருக்கிய நூற்றிருபது அப்போஸ்தலருக்கு;
ஐயாறறிவித் தருளற் புதனே = பராபானுடைய வழியை
அறிவித்த அதிசயமானவனே;
ஐயாறுடனாறு தலைப் பரனே = பராபரனுடைய
வசனத்தோடே கூட ஆறுதலாயிருக்கிற பராபரனே;
ஐயாறொரு மூவயதாதிபனே
= முப்பத்து மூன்று வயதுள்ள இராசாவே

50. மாறா தபரா பரன்மைந் தனலால்
வேறா ரைவிரும் பிவினைப் படுவேன்
தூறா கியபா விதுயர்த் தவிராய்
ஆறீர் குலம்ஆ ளிசறே லரசே

ஆறீர் குலம் = பன்னிரண்டு கோத்திரம்

51. சயமுந் தயவுந் தருகும் பரனுன்
பயமுங் கவரும் பகைஞன் பழியுந்
துயருந் தவிருந் துணைநன் பதமுங்
கயமுங் கொடுவந் தருளுங் கதியே

கயம் = மேன்மை

52. வதியாய் நதியாய் வரமா யுரமாய்
விதியாய் நிதியாய் வெளியா யொளியாய்
உதியாய் பதியா யுளமா யுரமாய்
அதியாய் விதிஞா னனுபூ தியுமே

53. நன்றா தையும்நம் பியநாய கனுஞ்
சென்றா ளனையுங் குலதெய் வமுநீ
என்றா பம்அகற் றிஇரங் கியருள்
ஒன்றாம் பொருள்ஞா னுபதே சிகனே

54. சதமே பதினெட் டொடுமுச் சமையத்
திதமே வியஆ னியினேழ் தினமே
பதமே வுநெலைப் பதியான் பரன்மேற்
சிதமே வனுபூ திதெரித் தனனே

கி. பி. 1803−ம் ஆண்டு ஆணி மாதம் 7−ம் தியதி திருநெல்வேலியான் இந்த ஐம்பத்து நான்கு செய்யுளையும் ஒரேநாளையிற் பாடினானென்க.

ஜெபமாலை 22 வரை செய்யுள் 309

23. ஜெபமாலை

கிறிஸ்து பிறப்பின் பேரிலே சந்த விருத்தம்

கிறிஸ்து பிறப்பின் முகாந்தரம்

சீர்சிறந்தகட லேவளைந்தசெக
மீதிலங்குபொருள் யாவையும்பரம
சேனையுந்தினம தாறிலங்கருளியே
தீமையன்றியிரு பேர்கடங்களையு
மேயலங்கிருத மாய்வனைந்துவளர்
சீவனின்றருவி லேயருந்துமெனவே
நேர்சிறந்தபர னார்மொழிந்தவுரை
மீறியங்கொருப சாசைநம்பிமறை
நேர்மையொன்றுமுண ராதுதங்கள்மனதாய்
நீடுநந்தவன மேசெறிந்தஒரு
தீயபுன்கனியி லேயருந்தியவ
நீதிகொண்டுமத மேறிமிஞ்சிவலுவாய்
ஏர்சிறந்ததவ மேயிழந்தவர்கள்
நால்வரங்களுமெ லாமழிந்திழிவ
தேமிகுந்துபவ மேநிறைந்தபடியால்
ஏகனங்குவன மீதெழுந்துநடு
வேவிளம்பினவ நேரமங்கவர்க
ளேதமங்குபிணை யாளியென்றுசொலியே
பார்சிறந்தவுல கூடுயர்ந்தகலி
லேயமென்றபெரு நாடதங்கணொரு
பாவையங்கண்மரி மாதுபண்டிதனிலே
பாடித்தான்றிரள் வானத்தாஞ்சுகள்
ஆயர்க்காம்புக லோதிப்போம்படி
பாசத்தூர்ந்தெமை நேசித்தாண்டவனே

வனைதல் = செய்தல்; அருந்தல் = புசித்தல்;
நால்வரம் = ஞானம், பரிசுத்தம், பாக்கியம், சாவாமை;
அங்கண் = அழகியகண்; பண்டி = வயிறு
கிறிஸ்து மனுடவதார உற்பத்தி

2. வாசமிட்டநச ராபுரிக்குள்வள
மேமிகுத்ததவி ராசபுத்திரசுப
மாதவப்புனித சூசையப்பருடனே
வாகுறத்திருவி வாகவொப்பிலுறு
நேமுகப்பெண்மரி மாதிடத்ததிக
வானகச்சுரரி லேயொருத்தன்வரலாய்
நேசமிட்டகனி மார்களுக்குளுய
ராசிபெற்றமக ராசிமிக்கவதி
நேர்மையுற்றொருகு மாரனைப்பெறுவைநீ
நீடிரட்சகவி யேசுகத்தரென
நாமமிட்டருளு வாய்பரப்பிரம
நேயதற்சொருப சேயெனப்படுவரே
தேசமிட்டவிச றேலருக்கரச
னாகவெப்பொழுது மேதிறத்தினோடு
தீமையற்றதவி தாசனத்திலெழுவார்
தேவமுக்கியம தாய்நடத்தியவி
ராசரிக்கமுகி யாதிருக்குநல
சீரெனக்கபிரி யேல்வழுத்தமரியோ
பாசமிட்டஉரி யோனெனக்கிலையி
தாம்விதத்தையறி யேனெனக்கன
பராபரத்தினரு ளானடக்குமெனவே
பரிவுற்றமாதுமுன்பு விஸ்தரித்துத்தான்சொனதாம்படி
பரிசுத்தரூபியென்ற இஸ்பிரீத்துச்சாந்துவிலோங்கிய
பழுதற்றமேனிகொண்ட மெய்க்கிறிஸ்துச்சாந்தகுணேந்திரனே
கபிரியேலு மரியனையும் சம்பாஷித்தல்

3. அழகதிட்டகபி ரியல்சிறப்பினொடு

நசரையிற்பெரிய தவமிகுத்தசுப
அறிவின்மிக்ககனி மரியிடத்தணுகியே
அதிகவுத்தமகி ருபைகள்பெற்றவளுள்
இடமதற்குளொரு செயனடக்குநல
அறிவையர்க்குளுயர் வளமுடைத்தையெனவே
மொழியவப்பொழுது கனிபயத்தினொடு
சுரனுரைத்தசொலை நினைவிலொத்துணர
முகனைவைத்தகபி ரியலதற்குரைசொல்வான்
முதல்விஇப்பொழுது பயமகற்றிவிடு
பரனிடத்ததிக கிருபைபெற்றையினி
முழுதுமற்புதவ திசயகெற்பமுறலாய்
எழிலுதித்தவொரு குமாரனைப்பெறுவை
இவர்பரப்பிரம சுதனெனப்படுவர்
இணைநிகர்த்ததவி தரசிடத்தினெறியோ
டிசறலுக்கரச னெனமகத்துவமொடு
முடிவதற்றனுதி னமுமிருப்பர்திடம்
எனமரிப்பெண்மறு மொழிகொடுத்தவன்முனே
கொழுநனைச்சிறிது மறியவுற்றதிலை
இதுநடப்பதென விதமெனக்குரைசெய்
குலவுமதற்பரம னுடபெலத்திலெனவே
குணமிஞ்சுமாமரிக்கு ரைத்தவிந்தையாலொரு
மகவென்றுபூதலத்து தித்தளந்தயாபர
குருமந்திரசேகரக்கி றிஸ்துமண்டலாதிபனே

சேகரம் = முடி
யோசேப்பின் சந்தேக நிவிர்த்தி

4. மரிமங்கையுடபண்டி சினைகொண்டநெறிகண்டு
மலைவொன்றி அவளன்பனே
வலுநிந்தைசெயநன்ற திலையென்ற வளையங்கு
மறுபங்கில் விடநெஞ்சிலே
கருதுஞ்சரிதையொன்று நினைவுஞ்செய்திட
ககனந்தனி லிருந்துமே

கதிர்தங்குபிரவைமிஞ்சு சு ரனண்டிமொழிவிண்டுமுன்பு
கழறுந்த விதுமைந்தனே
ஒருவஞ்செய்வதுநன்ற தலநெஞ்சினிடைசங்கை
ஒழியுன்ற னெறிமங்கையே
ஒருசந்ததிபெறும்பின் அவரின்பெயரேசென்றிவ்
வுலகந்தொழ விளம்புவாய்
பரவுங்கிருபைபொங்கி நரர்பங்கமதனின்று
பரமண்டலம் விளங்கவே
பலன்றந்துகாப்பரென்று யோசேப்புக்கோதிய
படிவந்தமீட்பரும்பர் வானாட்டுக்காதிப
பனிரண்டுதீர்க்கர்தங்கள் மாபாக்கியச்சீர்பதியே

சினை = கருப்பம்; கழறல் = சொல்லல்;
ஒருவுதல் = நீக்குதல்

கிறிஸ்துவின் செனனம்

5. துங்கநீள்புவிக்குள் எங்குமேகுடிக்கி
சைந்துதான்மதிப்ப றைந்துகீறமிக்க
துங்கனாமகுஸ்து தந்தவாறுதிட்டமே
சொந்தமாகமக்க டங்கணாடெனப்பி
றந்தவூரதற்க டைந்துபோகமுக்கிய
சுந்தரசூசையப்ப ருந்தனேமுகப்பெணா
மங்கையோடுபற்றி முந்துநாசரத்தில்
நின்றுகூடியொக்க வென்றிசேர்த்துபெத்தல்
வந்தபோதுபொற்பி லங்குவேல்கொண்மைக்கணாள்
மஞ்சுலாவுகெற்ப மிஞ்சமீறியச்சம்
அனறியேபிறப்ப தொன்றவேயடுத்த
மந்தைமேய்வனத்தில் அண்டியோர்குடிற்குளே
அங்குதானிருக்கும் அந்தவேளையொப்ப
தந்தமாதியற்ற எந்தைசேயனைத்தன்
அன்பினோடுபெற்று கந்துசீலைசுற்றியே
அந்தமாய்முனெட்டி தங்கவேகிடத்தி
அஞ்சலேகொடுத்தி றைஞ்சியேவழுத்த
அண்டர்சேனைதிட்டம் என்றுவானமுட்டியே

புங்கமேகனத்த சங்கையாகநித்திய
மந்திரசோபனத்தி றங்கள்கூறமெச்ச
புந்திகூர்மகத்துவ மங்களாகரத்தினே
புடைமண்டியேகுதித் திட்டடாக்கிரமத்துற்
பேய்க்கணத்தைச் சாங்கமும்
விகல்கொண்டுமாவுயித் தக்காத்திரவுக்கிரத்
தாற்றகர்த்திட் டோங்கிய
புகழ்மண்டலாதிபப் பராக்கிரமத்துக்
கோப்பரத்துக் காண்டவனே

கீறல் = எழுதல்

கிறிஸ்து மனுடவதாரக் காட்சி

6. ஆதியதமேவைபுரி பாதகமெலாமகல
ஆரிருளிலே கிருபையாய்
ஆரணியமீதுபல மாடதடைகூடமதில்
ஆயர்தொழ வானவருமே
நீதியொடாகாயமதி னூடதிகவீணையொலி
நேர்புகழ்கள் பாடிவரவே
நேசவறிவாகரர்கள் மூவரொருபாலணுகி
நீடுதிறை யானதிடவே
பேதகவெரோதைகவ டானநினைவால்மொழிகள்
பேசியகொ டூரமறவே
பீடுலகின்மானிடரெ லாமதிகசேமமொடு
பேருலகின் வாழ்வுபெறவே
மாதவதவீதுவளர் யூதர்குலராசகனி
மாதுமரி யாள்மகிழவே
மகவெனுங்கனபிர தாபமுக்கியமாயுயர்
கருணையின் கடல்திரி யேகவஸ்தனாதிதன்
மனுமகன்றிரு மனுவேல் கிறிஸ்துநாயகனே

திறை = அரசிறை
கிறிஸ்து மனுடவதாரப் பிரஸ்தாபம்

7. சுந்தரப்பரமன் மைந்தனற்புதமி
குந்தநிச்சயசு தந்தரக்கருணை
சொந்தம்வைத்தருள வந்துபெத்தலையிலே
துங்கமைக்கண்மரி மங்கைகற்பது
துலங்குகெற்பமதி லங்கியுற்பவம்
தொன்றிடச்சுடர் எழுந்துமுக்கியமதாய்
அந்தரத்தின்மிசை சிந்துநற்கவிக
டந்துவிற்பனமு டன்சொலிப்பணிய
அண்டரக்கணம கிழ்ந்துபற்றிவரவே
அன்புறக்கலையு ணர்ந்தநற்றவர்
உவந்துதெட்சணைசி றந்தளித்தடிகள்
அஞ்சலித்துமிக வுந்துதித்தெழுகவே
தந்திரக்கடிக ணிந்தையுற்றவலு
வஞ்சகக்கொடிய சிந்தையுக்குண்மிகு
சஞ்சலத்துயர்நி றைந்துதட்டழியவே
சங்கைபெற்றதவி தின்குலத்தரசர்
தங்களுக்குமவ ரின்புறத்தில்வரு
சந்ததிக்குமர சென்றுதிட்டமுடனே
மந்திரத்திரவி தங்களுற்றபர
மண்டலச்செபமு ழங்கமெய்ப்புகழ்
வழங்கஅர்ச்செயர் வணங்கஉச்சிதமதாய்
வரமிகும்ஞானச் சாத்திரமொன்றைத்
திறத்திலிட்டகு மாரகுணாகர
குருமனுவேல்சற் பாத்திரதுங்கத்
திரித்துவத்தினி லேகமதாய்வளர்
வளமையின்யூதக் கோத்திரசிங்கக்
கிறிஸ்துரட்சக ரானபராபரனே

ஆரணியம் = காடு; சுரர் = தூதர்; அண்டர் = இடையர்

செய்யுள் அட்டவணை

யேசுபாலகன் எகிப்த்துக்கேகி மீண்டது

8. மனத்திலேமதங்கள் மிகுத்தபாதகன்றன்
அகத்தினானினைந்த துடுக்கெலாம்அறிந்து
மகத்துவமாயெழுந்த திரித்துவஏகதந்தையார்
வரத்திலேநிறைந்த சுரர்க்குளேசிறந்த
ஒருத்தனோடறைந்து விடுத்தகாலைஅந்த
வனத்திலேஅடர்ந்த குடிற்குளேஇருந்ததோர்
கனத்தஞானசிந்தை தரித்தசூசைமுன்பு
வழுத்தவேயவன்றன் மரிப்பெணோடுவந்து
கடுக்கவேகுழந்தை எடுத்துமேநடந்துசீர்
கதித்தநாடதென்றஎகிப்த்தினூடுசென்று
தரித்தபோதுமுன்பு பரத்திலேறிவந்த
கருத்தர்தூதனின்று மறுத்துமேவியங்கனே
சினத்தெரோதையென்ற பெருத்தபாவிகொண்ட
கவட்டினால்மடிந்த விதத்தையேமொழிந்து
திடத்தினீரிருந்த இடத்தையேயகன்றுமே
சிறப்பிலேயுயர்ந்த பெலத்தயூதர்தங்கி
நடத்தியாளுமுங்க டலத்திலேகுமென்று
தெரித்தவாய்மைகண்டு சணத்திலேவிரைந்துதான்
இனத்துளோர்கள்பெந்து சனத்துளோரை—அண்டி
இருக்கநாடியங்கு வரச்செய்தாகமங்கள்
இசைத்தவாறுகந்த கிறிஸ்துதேவமைந்தனே
ஏவைமக்கள் பாதகமுற்றினு
மேதவிழ்த்தத யாபமனோகர
தேவசற்பிர சாதசமுத்திர
நேசவுத்தம ஞானகுணாகர
ஏகசக்க ராதிபமுக்கிய
யேசுரட்சக ரானபராபரனே

தெரித்தல் = சொல்லல்

புகழ்ச்சி

9. சீருயராதா னேதரனேநர தேவகுணாகரனே
தேசிகனேநிச வாசகனேதிரி யேகபராபரனே
ஆரியனேயறி வாகரனேகிரு பாகரனேதிறனே
ஆரணனேபரி பூரணனேபழு தானதிலாதவனே
வீரியனேசெக சூரியனேதிரு வேதவுதாரணனே
மேலவனேநல னேவலனேகன மேன்மையதானவனே
பாரினிலேமனு வானவனேபரி வானவனேதவனே
பரமண்டலாதிபதி வஸ்தாரதளசேகர
நிறைகொண்டுலாவிய விஸ்தானசருவேசுர
பழுதொன்றிலாத கிறிஸ்தேசுநசராதிபனே

10. நிராதரநி ராமயவ ரோதயப ரீதய
நிதானஒரு ஞானபரனே
நிகாதவ லுபாதகச மூலவினை யாவது
நிவாரணகு ணாகரதரா
தராதரத ராதலத ராபதிச ராசர
தயாபரச ரோருகபதா
சதாநிதமு னாதரவ தேபுரிப ராமரி
சரீரியச ரீரிவடிவே
பராபரப ரேசுரப யோதரசி மாசன
பலோர்பணிவி லாசசமுகா
படாரிடுக டாமடம டாதுறுப சாசுட
படாமுடிஎ டாதநடனா
இராசவிச றேலர்கள்பு ராதனத வீதுகும
ராகுருப ராவெனரசே
ஏகமுதலே சருவகாரண வஸ்தாஞ்சுக
ளேபரவியே நடனமாடிய திஷ்டாந்தர
யேசுநசராதிபதி ஞானகிறிஸ் தேந்திரனே

ஆஞ்சுகள் = சம்மனசுகள் (இலத்தீன் வார்த்தை)

செய்யுள் அட்டவணை

எ–து: நிராதர = ஆதாரமற்ற; நிராமய = நோயின்மை;
வரோதய = வரத்தினுதைய; பரீதைய = பரிவான தயவு;
நிதான = நேர்மையுடைய; ஒரு ஞானபரனே,
ஒருதராய் ஞானமுள்ள பராபரனே;
நிகாதவலுபாதக = வஞ்சகமான வலிய பாதகம்;
சமூல வினையாவதும் = வேரோடு பற்றிய
தீவினையாவதும்; நிவாரண = நீக்கிய;
குணாகரதரா = குணம் வசிக்குமலையே;
தராதர = மலை; தராதல = பூமி;
தராபதி = இராசா; சராசர = நடையுற்றவை
நடையற்றவைகட்கும்; தயாபர = தயாபரராயிருக்கிற;
சரோருகபதா = தாமரைப்பாதா;
சதாநிதமுன் = எப்போதும் உன்;
ஆதரவதேபுரி = அடைக்கலத்தைக் கொடு;
பராமரி = விசாரி; சரீரி = சரீரமுற்ற; அசரீரி = சரீரமற்ற;
வடிவே = உருவே; பராபர = வானம் பூமியையுடைய;
பரேசுர = பரத்துக்கெசமான்னிய;
பயோதரசிமாசன = மேகசிமாசன;
பலோர்பணி = பலராலும் பணியப்பட்ட;
விலாச சமுகா = அகண்ட விலாச கூட்டத்தானே;
படாரிடு = துன்பஞ் செய்யப்பட்ட;
கடாமடம் = மிருகத்துவமான மூடத்தனம்;
அடாது = நெருங்காது;
உறுபசசுட = பெரும் பசாசுட;
படாமுடி = படம் பொருந்திய தளை;
எடாத நடனா = எடாதபடி நடனஞ் செய்கிறவரே.

11. சொலாலுரையினா லறிவினா லுணரொணாவலு
சுதாசிதசதா சிவபிதா
சுவாபிதகுணா திதசினேகித மனாயுத
சொரூபிதவினோ தவுனதா

நிலாவியபரா வெளிவியோம விரிவானது
நெடாசலவுடாதிக இவேயோன்
நிசாகரனுலாவிய கிரேக மெணிலாதது
நிகேதனசரா சரமெலாம்
பலாவிதபலா முகபலா நெறிகளேசெய்து
பலூழிபலனே தருதயா
பராகுருபரா திருநரா வொருதராவென
பராமுகமனா திகுமரா
வலாவுருவலா பிசகிலா விசறலாமகத
லாமரிசலா மிடசலா
வகுத்தருட்டங்கும் வேதமார்க்த்தேற் பாட்டுப்பெட்டியே
நவத்திருச்சங்க நீடுதீர்க்கந்தேட் டீட்டுக்கட்டி
மகத்துவச்சிங்க மானவார்த்தைப்பாட் டாட்டுக்குட்டி

எ–து:
சொலாலுரையினாலறிவினால் = வார்த்தையினால், வியாக்கியானத்தினால், அறிவினால்;
உணரொணாவலு = அறியக் கூடாத வலிய;
சுதாசித = சுயம்பான ஞானம்;
சதாசிவபிதா = முடியாத நன்மையுள்ள பிதா;
சுவாபிதா = சுவாப உரிமையுள்ள;
குணாதித = அதீன குணமுடைய;
சினேகித = சிநேகமாகிய;
மனாயுத = மனதின் கருவியான;
சொரூபித = பரம வடிவான;
வினோத வுனதா = மகத்துவமாய் உயர்ந்தோனே;
நிலாவிய = ஒளி செய்யப்பட்ட;
பராவெளி = பரமண்டலத்தின் வெளிப்பிரகாரம்;
வியோம விரிவானதும் = ஆகாச விரிவும்;
நெடாசல = நெடிய பூமி;
உடாதிகள் = நட்சத்திர முதலியவைகள்;
வெயோன் = சூரியன்;

நிசாகர னுலாவிய = சந்திரன் உலாவிய;
கிரேகமெணிலாததும் = எண்ணி முடியாத கிரகங்களும்;
நிகேதன = வீடுகளும்;
சராசரமெலாம் = நடையுள்ளதும் இல்லதுமான
சமஸ்தமும்; சரம் = நடையுற்றது; அசரம் = நடையற்றது.

12. விடாதுலக டாதபிரகார மொழியாநெனை
விரோதமிடுதே யலகையோ
விகாதமிக வேசெயுதயோ வுடல்பொலாதது
விசாரநினைவோ கவலையோ
படாமிடிமை யோதுரிதமோ கொடுமையோவரு
பவாசையொரு கோடிதிரளோ
பயோததி கொளாவினைகளோ வெனசெய்வேனிரு
பதாசமையம் ஆதரியையா
கெடாதடிமை மீதுன்விழி பார்கருணைகூரடு
கிலேசமறவே யருகில்வா
கிரிடாதிப கயாதிப நியாதிபதயாதிப
கிருபாநதி சதாபதிசுதா
நடாதிபத வீதுசல மோனடிபராவிய
நமோபிரமமே அபையமே
ஞான தீபத் துங்க சொரூபத்
தாதிபிதா மகிமைப் பிரகாச
ரான வேதத் தங்க முலாசத்
தோதுமகா கிருபைக் கதிநேச
ஞாய நீதத் தெங்கள் சுவாபப்
பாலகனாய் வருமெச் சருவேசுரனே

சதாபதி = நித்தியராஜா; சுதா = சுதனே
பயோததி = சமுத்திரம்; நடாதிப = நடனாதிப

13. கரிசித்த கிருபைக்கு முடிஅற்ற வளவற்ற
கருணைக்க ணுளகத்தனே
கதிவைத்த வதிசித்திர மகிமைத்த ருமநித்திய
கனமிக்க வளர்வஸ்துவே
தெரிசித்த கவடற்ற இடையர்க்க ருள்கொடுத்த
திறமைப்பிர பலசித்தனே
செமெச்சஒ ருசிற்று ருவெடுத் தடவியிற்
சிறியகொட்டில் வரும்அத்தனே
வரிசித்த பரதத்துவ சுயதற்ப ரமகத்துவ
வரசத்துவ ஒருசத்தியனே
வழிகெட்ட அடிமைக்கு னருள்சற்றெ னும்வகுத்து
வளமைப்ப டநடத்துவாய்
பரிசுத்த சொருபத்து நிலைமுக்கிய வடிவொத்த
பழுதற்று யர்திரித்துவனே
பந்தச் சந்த விருத்தம் பாடிய
வேத நாயக வாணனின் மேலுயர்
அன்புச் சிந்தை மிகுத்துஞ் சீர்தரும்
யேசு நாதகி ருபாநதி யாகிய
பண்பிட் டும்பர் வழுத்துந் தேவ
சுதாக ராமனு வேலர சாதிபனே

சித்தன் = சித்தமுள்ளவர்; அடவி = காடு
வரசத்துவம் = ஆசீர்வாதப் பெலம்; சுதாகரா = சுதனே

செபமாலை 23 வரை செய்யுள் 324

செய்யுள் அட்டவணை

24. ஜெபமாலை

கிறிஸ்துவின் சரித்திராதிந்தம்

கழிநெடில்

திருமறை மீறும் ஆதிமா னிடரின்
நீவினை தீரவன் றாதி
செப்பிய மொழியால் இஸ்திரி யிடத்திற்
பரிசுத்த ரூபியாற் செனித்துப்
பெருமை சேர்வானோர் நரரெலாம் வணங்கப்
பெத்தலே நகரிடை பிறந்து
பின்பதெட் டாநாள் விருத்தசே தனமும்
இரட்சகர் நாமமும் பெற்று
வருபனி ரெண்டாம் வயதினில் யூத
மார்களை வார்த்தையால் மடக்கி
வளருமுப் பதனிற் றீட்சையும் வாங்கி
வலியசோ தனையெலாஞ் செயித்துத்
தருமசத் தியத்தை நடந்து போதித்துச்
சாற்றரும் புதுமையாற் றிடத்துச்
சகலதீ வினையு மாறிடப் பாடு
படுந்தவ யேசுநா யகனே

ஆயத்தம்

2. நீடுறுந் தவத்தின் உருவதா யெழுந்த
நித்தியன் மனுடர்பா தகத்தால்
நெடுங்கொலைப் படுதற் காயத்தப் படுத்தி
நிச்சய முழுமன துடனே
தேடுபெத் தானி யாவினிற் குஷ்ட
ரோகச்சீ மோனகத் திருக்கச்

தலைவரிசை அட்டவணை

சேயிழை யொருத்தி விலையுயர் பரணித்
தயிலத்தைச் சிரத்தின்மேல் வார்த்துப்
பீடுட னபிஷே கித்தபின் சீடர்
பெரும்பதம் விளக்கிநின் கலையாற்
பின்னையுந் துடைத்துன் மனதினி விருந்த
பிரியமுந் தாழ்மையு முணர்த்தி
வீடுறு மெருசலே மினிற் சத்திர
விடுதியிற் பஸ்குவா ஆட்டை
விநமுடன் அப்போஸ் தலருடன் புசித்த
விமலனே யேசுநா யகனே

நற்கருணை

3. நம்முட நாதர் யேசுதாங் காட்டிக்
கொடுபட்ட அன்றிராத் திரியில்
நயத்துடன் அப்பத் தினையெடுத் தாசீர்
வதித்துநற் கரத்தினாற் பிட்டுத்
தம்முட சீஷாக் களுக்கதைக் கொடுத்துத்
தருமிதை வாங்கியிங் கருந்துந்
தானிதுங் களுக்காய்க் கொடுபடு மெனது
சரீரமென் றனைநினைப் பதற்காய்ச்
செம்மையாய்ச் செயுமென் றறைந்தவ்வா றுடனே
திரும்பவும் பாத்திர மெடுத்துத்
தேவனைத் துதித்தங் கவர்கள்கைக் கொடுத்துச்
சேர்ந்திதை அனைவருங் குடியும்
உண்மையா யுமது பாவம தகல
உமக்கெனச் சிந்தின எனது
உதிரமென் றனைநீர் நினைத்திடச் செயுமென்
றுறைத்தவா யேசுநா யகனே

ஆத்துமப்பாடு

4. காவினிற் புரிந்த அருங்கொடும் பவத்தாற்
காவினில் வியாழமன் றிரவிற்
கருத்தனும் பன்னோர் சீடரும் எழுந்து
கற்பனை அவர்களுக் கருளித்
தாவியங் கிருந்து செபஞ்செயு மெனவே
சாற்றிய பின்னர்வெற் பனையுந்
தருமயக் கோபுயோ வானையும் கூட்டித்
தமதுசஞ் சலத்தினாற் றயங்கி
மேவிய துயரால் வியாகுலம் அடைந்து
மிகத்திகைப் பாகிமெய் தளர்ந்து
மீண்டவர்க் கப்பாற் கல்லெறி தூரத்
தினில்முழங் காலினில் வீழ்ந்து
தேவனை மூன்று முறையிறைஞ் சிடவுந்
திருவுடல் உதிரவேர் வையதாய்த்
திகழுமாற் றுமப்பாட் டவஸ்தைபட் டொடுங்கச்
சித்தமாம் யேசுநா யகனே

பிடிபட்டது

5. பன்னிரு வரிலே ஒருவனாம் யூதாப்
பாவியுஞ் சேர்வையின் றிரளும்
பரிசெயர் வேத பாரசர் மூப்பர்
பகையினா சாரியர் சனமும்
மின்னிய தீபங் கத்தியா யுதங்கள்
தடியுடன் விரண்டெழு ந் தடர்ந்து
விமலனை முத்தி இடுங்குறிப் படியே
மேல்விழுந் தவர்தனைப் பிடித்து
மன்னிய கயிற்றால் இருகரம் பற்றி
வரிந்திறு கப்பிணித் துடனே
வஞ்சகன் அன்னா இடத்தினிற் கொடுபோய்

மறுபடி யூதர்சங் கத்தில்
உன்னிய காய்பா முன்புரப் படுத்தி
ஓடிய முரைத் துனை அடித்தங்
கோரிரா முழுது நிந்தனைப் படுத்த
உவந்தவா யேசுநா யகனே
பேதுரு மறுதலிப்பு

6. இப்பொழு தெனைநீ பின்செலா யெனவே
இயம்பிய பராபரன் மகனோ
டெதிரதாய் மரணம் அணுகினு மும்மோ
டெய்துவ னென்றபே துருவும்
ஒப்புடன் குளிர்காய்ந் திருக்கையி லொருத்தி
ஊன்றிபங் கவன்றனை நோக்கி
ஓய்நச ரேத்தூ ரேசுவோ டிருந்த
துண்டவன் சீடனென் றுரைக்க
அப்பொழு தவனா னலவுனின் மொழியும்
அம்மனு ஷனையுமொன் றறியேன்
ஆணைசத் தியமென் றிருமுறை சேவற்
கூவுமுன் அடர்ந்துமும் முறையாய்த்
தப்புடன் மறுத்த சீடனைத் திரும்பத்
தயவுடன் நோக்கஅங் கவனுஞ்
சாற்றிய மொழியை நினைத்தழு ததற்குந்
தயைசெய்த யேசுநா யகனே
பிரதான ஆசாரியன் வீட்டிற் பட்ட பாடுகள்

7. மாறிலா தவன்காய் பாவின்முன் மொழிந்த
மாற்றத்தி னால்வெகுண் டொருவன்
மனுமகன் றன்னைக் கன்னத்தில் அறைந்தான்
மனுச்சுவா பத்தினாற் றளர்ந்தான்
றூறதா யிருபொய்ச் சாட்சிகள் எம்பிச்
சுத்தன்மேற் படர்பல பிதற்றிச்
சொல்லவுங் கிறிஸ்து மவுனமுற் றிருக்கச்
சோதியின் குமாரனோ வென்று

செய்யுள் அட்டவணை

சீறியே குருக்கள் கேட்டதற் கமலன்
செப்பின படியுநா னவர்தான்
திரும்பவு மேகசிம் மாசனத் தெழுந்து
திருநடு விடவரக் காண்பீர்
வீறெனப் பகர வஸ்திரங் கிழித்து
வெஞ்சினத் துடனிவன் சாக
விதியவன் றேவ தூஷணனென் றார்
மேசியா யேசுநா யகனே

8. அங்கவ ரிறையை அசங்கத மடித்தே
ஆகடி யங்களைப் பண்ணி
அருள்முகத் துமிந்து சிலதியர் முக்கா
டிட்டுமென் முகத்தினில் அறைந்து
பங்கமே படுத்திக் கிறிஸ்துவே யுன்னை
அடித்தவ னைப்பக ரென்றே
பகடிகள் பரிகா சங்கள்செய் தேசிப்
பலதுதூ ஷணங்களுஞ் சொல்லிக்
கங்குல்போய் விடிய ஆரியர் கூடிக்
களரியில் அவர்தனை நிறுத்திக்
கனமிகுங் கிறிஸ்து வோமென நீவிர்
கழறிய படியவ ரென்க
எங்களுக் கினிமேற் சாட்சிவேண் டுவதேன்
இவன்சொலக் கேட்டமென் றெழும்பி
இசைவுறக் கட்டிப் பிலாத்துவுக் களித்தார்
எம்பரா யேசுநா யகனே

யூதாவின் தீவினை

9. முத்தியாற் காட்டிக் குருவினைக் கொடுத்த
மூடனாங் கொடிய யூதாசு
முதல்வனைக் கட்டிப் பிலாத்தினுக் களித்த
முழுமர ணத்தின்தீர்ப் பறிந்து

தலைவரிசை அட்டவணை

மெத்தவுந் துயராய் முப்பது வெள்ளிக்
காசினை மீளவுங் கொணர்ந்து
வேதிய ரிடத்திற் குற்றமி லானை
விட்டதாற் பவஞ்செய்தே னென்றான்
மத்தர்க ளதற்கெங் களுக்கென நீயே
பாரென வலியஆ லயத்தில்
வாங்கின காசை எறிந்துபோய் நான்று
கொண்டபின் மறுத்ததை எடுத்துச்
செத்தஅன் னியரை அடக்கஞ்செய் வதற்காய்த்
தெரிசியாம் எரேமியா வெழுதுந்
திட்டமாய்க் குயவன் நிலைத்தினைத் கொண்டார்
திவ்விய யேசுநா யகனே
பிலத்துவின் வீட்டிற் பட்ட பாடுகள்

10. அந்தஆ ரியர்பஸ்க் காவினைத் தீட்டாக்
காப்படி புசிக்கஆஸ் தானத்
தணுகிடா திருக்க எம்முறைப் பாட்டை
அறையுமிம் மனுடனுக் கென்றே
பொந்தியப் பிலாத்தங் கடர்ந்துகேட் டதற்குப்
பூரியர் தீங்குசெய் யாட்டாற்
போர்ந்துனக் களியோம் என்றிட வுங்கள்
போதகப் படிநடு விடுமென்
றுந்திடக் கொல்வ தெமக்கடா தென்றே
ஒருவன்மேல் முறைபடத் தொடங்கி
ஒருங்குடன் சனத்தை இரண்டகம் பண்ண
உசுப்பிரா யருக்கிற தடுத்தான்
விந்தையென் றுரைக்கப் பிலாத்துனை அழைத்து
வேந்தனோ யூதருக் கென்க
விரைந்திதுன் சொலோமற் றவர்சொலோ வெனவே
வினவிய யேசுநா யகனே

11. யூதனோ யானுன் சனமெனக் களித்தார்
ஓதுநீ செய்ததே தென்க
உலகின்ராச் சியமென் னுடையதா னால்நான்
யூதர்கைப் படாதென்சே வகர்கள்
மோதுபோ ரிடுவா ரானதா லுலகின்
ராச்சிய மலவென மொழிய
முனிந்து நீராசா வோவெனக் கேட்க
முதல்வனு நானர சன்றான்
ஈதினாற் பிறந்தேன் சத்திய சாட்சி
இடவுல கத்தினில் வந்தேன்
இசைந்த சத்தியத்தி லானவ னெவனும்
என்மொழி கேட்பனென் றிசைக்க
ஓதுசத் தியமே தென்றுயூ தர்கள்முன்
ஓர்வினை யையுமிவ னிடங்கா
ணோமென அவர்கள் முறையிட மவுனம்
உற்றவா யேசுநா யகனே
எரோதேயின் நிஸ்காரம்

12. கலிலேயாத் துவக்கி இதுவரை யூதே
யாவெலாஞ் சனங்களைக் கலைத்துக்
காறுபா ரெரோதேக் கடுத்தவ னெனவே
கழறிட அவனிடம் விடுப்ப
வலியெரோ தேயும் வெகுதினங் காண்க
வாஞ்சையோ டிருந்தொரற் புதத்தை
வசனங்கள் பலதாற் செய்யெனக் கேட்டு
மறுமொழி வசனியா திருக்கத்
தொலைவிலா முறைப்பா டாரியர் பகரத்
தூஷணப் படுத்திவெண் கலையைச்
சுத்தனுக் குடுத்திப் பிலாத்திடத் தனுப்பத்
துவியரும் வங்கண மானார்
தலைவர்கும் புடனோர் குற்றமும் இவன்மேற்

சாரலை எரோதேயுங் காணான்
சவுக்கினால் அடித்து விடுவனென் றதிபன்
சாற்றினான் யேசுநா யகனே
பரபாவின் விடுதலை

13. பண்டிகை தோறுங் காவலிற் பட்ட
பகைஞரில் ஒருதனை விடுதல்
பழக்கமா னதனாற் கலாதியிற் கொலைசெய்
பழிமிகுங் கொடிய பேர்ப்பரபா
வண்டனை விடவோ கிறிஸ்துவை விடவோ
வழுத்துமென் றவைகளைக் கேட்க
மன்னவன் மனைவி இன்றுசொற் பனத்தில்
வருத்தமுற் றேனவன் வழியே
அண்டொணா தெனஆ ளிடஞ்சொலி யனுப்ப
ஆரியர் மொழிப்படி சனங்கள்
ஆண்டகை சாகக் கொலைஞனை விடுப்ப
தடவென விரைந்துகேட் டலட்டக்
கொண்டதோர் யூதர் அரசனைக் குருசிற்
கொலைசெயக் கொடுத்தவர் கேட்ட
கொலைப்பர பாவை விடுதலை செய்தான்
கோதிலா யேசுநா யகனே
பாடுகளின் கொடூரம்

14. பொந்தியுப் பிலாத்துத் தன்வச மாக்கிப்
புனிதனை வாரினால் அடித்தான்
பொரிந்தசே வகராஸ் தானத்திற் கொடுபோய்ப்
போரின்சேர் வையெலாங் கூட்டிச்
சொந்தவஸ் திரத்தைக் களைந்து மேற்சட்டை
சுழுஞ்சக லாத்தினை அணிந்து
சூழுமுண் முடியைச் சிரத்தினிற் றரித்துத்
துடித்தொரு கோல்கையிற் கொடுத்து
நிந்தைகள் பேசி யூதரின் அரசே

வாழ்கென நிகழ்த்தியமற் றுப்பி
நெடுந்தடி வாங்கிச் சிரத்தினில் அடித்து
நிலைமுழங் காலினி லிருந்து
விந்தையாய் வணங்கிக் கன்னத்தில் அறைந்து
வெளியிலிக் கோலமாய்க் கொணர
மீளவும் பிலாத்தி தோநர னெனவே
விளம்பினா னேசுநா யகனே

15. சிலுவையி லேற்றும் என்றுகும் பனைத்துஞ்
செப்பிய கூக்குரல் கேட்டுத்
தீவினை யொன்றும் இவனிடங் காணோந்
திடமெனப் பிலாத்தெதிர் பகர
வலியவெங் களுக்கோர் ஞாயமுண் டிறக்க
வானவன் மைந்தனே யென்றான்
மன்னனும் பயந்தாஸ் தானத்தில் மீண்டும்
வந்துநீ யாரெனக் கேட்கப்
பெலியதாம் புருவை மவுனமுற் றிருக்கப்
பேசிடா யோவுனை விடவும்
பெருமரத் திடவும் பெலனெனக் கிலையோ
வென்றபின் மேலிருந் தல்லால்
இலையின்மேலு னக்கோர் ஆண்மையிங் கதனால்
என்னையுன் கையளித் தவர்க்கே
இடுங்கொடும் பாவம் அதிகமுண் டென்றே
இயம்பினை யேசுநா யகனே

16. ஆரியர் பிலாத்தோ டிவன்றனை விடுத்தால்
ராயருக் கன்பனீ யலவிங்
காரெனுந் தன்னை அரசனாக் கிடில்ரா
யுனுக்கெதி ராகினா னென்க
வீரமாய்க் கிறிஸ்தை வெளிப் புறப்படுத்தி
மேன்பகத் தாவெனுந் தலத்தில்

மேவிய சிம்மா சனத்தெழுந் திருந்தான்
விடிந்தறு தாசுபோ லிருக்கப்
பாரும்ம் மரசன் இதோவென அகற்றும்
பணையினி லேற்றும்ரா யனுமே
பதியலால் வேறோர் பதியிலை யென்கவும்
பிலாத்து தன்னால் முடியாமல்
நீரினை எடுத்துச் சனங்கள்முன் கரத்தைக்
கழுவியே நீதவா னுதிரம்
நீங்களே பாரும் என்றுகை யளித்தான்
நெறிமிகும் யேசுநா யகனே
கொல்கதாவிற் பட்ட பாடுகள்

17. சேவக ரவரைத் தன்வச மாக்கிச்
செழுஞ்சக லாத்துடை களைந்து
திரும்பவும் அவரின் வஸ்திரம் உடுத்திச்
சிலுவையைத் தோளினிற் சுமத்திப்
பாவிகள் கொல்கதா வினிற்கொடு போகும்
பாதையிற் சிரேனேயூர்ச் சீமோன்
பற்றிடக் கண்டங் கவன்றனைப் பிடித்துப்
பணையினைச் சுமத்தியங் கேக
ஆவலாய்ப் பெண்கள் புலம்பி யொப்பாரி
அழுதவர் மேற்சொல அவரும்
ஆறுதல் பற்றிக் கொல்கதா மலையில்
அணுகிடப் போளமும் பித்துந்
தாவியே கலந்த காடியை கொடுத்துச்
சாற்றரும் பாதகர் நடுவே
தருமறைப் படியே சிலுவையில் அறைந்தார்
தயைமிகும் யேசுநா யகனே

சிலுவையின் பாடுகள்

18. யேசுவோ பிதாவே பொறுத்தரு ளவர்கட்
கேனெனிற் றாங்கள்செய் கிறதே
தென்றறி யாரென் றுரைத்தனர் பிலாத்தோ
இவரினாக் கினைமுகாந் தரத்தை
நாசரே னேசு யூதரின் அரசென்
றெபிரேயாக் கிரேக்கலத் தீனில்
நயத்துடன் வரைந்து சிலுவையி னுனியில்
நாயகன் சிரத்தின்மேல் வைத்தான்
மாசிலான் கலையைச் சேவகர் பகிர்ந்து
மகிழ்ந்துநாற் பங்குசெய் தவரின்
வலியமேற் சட்டை தையலி லாதால்
வரைந்தநேர் பீலிபோட் டெடுத்தார்
நேசனைப் பகைஞர் காத்திடச் சனங்கள்
நின்றனர் வேடிக்கைப் பார்த்து
நிறைந்தமுன் றாந்தா சானபின் குருசில்
நின்றவா யேசுநா யகனே
பரிகாச நிந்தைகள்

19. அவ்வழி நடக்குஞ் சனங்கள்தூ ஷணஞ்செய்
தவர்தலை துலுக்கியுஞ் சீதே
வாலயந் தகர்த்து மூன்றுநா ளதனில்
அமைப்பவ னேயுனைத் தானே
செவ்வையா யிரட்சி பரன்சுத னானாற்
சிலுவையி லிருந்திறங் கென்றார்
தேசிகர் வேத பாரகர் மூப்பர்
சிரித்தொரு தரைவிழித் தொருதர்
கவ்வையாய் மற்றோர் கலையிவன் காத்தான்
கனவிச றேலரின் அரசுங்
கடவுளாற் றெறிந்த கிறிஸ்துவு மானாற்
காணநாந் தன்னையே காத்தே
ஒவ்விய குருசி னின்றிறங் கட்டும்

ஒருவனின் மைந்தனென் றானே
ஓங்கியிங் கிவனை இரட்சித்து விடட்டென்
றுரைத்தனர் யேசுநா யகனே
கள்ளன் கதிப்பேறு

20. திட்டியே நகைத்துச் சேவகர் காடி
கொண்டுவந் தருகினிற் சேர்ந்து
தீமொழி மதற்ற இடதுபா ரிசத்தி
சிலுவையின் கள்ளனுஞ் சினக்கத்
தட்டியே மற்றோன் அவன்றனைக் கடிந்து
தக்கஇவ் வாக்கினைக் குள்ளாய்ச்
சார்ந்தும்அச் சயனுக் கஞ்சிடா யோநாஞ்
சரிவரச் செய்ததற் கீடாய்ப்
பட்டிட ஞாயம் இவரவ குணமோ
பண்ணலை என்றுபாத் துனையுன்
பரமராச் சியத்தில் வந்தபோ தெனைப்
பரிந்தருள் ஐயனே யென்றான்
மட்டில்லாத் திடமாய் என்னுட னின்றே
வானில்வந் திருப்பையென் றன்பாய்
வலதுபா ரிசத்தின் கள்ளனுக் குரைத்த
மாசிலா யேசுநா யகனே

மாதாவும் சீடனும்

21. அண்டியே சிலுவை அடியிமா தாவும்
அவள்தங்கை யாகியகி லேயோப்
பாமனை மரியாள் மகதலை மரியாள்
அழுதுநின் றிடவுநீ அப்போ
கண்டுநே சித்த சீடனைக் காட்டிக்
காரிகை உன்மக னென்றுங்
கருதியன் மாதா வென்றுசீ டனுக்குங்
கட்டளை யிட்டனை யாறு
கொண்டுதா சொன்பத ளவுல கெங்கும்
கொடுமிருள் சூழ்ந்தொளி மறையக்

கூறியே யேலி ஏலிலா மாசபத்
தானியா வென்றுகூப் பிட்டே
விண்டதென் பரனே என்பர னேகை
விட்டதே தெனையுநீ யென்க
விரைந்தெலி யாவை அழைக்கிறா னென்றார்
விகடமா யேசுநா யகனே

மரணம்

22. அப்புற மியாவு முகிந்ததென் றறிந்தே
அருந்தகை யுண்டெடன வெழுதி
அறைந்தது நிறைவே றிடப்புகன் றாயந்
நேரமோர் சேவக னோடிச்
சிப்பிசேர் கடற்கா ளான்றனை எடுத்துச்
சென்றுமுன் காடியா னிரப்பிச்
செடியெனும் ஈசோப் புடனதை சேர்த்துத்
திகிரியின் கோல்மிசை பூட்டித்
தப்பிலான் றனக்குக் குடித்திடக் கொடுக்கச்
சனங்களோ பொறுஎலி யாத்தான்
தனித்திவன் றன்னை இரக்கிரட் சிக்கச்
சார்வனோ பார்ப்பமென் றமர்த்தக்
கைப்புறு காடி கொண்டபின் முகுந்த
தென்றுமா சத்தமே காட்டிக்
கந்தனைச் சாய்த்துன் ஆவிவிட் டிறந்த
கடவுளே யேசுநா யகனே

புதுமை

23. திடீரெனத் தேவா லயத்திரை கிழிந்து
திடமுள பூமியும் அதிர்ந்து
சிலைமலை பிளந்து கல்லறை திறந்து
செத்தவர்ச் செயர்களும் எழுந்து
வடிவுடன் கிறிஸ்தங் குயிர்த்தபின் எருச
லேமினில் வந்துகாண் பிக்க

வயங்கின தனைத்துஞ் செர்வைகா ரனுங்காத்
திருந்தமற் றவர்களுங் கண்டு
துடியதாய்ப் பயந்து கடவுளின் மகிமை
சொல்லிமெய் யாகவிம் மனிதன்
சுத்தனும் பரம சுதனுமே என்றார்
சூழ்ந்தவர் தங்கள்மார் புகளிற்
படீரென அடித்துத் திரும்பினர் சகல
பழக்கமா னவர்களுங் கலிலேப்
பதியின்மா தர்களுந் தூரநின் றழுது
பார்த்தனர் யேசுநா யகனே

கம் = தலை; வயங்கின = நடந்த

விலாக் காயம்

24. பாதக யூதர் சிலுவையில் அறையப்
பட்டவர் உடல்களோ தொங்கப்
படாதுசா பதிலென் றதிபனுக் கறைந்து
பதறிடச் சேவகர் வந்து
தீதுசெய் கள்ளர் இருவரின் கணைக்கால்
எலும்பினைச் சிதைவுற முறித்தார்
தேவனோ முதலே மரித்ததால் அவர்பாற்
சேரலை யாகிலும் ஒருவன்
கோதுடன் ஈட்டி யால்விலா வதனைக்
குத்தினான் உதிரமுஞ் சலமுங்
குபீரெனப் பொங்கக் கண்டவன் சாட்சி
கூறினான் அஸ்தமா னத்தில்
நீதிசேர் அறிமத்தி யாவின்யோ சேப்பு
நேயனின் சடமதை இறக்க
நிருபனாம் பிலாத்தின் விடையது வாங்கி
நீங்கினான் யேசுநா யகனே

அடக்கம்

25. நீங்கியோ சேப்போர் பிடவையுங் கொண்டு
நேடியன் றிரவினில் வந்த
நீக்கோதே முந்தா னூறுறாத் தல்போல்
நிறுத்தவெண் கரியபோ ளத்தை
வாங்கிவந் துடனே இருவருங் கூடி
மனுமகன் சடந்தனை இறக்கி
வள்ளிய பிடவை யாலதைச் சுற்றி
வாசவர்க் கங்களைத் திமிர்ந்து
தீங்குசெய் கொல்க தாமலை அதில்யோ
சேப்பமுன் வெட்டிவைத் திருந்த
தெளிவுள்ள புதுக்கல் லறையில்வைத் ததின்வாய்
திரண்டதோர் பெரியகற் புரட்டிப்
பாங்குடன் வைத்தே கினரதைப் பெண்கள்
பார்த்துநின் றெழுமறைப் படியே
பலதுவே லைகளும் ஒழிந்திருந் தார்சா
பத்துநாள் யேசுநா யகனே

வள்ளிய பிடவை = துய்ய வஸ்திரம்

கல்லறைக் காவல்

26. துட்டராங் குருக்கள் பினும்பிலாத் திடப்போய்த்
துடியதாய் மூன்றுநா ளடவிற்
றுலங்கிட வுயிர்ப்பே னென்றவ்வெத் தனுமே
சொன்னதை நினைக்கிறோம் அதனாற்
கட்டியே யவன்கல் லறையதைக் காக்கக்
கற்பியும் அல்லவென் றாலோ
கங்குலில் அவன்சீ டாக்கள்வந் தவனைக்
களவுசெய் தேகியே சனத்தைத்
தெட்டியே மரித்தோ ரிடத்திருந் தெழுந்தான்

தலைவரிசை அட்டவணை

திறமெனச் செப்புவர் அப்போ
செய்கும்எத் ததுமுந் தினதிலும் கொடிதாய்த்
தீருமென் றிடப்பிலாத் தவர்க்குப்
பொட்டணப் போய்நீர் அறிந்தநேர் காவற்
புரியுமென் றிடவும்உக் களமே
போட்டிசை வாய்க்கல் லறையின்முத் திரையும்
போட்டனர் யேசுநா யகனே

உக்களம் = இராக்காவல்

உயிர்த்தல்

27. வண்மையிவ் விதமாய் பாடுறக் குருசின்
மரித்தடக் குண்டமூன் றாநாள்
மகிமையா யெழுந்து நாற்பது நாளாய்
மண்டலத் திருந்துமா தவருக்
குண்மையாய்ப் பத்து விசைபல விடத்தில்
உயர்தரி சனையது நல்கி
ஓங்கிய வேத நூல்களை யுணர்த்தி
உச்சிதப் புதுமையுங் காட்டி
வெண்முகி லதனில் எழுந்துவா னவன்பால்
மேவிவீத் திருந்துபத் தாநாள்
வித்தகப் பரிசுத் தாவியைச் சீடர்
மேலுற அனுப்பிமீண் டினியுந்
திண்மைசேர் பெலத்தாற் கடையுக மதனில்
திரும்பவந் தவரவர் செய்த
செயற்படி தீர்வை இடச்செயும் பரம
திரித்துவ யேசுநா யகனே

நடுத் தீர்வை

28. வல்லமை யாய்மே காசனத் தெழுந்து
வானவர் படையெலாஞ் சூழ்க
வலியஎக் காளத் ததிரொலி யதனால்
மரித்தயா வர்களையும் எழுப்பித்
தொல்லுல கதனிற் சீவனோ டிருக்குந்
தொகையிலாப் பெயரையுங் கூட்டித்
தூதரை விடுத்தா காயமண்ட லத்திற்
றொகுத்திரு வகுப்பையுஞ் சேர்த்து
நல்லவர் களைத்தம் வலதுபா ரிசத்தில்
நாட்டிவா னிராச்சியம் அளித்து
நலிவுறும் பாவிக ளையிடத் துய்த்து
நரகபா தாளமே வீழ்த்தி
எல்லையில் லாதம கத்துவ நவப்பு
தெருசலேம் பட்டணத் தெழுந்தென்
றூழியும் வேத நாயகன் பாட
இன்புறும் யேசுநா யகனே

ஜெபமாலை 24 வரை செய்யுள் 352

தலைவரிசை அட்டவணை

25. ஜெபமாலை

ஆத்துமப்பெண் நிந்தாஸ்துதி

கழிநெடில்

சீர்மிகும் பிதாவாம் ஒருபரா பரனின்
றிருச்சுத னெனத்திரித் துவத்தின்
றிவ்விய இரண்டாம் ஆளதாய்ச் சிறந்து
தேவனு மனுடனு மான
பேர்மிகுங் கிறிஸ்து மேசியா வேந்தைப்
பேதையோர் ஆற்றுமப் பெண்ணாள்
பேசிய நிந்தாஸ் துதிகளிற் சிலதைப்
பிரபலப் படுத்துதற் கிசைந்தேன்
நேர்மிகு மிசறா வேலையாண் டருளும்
நீதியின் அரசனென் பிரிய
நேசனா மாசைப் பிராணநா யகனீ
நீடியுன் வலதுபா ரிசத்தில்
ஏர்மிகும் ஒப்பீ ரினதுபொன் அணிந்தே
இலங்கிய அரசியான் சொலக்கேள்
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

சங். 45:10
நிந்தாஸ்துதி = நிந்தித்தல்போல் துதித்தல்

2. உன்றனின் செய்தி யான்அறிந் திலனோ
உடுப்பதற் கங்கியொன் றதனை
உவந்துசே வகர்தான் பீலிபோட் டெடுத்தார்
ஒன்றுமற் றம்மணத் திருந்தாய்
அந்தநா ளுனக்கோர் நடத்திலு மிடமற்
றயல்வனத் திடைவிடை யடையும்
அகத்தினிற் பிறந்தாய் மிடியினா லுனைப்புல்

லணையின்மேற் கிடத்தின ரன்றோ
கந்தையா லுன்னைப் பொதிந்ததும் அழுது
கதறிநீ பால்குடித் திருந்த
கவடமும் அறிவேன் றலைமுடி சாய்க்கக்
கழுமரத் திடமிருந் ததுவோ
எந்தையே யுனக்கோர் நீசவா கனந்தான்
இகுந்துனை ஆட்டுதோ ஐயா
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

3. அரசனெ ரோதே கொல்வனென் றஞ்சி
அகன்றெகிப் பத்தினை யடைந்தாய்
அர்கெலா வுக்காய்க் கலிலேயாப் புறங்கள்
அணுகியே நசரைய னானாய்
பரிவிலுன் மாதா பன்னிரு வயதிற்
பண்ணிய முனிவினாற் பரிந்து
பாங்குடன் முப்ப தாண்டளா வாகப்
பணிந்தவர்க் கூழிய மிழைத்தாய்
ஒருவிசை தினநாற் பதுகொடும் வனத்தில்
உண்பதற் கன்றியு மிருந்தாய்
ஓங்கிய அத்தி மரம்படச் சபித்த
உபாயமும் அறிந்துதா னிருப்பேன்
இருதகை யதற்குச் சமாரியாப் பெண்பால்
எழும்புனற் கேட்டது மியல்போ
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

4. அப்பனோ தச்சன் தாயரோ வெளியகன்
னியாஸ்திரி சமுத்திரத் தணுகி
அடர்ந்துமீன் பிடிக்கும் வலையருன் சீடர்
ஆயமத் தேயுனக் கடுத்தோன்
ஒப்பியே வெட்டுக் கிளியோடு தேனை

தலைவரிசை அட்டவணை

உண்டொரா ரணியமே கிடந்தங்
கொட்டகத் தோலை உடுத்தவோ ரிருடி
உன்றன்முன் றூதனாய் வந்தோன்
செப்புபா விகளே உன்சிநே கிதர்கள்
தினச்செல விடுபவன் றிருடன்
சேட்டனா யிருந்தோன் அசத்தியக் காரன்
சின்னப்பன் கண்ணையுங் கெடுத்தாய்
இப்படிக் கொத்த கொள்ளையி லெனைநீ
எப்படித் தாங்குவாய் ஐயா
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

ஆரணியம் = காடு

5. நிசமதா யிசறா வேலுனின் மூத்த
நேரிழை யாமவள் உன்னை
நிகழ்ந்துபா காலோ டகந்தையே புரிந்தும்
நீயினும் அவடனை நேர்ந்தாய்
வசையிதை யறிந்தும் யூதவென் பவளு
மறுமுக நோக்கினள் அவளின்
வஞ்சகந் தனைநீ நெஞ்சில்வை யாது
மறுபடி அவளையே அழைத்தாய்
திசையெலாம் பேர்போய் வேசையாய்த் திரிந்த
திருடியாம் எழுமலைக் கள்ளி
தீங்கெலா மறிந்தும் நீயவ ளுக்கே
சேனைநாட் குணப்படக் கொடுத்தாய்
இசறவேல் யூதா ரோமியென் பவளோ
ஏற்றவ ருன்றனக் கையா
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

எழுமலை = ரோமாபுரி

6. முன்னுகத் தினில்யக் கோபினோ டேபோர்
மூட்டவுன் றன்னைமேற் கொண்டான்
முனையிதை யறிந்து நொண்டியா யவனை
முடக்கின தென்செய லையா
பின்னொரு காக்கை வண்டுமீன் கழுதை
பேசியுன் சித்தமே இயற்றப்
பெருமையா யெகிப்தில் ஒருபத்தற் புதத்தைப்
பேணின சேவகர் திறமு
மன்னிய புகழென் றெண்ணுவோ மானால்
மறையின்மோ சேயுட கோலை
மனுடரைக் கெடுத்த சர்ப்பமாய் மாற்று
மந்திர வித்தையைப் போலே
இன்னமுஞ் சிலதுண் டென்றுநீ என்னை
ஏய்ப்பதுங் கண்டனே யையா
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

7. வரையெனுஞ் சீனா வனமெலாம் அதிர
மறைதரும் போதொரு விலங்கும்
வரப்படா தெனவே வகுத்தநீ இங்கே
மாட்டின்முன் னிட்டியிற் படுத்தாய்
அரசனென் றிருந்துன் சனத்தினுக் கடர்ந்த
அவதியை நீக்குதற் கேலா
தாயிழை எஸ்தர் யூதரின் பெண்ஆ
காசுவேர்க் களித்தது மடவோ
தரைதனிற் சவுலுக் கஞ்சின விதமோ
சாமுவேல் பலியிடச் செல்லுந்
தகமைபிற் றவிதை அரசபி ஷேகந்
தாபியென் றதுசரி தானோ
எருசலை யறிய வெண்கவ சமதிட்
டெரோதேஏன் பயித்திய னென்றான்
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

[தலைவரிசை அட்டவணை]

முன்னிட்டி = விலங்குணா விடுந்தொட்டி அல்லது
மிருகங்களுக்கிரையிடுமிடம்

8. அங்கொரு நாள்நீ அலைகட லதன்மேல்
அத்தராத் திரியினி னடந்தாய்
அடைத்ததோர் கதவும் அடைத்திருக் கையிலே
அர்ச்செயர் நடுவினில் வந்தாய்
மங்கிய துயரால் ஏகுசீ டர்களின்
மனக்கவ லைகளற வழுத்தி
மறுவுரு வாகக் காட்டிநீ மறைந்த
மாயம்ஆய்ந் தறிந்தவ ருண்டோ
தங்குமீன் வாயிற்கா லவரா கனைத்தான்
றராசினில் நிறுத்துவைத் தனையோ
தந்திர மிதைப்போல் அனந்தநீசெய்த
சமர்த்தெலாம் அறிந்துகேட் டிருப்பேன்
இங்கதை போலே என்னையு மருட்ட
எண்ணமோ இருக்கட்டு மையா
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

மத். 17:27

9. மதிமிகும் லாசர் மரித்தசொற் கேட்டு
மனத்தினிற் கவலையற் றவன்போன்
மறுத்துநாற் றினமே தாமதம் புரிந்த
வாய்மையி துன்மகத் துவமோ
சதிருடன் சீடர் காலினைக் கழுவித்
தன்கலை யாலேநீ துடைத்த
தாழ்மையோ கன்னத் தடித்தவன் றனக்குந்
தயவதாய் மறுமொழி கொடுத்தாய்
கதிமிகு முனைத்தான் பெற்றமா மரியாள்
கன்னியாஸ் திரியெனச் சொன்னாற்

செய்யுள் அட்டவணை

காரண மிதுதான் றந்தை யிலாத
காலெனக் கேட்டவர் நகைப்பார்
இதுவெலா மிருக்கக் குருசினீர் பட்ட
இகழ்ச்சிகள் என்சொல்வே னையா
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

கால் = மகன்

10. நேசநீ எனைபோற் பிறந்துனை விருத்த
சேதனப் பட்டனை நிலத்தில்
நெடும்பவம் புரிந்த பாவிபோல் ஞானத்
தீட்சையும் பெற்றனை நினைந்தென்
மாசற வுனதாற் றுமஞ்சரீ ரத்தால்
வரையிலாப் பாடுபட் டுயர்ந்த
மரத்தினில் அறையுண் டிருந்தனை யானு
மண்ணினில் ஓர்விசை இறப்பேன்
காசினி தனினீ எழுந்தனை யானுங்
கடைசியில் எழுந்திருக் கேனோ
கடவுளின் வலத்தில் இருந்தனை யானுங்
கடவுளுன் வலத்தில்வந் திருப்பேன்
யேசுவென் றுனக்கு மாத்திரம் பெயரோ
யேசுசீ ராக்குக்கு மிருந்த
தொழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

11. தேவனென் றிருந்து மனுடனு மானாய்
சிஷ்டிகன் சிஷ்டியாய் போனாய்
சிங்கமோ மிருக நீயும்யூ தாவின்
சிங்கமென் றெடுத்தபேர் திறமோ
மேவிநீ ஆட்டுக் குட்டியே யானால்
மேய்ப்பதற் காவெங்கே கிடைக்கு

தலைவரிசை அட்டவணை

மேய்ப்பனீ யானாற் குட்டியு மாகும்
விதமுல கெங்கணுங் காணோங்
காவினீ சீவ விருட்சமே யானாற்
கனியுணும் பறவைகள் எவையோ
கண்டஎம் மவுவழிப் போக்கனீ யெனிலுங்
கவையிலை என்றுதா னிருந்தேன்
ஏவையின் மகள்நா னீயுமிஸ் திரிவித்
தெனக்குநீ மேன்மையாய் வாய்த்தாய்
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

12. கள்ளமற் றுனையே செபத்தினாற் பிடித்துக்
கருத்தினாற் சிலுவையில் அறைந்து
கால்கரத் தாணிக டாவிவைத் திருந்தாற்
கடந்துபோம் வழியுனக் கில்லை
வள்ளலே இதையுன் வல்லபத் தாலே
மாற்றுவா யென்றுதான் வைப்போ
மறுபடி யுனையென் மனத்தகத் தடைத்து
வைத்திருந் தாலெனை விட்டுத்
தள்ளிநீ போகும் இடமுனக் கேது
தரைபர மியாவுமென் னுடதே
சமுத்திரத் தினினீ தூங்கின கள்ளத்
தனமினி நடக்குமோ நடக்கா
எள்ளள வெனுமுன் றனைவிடுத் திருக்கேன்
இதுதிடம் என்னையா ளையா
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

மத். 8:24–26

13. அத்தனே யுனது மகத்துவந் தனையார்
அளவிடக் கூடுமுன் பெயரும்
அதிசய மானோன் உன்மனு டவதா

செய்யுள் அட்டவணை

ரச்செய லண்டரா னவரும்
புத்தியிற் கிரகித் துணர்வதற் கரிதே
புகழ்ச்சியோ இகழ்ச்சியோ பேதை
போற்றிய நிந்தாஸ் துதியெலாங் கேட்டுப்
பொறுத்திரட் சியும்பரா பரனே
பித்தரும் படியா மடையருங் கல்விப்
பெருமைகொண் டவரும்வெவ் விதமாய்க்
பிதற்றுவார் மனதுக் கெட்டின படியே
பேசுவார் ஏசுவார் உன்னை
எத்தனை கோடி நிந்தையோ பட்டாய்
இதுமகா அதிசயப் பொருட்டோ
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

14. மகதலா வூரின் மரிபவம் பொறுத்தாய்
வஞ்சகர் இடறெலாம் ஒறுத்தாய்
வருதிமிர் வாதன் வல்வினை தீர்த்தாய்
மாதர்கள் அழுத்தாற்றி வித்தாய்
சகமதிற் கையுங் களவுமாய்க் கண்ட
தையலுக் காக்கினை தவிர்த்தாய்
தவறுசெய் கள்ளன் றனக்குரை கொடுத்தாய்
சந்தெகத் தோமையைச் சயித்தாய்
அகமதாய் மறுத்த பேதுரு தனையும்
அகற்றிடா திரங்கிரட் சித்தாய்
அஞ்சிய கானான் இஸ்திரிக் கிரங்கி
அவள்மனுப் படிசெய்தா தரித்தாய்
இகமெலாம் புரக்கச் சிலுவையின் மரித்தாய்
என்னையுங் காத்தரு ளையா
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே

யோவா. 8:11; மத். 15:28

தலைவரிசை அட்டவணை

15. [வேதநா யகன்மேல் வாமனை யெடுத்து
விட்டுவே டிக்கைள் பார்த்தாய்
மிக்கேலு முத்தவன்பெண் டீரையே கொண்டு
வியாகுலப் படுத்திவா தித்தாய்
சாதிக டனையும் உசுப்பிவிட் டனேகஞ்
சங்கடங் களையெலாம் விளைத்தாய்
சற்குணத் திருந்த பாக்கிய நாதன்
சதிசெய்வ தற்கிடங் கொடுத்தாய்
போதவே பகைத்த அடைக்கல த்தையர்
போரதி கரிக்கவே வைத்தாய்
புண்ணிய வானே எத்தனை வேடம்
போடுவாய் ஆடுவா யையா
ஈதெலாம் படுத்திக் கோபமா றினபின்
எழுப்பியா பத்தெலா முடித்தாய்
எழில்பெறு சீயோன் மகள்மண வாளா
இறைவனே யேசுநா யகனே]

ஜெபமாலை 25 வரை செய்யுள் 367

செய்யுள் அட்டவணை

26. ஜெபமாலை

திருச்செயல்

ஒன்றுமில் லாமையில் நின்றுலகம் யாவையும்
உண்டு பெண்ணின தில்லையோ
ஊழித்து வாந்தத்தில் நின்றொளி பிரகாசிக்க
உத்தரவு செய்த திலையோ
சென்றந்த ரங்களிற் கிரகங்கள் வான்மீன்கள்
சேரும் வழிவைத்த திலையோ
திவளைக ளனந்தனந் தங்களா யேறியே
சேணின்று பெய்ய விலையோ
வென்றிபெ றஇஸ்ரவேற் கொருநாளில் ஆதித்தன்
மீண்டு நின்றேக விலையோ
விரிகடல் இரண்டாய்ப் பிளந்துயோர் தானும்வழி
விட்டடங் கின தில்லையோ
கன்றிடா தென்மனஞ் சீராக ஒருநவன்
காட்டுவ துனக் கருமையோ
கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணை யானந்த வடிவே

ஊழித்துவாந்தம் = ஊழியிருள்;
வான்மீன் = நட்சத்திரம்;
சேண் = ஆகாயம்; ஆதித்தன் = சூரியன்

ஆதி. 1:1; யோபு 26:7; சங். 19:2; ஆதி. 1:3–5; 2 கொரி. 4:6; ஆதி. 1:16; யோபு 38:32, 33; ஆதி. 2: 6; யோபு 36:27; யோசு. 10:12–14; யாத். 14: 21, 22; யோசு. 3: 13–16.

2. பொறையை இடம்விட்டுப் பெயர்ந்து கடலிற்றாழ்ந்து
போகஉத் தரவு செயலாம்

பொங்கு திரையின்மேல் நடக்கலாஞ் சிங்கத்தைப்
போர்செய்து கொன்று விடலாம்
மறுபாடை பேசலாம் பேயைத் துரத்தலாம்
வல்லரவு களை நீக்கலாம்
மரணத்துக் கினமான நஞ்சுண்டு தீவினை
வராது காத்துக் கொள்ளலாம்
அறுதியாய்ச் சுகமிலா தவர்கள்மேற் கைகள்வைத்
தாரோக்கியம் ஆக்கி விடலாம்
அனாதி ரட்சகரை விசுவாசித்த பேர்களின்
அடையாளம் இவை களன்றோ
கறையான மனதினி ருள்இரித லரிதரிதே
கடாட்சித்துன் அடிமை கொள்வாய்
கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணை யானந்த வடிவே

பொறை = மலை; திரை = கடல்;
வல்லரவு = வலிய சற்பம்; இரிதல் = கெடுதல்

மத். 21:21, 22; 14:28; 1 சாமு. 17:34–36; மாற். 16:17, 18.

3. மலடனாய் நூற்றாண் டிருந்தவன் வித்தை
மண்டூ ளாகவுந் தொகையிலா
வானத்தின் மீன்களுக் கொப்பாகவும் பெருகி
வர்த்திக்கச் செய்த திலையோ
அலைகடற் கொந்தளிப் புங்கொடுங் காற்றும்
அமரச்சொற் பகர்ந்த திலையோ
ஆதித்தனைப் பூமியும் பூமியைச் சுற்றி
அம்புலியும் ஓட விலையோ
வலியகன் மலையினின் றுதகமும் வானின்று
மன்னாவும் வர வில்லையோ
மறையவன் கோற்றுளிர்த் துப்புயர் கம்பமும்
வந்துவழி காட்ட விலையோ
கலையாமல் என்மன நிலையாக நிற்கவழி
காட்டுவ துனக் கருமையோ

செய்யுள் அட்டவணை

கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணையா னந்த வடிவே

மண்டூள் = பூமியின் தூள்; அமர்தல் = அடங்கல்;
ஆதித்தன் = சூரியன்; அம்பு = சந்திரன்;
உதகம் = தண்ணீர்; புயற் கம்பம் = மேகத்தூண்

ஆதி. 15:3–6; 18:10–14; மாற். 4:37–39; யாத். 16:31; 17:6; எண். 17:8; யாத். 14:19, 20; 40:36, 38

4. ஆகாய விரிவின் முடிவென்ன நீர்களுக்
களவுபிர மாண மென்ன
ஆயிரம் வருடமொரு நாளாகி நாளுமா
யிரம்வருட மாகு விதமென்
வாகான காற்றுக்குத் தக்கநிறை யென்னஅது
வருமுதலு முடிவு மெங்கே
மழைகளின் றிட்டமென இடிமுழக்கங் கண்மின
லுக்குவழி வைத்த தெனவிஞ்
சாகாத ஏனோக்கும் எலியாவும் வைகின்ற
தலமேது விசுவா சிகள்
தாபரிக் கின்றபர தீசுபா தாளமோ
தரையிலோ வானத் திலோ
காகா வுனக்கபையம் நின்சித்து வித்தையைக்
கண்டறிந் தவர்க ளுண்டோ
கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணையா னந்த வடிவே

வைகின்ற = தங்குகின்ற

யோபு 28:25; 2 பேது. 3:8; யோவா. 3:8; பிர. 11:5; யோபு 28:25; 37:6; 28:26; ஆதி. 5:24; 2 இரா. 2:11; யோவா. 3:13.

5. சிற்றுட லெறும்புக்குக் கண்வைத்த தில்லையோ
சிங்கத்தைக் கெற்சிக்க வுந்
தேசிக்கத் தின்கழுத்திற் கனைக்கு தலையுந்
திறல்வீர முந்தந்த தார்
சுற்றுமுகி லுக்காடை யாயிருளை மூடியே
தொனிகடற் கணையிட்ட தார்
தோன்றும்வி டியற்கிடங் காண்பித்த தாரதின்
றோற்றமுண் டானதெவி டம்
பற்றியதி காலைநட் சத்திரங்கள் ஏகமாய்ப்
பாடுமிங்கி தஓசை யாற்
பரமபுத்தி ரர்களிக் கும்படிஅ தின்கோடிக்
கல்லைப் பதித்தவ ரெவர்
கற்றறிவி லாதசிறி யேனுனது மகிமையைக்
கண்டுதொழ நின்கருணை கூர்
கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணையா னந்த வடிவே

தேசி = குதிரை; முகில் = மேகம்
நீதி. 6:6–8; யோபு 39:22–28; 38:7–31

6. மனுடரை நிர்த்தூளி யாக்கிமீண் டுமனுப்
புத்திரரை வருக வென்று
மண்மீதி ருத்திநூற் றாண்டில்ஒரு முறையுலகை
வருத்திப் பினாற்பெ ருக்கி
அனையவு யிர்யாவை யும்தாபர சங்கங்கள்
யாவற்றையும் அழித்துந வமாய்
ஆக்கிவா னத்திலும் பூமியிலும் அதிசயங்
களைநடப்பிக் கவி லையோ
இனியபார் வையிலோரா யிரம்வருட நேற்றைக்
கிறந்தநாள் இரவு சாமம்
இவர்பதினா யிரவர் ஒருவரா யிரவரை
எவ்வாற் தோட்ட வியலுங்

களிவுனது செயல்மகிமை அறிகிலே னெனையுங்
கடாட்சிப்ப துனது கடனே
கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணையா னந்த வடிவே

சங். 68:3; ஏசா. 26:19; தானி. 12:2; சங். 90:4; உபா. 32:30

7. மலையைஅணு வாக்குவாய் அணுவைமலை யாக்குவாய்
வான்வில்லை உண்டாக்கு வாய்
மாறாது கிரகங்கள் ஆதித்த னைச்சுற்றி
வருவதற் காட்டிவைப் பாய்
அலையையுந் திவலைசெய் வாய்திவலை யப்புணரி
ஆக்கியதின் மீதுலவு வாய்
அல்லையெல் லாக்குவாய் எல்லையல் லாக்குவாய்
அமரரைப் பேயாக்கு வாய்
நிலையாத நீடூழி காலத்தை நிமிஷமாய்
நிமிஷத்தை நீடூழி யாய்
நெடியவே தத்தையொரு சொல்லாயோர் சொல்லையே
நீண்டமறை யாக்கிவைப் பாய்
கலையாமல் என்மனமே நிலையாக நிற்கவழி
காட்டுவது னக்கருமை யோ
கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணையா னந்த வடிவே

வான்வில் = பச்சைவில்; அலை = கடல்;
திவலை = துளி; புணரி = கடல்; அல் = இருள்;
எல் = ஒளி

ஆதி. 9:13, 14; யோபு 38:12; மாற். 6:48, 49; யூதா 6;
சங். 90:4

8. வித்திலாமை யினின்று விளைவுசெய் வாய்மேக
மின்றிமழை பெயவிதிப் பாய்

வெய்யவனி லாமலொளி வீசுவாய் ஆகாய
விரிவின்மே லேநடப் பாய்
செத்துலர்ந் தழிவான என்புகளை யுந்தீர்க்க
தெரிசனஞ் சொலவுயிர்ப் பாய்
திரும்பஇஸ் றேலைமுடி சூட்டியே கானானு
தேசத்தில் வாழ்கவைப் பாய்
பக்தியில் லாதபர சமையங்கள் யாவையும்
பாழ்த்தழி யப்பண்ணு வாய்
பாவிகளை நரகபா தாளத்தில் வீழ்த்திநின்
பத்தரைக் கதியில்வைப் பாய்
கத்தபம் போலான புத்தியிலே னுனது
காட்சியைக் காணஅருள் கூர்
கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணையா னந்த வடிவே

வெய்யவன் = சூரியன்; பரசமையம் = புறச்சமையம்
கத்தபம் = கழுதை

எசே. 37:11−13; உபா. 30:4, 5; எரே. 33:20−26;
எசே. 39:26−28; ரோம. 11:26 மீகா 5:12; சகரி. 13:2;
ஏசா. 2:17, 18; மத். 25:34, 41

9. வஸ்திரம் போற்பழ சாய்ச்சுருட் டப்பட்ட
சால்வையாம் மாறி யுலகும்
வானங்க ளும்பூதியங் களும்வெந் துருகி
மடமடப் போடொய்ந்து போம்
நித்தலு நீயோ இருக்கிற பிரகாரமாய்
நீடூழி யுமிருப் பாய்
நின்றன்வ ருடங்கட்கு முகிவில்லை நினதிராச்
சியபாரம் என்று நிற்குஞ்
சத்துருக்க ளைநொறுக்கிப் பாதப்ப டியிட்டுச்
சருவசங் கார மாக்கித்
தாழ்ந்தவரை மேலாய்உ யர்த்திப்பெ ருமைக்காரர்

தங்களைத் தாழ்த்த அறிவாய்
கத்துக டலைப்படி யவைத்த சித்தாளன்
கருத்தைத் திருத்த வரிதோ
கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணையா னந்த வடிவே

எபி. 1:10−12; 2 பேது. 3:10; சங். 102:28; 110:1;
எபி. 1:8; 2:9−11, 1 சாமு. 2:7, 8; யோபு 40:6, 7; 38:11

10. எல்லாவா னங்களின் கீழிருக் கின்றயா
வற்றையுங் கண் ணோக்கியே
எண்ணிலா உயிர்களும் கும்படி யளந்தெளி
யவர்களை யுமினிது தாங்கிப்
பொல்லாத பேர்களைத் தாழ்த்தியா காதவர்
புயங்களை முறித் தெரிந்து
பூமியின் கடையாந் தரங்களைக் கண்டொருவர்
பூட்டாம லே திறந்து
வல்லாமை யாருந் திறக்காது பூட்டு
மகாமகத் துவத் தெய்வமே
வானத்தி லும்பூமி யிலுமுமக் கொப்பில்லை
வலியகா ரியமு மில்லை
கல்லாதமூ டாத்துமமெ னினுமெனை யாட்கொண்டு
காப்பதரி தோ பிரமமே
கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணையா னந்த வடிவே

புயங்கள் = தோட்கள்
யோபு 28:24; சங். 33:13−14; யோபு 39:2, 3;
சங். 136:25; 136:2, 3; 146:9−37;
யோபு 38:15; 38:14, 18; வெளி. 3:7; 1இரா. 8:23;
லூக்கா 7:1, 37

11. இருளார்ந்த ஈந்தியா விற்கிறிஸ்த வர்குழாம்
எவ்வாற துண்டா யின
ஈரோப்புத் துரைகளித் தேயத்தை ஆள்வதற்
கென்னவித மாய்முளைத் தார்
தெருளார்ந்த சுவார்ச்சையர் தஞ்சையிற் சபைகளைச்
சேர்த்ததா ருடைய சித்தந்
திருநெல்லைச் சிவபத்தன் யேசுவின் சீடனாய்ச்
செபமாலை பாட விலையோ
பொருளார்ந்த வேதாக மங்கள்எச் சாதிக்கும்
பொதுவாய்வ ழங்க விலையோ
பொய்தேவர் வாழ்வுகுறை பட்டதிவை யாவுமுன்
புதுமையல் லாது வேறோ
கருளார்ந்த மனதுநின் அருள்கூர்ந்தி ருக்கவழி
காட்டுவ துனக்கருமை யோ
கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணையா னந்த வடிவே

குழாம் = கூட்டம்; கருள் = இருள்

ஜெபமாலை 26 வரை செய்யுள் 378

27. ஜெபமாலை

திருவிளையாட்டூஞ்சல்

துங்கமிகும் வானாடும் புவியுந் தந்த
சோதிதிரி யேகபரா பரனைப் போற்றி
மங்களமாய்ச் சீயோனின் மாதை வந்து
மணம்புரியுங் கிறிஸ்தரசன் மகிமைக் காகச்
சங்கைமிகுந் திருவிளையாட் டூஞ்சல் பாடச்
சத்தியத்தின் அரூபியர் சகாயஞ் செய்வார்
செங்கையருட் டவிதுமைந்தா ஆடீ ரூஞ்சல்
தேவதிருச் சபைமகளோ டாடீ ரூஞ்சல்

2. அறுதினத்திற் சகலவஸ்தும் அமைத்த நாதன்
அதமேவை என்றிருமா னிடரைச் செய்து
மறுவதற்ற சிங்கார வனத்தில் வாழ்ந்து
மாறாத சீவமரக் கனியைத் தின்று
உறுதிபெற வைத்ததயை அறியார் பேயோ
டொழியாமற் காப்பதற்காய் உலகில் வந்த
திறமிகுத்த தவிதுமைந்தா ஆடீ ரூஞ்சல்
சீயோனின் றிருமகளோ டாடீ ரூஞ்சல்

3. அட்டசுபா வத்தினொரு தேவ னான
அனாதிபிதா நோவையைக்கொண் டருளிச் செய்த
கட்டளைகேட் டறம்புரியாத் தீயோர் தம்மைக்
கடிதான சலப்பிரவா கத்தில் மாய்த்து
எட்டுநரர் தமைக்காத்துப் பெருக்கி மீண்டும்
ஈடேற்ற மானிடவ தார மான
சிட்டர்தொழுந் தவிதுமைந்தா ஆடீ ரூஞ்சல்
சீயோனின் றிருமகளோ டாடீ ரூஞ்சல்

தலைவரிசை அட்டவணை

4. கல்தேயர் தேயத்திருந்த ஆபிர காமைக்
கருணையுடன் வரவழைத்துக் கானான் தேசத்
தெல்லையெல்லாம் உம்பிளிக்கை யாக நல்கி
எகிப்பதிற் பார்வோனைக் கடலிற் றாழ்த்தி
வல்லமையாய் இஸ்ராவேற் சாதி போற்ற
மகத்துவத்தின் ஆசனத்தில் இருந்து வாழுஞ்
செல்வமிகுந் தவிதுமைந்தா ஆடீ ரூஞ்சல்
சீயோனின் றிருமகளோ டாடீ ரூஞ்சல்

5. அற்புதமாய்த் துதர்கள்ளக் காள மூத
அக்கினியின் நடுவிலெழுந் தருளிச் சீனா
வெற்பதிர இடிமுழங்கச் சனங்கள் கேட்க
வேதமெல்லா மோசேசுக் கருளிச் செய்து
கற்பலகை தனிலெழுதித் தந்த பத்துக்
கற்பனையூ டொழுகாரைக் காக்க வந்த
சிற்பரம தவிதுமைந்தா ஆடீ ரூஞ்சல்
சீயோனின் றிருமகளோ டாடீ ரூஞ்சல்

6. ஆட்டிடையிற் கிடந்தவனைக் கழுதை தேடி
அலைந்தவனைக் கொண்டுபல துயரஞ் செய்து
கோட்டியெல்லாங் கொண்டதிற்பின் இஸ்ரா வேலின்
கொற்றவனென் றோங்கஅவன் குலத்தின் மேவி
மாட்டிடையிற் பெத்தலகேம் நகரத் தூடு
வானவரும் பூதலரும் வணங்க வந்த
தேட்டமிகுந் தவிதுமைந்தா ஆடீ ரூஞ்சல்
சீயோனின் றிருமகளோ டாடீ ரூஞ்சல்

7. மன்னுதந்த விட்டமிட்டுத் துகிர்க்கா னாட்டி
மாற்றுயர்ந்த பொற்றகட்டாற் பலகை சேர்த்து
மின்னுமுத்தின் வடம்பூட்டி யுலவி யாட
விரும்பாமற் றரித்திரன்போல் வேடங் கொண்டு
முன்னனணையிற் பிறந்துபுல்லிற் றவழ்ந்து கந்தை

மூடியெமை நாடிவந்த முறைமை பார்த்தாற்
சின்னமென்ன தவிதுமைந்தா ஆடீ ரூஞ்சல்
சீயோனின் றிருமகளோ டாடீ ரூஞ்சல்

8. மாசில்லாப் பாலகனாய் பிறந்தெட் டாநாள்
மகிமையுடன் சுன்னத்துப் பண்ணப் பட்டு
யேசுவெனப் பெயர்தரித்து முப்ப தாண்டில்
இஸ்நானமுற்றுப் பேயின்சோ தனையை வென்று
நேசர்களைத் தெரிந்துலகஞ் சுற்றி வேத
நெறியுரைத்தற் புதம்புரிந்து நெடும்பா டுற்ற
தேசுலுவுந் தவிதுமைந்தா ஆடீ ரூஞ்சல்
சீயோனின் றிருமகளோ டாடீ ரூஞ்சல்

9. அந்தமிகும் பரிசுத்த ரூபி யாலே
அற்புதமாய்க் கெற்பமதாய் உற்ப வித்துச்
சுந்தரஞ்சேர் கன்னிமரி இடத்திற் றோன்றித்
தோன்றல்பொந்திப் பிலாத்துவின்கீழ்ப் பாடு பட்டு
நிந்தையுடன் குருசிலறை யுண்டு மாண்டு
நிலத்தடக்கப் பட்டுயிர்த்து நித்திய காலஞ்
சிந்தைமகிழ் தவிதுமைந்தா ஆடீ ரூஞ்சல்
சீயோனின் றிருமகளோ டாடீ ரூஞ்சல்

10. ஆதியதம் வினையகல ஒலிவக் காவில்
ஆத்துமத்தில் அரோகரவா தைகள் பட்டுக்
காதகராற் கட்டுண்டுகு ருக்களின் கிர
கத்திலக்கியா னத்துரைமுன் கபால வெற்பில்
வாதையுறப் பாடுபட்டுக் குருதி சிந்தி
மரித்தடக்கப் பட்டுயிர்த்து வான்போ யாளுந்
தீததில்லாத் தவிதுமைந்தா ஆடீ ரூஞ்சல்
சீயோனின் றிருமகளோ டாடீ ரூஞ்சல்

11. பாருலகை நடுக்கேட்கக் கடைசிக் காலம்
பராபரனின் வலப்பாகத் திருந்து வந்து
நேருடனே அவரவர்தங் கிரியைக் கேற்க
நித்தியசம் பாவனைகள் அளித்துச் சாலே
மேரதனிற் கன்னியாஸ்தி ரிமார் போற்ற
வேதநா யகன்பாட விருப்புற் றோங்குஞ்
சீருயருந் தவிதுமைந்தா ஆடீ ரூஞ்சல்
சீயோனின் றிருமகளோ டாடீ ரூஞ்சல்

சாலேமேரு = சாலேம் பருவதம்

ஜெபமாலை 27 வரை செய்யுள் 389

செய்யுள் அட்டவணை

28. ஜெபமாலை

சிலுவைத்தியானம்

உன்னதக் கிருபைமேவும்
உரிமைரட் சகனேஐயா
நின்னையென் விசுவாசக்கண்
ணோக்கியே நித்தநித்தம்
மன்னுநின் சிலுவைச்சாவின்
மாத்திரமென் ஈடேற்றத்தைத்
துன்னியான் இசைப்பதொன்றாம்
அவசரந் துணைசெய்தேவே

2. இந்தஒன் றதனின்றேமற்
றியாவுமுற் றூறியிங்கண்
உந்துமந் தோவிதொன்றென்
ஏகமும் உளதுமாகத்
தந்தருள் இதற்குநானுன்
றனைச்சிலுவை யின்மாறாமற்
சிந்தையின் விசுவாசக்கண்
தெளிவுற நோக்கத்தேவே

3. காலையான் எழுந்தபோதக்
கணத்திலுன் சிலுவைரூபம்
ஏலவென் கண்ணின்முன்னும்
இருதயத் தினிலுந்தீட்டிக்
கோலமுற் றிருக்கமற்றோர்
கொள்கையும் இதனையன்றிச்
சாலஅம் பரன்முன்செல்லாத்
தகமையே அருமைத்தேவே

4. ஆனதால் இன்றுநாளின்
அடியனான் எங்குற்றாலும்
ஈனமென் பவத்தைநீர்தான்
எப்படிக் குருசிற்றாங்கி
வானவனோ டென்றென்னை
மறுபடி யுறவுஞ்செய்து
தானுறுஞ் சகலகோபாக்
கினைக்குமென் றன்னைத்தேவே

5. தப்புவித் தனுக்கிரகித்த
தயவையா னினைந்துன்றன்னை
எப்பொழு தினுங்கண்ணோக்கி
இருப்பதற் கியற்றிமீண்டும்
அப்பனே யொன்றுமுன்றன்
சிலுவையின் அரியரூபச்
செப்பமென் கண்ணைவிட்டு
மாற்றிடாத் திடஞ்செய்தேவே

6. உன்னையென் பிசகாப்பார்வை
யுடன்கண்ணோக் குவனானிங்குன்
றன்னையே தவிரநீயோர்
தனையுமுன் சிலுவைச்சாமின்
வன்மர ணமுமேயன்றி
மற்றொன்றும் அறியேனாக
இந்நிலத்தி தேயென்சீவன்
எனவிருக் கச்செய்தேவே

7. நித்திய மெனக்கிதேமா
நேர்த்தியு மினிதுமாக
வைத்தெனி னிதையமும்மால்
வளர்சம்பூ ரணமாயென்வாய்
முற்றினும் அதனாற்றேங்கி
வழிந்திட முனைந்துன்அன்பே

பெற்றியான் றனிக்கும்போதென்
பேச்சிடுந் துணைநில்தேவே

8. நானய லுடன்செய்சம்பா
வினையு நின் னாமதோக்கித்
தானிருக் கச்செய்யுன்னைத்
தப்பியான் சிதறிவீழ்ந்தால்
ஈனமென் றதனையுன்பால்
இக்கண முறையீட்டிவ்வா
றானது முன்னைநோக்கத்
தடைசெய்வ தனைத்துந்தேவே

9. சருவசாக் கிருதையூகத்
தாற்றவிர்த் திடுவேனாக
உறுதியா யெனையெப்போதும்
உத்தம தவத்திலோங்கும்
நறுமைசேர் விசுவாசத்தின்
பாதையில் நடத்தியாள்வாய்
நிறைவுற எனதுகண்கள்
நிதந்துய ரத்திற்றேவே

10. என்றுரி தங்கண்ணுற்றீ
தென்பிணை யாளியான
உன்றனைச் சிலுவைச்சாலத்
தெப்படி யொடுக்கிற்றத்தன்
சென்றதன் மேலெத்தன்மை
சினந்தனர் அவையெக்காத்திரத்
துன்றரு வருப்பென்றுள்ளத்
தோற்றமாய்க் காணத்தேவே

சாலம் = மரம்

11. இங்கதால் அச்சமற்ற
நிருவிசா ரத்துக்கென்னை
அங்கிரு பையதாய்நீங்க
லாக்குமெத் தனையகோரத்
துங்குண பத்திரன்பாவத்
துக்குனைப் பழிதான்கொண்டார்
பங்கமொவ் வொன்றுமென்செம்
மறிப்பற முன்னைத்தேவே

பறழ் = குட்டி

12. உருகக்குத் திற்றதன்றோ
ஆனதா லொருங்கவற்றை
யருவருத் தறவிரோதித்
தகற்றிவிட் டோடியந்தப்
பொருதுசத் துருக்கள்தம்மோ
டெதிர்த்துப்போ ரிடச்செய்நானே
நிரந்தரம் விசுவாசத்தி
நிறைவொடிங் கும்மைத்தேவே

13. கெஞ்சிநின் றிடவுமென்றன்
கிளர்விசு வாசம்பற்றி
எஞ்சலற் றெரிந்துநானுத்
தமஇன லெய்திகத்திப்
பஞ்சரித் தழவுமென்றன்
செபம்விசு வாசம்பாதத்
தஞ்சல்பெற் றுண்மையுற்ற
தாயிருக்க வும்நான்றேவே

14. மாற்றிடாக் கண்ணாலுன்னை
மகிழ்ந்துபார்த் திருக்கப்பண்ணும்
போற்றிய செபங்கள்செய்யப்

போதிவிக் கின்றஆவி
ஏற்றதங் களுக்கெவ்வாறாய்க்
காயப்பட் டீரென்றுன்னை
வீற்றெழுஞ் சிலுவையிற்கண்
ணோக்குவர் மீதிற்றேவே

15. ஊற்றப்பட் டுதிரநீரும்
உன்னினின் றவர்கள்மீது
தேற்றப்பட் டுருகவோடுந்
தெளிவுகொண் டவர்கடம்மை
ஏற்றப்பட் டெழும்விசுவாசத்
தினிற்றிடத் திறத்தாரோக்கியத்
தாற்றப்பட் டுய்யசெய்வா
யருளிரட் சிப்பின்றேவே

16. சாவதற் கினமாஞ்சற்பக்
கடியையான் உணர்கின்றேனால்
தேவனே உனதுகாயங்
களிற்குண மாகச்செய்தென்
ஆவியுன் கிருபைப்பத்திரா
சனத்தின்முன் பாகவந்து
தாவிநிற் குநாள்மட்டும்
உன்னையென் றருமத்தேவே

17. சிலுவையில் உயர்த்தப்பட்டோ
ராகமா றாத்திருட்டி
வலிதுட னோக்கமாவே
னாகச்சாத் தான்வந்தென்றும்
பலனுறுங் குருசிலுன்னைப்
பார்த்தவண் ணத்தினிற்கா
தலைவுறத் தடைசெய்கின்ற
தனைத்தடுத் தருண்மெய்தேவே

18. கருத்தனே என்றன்வேண்டு
தலைக்கனி வாகக்கேட்டேன்
றிருட்டியை இருதயத்தைச்
சிலுவையில் ஒட்டிவைத்துப்
பெருத்ததூ ஷணத்தினாவி
பிரளயத் திருளுக்குள்ளாய்
வருத்தமுற் றழுத்தாவண்ணம்
காத்தருள் வலமைத்தேவே

19. தாசனான் சிலுவைமீதுன்
றன்சினே கத்தீகாண்கட்
டாசுற அதிலேயான்அந்
தகனென வினியல்காமற்
பாசமா யெனதுகண்க
டமைத்திறந் தெப்பேர்ப்பட்ட
நேசஏ வுதலுன்னெஞ்சம்
நின்றதென் றுணரத்தேவே

20. உத்தம தெளிவுண்டாக்கும்
உன்சிலு வையினேசத்தை
நித்தமென் வார்த்தைசெய்யும்
நெடுங்கிரி யையினுஞ்சிந்தித்
தத்தனே விசுவாசத்தின்
பெலத்தினால் அடியேனங்கே
முற்றினும் அமிழ்ந்திப்போகப்
பண்ணுவை முதன்மைத்தேவே

21. உன்றனா வியைக்கொண்டென்னுள்
ளத்தினிற் சினேகமூற்றி
வந்தனைச் சுத்தநேசம்
வதிட்டொடர் பையுமுண்டாக்கும்
என்றன்பா வந்தினாக்கி

செய்யுள் அட்டவணை

னைகளைவா தைகளையேகன்
முந்துகோ பத்தைச்சாபத்
தையுமுனைந் தெனக்காய்த்தேவே

22. குருசினிற் சுமந்ததைக்கண்
கொண்டனு தினமும்பார்ப்பேன்
அருண்மிகுந் திருச்சமாதா
னத்தின்மா றாமலங்கே
பெருகியா னிலைத்துநின்று
பின்னுமவ் வழியிற்செல்கத்
திருவுளக் கிருபையாலே
பெலப்படு வதற்கென்றேவே

23. எக்கட மையிலுஞ்செய்யு
மியாவிலு மிதையங்கண்ணு
மிக்கவுன் சிலுவையொன்றை
மாத்திரம் விழித்துநிற்கத்
தக்கபா டுகளின்போராட்
டத்திலுஞ் சருவதாயுன்
முக்கியமா திரியைக்கண்ணோக்
கியுமுனைந் ததனிற்றேவே

24. பொறுமையாய் அமர்ந்துநின்றுன்
பூரணத் துணையைநம்பி
உறுதியா யிருக்கச்செய்யும்
ஒடுக்கமுன் சிலுவையொன்றை
இறுதிகா லத்திலேயுந்
தெரிசித்தென் ஏழையான
அறமெலி ழுற்றஆவி
யைமுசிப் பாற்றென்றேவே

25. சாவிலு நானன்றாகச்
சத்துவங்கொண் டழற்பாதாளத்
தோவிய பயத்துக்குந்தீங்
குபாதைக்கு நீங்கலாகித்
தேவச மாதானத்தாற்
செறிந்துவாழ்ந் திருக்கச்செய்தாள்
பாவல னெல்லைவேத
நாயகன் பாடுந்தேவே

ஜெபமாலை 28 வரை செய்யுள் 414

கவனிப்பு

இதற்கு முந்தின ஜெபமாலையாகிய ஞானஊஞ்சல் தேவ ஸ்துதியாயிருக்க, மனுஷன் கலியாணத்திலே பாடி மாப்பிள்ளையையும் பெண்ணையும் வைத்து ஊஞ்சலாட்டினதினிமித்தியம் நேபுகாத்நேச்சாருக்கொப்பாய் வேதநாயகசாஸ்திரியின் புத்தி சிதறிப்போகத்தக்கனையாக வந்த கொடிய ஆபத்து, இந்த 28 – ம் ஜெபமாலையாகிய சிலுவைத் தியானத்தினால் நிவாரணமாறிற்று. அவன் சொற்பனங்களினாலும் திகிலினாலும் நிறையப்பட்டு, தன்வீட்டை விட்டுக் கல்லறைத் தோட்டத்துக்குச் சமீபமாய் சங்: தகப்பனார் சுவார்ச்சையர் வீட்டிலே குடியிருந்தபோது, தரங்கன்பாடி தின்மார்க்கு மந்திரி பிரகாசம் பிள்ளை தற்செயலாய் மூன்றுதரம் வந்து, இந்தச் சிலுவைத் தியானத்தைப் பாடச்சொல்லி வருந்திக்கொண்டு உரைகொடுத்தபடி பாடி முடித்தது.

அவர் முன்னாலே கிறிஸ்துவின் பிறப்பின் பேரிலும் பாடுகளின் பேரிலும் சில தியானங்களைக் கொடுத்துப் பாடச் சொன்னதுண்டு. என்றாலும், ஒருபோதும் அல்லாத வழக்கமாய் இந்தச் சிலுவைத் தியானத்தை இக்காலத்தில் பாடச்சொன்னது வேதநாயகசாஸ்திரி கண்ட சொற்பனங்களுக்கும், அடையாளங்களுக்கும் இத்தேசத்தில் சம்பவிக்க போகிற காரியங்களுக்கும் இது விசேஷித்த உதவியான எத்தனமாயிருக்குதென்று எண்ணவேண்டியிருக்குதொழிய மற்றபடியல்ல.

செய்யுள் அட்டவணை

சிலுவைத்தியான உரை

சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை மாறாக் கண்ணோக்கமாயிருப்பதே ஒன்றான அவசிய மென்பது

1. என் இரட்சகரே! எப்போதும் உம்மை விசுவாசக் கண்ணோக்கிறதும், உம்முடைய சிலுவையின் மரணத்தின் மேல் மாத்திரம் என் இரட்சிப்பைக் கட்டுகிறதும் ஒன்றான அவசரமாயிருக்கிறது, இந்த ஒன்றிலிருந்து மற்றெல்லாம் ஊறிவருகிறது. ஆ! இது ஒன்றே என் ஏகமும் சகலமுமாயிருப்பதாக.

2. ஆ! இதற்கென்று நான் உம்மைச் சிலுவையில் மாறாக் கண்ணோக்குதற்குதவும், தெளிவான விசுவாசக்கண் எனக்களியும். காலமே நான் எழுந்தவுடனே, உம்முட சிலுவையின் ரூபு என் கண் முன்னும் இருதயத்திலும் எழுதப்படுவதாக. ஏனெனில், அதன்றி மற்றொன்றும் பராபரன் முன் செல்லாதே.

3. ஆனதால், இன்றைக்கு நான் எங்கேயிருந்தாலும், ஆண்டவரே! நீர் எப்படி என் பாவத்தைச் சிலுவையில் சுமந்து என்னைப் பராபரனோடு ஒப்புரவாக்கினீர். அதனால், எல்லாக் கோபாக்கினைக்கும் நீங்கலாக்கினீர் என்பதை நினைத்துக் கொண்டு, உம்மை எப்போதும் கண்ணோக்க மாயிருக்கப்பண்ணும்.

4. ஒன்றும் உம்முடைய சிலுவையின் ரூபை என் கண்ணைவிட்டு மாற்றாமற் பண்ணும். ஆ! நான் உன்னை பிசகற்ற பார்வையாய்க் கண்ணோக்கிப்பேனாக. ஆ! நான் உம்மை தவிர, உம்மொருவரையும், உம்முடைய சிலுவையின் மரணத்தையும் விட வேறொன்றையும் அறியாதிருப்பேனாக. இதே என் சீவனாயிருக்கப்பண்ணும்.

5. ஆ! அது நாளுக்கு நாள் எனக்கு எப்போதும் நேர்த்தியும் இன்பமுமாயிருப்பதாக. என் இயேசு உம்மால் சம்பூரணமாகி, என் வாய் அதனால் வழிந்தோடுவதாக; நான் தனித்திருக்கும்போது, தேவரீர் என் பேச்சோடு துணையாயிரும் நான் மற்றவர்களுடன் பண்ணும் சம்பாஷனையும், உம்மை நோக்கியிருப்பதாக.

தலைவரிசை அட்டவணை

6. நான் உம்மை விட்டுச் சிதறினால் அதை உடனே உம்மிடத்தில் முறையிட்டு, அப்படிப்பட்டதுகளை அல்லது உம்மை நோக்கிப் பார்ப்பதற்கு எப்போதும் தடைப்படுத்துவதையெல்லாம் சருவகருத்தோடும் அகற்றிப்போடுவேனாக. ஆ! என்னை எப்போதும் தவசு விசுவாசத்தின் பாதையில் நடத்துவீராக.

7. ஆ! என் கண்கள் எப்போதும் துயரத்துடன் என் பாவங்களைக் கண்டுகொண்டு, அதுகள் என் பிணையாளியாகிய உம்மைச் சிலுவைமரத்தில் எப்படி ஒடுக்கிற்று, பராபரன் அதின் பேரில் எப்படிக் கோபமானார். அதுகள் எத்தனை அருவருப்புள்ளதென்று பார்ப்பதாக! அதனால் அச்சமற்ற நிருவிசாரத்துக் கென்னை நீங்கலாக்கும்.

8. எத்தனை பயங்கரமாயும்முடைய பராபரன் பாவத்துக்கு உம்மைப் பழிவாங்கினார். ஒவ்வொரு பாவமும் உம்மை, என் ஆட்டுக்குட்டியே, உருகக்குத்திற்று. ஆனதால் நான் அதையெல்லாம் நன்றாய்ப் பகைத்து, அருவருத்து, அதைவிட்டோடிப்போய், இந்தச் சத்துருக்களுக்கெதிரே எப்போதும் போர் செய்யப்பண்ணும்.

9. ஆனபடியினாலே நான் எப்போதும் உத்தம விசுவாச நிறைவோடு உம்மைக் கெஞ்சவும், என் விசுவாசம் பற்றி யெரிந்து நான் உத்தம அனலாய்க் கூப்பிடவும், என் செபமும், விசுவாசமும் உண்மையுள்ளதாயிருக்கவும், நான் மாறாக்கண்ணால் உம்மை நோக்கியிருக்கப் பண்ணும்.

10. செபம்பண்ணப்படிப்பிக்கும் ஆவி, நீர் தங்களுக்காக எப்படிக்காயப்பட்டீரென்று உம்மை உமது சிலுவையில் கண்ணோக்கும் பேர்கள் மீதில் ஊற்றப்பட்டு இரத்தமும் தண்ணீரும் உம்மிலிருந்து அவர்கள் மீதில் ஓடிவரும்; நீர் ஆதனால் அவர்களை வீசுவாசத்தில் நன்றாய் ஆரோக்கியமாக்குவீர்.

செய்யுள் அட்டவணை

11. ஆகையால் என் இரட்சிப்பே! நான் சாவுக்கினமான சற்பத்தின் கடியை உணருகிறபடியினாலே என்னை உமது காயங்களினால் குணமாக்கும். ஆ! என் ஆவி உம்முடைய சிம்மாசனத்தின் முன்பாக வந்து நிற்கு மளவும் நான் உம்மைச் சிலுவையிலுயர்த்தப்பட்டவராய் மாறாக் கண்ணோக்கமாவேனாக.

12. சாத்தான் எப்போதும் நான் உம்மைச் சிலுவையில் பார்த்தவண்ணமாயிருக்கத் தடைபண்ணுகிறது. ஆ! அதைப் பெலனாய்த் தடுத்தருளும். ஆ! என் கர்த்தரே என் வேண்டுதலைக் கேட்டு என் கண்ணையும், இருதயத்தையும் உம்முடைய சிலுவையிலே மாத்திரம் தீட்டி வைத்துத் தூஷணத்தின் ஆவி, இருளை உட்படுத்தாமற்பண்ணும்.

13. ஆ! நான் சிலுவையில் உம்முடைய சிநேகத்தீயைப் பார்க்கட்டுமேன். ஆ! நான் அதில் இனி அந்தகனாயிருந்து விடாதிருக்கட்டுமேன். ஆ! நீர் என் கண்களைத் திறந்து எப்பேர்ப்பட்ட நேச ஏவுதல் உமது இருதயத்தில் உண்டாயிருந்ததென்று பார்க்கும்படி என்னை உத்தம தெளிவாக்கும்.

14. நான் சிலுவையின் நேசத்தை வார்த்தையிலும் கிரியையிலும் நினைத்து, விசுவாசப் பெலத்தினால் அதில் முற்றும் அமிழ்ந்திப் போகப்பண்ணும். ஆம் உமது ஆவியைக் கொண்டு சிநேகத்தை என் இருதயத்தில் ஊற்றி அதனால் சுத்த நேசத்தையும் பதில்சிநேகத்தையும் உண்டாக்கும்.

15. ஆ! தேவரீர், பாவத்தின் ஆக்கினையையும் வாதையையும் தெய்வ கோபத்தையும் சாபத்தையும் எனக்காகச் சிலுவையில் சுமந்ததை நான் எப்போதும் பார்ப்பேனாக. அதனால் நான் தெய்வ சமதானத்தில் மாறாமல் நிலைத்திருந்து சமாதானத்தின் வழியில் நடக்க அதனால் பெலப்படுவதற்காகத்தானே.

தலைவரிசை அட்டவணை

16. நான் செய்யும் யாவிலும் என் கடமையிலெல்லாம் என் கண்ணும், இருதயமும் உமது சிலுவையை மாத்திரம் நோக்கியிருக்கவும், பாடுகளின் போராட்டத்திலும் எப்போதும் உமது மாதிரியைக் கண்ணோக்கவும், அதில் நான் பொறுமையாய் அமர்ந்திருந்து உமது ஒத்தாசையை நம்பியிருக்கவும் செய்யும்.

17. கடைசியில் நான் உமது சிலுவையை என் மரணத்திலும் தரிசித்து என் மெலிந்த, ஏழை ஆவியை அதனால் முசிப்பாற்றி, நான் மரணத்திலும் நன்றாய்த் திடன்கொண்டு நரகபயத்துக்கும், உபாதிக்கும் நீங்கலாகித் தெய்வ சமாதானத்தால் நிறைந்திருக்கப்பண்ணும். ஆமென்.

29. ஜெபமாலை

பாவவிமோசனம்

குருவிருத்தம்

அனந்ததயை நிறைந்தவி ருதயம்பெருக
மகிழ்ந்துலகும் அகண்ட வானும்
வனைந்தொரும னுடன்றனுடன் மடந்தையொரு
தியுஞ்செய்தொரு வனங்கண் டாக்கிக்
கனிந்தரியவ ரங்கள்பல வழங்கியொரு
மரம்படு கனியினால் வந்து
முனைந்தெழுது ரிதங்கள்கெட நினைந்துகுரு
சிறந்தரு ளுமுதன் மைவாழ்வே

வனைதல் = செய்தல்; மடந்தை = பெண்
வனங்கண்டாக்கி = பூங்காவனத்தில் வைத்து

2. கதத்தலகை கொதித்தலறி மிகுத்தபகை
தொடுத்தபடி கறுவிச் சீறி
அதத்தினெவை மனத்தினிடை பவத்தையுற
விளைத்த அவகடத்தி னாலே
மதத்திருவர் பறித்துநுகர் பழத்தினுட
விடத்திருளை மறுத்த மேலாம்
பதத்திலுற விருத்தநெடு மரத்திலுயிர்
விடுத்தவொரு பரம வாழ்வே

கதத்தலகை = உக்கிரமானபிசாசு
பறித்துநுகர் = பறித்துச் சாப்பிட்டு

3. விழுந்தவரை யிகழ்ந்துதழ லெழுந்துநர
கழுந்தவுரை விளம்பா வண்ணஞ்

செழுந்தயவு பொருந்தவருள் சொரிந்துநர
ரடைந்தவினை தீர்த்தீ டேற்றத்
தொழுந்திறமை மிகுந்ததவி தினந்தெரிய
உவந்துமரி சுதனென் றோங்கிப்
பழந்துணியி லணிந்துகுடில் பிறந்துகுரு
சிறந்தவொரு பரம வாழ்வே

4. அடத்தினெடு விடத்தரவு கடித்தவினை
பிடித்துநர ரனைத்துங் கெட்டுத்
திடத்தின்மறை படித்தநெறி நடத்தையற
மடத்தின்வழி சென்ற தாலே
சடத்துவடி வெடுத்தடவி யடுத்துமரி
யிடத்திலுறச் சனித்துக் கூளி
படைத்தலையை யுடைத்துநர கடைத்துயிரை
விடுத்தவொரு பரம வாழ்வே

மடத்தின்வழி = மூடத்தனவழி;
சடத்து வடிவு = உடலுருபு; அடவி = காடு

5. இடங்கொளுல கடங்கமிகு மதங்கள்கொடு
பவங்கடரு மிடும்பைக் கண்டே
திடங்கள்கெட நடுங்கவலு பெலன்களொடு
சலங்கள்வரச் சிதைத்து நோவை
யுடன்குமர ரினங்கள்பலு கவுங்கருணை
வழங்கியுயி ரொருங்க வாழ்க
நெடுங்குருசி லடங்கியுயி ரொடுங்கியெமை
இரங்கியரு ணிலைமை வாழ்வே

சிதைத்தல் = அழித்தல்

6. கலக்கமுறு மனுக்கள்கன பெருக்கொடதி
கரிக்கவரு காலந் தன்னிற்
சொலக்கொடிய பவக்கொடுமை மிகுக்குமவர்

நடக்கைகளைத் துயராற் கண்டே
அலைக்கழிய விடிக்குமினல் முழக்கமுறு
மழைக்குளுல கழிக்கச் செய்தே
பலக்கருணை நெவைக்கருளி மலைக்குருசி
லிறக்குமொரு பரம வாழ்வே

7. அலைந்துபிசா சுடன்றுணிவா யகந்தையினான்
மெலிந்தொழியா அனர்த்த மேவி
மலைந்தறிவோ குலைந்தடியே மறந்தரமே
துறந்துயர்போய் மாய்ந்து வீணா
யுலைந்துடலோ டெழுந்தழன்மேல் விழுந்தலறா
துவந்தருள்வா யுனைக்கும் பிட்டேன்
கலைந்தடியார் தொலைந்தழியா தகந்தனிலே
மடிந்தபரா கருணை வாழ்வே

அனர்த்தமேவி = நாசமாய்; அகந்தனிலே = மரத்திலே

8. ஒருத்துவமே திரித்துவமே யும்பரமே
யம்பரமே ஓம் நமாவே
கருத்தொளிவே யறத்துருவே பெருத்ததயா
பரக்கடலே கருணைக் கோவே
குருத்திலையே பிடித்துடையே விரித்திஸரேல்
களித்தொருநாட் குதித்துப் போற்ற
வருத்தமனே மரத்தினிலே மரித்தடியார்க்
குயிர்த்தவொரே மகத்துவ வாழ்வே

உடை = வஸ்திரம்; வருத்தமனே = வருமுத்தமனே

9. அருந்தவமே பரம்பொருளே யறிந்தவரார்
தெரிந்தவரார் ஐயா வுன்னைத்
திருந்தவுமே புகழ்ந்துகொள்வேன் மகிழ்ந்துகொள்வேன்
செபஞ்சொலுவேன் செவ்வே நிற்பேன்

பொருந்தவுமே பதந்தொழுவே னிதங்கவியா
னடம்புரிவேன் பொன்னா டெய்த
வருந்தியுமே வரந்தருவாய் மரந்தனிலே
மடிந்தமகா மகத்துவ வாழ்வே

10. உனைத்தொழுவே னுனைப்புகழ்வே னுனக்குரியேன்
உனைப்பிரியே னுன்னைப் பார்க்க
இனத்தர்களாற் கனத்தவரா குரித்துடனே
நடத்துவரா ரெல்லாம் நீயே
வினைத்துயரான் மனக்குறையான் வருத்தமுறா
திருக்கவுமே வேத நாய
கனைந்தயவாய் நினைத்தருள்வா யுனக்கடியான்
எனச்சொலுவாய் கருணை வாழ்வே

ஜெபமாலை 29 வரை செய்யுள் 424

செய்யுள் அட்டவணை

30. ஜெபமாலை

ஆரோக்கியசந்தவெண்பா

துங்கமிகுந் தேவபரி
சுத்தசீ யோன்குமரி
மங்கலமணா கிறிஸ்து வள்ளலே – யிங்குன்
செவியடர்ந்து பகருமெங்கள்
செபதவங்க ளுடனிறைந்த
கவியடர்ந்து தயைபுரிந்துகா

2. முன்னோ ருரைத்தபடி
மூவுலகும் ஏற்றவரும்
மன்னாவொரே கிறிஸ்து வள்ளலே – என்நேர
மாயலங்கை யாய்நெருங்கி
வாதிடும்பி சாசைவென்ற
தூயவிந்தநீ தருந்துணை

தூயவிந்தம் = பரிசுத்த தாமரை மலர்ப்பாதம்

3. சிந்தைநொந்து வாடுந்திமிர்
வாதரோகி தனைமைந்த
னென்றோதுங் கிறிஸ்து வள்ளலே – எந்தனை நீ
மிக்ககடி கைக்குவிடு
வித்திருப தத்தில்வல
பக்கமதில் வைக்கஅருள்பார்

4. ஒத்தோதிச் சீடனென
ஓங்குசுங்கத் தின்றலைமை
மத்தேதொழுங் கிறிஸ்து வள்ளலே – சத்துருவாம்
வஞ்சலகை துன்பவலை
வந்துவிழும் என்றன்வினை
கொஞ்சமல நின்கிருபைகூர்

ஒத்து = வேதம்

5. கல்லான் கொடியவலக்
கள்ளனுக்கும் அன்புசெய்த
வல்லான்மகா கிறிஸ்து வள்ளலே – பொல்லாங்கன்
பஞ்சவஞ்ச கங்கள்சஞ்ச
லங்கடுஞ்ச வும்புரிந்த
செஞ்சலங்கள் கொண்டுனன்புசெய்

6. ஆறிரண்டாட் டுப்பெரும்பாட்
டாடவட்கா ரோக்கியஞ்செய்
மாறிரண்டோதாக் கிறிஸ்து வள்ளலே – பேறுகொண்டுன்
வித்தகத் திரித்துவத்தின்
வெற்றிமிக்க பத்திலட்ச
ணத்தையொத்த கத்தழுத்திடாய்

7. நூறாட்டை விட்டொன்றை
நோக்கிச் சுமந்துவந்த
மாறாத்தயை கிறிஸ்து வள்ளலே – வீறாக
வானாம்பர வாஞ்சுகள்சேர்ந்தடி
வாகாம்படி நேர்ந்திடுபாங்கதை
யானாய்ந்திட ஆண்டியாங்கணுமே

8. சிந்தும்புலா னீராற்
றேயமனைத் தும்புரக்க
வந்தசுதா கிறிஸ்து வள்ளலே – சந்ததமுன்
பாதமகத்திற் பதித்துத்துற்
பாவமகற்றித் திருத்திச்சற்
பாதவழிகுட் படுத்திச்சொற்பார்

9. பன்றிக ளைக்கொல்லப்
பசாசைவிட்டுப் பேயனுக்கு
மன்றில்வளஞ்செய் கிறிஸ்து வல்லளே – நன்றறியாக்
கஞ்சமிகும் பஞ்சகன்பங்கங்

செய்யுள் அட்டவணை

கண்டருளைந் தங்கமுங்கொண்டுன்
தஞ்சமுறுஞ் செஞ்சரண்டந்துந்தான்

பஞ்சகன் = பஞ்சபாவி

10. ஒன்பதுபேர் நன்றியற்றோ
ரோவோருத னோவுவந்தோன்
வன்பதென்றோதுங் கிறிஸ்து வள்ளலே – என்பாற்
கருணைபுரிந்துன் கண்கொண்டிங்கென்
கவலையொழிந்துன் துங்கைந்தங்குஞ்
சரணமிரண்டும் பஞ்சம்பங்குந்தா

ஐந்தங்கம் = ஐந்துகாயம்;
பஞ்சம்பங்கு = ஐந்துகாயத்தின்பங்கு

11. நெல்லைத் தமிழ்வேத
நாயகன்பா நீடுபுகழ்
வல்லத்திவிய கிறிஸ்து வள்ளலே – அல்லலுறுந்
துன்பமற வந்துனது
சொந்தடிமை யென்றருளி
அன்புபுரி வந்தனமயா

ஜெபமாலை 30 வரை செய்யுள் 435

31. ஜெபமாலை

கொண்டாட்டு

தந்தானத்தனத் தானா – தன
தந்தானத்தனத் தானா

சுந்தர சீவக் காவே – திரு
மந்திர தேவக் கோவே
தூதாக் களதி பதியே – நெடு
மூதாக் கணிதி மதியே
தந்தை யாதிபி தாவே – நரர்
சொந்த மோதுசு தாவே
சாகா நித்திய சீவா – அதி
வாகா சத்திய தேவா
விந்தை யேமிக வேலே – குடில்
வந்தை யேமக வாலே
வெண்கலச் சற்பநீ தானே – உயர்
நன்குலப் பற்பனி நானே
நிந்தைப் பாட்டுக் காளே – பல
சந்தப் பாட்டுக் கேளே
நேயா வந்தனைக் கீவே – சர
ணீயே வந்தெனைக் காவே

எ–து. அழகான சீவத் தோட்டமே
ஆலோசனையின் தேவாதிபனே
சம்மனசுக்களின் அதிபதியே
நீண்ட காலப் பிதாப்பிதாக்களின் நிறைந்த அறிவே
பிதாவாகிய முதற் கடவுளே
நரர்கள் சொந்தமாய்ச் சொல்லும்சுயம்பே
பொன்றா நித்திய சீலா
அதீக அழகா மெய்த் தேவா

செய்யுள் அட்டவணை

வினோதமே மிகவேலென்றதூதா
சிற்றிலிற் பிள்ளையாய் வந்தனையே
நீதானே வெண்கலச் சற்பம்
நானே நம்முயற்குலத்தின் முதற் குணப்பெண்
தீழ்ப்பான பாட்டுக்களா
பலவித இராகப்பாடலைக் கேட்பாயே
அன்பனே வணங்குதலுக்கீகையே
அடைக்கலம் நீயே வந்தெனை இரட்சியுமே

2. ஆய னாட்டுக் கிடையா – நெறி
நாய னாட்டுக் குடையா
ஆமனா தன வாமா – கன
பூமனா தன சீமா
தூயமே சுடர் வாளா – உச்
சாயமே அடர் தோளா
சுத்தாங் கப்பரத் துவமே – திவிய
சத்தாங் கத்திரித் துவமே
ஞாயமே தரு நடுவா – ஐங்
காயமே யரு கொடுவா
நாதாந் தப்புர விடிவே – ஒரு
வேதாந் தப்பா வடிவே
நேயனே குண வாளா – பரன்
சேயனே மண வாளா
நீண்டமிக் கொளித் தாளே – அருள்
பூண்டெனக் களித் தாளே

எ–து. ஆயனான கடவுளின் ஆட்டுக்கு மேய்ப்பனே
நீதி யாசன் இராச்சியத்துக் குடையவனே
ஆமனென்ற அற்புத அழகா
மகா பூமியின் அரசே தன சம்பன்னா
துப்புரவே ஒளிவுள்ளவாளா
ஊக்கம் பொருந்திய தோளா

பரிசுத்தப் பரமாகிய ஒன்றே
தேவ சத்தாங்கத் திரியேசு வஸ்துவே
நீதி செய்கின்ற ஞாயாதிபா
ஐந்து காயமே வடிவாய்க் கொண்டுவா
ஓசையின் அந்தமான நகரியின் விடிவே
ஒரே வேதாந்தப் பரத்துருவே
சிநேகிதர் பண்பான பணிவிடையாளா
பராபரன் சுதனே மணவாளா
நீண்டமிகும் பிரகாசப் பாதத்தையே
தயைகொண்டு எனக்குத் தந்தாளுமே

3. உச்ச மாகிய தெருளே – கன
மிச்ச மாகிய பொருளே
ஓசனா மனு வேலா – கிரு
பாசனா அனு கூலா
அட்சயப் பர வெளியே – மிகு
நிச்சயத் திரு ஒளியே
ஆண்டவா பர தேவா – சிறை
மீண்டவா நர யோவா
பட்சமே சுப வாரி – வன
லட்சமே உப காரி
பாட்டுக்கிட்ட மன் றாட்டா – நரர்
தேட்டுக்கிட்ட கொண் டாட்டா
முட்செடிக் கிருக் கிறவா – கொடும்
அச்சடித் திருக் கறவா
மூசா வந்தனைச் சீரே – கும
ரேசா வந்தெனைச் சேரே

எ–து. உயர்ச்சியாகிய தெளிவே
மிகவும் அதிகமான உரிமையே
ஓசியன்னா மனுவேலா
கிருபாசனா நன்மையானவா
அர்ச்சயமான அகண்ட வெளியே

செய்யுள் அட்டவணை

மகாநிலை வரமான திவ்விய பிரகாசமே
கர்த்தாவே வானோர்களின் தேவா
சிறை மீட்டவா மனிதனான யோவா
பக்கிஷமே நன்மைக் கடலே
வன்னலட்ச உபகாரியே
பாட்டுக்குச் சமீபித்த விண்ணப்பத்தாய்
மனுடர் தேட்டுக்களித்த கொண்டாட்டா
முட்செடியில் தரிசனை தந்திருக்கிறோ மென்றவா
கொடுமையான அச்சடிப் புத்தகங்களின் மாறுபாடறும்
படிவா
மோசே வந்திக்கும் புகழே
சுதனாகிய சருவேசுரா வந்தென்னைச் சேருமேன்

4. ஆதி கால வஸ்துவே – எரி
நீத மூலக் கிறிஸ்துவே
ஆரணத் திற நேசமே – பரி
பூரணப் பிர காசமே
சாதி யாருட புகழ்ச்சியே – பரஞ்
சோதி யாருட மகிழ்ச்சியே
சாத்திர ஞானத் தானமே – இரு
நேத்திர வானத் தானமே
காத லுற்றகண் மணியே – நெறி
ஓத லுற்றவிண் ணணியே
காரணத் திருக் காட்சியே – உ
தாரணப் பர மாட்சியே
வேத நாயகன் பாட்டனே – அதி
தூதர் தாயக நாட்டனே
மேசையா உனக் கபயமே – கிறிஸ்
தேசையா வெனக் குபயமே

எ–து. ஆதிகாலத்தின் வஸ்துவே
உக்கிர நீதியின் வேராகிய கிறிஸ்துவே

தலைவரிசை அட்டவணை

வேதத்தின் வலிய சிநேகமே
நிறைந்தன பிரகாசமே
சாதிகளின் புகழ்ச்சியே
பராபரனுடைய மகிழ்ச்சியே
வேதசாஸ்திர ஞானஸ்நானமே
இரண்டு கண்ணான வான சொற்கமே
விரும்பிய கண்மணியே
நீதியோதிய வான அலங்காரமே
கரரணத் தேவகாட்சியே
திட்டாந்தமான பரத்துரிமையே
வேதநாயகன் பாட்டனே
மகா தூதரின் தாய் வீடான நாட்டனே
மேசையா உனக்கு அடைக்கலமே
கிறிஸ்தேசையா உனக்குச் சோடே

5. ஆதி சர்ப்பத்தை மடக்கியே – பரஞ்
சோதி சொற்பத்தை அடக்கியே
ஐயிரு கற்பனை ஆக்கியே – மறு
கையிரு கற்பனை தாக்கியே
நீதி மறையைக் காட்டியே – தமிழ்ச்
சாதி முறையை மாட்டியே
நீற்றுப் பூச்சையுந் தவிழ்த்துமே – உரு
வேற்றுத் தீட்சையுங் கவிழ்த்துமே
வாதி டும்பர்கள் சலிக்கவே – அறி
வோதி டும்பர்கள் கெலிக்கவே
வானத் தெழுந்தும் வெளிப்பட்டே – கரு
வானத் தெழுந்தும் ஒளிப்பிட்டே
பூத லத்தருட் பரத்தியே – படு
பாத லத்திருட் டுரத்தியே
புரக் குமாதி திருக்குமார
னரர்க் குண்மேவின ரிரக்கமே

எ–து. ஆதி சர்ப்பத்தை மடங்கடித்துப்
பராபரனுடைய பத்துச் சொற்களை சுருக்கிப்

செய்யுள் அட்டவணை

பத்துக் கற்பனையாக்கி
மறுத்தும் இரண்டு கற்பனையாய்ச் செய்து
நீதியான வேதத்தைக் காண்பித்துத்
தமிழ்ச் சாதியின் முறைமைகளை அழித்துச்
சாம்பற் பூச்சைகளையும் தள்ளி
உருச்செபிக்கும் தீட்சை விதிகளையும் அகற்றி
தர்க்கஞ் செய்கின்ற அகந்தையர் துக்கிக்க
அறிவோதும் வானோர்கள் வெற்றி சிறக்கப்
பரமண்டலத்திருந்தெழுந்து வெளிப்பிரவேசம் பண்ணிச்
கருப்பத்தில் உருவாய் மறைந்து
பூமியில் கிருபையைப் பரப்பி
மகா பாதாளத்தின் இருளை ஓட்டி
இரட்சிக்கும் முதன்மைத் திருக்குமாரனானவர்
மனுடருக்குள்ளே வந்தார் இரக்கமே

6. சீனாக் கோட்டைக் கடந்துமே – வளர்
கானாக் காட்டைத் தொடர்ந்துமே
செருசிலைப் பதி முறியவே – திரு
எருசலைப் பதி அறியவே
கோனாட்டுத் தவி தனைக்கண்டே – முழு
மாநாட்டுப் புவி யினைப்பண்டே
கொடுத்து வந்தவன் றலத்திலே – சிறந்
தடுத்து வந்தவன் குலத்திலே
ஆனாட் டிடையர் கூடவே – அம்ம
னானாட் டுடையர் பாடவே
அடுத்த பெத்தலைக் கெட்டியே – பசும்
படுத்த சிற்றிலைக் கிட்டியே
தானாட்டித் தரை சிறக்கவே – உயர்
மேனாட்டுத் துரை பிறக்கவே
தாராட்டுச் சொன பெருக்கமே – நரர்
சீராட்டுத் தன திரக்கமே

எ–து. சீனா மலையைத் தாண்டி
வளர்ந்த கானான் எல்லையைப் பற்றி
போர் வில்லரசர் முறிந்தோடப்
பரிசுத்த எருசலேம் பட்டணம் அறிய
ஆட்டு மேய்ப்பனான தாவீதைக் கண்டு
மகாநாடாகிய கானான் தேசத்தை முழுவதும்
முன்னாளில் தந்து பிரியம் வைத்தவன் தானத்திற்
சிறப்பாய்க் கிட்டி அவன் வம்சத்தில் வந்து
மாடாடு மேய்ப்பர் கூடவும்
அந்த மன்னா நாட்டாராகிய சம்மனசுக்கள் பாடவும்
சமீபித்த பெத்லேகேமுக்கு அருகே
பசுக்கிடக்கும் சிறுகுடிலை அடைந்து
தாம் நாட்டின இப் பூமி சிறக்க
உயர்ந்த மேலோக நாட்டுத் துரை பிறந்தபோது
தாராட்டுச் சொன்ன மிகுதியே
மனுடர் சீராட்டின் இரக்கமே

7. கன்னி மரி யினிடத்திலே – ஒளி
மின்னி அரிய திடத்திலே
கரிசித் துருவிற் றொந்தமா – யுயர்
பரிசுத் தருவிக் கந்தமாய்
உன்னி உற்பவித் தோங்கியே – விற்
பன்னி கெற்பத்தை நீங்கியே
உயர்ந்த பெத்தலைக் காட்டிலே – பசுப்
பெயர்ந்த கொத்தலைக் கோட்டிலே
முன்ன ணையினைச் சிறந்துமே – மனர்
பொன்ன ணைதனைத் துறந்துமே
முச்சாஸ் திரிகள் வருகவே – ஒரு
முக்கா ணிக்கைகள் தருகவே
துன்னி மானவர் குதிக்கவே – செய
வென்ன வானவர் துதிக்கவே
சொற்கத் திருந்து மிக்கப்பரமன்
மெய்க் குமரனு மேவினார்

எ–து. கன்னி மரி யினிடமாய்ப்
பிரகாசம் ஒளி விட மகா வல்லமையாய்க்
கரிசித் துருவாய்ச் சேர்ந்து
உயர்ச்சி பொருந்திய பரிசுத்தாவிக் கழகாய்
நினைந்து உற்பவித் தோங்கி
விவேகமுடையாள் கெற்பத்தைப் பிரிந்து
வளமையான பெத்லேகே மூர்க்காட்டிலே
மாடுபோம் பூங்கொத்தலைக்கும் பக்கத்திலே
முன்னணையிற் சிறப்பிக்கப்பட்டு
அரசரின் பொற்பு மெத்தை அகற்றி
மூன்று சாஸ்திரிமார் வரவும்
ஒரு மூன்று காணிக்கைகள் கொடுக்கவும்
நெருங்கி மனுடர் குதித்தாடச்
செயா வென்று வானோர் தோத்திரிக்கப்
பரமண்டலத் திருந்து மகாபராபரனுட
மெய்யான குமாரன் வந்தார்

8. மெட்டாய் நீளெரு சலையிலே – பிறந்
தெட்டா நாளொரு நிலையிலே
விருத்த சேதன மேவியே – நரர்
கருத்த சேதன நீவியே
அட்டே யுறழைந் தினத்திலே – அரு
ளிட்டே யுறவுந் தினத்திலே
அந்நாளுந் தமிழ் தானுமே – புகழ்ந்
தன்னாளு ஞ்சிமி யோனுமே
கட்டாய் பன்னிரு சங்கமே – ஒரு
மட்டாய்ப் பின்னிரு சங்கமே
கனத்தவேதபா ரகர் நின்றே – தர்க்கித்
தனத்தவேதசா ரகர் வென்றே
தட்டோர் முப்பது நிதியிலே – மிகக்
கொட்டோர்க் கற்புத நதியிலே
தாட்சி விண்டவன் தீட்சைகொண்டது
காட்சி கண்டவன் சாட்சியே

தலைவரிசை அட்டவணை

எ–து. திட்டத்தா னீண்ட எருசலேமி
பிறந்து எட்டா நாளொரு முறைமையில்
சுன்னத்துப் பண்ணப்பட்டு
மனுடர் நினைவின் அஞ்ஞானத்தைத் துடைத்து
எண்ணைந்து நாற்பதாம் நாளில்
கிருபை செய்துறவேற்றின இனத்தினால்
அந்நாளில் இனிமையாய்
அன்னாளும் சிமியோனும்புகழ
நன்றாய்ப் பனிரெண்டாம் வயதில்
ஓரளவாய்ப் பின்னிருந்த சபையிலே
கனமான வேதபாரகர் நின்று தர்க்கித்துப் போராட
வேதத்தின் பொருளானவர் செயங்கொண்டு
நடுவானவர் முப்பது வயது நிறைவானபோது
மிகவும் கெட்டவர்களுக்காகப் புதுமையாற்றிலே
அதாவது
பூர்வத்தில் புதுமை நடந்த யோர்தானிலே (யோசு 3:16)
தாழ்மையாயிருக்கப் போதி வித்தவன் ஞானஸ்நானம்
பெற்றதற்குக்
காட்சி கண்டவனாகிய யோவான் சாட்சிதானே

9. சாத்தான் சோதனைக் கடுத்துமே – கொடு
மாத்தான் நீதினைக் கெடுத்துமே
தண்டலை வனத் தடைந்துபேய் – மருட்
கொண்டலை வனெத் திடைந்துபோய்ச்
சேர்த்தான் பன்னிரு வரையுமே – வினை
தீர்த்தான் பின்னொரு வரையுமே
தேசமே பிர சங்கித்தான் – விசு
வாசமே பெறச் சங்கித்தான்
பார்த்தான் பவத்தின் கடனையே – பிணை
ஏற்றா ன வத்தின் றிடனையே
பாடு பட்டதி னாலுமே – பரிந்
தீடு பட்டதின் மேலுமே
போர்த்தான் சாவினை முனைத்துமே – கடிந்

தீர்த்தான் நீவினை அனைத்துமே
பெலத்தி னோடு நலத்தினாதி
வலத்தி லேறினர் கெலித்துமே

எ–து சாத்தான் சோதனையில் கிட்டிக்
கொடூர சத்துருவின் பொல்லாங்கை அழித்துச்
சோலைவனத்திற் சேர்ந்து பசாசின்
மயக்கங் கொண்டு அலைகின்றவனெத்தைச் சாய்த்
தேகிப் பன்னிருவரைச் சேர்த்தான்
துன்பத்தைத் தீர்த்தான் பின்னும் ஒருவராகிய கடவுளையே
தேசத்தில் பிரசங்கித்தான்
விசுவாசமுண்டாகக் கனப்படுத்தினான்
பாவத்தின் கடனை நோக்கினான்
பிணையெற்றான் பயனின்மையின் வலிமையைப்
பாடுபட்டதினால் அறுத்து
உத்தரவாதம் பண்ணின பிறகு
சாவைச் சினந்தகற்றினான்
கடிந்து எல்லாத் தீவினைகளையும் பிளந்தான்
பராக்கிரமத்தோடு நன்மைக் கடவுளின்
வலது பாரிசத்தில் செயல் கொண்டேறினார்

10. சங்க வானவர் சூழ்கவே – தவத்
தங்க மானவர் வாழ்கவே
தராத ரத்தின் மேவியே – பவத்
தாரா தரத்தின் ஆவியே
பங்கமே படத் தீர்த்துமே – அழல்
அங்கமே கெடச் சேர்த்துமே
பாதா ளத்தினிற் றாழ்த்தியே – கொடும்
வேதா ளத்தையும் வீழ்த்தியே
துங்க ஆட்டுக் குட்டிக்கே – கிறிஸ்
தெங்கள் பாட்டுக் கெட்டிக்கே
சோப னங்களுங் கூடியே – நித்திய
சீவ னங்களு நீடியே
மங்கலத் தந்தையர் அகத்திலே – ஒளிர்

பிங்கலச் சிந்தையர் சுகத்திலே
மகிழ்ந்து மகிழ்ந்து மகிழ்ந்து மகிழ்ந்து
மகிழ்ந் திருக்கவும் வாழியே

எ-து. கோடி கோ டிதூதாக்கள் சுற்றிவரத்
தவத் தேகத்தோர் வாழ்க
மேகாசனத்தில் எழுந்தளிருப்
பவத்தோர் ஆசையின் ஆத்துமம்
ஆக்கினைப்பட நடுத்தீர்த்துச்
சரீரம் தீயிற் கெடச் சேர்த்துப்
பாதாளத்தில் தாழ்த்திக்
கொடூரப் பசாசையும் விழத்தள்ளி
உன்னத ஆட்டுக் குட்டியாகிய
கிறிஸ்தென்ற எங்கள் பாட்டுக் கெட்டிக்குக்
கலியாணங்களும் கூடி
நித்திய சீவனின் அழகு நீடித்துப்
பிதாவின் விவாக வீட்டிலே
ஒளி விடும் பொன் மனக் கன்னியர் சுக சீவியாய்
மகிழ்ந்து களித்துப் பூரித்தெக்களித்து
வாழ்ந்திருக்க வாழியே

செபமாலை 31 வரை செய்யுள் 445

காப்பு 9, வருகைப்பதிகம் 11,
ஆகத்திரண்ட தொகை 465

முற்றிற்று

செய்யுள் அட்டவணை

ஜெபமாலை

2. காண்டம்

பன்னிரண்டிலக்கதோத்திரம்

ஒருவழியான் ஒருமறையான்
ஒருகாவில் ஒருதருமேல் ஒருபாம்பைச்சேர்
ஒருகனியால் வந்தபவந் தீர்க்கவொரு
கனிவயிற் றூடுதித் தோரூரில்
ஒருகுடிலில் ஒருநாளிற் பிறந்துயர்ந்தோர்
குருசேறி உயிரொன்றீந்த
ஒருவனையென் னுயிரளவும்
ஒருபோது மறக்காம லோதுவேனே

யோவ. 14:6; எபே. 4:5; ஆதி. 2:8; 2:9; 3:4; 3:6;
லூக். 1:31; 2:5; 2:7; யோவா. 19:17, 18, 19, 30.

2. இருநாள் வான்விரிவமைத்
திரண்டுமனு டரைச்செய்திரு மரத்தைநாட்டி
இருபேரைக் கொண்டிஸ ரேலின்சிறைமீட்
டிருவேற் பாடிரு பங்காக்கி
இருஞானத் திரவியந்தந் திருசுவா
பங்களேற் றிருவர்பானின்
றிருமறியிலேறி யெருசலையில்வந்தான்
இருபத்தை இறைஞ்சுவேனே

ஆதி. 1:6–8; 1:27; 2:9; யாத். 4:21; எபி. 9:15, 16, 17;
ரோ. 1:1; 1தீமோ. 2:5.

3. மூன்றுதினத் துலகமைத்து
மூவராய் ஆபிரகாமுன் றிற்றோன்றி
மூன்றுநாள் தாய்தகப்பன் றேடவிட்டு
மூன்றுதர முழங்கானின்று
மூன்றுமுறை மறுத்திவனை
மூன்றுமுறை வழுத்திமூன் றாநாளுய்த்து
மூன்றுமொன்ற தானதிரியேகனை
முத்தமிழினால் மொழிகுவேனே

முத்தமிழ் = இயல், இசை, நாடகம்.
இயல் = இயல்பாயிருக்கிற தமிழ்
இசை = பாடலாயிருக்கிற தமிழ்
நாடகம் = கூத்து
ஆதி. 1:9–13; 18:1, 2; லூக். 2:46, 48; மத். 26:44;
யோவா. 21:15–17 லூக். 24:21; 1 யோவா 5:7

4. நாலுதினத் திரவிமதி யுடுக்களையந்
தரத்திறுத்தி நதிநான்காக்கி
நாலுவிதாக் கிளைகளிட்டு
நாலுவினைமாற்றி நாற்சீவன்போற்ற
நாலுநாள் மரித்தலா சருவையுய்த்த
நாலுசுவி சேடத்தானை
நாலுதிசை எங்கணும்போம்
நாலுநிலச் சாதிகட்கும் நவிலுவேனே

நாலுநிலம் =
வழி நிலம், கன்னிலம், முண்ணிலம், நன்னிலம்.

ஆதி. 1:16–18; 2:10–14; எசே. 14:21;
வெளி. 4:6–8; யோவா. 11:39; மத். 13: 4–8.

5. ஐந்துதினநீந்து பிராணிகள் பறவை
களைப்பிறப்பித் தைந்தப்பத்தால்
ஐந்துவிசை ஆயிரத்தாரைப் போஷித்
தைந்துசிட்டா தரவுஞ்சொல்லி
ஐந்துமண்டபக் குளத்தான் றிமிர்நீக்கி
ஐந்துபொஸ் தகத்தான்சொன்ன
ஐந்தடையாளத்தானை ஐம்புலனாற்
சிந்தையினால் அருச்சிப்பேனே

ஆதி. 1:20; யோவா. 6:10−12; லூக். 12:6; யோவா. 5:29

6. ஆறுதினம் விலங்குகளூர் வனவுகண்
மானிடரை வகுத்தறுகாலஞ்செய்
தாறுநாள் வேலைசெயக் கட்டளையிட்
டாறடைக் கலத்தூரேற்றி
ஆறுகற்சாடிச் சலத்தை ரசமாக்கி
ஆறாந்தா சறையுண்டோனை
ஆறுசெட்டைக் கெருபீன்கள்
அறுநான்கு மூப்பருடன் அறிவிப்பேனே

அறுகாலஞ்செய் = கார்காலம்: ஆவணி, புரட்டாசி;
கூதிர்காலம்:ஐப்பசி, கார்த்திகை;
முன்பனிக்காலம்: மார்கழி, தை;
பின்பனிக்காலம்: மாசு, பங்குனி;
இளவேனிற்காலம்: சித்திரை, வைகாசி;
முதுவேனிற்காலம்: ஆனி, ஆடி
என்ற ஆறு பருவகாலங்களை ஒழுங்குபடுத்தி.

ஆதி. 1:24−27; யாத். 20:9; எண். 35:11−15;
யோவா. 2:6−10; 19:14; வெளி. 4:7, 8
ஏசா. 6:2, 3; வெளி. 4:4, 10, 11.

7. எழுதினஞ் சாபதுநாள்
ஏழுபழி காயீனுக்கென்றுந் தீர்ப்பிட்
டேழுசபைத் தூதனுக்கும்
ஏழுநிருபங்க ளுரைத்தேழ் மன்றாட்டிட்
டேழுபிசாசைத் துரத்தி
ஏழுபத்து மூப்பர்கள் சீடரை ஸ்தாபித்தே
ஏழெக்காளந் தொனிக்கும்
ஏழ்வசனக் குருசானை ஏற்றுவேனே

ஏழ்வசனக் குருசானை = சிலுவையில் அறையுண்டிருந்து ஏழு வார்த்தைகளைச் சொன்னவனை:

அவையாவன

1. பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறதின்னதென்று அறியாதிருக்கிறார்களே.
2. இன்றைக்கு நீ என்னுடனே பரதீசிலே இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.
3. ஸ்திரியே அதோ உன் மகன் சீஷனே அதோ உன் தாய்.
4. என் தேவனே என் தேவனே ஏன் நீர் என்னைக் கைவிட்டீர்.
5. நான் தாகமாயிருக்கிறேன்.
6. முடிந்தது.
7. பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்.

யாத். 20:10, 11; ஆதி. 4:15; வெளி. 1:11; மத். 6:9–13; மாற் 16:9; எண். 11:16–25; லூக் 10:1; வெளி. 11:15; லூக். 23:34; 23:43; யோவா. 19:26, 27. மத். 27:46; யோவா. 19:28; 19:30; லூக். 23:46.

8. எட்டு நரரைப் பேழையிற்காத்து
விருத்தசேதனம் நாளெட்டென்
றெட்டு வயதில் யோசியாவரசாய்
நோவை பிரசங்கியெட்டாய்
எட்டளவை தோமையர்க்குக்
காட்சிதரும் எட்டிலக்கணத்தே யோவா
எட்டு வருடத்தனேயா
வின்றிமிரைத் தீர்த்தவனை இறைஞ்சுவேனே

எட்டிலக்கணத்தே யோவா = அளவில்லா ஞானம்,
அளவில்லாக் காட்சி, அளவில்லா வீரியம்,
அளவில்லா இன்பம், நாமவின்மை, கோத்திரவின்மை,
ஆயுளின்மை, தீவினையின்மை யென்ற எட்டுக்
குணமுள்ள ஏயோவா வென்ற நாமத்தானை

ஆதி. 7:13; 17:12; 2 இரா. 22:1; 2 பேதுரு 2:5;
யோவா. 20:26, 27; அப். 9: 32−34.

9. ஒன்பது மானிட முழக்கட்டிலி னோகைச்
சங்கரித் தொன்பது சீதேக்கியா
ஒன்பதொசையா வாண்டில்
யூதரிஸரேல் சிறையொன்பது நன்றோரார்
ஒன்பது நூறிருப்புரதன் அறமலடிக்
கொன்பது பத்தாண்டிற் கண்பார்த்
தொன்பது தாசினிலுயிர் விட்டிறந்துலகைப்
புரந்தானை உரைசெய்வேனே

உபா. 3:11; 2 இரா. 25:1, 2; 2 இரா 17:1; லூக். 17:17, 18;
நியா. 4:13−21; ஆதி. 18:11, 12; லூக். 23:44− 46

10. பத்து நீதியருமிலா நகரெரித்துப்
பத்துக் கோத்திரம் வேறாக்கிப்
பத்துதாலந்தானைப் பரிசளித்துப்
பத்திலைங்கன்னியர் பத்தாவாய்ப்
பத்திலொன்றை லேவி சுதந்தரமாக்கிப்
பத்துக்கற்பனை யுந்தந்த
பத்துலட்சணத்தனைப் பத்துத்தசநூ
லான பாட்டாற் பாடுவேனே

பத்துலட்சணத்தனை,
அவையாவன:

1. ஆதியந்தமில்லாதவர்
2. மாறாதவர்
3. சருவத்துக்கும் வல்லவர்
4. எல்லாத்தையும் அறிந்திருக்கிறவர்
5. அளவற்ற ஞானமுள்ளவர்
6. எங்கும் நிறைந்திருக்கிறவர்
7. சத்தியமுள்ளவர்
8. பரிசுத்தமுள்ளவர்
9. நீதியுள்ளவர்
10. நன்மையும் கிருபையுமுள்ளவர்

பத்துத் தச நூலான பாட்டாற் பாடுவேனே. தசம், பத்து = பத்துத்தசம். நூறு வசனமும் பாடலுஞ் சிறிதும் பெரிதுமாய் நூறுநூல் மட்டுஞ் செய்த வேதநாயகசாஸ்திரியின் பாட்டினால் அவரைப்பாடுவேனென்க

ஆதி. 19:24, 25; 1 இரா. 11:30, 31; 12:20;
மத். 25:14–28; 25:1; எண் 18:21, 28; யாத். 20:1–17

11. பதினொரு தாரகை பணிந்த சொற்பனத்தான்
காதேசு பர்னேயாவில்
பதினொரு நாட்பயண மொரேப்புத்தெலிலாள்
வெள்ளி பதினொருநூறாகும்
பதினொரு சால்மோனாண்டாலய முடிக்கப்
பதினொரு தாசினிலுஞ் சென்று
பதினோரப் போஸ்தலர் காணக்காட்சி தந்த
திருவடியைப் பணிகுவேனே

ஆதி. 37:9; உபா. 1:1; நியா. 16:5; 1 இரா. 6:37, 38;
மத். 20:6, 7; 28:16

12. பன்னிரு கற்றூண்களை யோர்
தானடுவிற் கில்காலிற் பனிரண்டிட்டு
பன்னிரு சீவிய விருட்சக்கனி யெருச
லேம் வாசல் பனிரெண்டாக்கிப்
பன்னிரப்போஸ்தலர் பனிரண்
டாசனத்தில் வீற்றிருந்து பகரஞாயம்
பன்னிரு பிதாக்கடொழும் வெல்லையென்பா
னெல்லையன்பாப் பாடுவேனே

வெல்லையன் = பெத்தலேகேமிற் பிறந்தவர்;
பால் = இடம்; நெல்லையன் = திருநெல்வேலியிற்
பிறந்தவன் பாப்பாடுவேனே

யோசு. 3:15–17; 4:5, 20; வெளி. 22:1, 2; 21:13;
மத். 19:28; ஆதி. 29:32–35; 30:12, 14; 35:16–18

2. காண்டம். ஜெபமாலை 1– க்கு செய்யுள் 12

2. ஜெபமாலை

பிரார்த்தனைச் சமுதாய விண்ணப்பம்

விருத்தம்

மனந்தனின் மகிழ்ந்தறு தினந்தனி லகண்டமும்
வனைந்து வளமுந்தரு பரா
சனந்தனை இனந்தனை யுகந்தக மிகுந்தொரு
சடந்தனை அடைந்தொழி வேனோ
கனந்தரும் அனந்தனுன் மகன்றனை விடுந்தயை
கனிந்திரு தயங்குளி ரவே
தினந்தின நினைந்தடி பணிந்தறி வுடன்பல
செபஞ்செய வரந்தரு வையே

அத்தியந்த திரித்துவ ஏகவஸ்
தான தந்தையர்க்கும் – ஓ
ரனாதி மைந்தனுக்கும் பரிசுத்த
அரூபிக்குந் தோத்திரமே

2. நித்தியம் நித்தியந் துத்தியம்நீ
டூழி காலமெலாங் – கன
நிர்த்தனம் வந்தன மங்களார்த்தனம்
நீடுசங் கீர்த்தனமே

3. கிருபை யாவத்துக்குஞ் சுயாதிபத்திய
ராயகிரி டாதிசயா – சுவாமி
கிருபையா யிருமெய் கிறிஸ்துவேகிருபை
யாயிரு மெஞ்சுவாமியே

4. பொறுமை வானத்துக்கு முக்கியநேய
யூலோக தயாநிதியே – உமக்குப்
புண்ணியம் பிரஸ்தாப மகிழ்ச்சி
புகழ்ச்சி மிகுந்துதியே

5. பரமண்டலத்தி யங்கும்பரம
பிதாநற் பராபரனே – இந்தப்
பாரின் ரட்சகராய் வைகியசுத
னான பராபரனே

6. எங்கள் பேரில் இரங்குமிரங்கும்
இரங்கும் அருட்கிருபையே – நித்திய
சங்கையுங் கனமுந் துதியுமுன்
சரண் சரணங்களுக்கே

7. அருள்கொண் டெங்கும் வயங்கும்பரிசுத்
தரூபிப் பராபரனே – மூன்றொன்
றானமெய்ப் பரிசுத்த திரித்துவ
அனாதிப் பராபரனே

8. எங்கள்பேரில் இரங்குமிரங்கும்
இரங்கும் அருட்கிருபையே – நித்திய

9. தங்குபாரின் சருவசீவாத்தும
தயாபர கர்த்தாவே – தீங்கிற்
றப்புவித்தெமை ரட்சைசெய்தருளும்
சரண்சரண் உன்றனக்கே

10. எங்கள்பேரில் இரங்குமிரங்கும்
இரங்கும் அருட்கிருபையே – நித்திய

11. சகலபாவங்கள் மோசங்கள் பேயின்
சதிசற்பனை கண்ணிகள் – அசுப்பிற்
சடுதியில் வருந்துன் மரணம்பெரு
வாரிக் காய்ச்சலுக்கும்

12. எங்களை விலக்கிரட்சித் தேற்றும்
இரக்கப் பராபரனே – நித்திய

13. இகல்பஞ்சமுபுத் தங்கொலைகள்கல
கம்பிரிவி னைகளுக்கும் – வல்
லிடிபெருஞ்சுழல் அக்கினிவெள்ளம்
எழும்நித்திய சாவுக்குமே

14. எங்களை விலக்கிரட்சித் தேற்றும்
இரக்கப்பராபரனே – நித்திய

15. எவ்வித விஷப்பூச்சிகள் துஷ்டமிரு
கங்களெலா வினைக்கும் – நாங்கள்
இன்னதென் றறியாதுன்பசேத
இடுக்கண்கள் யாவுக்குமே

16. எங்களை விலக்கிரட்சித் தேற்றும்
இரக்கப்பராபரனே – நித்திய

17. தூயவுன்றன் மனுடவதாரத்தி
னாலுப வாசத்தினாற் – பட்ட
சோதனைமர ணாவஸ்தைசிந்தின
சோரி வேர்வையினால்

18. எங்களின் மரணத்தறுவாயிலும்
ஞாயத் தீர்ப்பினிலும் – உவந்
தெம்மைரட்சித் தனுக்கிரகஞ்செய்யும்
இரக்கமுள்ள கர்த்தரே

19. மாயவேகுரு சிலறையுண்டனின்
வாதை மரணத்தினால் – தேவரீர்
மகிமையா யுயிரோடெழுந்துபர
மண்டல மேறினதால்

20. எங்களின் மரணத்தறுவாயிலும்
ஞாயத் தீர்ப்பினிலும் – உவந்து
வேறுதரு

21. உன்னதத் துயர்ந்த பரனே தேவரீர்
உமது திருச்சபையைத் தற்காக்கவும்
மன்னிய போதகரை யுன்றன் ஊழியத்தில்
வசனத்திற்றூய் தொழுக்கி னிலைப்படுத்தவும் – ஏழை

22. வேதப்புரட்டு களனைத்தையும் இடறலையும்
விலக்கித் தடுத்து வழிதப்பியலைந்து
சேதமுற்ற யாவரையும் வசப்படுத்தித்
தீமருளை எங்கள்சரண்கீழ் நசுக்கவும் – ஏழை

23. உமதறுப்புக் குண்மையான பரிசாரகரை
யுவந்தனுப்பித் தேவவசனம் பலிக்கவே
அமலாவுன் அருபியையும் பெலத்தையும்
அன்பாய் அனுக்கிரகஞ் செய்தருளவும் – ஏழை

24. அல்லலுற்றுத் திடனற்ற பேர்யாவரையும்
ஆதரித்துத் தேற்றிக் கிறிஸ்தவராகிய
எல்லாவி ராசர்களுக்கும் பிரபுகட்கும்
ஏற்ற சமாதானம் ஒருமையைத் தரவும் – ஏழை

25. எங்கள் மாநாட்டிற்கு மெய்ச்சமாதான
னத்தையுஞ் சுகராசரிக்கத்தையுந் தந்து
சங்கையுள்ள துரைகளையு மூப்பரையுஞ்
சபைபள்ளிக் கூடங்களைத் தற்காக்கவும் – ஏழை

26. பரிசுத்த நின்னூழியத்தில் எங்கடமைப்
பலப்படுத்தி எந்நாளும் நிலைப்படுத்தவும்
பரிசுத்தனின் சுவிசேடம் பிரசித்தம்
பண்ணப்படவுங் கனத்தோ டெண்ணப்படவும் – ஏழை

தலைவரிசை அட்டவணை

27. கடினமன யூதரையுஞ் சகலபொய்ம்மதக்
காரரையுந் துற்சமையக் கியானரையுமே
திடமுடன் றிருப்புஞ்செயலைச் செய்துநடந்
தேறப்பண்ணவுஞ் சபையிற் சேரப்பண்ணவும் – ஏழை

28. அவதிக ளிக்கட்டிடைஞ்சல்கள் அனுபவிக்கும்
யாவருக்கு மெய்ச்சகாயராய்த் தென்படவும்
உவரி யாத்திரைப்பண்ணுவோர் ஊர்ப்பயணத்
தோர்கள னைவோர்களையுங் காப்பாற்றவும் – ஏழை

29. தீதறக் கற்பவதிகட்குச் சந்தோஷமான
சேயர்பெறும் பேறதனைக் கட்டளையிடவும்
ஆதரித்துப் பிள்ளைகளையும் வியாதிக்காரர்
யாவரையும் பார்த்துக்கொண்டு பராமரிக்கவும் – ஏழை

30. குற்றமற்றுக் காவற்பட்டோர் தம்மையருள்
கூர்ந்தகலவும் விடுதலையாக்கவும்
அற்றிய விதவைகளையுந் தாய்தகப்பன்
அற்ற பிள்ளைகளையுங் கண்டாதரிக்கவும் – ஏழை

31. தங்கிய பொறுமையாகப் பூவிலுற்ற
சகலமனுஷருக்குந் தானிரங்கவும்
எங்களுப காரிகட்கெல்லாங் கிருபையுடன்
ஏற்றநித்திய பலன்களைக் கொடுக்கவும் – ஏழை

32. பகைக்கின்ற பேர்க்குமெங்களை மிகத்துன்பப்
படுத்துகின்றோர் தூஷணம் பண்ணுகின்றோர்க்கும்
உகப்புடனே மன்னித்துவிட்டவர்கள்
உளத்தைத் திருப்பி வசப்படுத்தவென்றும் – ஏழை

33. நிலத்தின் பயிர்களை அன்பாய்க் கட்டளையிட்டு

செய்யுள் அட்டவணை

நிதமும் பிழைக்கச்செய்து காப்பாற்றவும்
விலக்கி விடாது தயவாய் எங்களுட
விண்ணப்பங்களை யெல்லாங் கேட்டருளவும்
ஏழைப் பாவிகளான பேதை யடியேன்களும்மை
வேண்டிக்கொள்ளுகிறோம் சுவாமியே

34. மெய்யான பராபரன்றன் மைந்தனான
மெய்க்கிறிஸ்துவே யிரக்கமுள்ள கர்த்தரே
வையகத்தின் பாவத்தையெல்லாஞ் சுமந்தொழிக்கும்
வளமைமகத்துவத்தெய் வாட்டுக்குட்டியே

35. வையகத்தின் பாவத்தையெல்லாஞ் சுமந்தொழிக்கும்,
வளமைமகத்துவத் தெய்வாட்டுக்குட்டியே வையகத்தின்
பாவத்தையெல்லாஞ் சுமந்தொழிக்கும் வளமைமகத்துவத்
தெய்வாட்டுக்குட்டியே
அடியாரைக் கேட்டருளும் நின்சமா
தானத்தைக் கட்டளையிட்டன்புகூரும்

36. ஆகிறிஸ்துவே எங்களைக் கேட்டருளும்
அன்பாய்த் திருமுத்தை ஏறெடுத்தொளிரும்
ஓகிறிஸ் துமக்கபையமே சதாநித்திய
ஊழியோ டூழியுமக் கோலோலமே
கிருபையாயிருஞ் சுவாமியே கிறிஸ்துவே
கிருபையாயிருஞ் சுவாமி கிருபையாயிரும்

2. காண்டம். ஜெபமாலை 2 வரை செய்யுள் 48

உரை

சுவாமியே கிருபையாயிரும்!
கிறிஸ்துவே, கிருபையாயிரும்!
சுவாமியே, கிருபையாயிரும்!
பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய பராபரனே,
எங்கள்மேல் இரங்கும்!
உலகத்தின் இரட்சகராயிருக்கிற சுதனாகிய பராபரனே,
எங்கள்மேல் இரங்கும்!

பரிசுத்த ஆவியாகிய பராபரனே, எங்கள் மேல் இரங்கும்!
பரிசுத்த திரியேக பராபரனே, எங்கள் மேல் கிருபை கூறும்!
தயாபரராகிய கர்த்தாவே, எங்களைத் தப்பவிடும்!
தயாபரராகிய கர்த்தாவே எங்களை இரட்சியும்!

சகல பாவங்களுக்கும்,
சகல மோசங்களுக்கும்,
பிசாசின் கற்பனைகளுக்கும், கண்ணிகளுக்கும்,
அசுப்பான துன்மரணத்துக்கும்,
பெருவாரிக் காய்ச்சலுக்கும், பஞ்சத்துக்கும்,
யுத்தத்துக்கும், கொலைகளுக்கும்,
கலகத்துக்கும், பிரிவினைகளுக்கும்,
இடிச் சேதத்துக்கும், பெருங் காற்றுக்கும்,
அக்கினிச் சேதத்துக்கும், பெரு வெள்ளத்துக்கும்,
எல்லா விஷப் பூச்சிகளுக்கும், துஷ்ட மிருகங்களுக்கும்,
நித்திய மரணத்துக்கும்

எங்களை விலக்கமாய்க்காரும்!
கிருபையுள்ள பராபரனே!

உம்முட பரிசுத்த மனித அவதாரத்தினாலும்,
உம்முட உபவாசத்தினாலும், சோதனையினாலும்,
உம்முட மரண அவஸ்தையினாலும், இரத்த வேர்வையினாலும்

தேவரீர் சிலுவையில் அறையுண்டடைந்த மரணத்தினாலும்,
தேவரீர் மகிமையாய் உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக்கு
ஏறினதினாலும்,
எங்கள் மரணவேளையிலும், நியாயத்தீர்ப்பின் நாளிலும்
எங்களை இரட்சியும்!
கிருபையுள்ள கர்த்தரே!
தேவரீர் உமது பரிசுத்த சபையை ஆண்டு காப்பாற்றவும்,
சபையின் போதகராகிய உம்முட ஊழியக்காரரை
ஆரோக்கியமான வசனத்திலும்,
பரிசுத்த நடக்கையிலும் நிலைப்படுத்தவும்,

சகல வேதப் புரட்டுகளையும் இடறல்களையும் மறித்துத்
தடுக்கவும்,
வழிதப்பி மோசம் போனவர்களை எல்லாம் திருப்பவும்,
சாத்தானை எங்கள் பாதத்தின் கீழ்நசுக்கிப் போடவும்,
உமது அறுப்புக்கு உண்மையான வேலையாட்களை
அனுப்பவும்,
தெய்வ வசனம் பலிக்கும்படிக்கு உம்முட ஆவியையும்
பெலத்தையும் கூடக் கட்டளையிடவும்,
துக்கப்பட்டு, திடனற்றிருக்கிற அனைவரையும் ஆதரித்துக்
தேற்றவும்,
கிறிஸ்தவர்களாகிய சகலராசாக்களுக்கும் பிரபுக்களுக்கும்
உமக்குள் சமாதானத்தையும் ஒருமையையும் தரவும்,
எங்கள் மாநாட்டிற்கு சமாதானத்தையும்
சுகராசரிக்கத்தையும் கட்டளையிடவும்
எங்கள் துரைகளையும் மூப்பரையும் பள்ளிக்கூடங்களையும்
சபையையும் ஆசீர்வதித்துத் தற்காக்கவும்,
எங்களை உம்முடைய பரிசுத்த ஊழியத்தில்
நிலைப்படுத்திப் பெலக்கப்பண்ணவும்,
உம்மடைய பரிசுத்த சுவிசேஷம் பிரசித்தப்பண்ணப்பட
யூதரையும், சகல பொய்ம் மதக்காரரையும்,
அக்கியானிகளையும் திருப்பும் வேலையை
நடந்தேறப்பண்ணவும்,
அவதியையும் இக்கட்டையும் அனுபவிக்கிற யாவருக்கும்
சகாயராய்த் தென்படவும்,
யாத்திரையும் பயணமும் பண்ணுகிற யாவரையும் காப்பாற்றவும்,
கெர்ப்பவதிகளுக்குச் சந்தோஷமான
பேறைக் கட்டளையிடவும்,
சகல பிள்ளைகளையும், வியாதிக்காரரையும்
பார்த்துக் கொண்டு பராமரிக்கவும்,
குற்றமில்லாமல் காவற்பண்ணப்பட்டவர்களை
நீங்கலும் விடுதலையுமாக்கவும்,
சகல கைம்பெண்சாதிகளையும் தாய்தகப்பனில்லாத
பிள்ளைகளையும் ஆதரிக்கவும்,

சகல மனிதருக்கும் இரங்கவும்,
எங்கள் உபகாரிகளுக்கெல்லாம் கிருபையுள்ள
நித்திய பலன்களைக் கொடுக்கவும்,
எங்களைப் பகைக்கிறவர்களுக்கும்,
துன்பப்படுத்துகிறவர்களுக்கும்,
தூஷணிக்கிறவர்களுக்கும் மன்னித்து,
அவர்கள் மனதைத் திருப்பவும்,
நிலத்தின் பயிரைக் கட்டளையிட்டுக் காப்பாற்றவும்,
எங்கள் விண்ணப்பங்களைக் கேட்டருளும்,
ஏழைப்பாவிகளாகிய அடியார்
உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம் சுவாமி.

பராபரனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே,
இரக்கமுள்ள கர்த்தரே, அடியாரைக் கேட்டருளும்!
உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற
தெய்வ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்!
உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற
தெய்வ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்!
உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற
தெய்வ ஆட்டுக்குட்டியே,
உம்முடைய சமாதானத்தை எங்களுக்குக்
கட்டளையிடும்.
ஆ, கிறிஸ்துவே, எங்களைக் கேட்டருளும்!
சுவாமி, கிருபையாயிரும்!
கிறிஸ்துவே, கிருபையாயிரும்!
சுவாமி, கிருபையாயிரும்! ஆமென்

3. ஜெபமாலை

கிருத்தியம்

ஆதி யானஅச ரீரி மாகிருபை
யாக வானொடுல காவுமே
ஆறு நாளதனில் ஆடி நேர்மையுடன்
ஆத மேவையிரு பேரையே
தீதி லாதநர ராக வேசெய்தொரு
சீவ காவினிடை மேவவே
சீரி னாலுவர நீடி மேன்மைபுரி
தேவ னார்தயவெ ணாமலே
பேத மானகனி யார் திவாதுறுபி
சாசி னாலழியு நேரமே
பேற தோதியபி ரானின் வாய்மைபிச
காது நீடுபிணை யாளியாய்
ஏத மாறமறை கூறு மூவுலகி
டேற மானிடவ தாரமோ
டேக ஞானமண வாள னாகவரு
மேசு நாயகசு வாமியே

2. உலையி லேகொடிய துரித மேகொடென
துடலு மாவியுமோ ருருவமா
யுரிய தாயுமெனை அருளி னாளுதிர
உளையி லேஜனன உதயமா
யலையி லேசுழலு திரண மாகநிலை
யதுமி லாதுமிகு புலையனா
யவனி யானஅட வியினி லேயுழல
அரிவை மார்களிடும் அழகிலே
வலையி லேயிருக ணயலி லேவதன
மதியி லேசுருளு புயலிலே

வனநி தானவிரு மலையி லேயகலின்
மடுவி லேவிழவும் வசமதோ
இலையி லேதொறுவு கலையை மாறிமுனம்
இருவர் பூணவுரி இடுவனே
ஏக ஞானமண வாளனாக வரு
மேசு நாயகசு வாமியே

உரி = தோல் அங்கி

3. ஞான முற்றவறி வாகரர்க்கு நிகர்
நானெ னப்பெருமை பேசும்வீண்
நாய்க ளுக்கும்விலை மாதருக்கு மிக
நாண மற்றுறவ தாடியே
கான முற்றநரி போல டுத்தவர்கள்
காரி யத்தைவெளி யாகவே
காச லைப்பிரிய ராயு ரைத்துவரு
காமி கட்குமெனை ஆளுவாய்
வான முற்றவதி தூதர் மெத்த
மத மாகியக்கிரம மீறியே
வாது பற்றிநிலை மாறி நிற்க
வலு வானவுக்கிரமிகு கோபமாய்
ஈன முற்றநர கூட மிழ்த்தி
யிக லாலழித்தளரி நீதனே
ஏக ஞானமண வாள னாகவரு
மேசு நாயகசு வாமியே

4. முடிம லர்க்கமழ்து குழல்வி ரித்திளைஞர்
முழுகொ லைக்கிருபொன் மலையதாய்
முலையெ டுத்தயிலின் விழிமி ரட்டிமதி
முகமி னுக்கிமுர ணிடுகவே
துடிது டித்துவரு குடிகெ டிக்கியர்கள்
சுகம தற்குமுழு மனதையே

செய்யுள் அட்டவணை

சுழல விட்டுநெறி தவறு துற்குணர்க
டொடர்பை நற்றிமதி கெடுவனோ
படியினிற் குசலமரியி னிற்கு கன
ரசமு மிக்கபர வெளியிலே
பரவு சத்தமுகில் பெருச லத்திரள்கள்
பலது மொக்கஒரு குவியலா
யிடியி டிக்கமின லதுமு ழக்கமுனி
னுலக ழிக்கவிடும் இறைவனே
ஏக ஞானமண வாள னாகவரு
மேசு நாயகசு வாமியே

அயில் = வேல்; படி = பூமி; அரி = மலை

5. பற்றி லாதஅறி வற்ற பேயருட
பட்ச நாடியுற விட்டுமே
பத்தி யோடுபுகழ் மெத்த வோதிலவர்
பக்க மேயருள்பி றக்குமோ
கற்ற பேரிடம்அ டுத்த மாதவர்க
ருத்தின் வேலையதி யற்றியே
கற்பி னோடெனது சொற்ப நாளது
கடத்த நேருடன டத்துவாய்
சுற்று மாமதில்உ யர்த்த காமமுறு
துட்டர் சூழுநக ரத்தையே
சுத்த நாசமிட உக்கிர கோபமொடு
சொற்க வானிடைசு டர்களே
இற்று மாகொடுமு ரற்ற லாலழன
மிட்டு நீறிடஎ ரித்தவா
ஏக ஞானமண வாளனாக வரு
மேசு நாயகசு வாமியே

6. பத்தி முத்தியுடன் மெத்த வெற்றியிது
பக்கு வச்சமையம் அப்பனே
பத்தை யெட்டையொரு மித்தெ னக்குதவு
பட்சம் வைத்ததும றப்பையோ
சித்த மித்தனைதி டத்தி லுற்றது
திருக்கெ னச்சொல்லிந கைத்துமே
செப்பும் வித்தைபல கற்ற லப்பிய
திருட்டு மட்டைகள்பி ரட்டிலாள்
சத்தி யத்தின்வழி யுற்ற வர்க்குமிகு
சத்து ருத்தனமி யற்றியே
சட்டை யற்றுநெறி கெட்டு பத்திரமிகு
சக்கி ரிக்குரைவ முத்தியே
இத்த ரைக்குளொரு பத்த னர்த்தம்வர
விட்டெ கித்தரைஅ ழித்தவா
ஏக ஞானமண வாளனாக வரு
மேசு நாயகசு வாமியே

சக்கிரி = அரசன்

7. மக்கள் வந்தொருபு றத்தி னின்றழ
மலைத்து மங்கையர்த வித்துமே
மைக்க ருங்குழல்வி ரித்த லர்ந்துவத
னத்த றைந்தலறி நிற்கவே
ஒக்கலும் புறரு மிக்க பண்டிதரும்
உற்ற டர்ந்தொருநெ ருக்கமா
யுச்சி தங்களிட மற்றி னங்களுமு
ரத்த முங்குரல்மு ழக்கவே
கக்கி டங்களொடு புக்கி னின்றவுயிர்
கட்ட விழ்ந்தொருக்ஷ ணத்திலே
கஸ்தி தந்தகல விட்டெ ழும்பொழுது
கட்டை யிந்தவுட லுக்குமே

இக்கு வந்ததென அப்பு றஞ்செல
எடுக்கு முன்படிமை யைக்கையாள்
ஏக ஞானமண வாள னாகவரு
மேசு நாயகசு வாமியே

8. காசம் வந்துபல நோய டர்ந்திருகை
காலி ரண்டதும்ள ழாமலே
காத டைந்துவிழி தானி ருண்டுமதி
காடு றைந்துகலை சோரவே
மோசம் வந்ததென நேச மங்கையரை
மோக மைந்தரையு சாவியே
மூட மன்றியறி வாய்ந டந்துகொளு
வீர்க ளென்றுதுயர் மூழ்கியே
ஓசை கொண்டகடை வாய்தி றந்துயிர்பி
னோட வந்தவுற வோரெலாம்
ஓவி நின்றுமிக வேபு லம்புமொரு
நாள்வ ருங்கடைசி நேரமே
ஏச மிழ்ந்தியழி யாமல் வந்தடிமை
ஏழை யென்றுதயை கூறுவாய்
ஏக ஞானமண வாள னாகவரு
மேசு நாயகசு வாமியே

ஏசமிழ்ந்தி = குற்றத்தில் அமிழ்ந்தி

9. கலைம றந்துநினை வறிவ ழிந்துதலை
கடுக நொந்துபக லிரவுமே
கனவு கண்டுபய மிகுதி கொண்டிருக
ழலிநெ டுஞ்சரிவின் முடியவே
சலமங் கள்குழ குழென நின்றொழுகு
தரணம் வன்கடிகள் கறுவியே

சமரி டும்படரில் அணுகி வந்துனது
தயவு தந்தடிமை புரிமுனாள்
மலைபு கைந்தெரியும்அ னல்வ ளர்ந்துபரன்
மகிமை தங்கமின லிடியினால்
வனம திர்ந்துமுர சொலிமு ழங்கநெறி
மறைத ருங்கருணை வடிவனே
இலைம டந்தைகனி திருகி யுண்டபவம்
இழிய வென்றுசிறு மதலைபோல்
ஏக ஞானமண வாள னாகவரு
மேசு நாயகசு வாமியே

10. சிந்தை நொந்திருள்செ றிந்த கங்குல்வழி
சென்று தண்டலையில் வந்துநீ
செஞ்ச லஞ்சிதற வும்ப லன்படு
செபம்பு ரிந்தனைதி யங்கியே
வந்த வஞ்சகர்வ ளைந்த டங்களை
வனைந்து செங்கைகள்பி ணைந்துமே
வங்கை மிஞ்சுகுரு முன்பு சென்றுநட
மைந்த பொந்திமனன் அண்டைபோய்
நிந்தை தந்தவர கந்தை யின்கணிலை
கொண்டு தொண்டனைநி னைந்துமே
நெஞ்சி ரங்கவடு வைந்த டைந்துமர
நின்றி றந்துனுயிர் தந்தவா
எந்தை யுன்றனைஅ டைந்த னன்சரணி
ரங்கி யென்றனையு வந்திடாய்
ஏக ஞானமண வாள னாகவரு
மேசு நாயகசு வாமியே

11. தீதி னாலெரி பேய்கள் தூறுது
சீறி யேசுது லோகமே
சேர வேபகை யான நேசர்க
டேவ ரீர்துணை வேணுமே

வாதி னோடுபொல் லாத மாமிசம்
வாதை யாயெதி ராடியே
மாறு பாடுசெய் தேயெ நேரமும்
வாய்கொ ளாநசை கூறுதே
வேத நாயக வாண னானொரு
மேசி யாஅடி யானலோ
வேறு பாடுக டூர ராடுமி
வேளை நீசம ராடியே
ஏத மேகெடு பாத மேகொடு
ஈடு நீடென்முன் ஓடிவா
ஏக ஞானமண வாள னாகவரு
மேசு நாயகசு வாமியே

நசை = ஆசை; ஈடுநீடு = பிணையாய் வா

2 காண்டம். ஜெபமாலை 3 வரை செய்யுள் 59

4. ஜெபமாலை

முச்சத்துருநாசம்

மதியேகன நிதியேயுயிர் வழியேதிரு விழியே
மறையோர்தரு புகழேயுனை மனமீதணு வளவே
பதியாதிரு வினைமேவிய பழிகாரனை யுடனே
படுதீநர கிடுகாதருள் பரிவா யிஸரலையே
சதியாயம ரிடவேவரு தனசூரியர் படையே
தடுமாறிட அனல்வாசிக டளவாய்வரு மதிரால்
அதிநூதன மளிகாரண வரசேயெனி னுடனே
அமராடுவர் படநீசம ரமராய்திரித் துவமே

இருவினை = நல்வினை, தீவினை;
அனல்வாசி = அக்கினிக்குதிரை

2 இரா. 7: 6, 7

2. நானோவிது நாளாயெனை நானேயுண ராதே
நாய்போல்அலை வானேனுனின் ஞானாகம நூன்மேல்
ஏனோநினை வாகாவிதம் ஏனோவொரு நேரால்
ஏகாவுனை யோதாததும் ஏனோஅறி யேனே
கானானிய ரேபூசிய ரேமோரிய ரோடேழ்
கால்சாதிகள் வீறாரிட வேபோரிடு சூரா
சீனாமலை நாதாமறை வேதாதிற லாலே
தீயோரெனை யாளாதெதிர் தேவேதிரித் துவமே

கால்சாதிகள் = காலனானசாதிகள்

யாத். 34:11

3. அலையொத்திடு துயருட்படு மசதிக்குண னெனையே,
அளவற்றிடு மகிமைப்பொறை அருளிட்டதி சயமாய்
நிலையொத்திடு முயர்சத்திய நெறிபற்றிய படியே
நிருபித்திடு கருணைக்கட லெனுநித்திய நிருபா
மலையொத்தெழு புயமுக்கிய வளமைச்சுப சிமசோன்
வருபற்பல நரியைக்கொடு வினையிட்டொரு மனதா
யுலையொத்தெழு படையிற்சக சரமக்களி னுயிர்போம்
உயர்வெற்றிகள் செயவற்புதம் ஒளிர்மெய்த்திருத் துவமே

சகசரமக்கள் = ஆயிரம்பேர்
நியா. 15:8

4. நீயித்தனை யாய்மெத்தவு நேயப்பரி வாலே
நேமத்தொடு வேதக்கலை நீதிப்புகன் மேலா
வாய்நித்தியம் ஓதக்குரு மாரைத்தர லானாய்
மாடொற்றிய கோலைக்கொடு வாய்மைச் சமிகார்தா
னாயொப்பன வேகத்தறு நூறிச்சையு ளாரை
நாடிப்பொரு தேயெற்றிட மாலைத்தரு நாதா
தீயுக்கிர ரூபத்தொடு சீறித்திரி வோர்க
டமைச்செயன் மாயக்கெடு தேவத்திரித் துவமே

மாடொற்றிய கோல் = மாட்டாங்கோல்
நியா. 3:31

5. தினமும்பய முறவெங்கலி திமிலங்கொடுவரவுந்
திறமுந்திட வுரமும்பல செயலுங்குல நலமுங்
கனமுங்கனி வுரையும்பெறு கலையும்பறி படுமென்
கதையின்புகல் சொலமண்டிய கடலுங்கொள வரிதுன்
சனமஞ்சிட வெதிரும்படி பொருதுந்தனு சனைமுன்
றவிதுங்கவு ணதுவுங்கொடு சமரஞ்செயு மதிசம்
பனமும்பல வரமுந்தரு பதம்வந்தனன் அடியேன்
பகைவஞ்சக ரிடுநிந்தனை பகலுந்திரித் துவமே

தனுசனை = வில்லனை; பகலும் = ஒழித்துவிடும்

1 சாமு. 17:49

6. பீடும்புலை நாவும்பெறு பேய்கொண்டவர் வேடம்
பேசும்புவி ஞானபல பேதங்களை யானுங்
கூடுஞ்செய லாய்நம்பியு மோசங்கொடி தாமுன்
கூறுந்தய வாலும்பல மாய்வந்தருள் கூர்முன்
சாடும்படி யாய்நின்றெதிர் சாருஞ்சிசெ ராவின்
றாயுந்துணை யாளுந்துயர் தாவும்படி கீதம்
பாடும்படி யோர்பெண்டரு பாவின்புகல் போலும்
பாரும்தயை கூறும்பகை தீருந்திரித் துவமே

நியா. 4:21; 22: 5, 28

7. எத்தாலுல கத்தாரொரி டக்காகந டப்பார்
எப்போதுமி கற்போகமி ருக்காதவ ரிற்றே
செத்தால்அவர் பற்றாசையை நற்றார்செய லுற்றார்
சிச்சீயென வப்பாலில்ல டுப்பார்தி ரிப்புக்கோ
பித்தாய்நிலை யுற்றேனிது பெற்றாயருள் பற்றாய்
பெட்பாலட லொட்டார்கள்பி னிட்டோடநி னைத்தே
ஒத்தூடுயர் நற்கீதைய னுக்கோதின தைப்போல்
ஒத்தாசையெ னக்காதர வொப்பாய்திரித் துவமே

பெட்பு = ஆசை; அடல் = புயத்தம்; ஒட்டர் = பகைவர்

நியா. 6:14−16

8. காற்றுப்பட மாற்றப்படு காட்டுச்சர மாக்கிக்
காட்டிப்பய மூட்டிப்பல காட்சிக்கென வாட்டிக்
கூற்றுக்கொளு பேய்க்குப்பிணி நோய்க்குக்குலை நாய்க்குக்
கோட்சொற்றுவர் வாய்க்குக்கொடு தீக்குத்திட நீக்கித்
தோற்றத்துயர் போக்கித்தொழு வோர்க்குச்சுப மாக்கிச்
சூட்சத்தெலி யாச்சற்றொரு தூற்றத்தழல் வீழ்த்திச்
சீற்றப்பரர் கூட்டத்தினை நீற்றுப்பலி தேக்கித்
தீழ்ப்பீட்டத மார்க்கர்க்கிடு தேற்றத்திரித் துவமே

சரம் = நாணல்

2 இரா. 1:9−12

9. தக்கும்புகழ் மெய்க்கும்புல வர்க்குந்தலை வர்க்கும்
சற்றும்பய மற்றுங்கன தர்க்கங்களை யிட்டுஞ்
சிக்குஞ்சதி யிற்றந்துசெ ருக்குங்கய வர்க்குஞ்
செப்பும்புலை ஞர்க்குந்திரு டர்க்குஞ்சிறை யுற்றுந்
துக்கந்தவிர்த் துப்பின்கழ லைக்கொண்டனெ னக்குஞ்
சொற்றத்தரு ணற்சந்திர னுக்குஞ்சுட ருக்கும்
பக்கங்களி னிற்கும்படி வைத்தங்கருள் வெற்றம்
பட்சங்களு மிட்டன்புரை பற்றுந்திரித் துவமே

யோசு. 10:12, 14

10. பந்தந்திக ழும்பெண்களி னின்பம்பழு தென்றும்
பங்கம்புவி யெங்கும்பல துன்பங்கள தென்றுந்
தொந்தந்திக ழும்புன்கடி தொண்டன்புற நின்றுந்
துன்பஞ்செயு மென்றுந்துயர் கொண்டும்பதம் வந்தன்
சந்தந்திகழ் துங்கன்றவி தின்பங்கிலி ருந்துஞ்
சண்டம்புரி வண்டன்சவுன் மங்கும்படி கொன்றுங்
கந்தந்திகழ் பொன்செந்தமிழ் கஞ்சன்சொல வென்றுங்
கம்பஞ்செறி தம்பங்கொடு சண்டுந்திரித் துவமே

1 சாமு. 31:2−5

11. எல்லைப்பதி னிருசீடர்கள் சொல்லைப்பதி யாதார்
எள்ளத்தனை யெனுமாவலின் உள்ளத்துரு காதார்
வெல்லைப்பதி தனின்மேவெரு செல்லைப்பதி மீதே
வெய்யப்பதி தர்கள்போலொரு பொய்யைப்பதி வார்கள்
கல்லைப்பதி விடைதாவிய புல்லைப்பதி விடையார்
கள்ளப்பதி யலவானுறும் வள்ளற்பதி யலவோ
நெல்லைப்பதி தனினீடிய செல்லக்கவி யானே
ஞெள்ளற்படி இறைபாடின னுள்ளத்திரித் துவமே

ஞெள்ளற்படி = மேன்மைப்படி

2 காண்டம். ஜெபமாலை 4 வரை செய்யுள் 70

5. ஜெபமாலை

உபத்திரவிமோசனம்

சந்தவிருத்தம்

திங்களுடு செஞ்சுடரி லங்குபுவி யங்கெனது
சிந்தையில டர்ந்தவினை கண்
மங்கும்வழி யெங்குமிலை என்றறிவு ணர்ந்துகழல்
வந்தனடி யன்பிறவி நோ
யுங்கவலை யுந்துரித முஞ்சிறுமை யுங்குறைக
ளும்பிணிக ளுந்தவிர வே
தங்குதய வுங்கிருபை யும்புரிப ரம்பரச
யும்புமனு வின்புதல்வ னே

பிறவிநோய் = சென்மப் பாவம்

2. மனக்கண்மிகு ருக்கமும்இ ரக்கமும்வ ளர்த்தியு
மயக்கியுமி ணக்கிநகை யான்
மினுக்கியபி லிக்கிகண்மு கத்தினைநி னைத்ததி
வினைக்கிட மெனப்படுவ னோ
கனிக்கிதம் வழுத்திய கிருத்திம முரைப்படி
கடுக்கனிபொ சித்தகடை யோர்
தனக்கிணை யெனப்பிணை சொலத்திவிய பரப்பொரு
டரப்படுதி ருப்புதல்வ னே

கிருத்திமம் = பிசாசு

3. அந்திபக லுஞ்சமரி டுங்கொடிய வஞ்சகர
கந்தைகளி டும்புகளி னால்
நிந்தனைஅ டைந்துசெப முஞ்செயம றந்துநிரை
யந்தனில்வி முந்துலைவ னோ
தொந்தலகை யின்சிரம்அ ழிந்திடம டந்தைமரி

சுந்தரனென வந்தமுதல் வா
சந்ததமு னைந்துசர ணங்கொடு பரம்பர
சயம்புமனு வின்புதல்வ னே

ஐந்து சரணம் = ஐந்து காய அடைக்கலம்

4. அடக்கமும் ஒடுக்கமும் அகற்றிய துடுக்கரை
அடுத்தவர் மனத்தினிசை வாய்
நடக்கினு மிடக்கொடு கடுத்துரை திடிக்கிட
நவிற்றுவர் பகைக்கெளையு மாள்
இடக்கையி லிருப்பவர் கணக்கினை யெடுத்தழ
லெரிக்கிட விசைக்குநடு வா
சடக்கலி கெடப்புரி மகத்துவ பரப்பொரு
டரப்படு திருப்புதல்வ னே

நவிற்றல் = சொல்லுதல்

5. கஞ்சமிகு நெஞ்சதின முங்கறுவி வங்கையொடு
கங்குல்பக லுந்துயில்கொ ளா
நஞ்சினுமி குந்தநர கங்கியென நின்றுநளி
னங்கொணகை தந்துகன கோள்
அஞ்சிடவ றைந்ததில்அ திர்ந்திருத யம்பதறி
ஐந்துகுறி யங்கடைய வே
தஞ்சமென வந்தனெனை அஞ்சல்செய்ப ரம்பரசு
யம்புமனு வின்புதல்வ னே

நரகங்கி = நரக நெருப்பு

6. எதிர்த்ததி மதத்தொடு சதிப்புக லிடப்பகை
யிளைத்தடர் கவுத்துகம தால்
வெதிர்த்தெனை யதட்டிய வெறிச்சமர் வலித்திறம்
விளைத்திட மிகைப்படுவ னோ
உதிர்த்திடு மிரத்தமு லகத்திடர் தவிர்த்திருள்
ஒளித்திட உயிர்த்தபர னே

சதிர்ப்புடை கதிப்படு மகத்துவ பரபொரு
டரப்படு திருப்புதல்வ னே

கவுத்துகம் = வஞ்சகம்

7. அம்பரம கண்டபுவ னங்கள்பல னந்தமிடை
அன்புடனி றைந்தவரு ளே
உம்பர்தொழு நன்சுடர்வி ளங்குமிரு செஞ்சரணு
வந்துகதி யென்றுமிக வே
நம்புமெனை வம்புடனெ ருங்குகன துன்பமற
நன்றிடுக டந்தபொரு ளே
சம்பரமி கும்பரச கம்பரப ரம்பரச
யம்புமனு வின்புதல்வ னே

8. இலக்கண விலக்கிய மெடுத்தசை யிசைத்தரு
ளினக்கவி தனக்குமரு ளா
தலைக்கழி விடப்புலை பிதற்றிய பணப்பிரி
யருக்கெனை விலக்கியருள் வாய்
மலைக்கொடு முடிப்புற மறைப்படி திருப்புகல்
வழுத்திய திரித்துவபர னே
தலைக்குரு வெனத்தயை மகத்துவ பரப்பொரு
டரப்படு திருப்புதல்வ னே

9. வண்டுமய லும்புவன முஞ்சடமு மொன்றுபட
வந்தமர்பு ரிந்துநய மே
கண்டுகன லின்கணைகள் கொண்டெரிய வெம்பியுயர்
கஞ்சமலர் வந்தடைய னோ
கொண்டைதிகழ் மங்கையரி ரண்டுவிழி வெங்கணைகள்
கொஞ்சமல வென்றுமறி வாய்
சண்டமிவை யென்றுதொலை யுஞ்சொலும் பரம்பரச
யம்புமனு வின்புதல்வ னே

வண்டு மயல் = குற்றமுள்ள பசாசு

செய்யுள் அட்டவணை

10. கொதிப்பொடு மனத்திடம் விடுத்திடர் படத்துயர்
குறித்துனை நினைக்கவரி தாய்
மிதப்படு பவக்கடல் நிலைப்படு மெனைத்தயை
விளக்குற வளர்த்திவிடு வா
யதப்பழு தழித்தத மதக்கிறு தறுத்தறி
வழிச்சிலு கடக்கிவினை யோர்
சதிப்பழி தகர்த்திட மத்துவ பரப்பொரு
டரப்படு திருப்புதல்வ னே

சிலுகு = வீண் தர்க்கம்

11. நீடுசுவி சேடகவி ராயனித மோதிவரு
நேயதிரு மந்திரசெப மே
பாடல்களி னேர்வரிசை யாயெழில தாயுனது
பாதமது கந்துதொழ வே
கேடுகளை யேதடுவி ணாடுகளை யேகொடுகி
லேசமற வந்தெடுப டா
ஈடுகளை யேயிடுவு னாடுகளி னூடெனைவி
டேகமனு வின்புதல்வ னே

2. காண்டம். ஜெபமாலை 5 வரை செய்யுள் 81

6. ஜெபமாலை

செபவண்ணம்

விருத்தம்

தேடும்பணியே திரவியமே
செல்வப்பெருக்கே திருவுளமே
சீனாமலையின் கற்பனையே
செழிக்கும்பரம கானாவே
சிங்காரபூங் காவனமே
செங்கோன்முடியே சீர்பதியே
தேவபரனின் றிருமகனே
தேவாலயமே தினகரனே
நாடும்பரம ராச்சியமே
ஞானநதியே நவநிதியே
நல்லோர்க்கருளே நற்பலனே
நன்மைக்குறவே நாயகமே
நவசேனைகளின் இராசாவே
நரகக்கடியைக் கடிந்தோனே
நாவிலடங்கா மிகும்புகழே
நாயேனுனது மகத்துவத்தைப்
பாடும்படியே கிருபைசெய்வாய்
பாவியெனக்குன் உதவியின்றிப்
பார்மீதோரா தரவுமில்லைப்
பைசாசுலகு மாங்கிஷமும்
பகையென்றுனக்குத் தெரியாதோ
பந்துக்களுந்தா னுனையடைந்த
படியாலுறவற் றதுமறிவாய்
பாழிவ்வினைக்கென் செய்வேனான்
வாடும்படியென் மனதிதனை
வருந்திவருந்தி நினைத்துருகி

செய்யுள் அட்டவணை

மயங்கிக்கண்ணீர் தனையுதிர்த்து
மருகிமருகிப் புலம்புவனோ
வஞ்சக்கலியைத் துரத்தியுன்றன்
மறைவிலடிமை தனைக்காத்து
மகிமைப்படுத்தி அருள்புரிவாய்
மன்னோன்றவிது குலக்கோவே

தனனத்தனதனா தனதானனதத்த
தனதானனதத்த
தனந்தனதன
தனத்தானதான
தனதானதந்த தனதானனா

கடல் சுற்றிய தராதலம் வானுலகட்ட
திசை பற்பொருட்கள் யாவது மாறுதினத்தில்
வளமாக வமைத் தெழிலதாக நடத்தி
அகங்கனிவுற அனந்ததிசய மிகுத்தாளனாதி
பொறுமைக் களவிலா மறைசூடிய சத்திய
திரித்துவ பராபரமாகிய நித்திய
எவராலு முரைக்க அரிதான மகத்துவ
வரங்களிலுயர் குணந்தருநய
செபத்தியான ஞானி
கடியைச் சினமதாய் நரகானதில் விட்ட
பெருமைச் சருவகாரணமாதவனுக்கிர
எரிநீதியன் முக்கிய கிருபாசனன் மொய்த்த
பரஞ்செகமது நிறைந்தருளிய
உகப்பான சோதி
கனவேத சுந்தரவரூபியே.

2. கதிர் விட்டொளிர் வியோமமும் வான் விரிவுக்குண்
மிதமற்றடர்து தாரகையானது மற்று
முளபாதலம் வெற்புலகும் வாரியுமச்ச
மிகும்படி நடுநடுங்கிடநட
மடித்தே யுலாவு
மகிமைக்குரிய சீவனகேருபின் முக்கிய
இரதப்பெருமை வாகனமேறி யெதிர்த்த
கனபேய்கள் சிரத்தை மலையாது தகர்த்து
மிகுந்துளதள மடிந்தழிபட
மிதித்தாடு சூரர்
கருணைக் கிணையிலா அருள்வேத சமுத்திர
அறிவுற்பன குணாகர தேசிகர்சித்தர
நவசேனைக ளர்ச்சிய சவைசூழ்கவு மெச்சிய
பயன்களை யுணரசுதந்தரவறி
வுளத்தாதி மூலர்
கலைமாத வந்தருதியாகவான்

3. அடலிட்டெதிர் பிசாசுகளோ டியபட்ட
மணிபொற் சிலுவை ஞானபதாகை படைத்த
துரை மாபரிசுத்த செபமாலை தரித்த
புயன்ற விதிறை யினந்தனிலருள்
ஒளித் தீபமான
பரமச் சொருபராரணர் வீரியசத்துவர்
சுயதற்பர புராதன வாதனதத்துவர்
அசரீரியர் பத்தரகமேவிய நித்தர்
அதம்பழுதற உகந்தவரொரு
தருப்பாவ நாசர்
அகமைக் கொடியபாதக காமிகள் கெட்ட
மனதைப் பணிய ஆவியினேவுதலிட்டு
நிறைமாதவ மிக்ககுணமேவி நிலைக்க
நலந்தரு செபதுரந்தரவதி

செய்யுள் அட்டவணை

சயத்தேவ சீலர்
அனன்மீதறைந்த தசநீதியார்
அக்கினியின் நடுவிற்பத்துக் கற்பனை கொடுத்தவர்

4. அருமைத் தெரிசி மாதவராரியர்பற்றி
எழுதித்தரு முனூல் வழுவாதரசிட்ட
தவிதா ளுயர் பெத்தலையின் மாடடை கொட்டில்
எழுந்தருளிய பரம்பொருளொரு
கிறிஸ்தேசு நாத
உனதக் கிருபையாசனனே கதியற்ற
அடிமைக் கொருதராதரவே துனைவிட்டு
லகமானது கஸ்தி தருபாதல நித்தம்
எழுங்கவலை கண்மனந்தனிலதி
கரித்தே யெநேரம்
அலையிற் றிருகியோடிய ஆலிலையொத்து
மருகித் திரிவனோ பகைகாரானத்த
உறவோரொருபக்கம் அயலாலொருபக்கம்
இடும்புகளுட னடந்தரசுசெய்
தொடுக்காமலாளும்
அதிநேயசம்பனவனாதியே

5. புடவிக் குளனை மாமரியாளுட முற்ற
கிருபைப் பரமனே அடியேன் அளவற்ற
பவகாரிகணிச்சை உலகாசை கடுறகு
ணமும் பகைகவடதும் பெருகிய
மகத்தான தீயன்
மனதிற் பெருமையோ பெரியோரொடு தர்க்க
மிடு சற்பனைகளோ புறர்வீடதுநற்றி
அநியாய மிகுத்த கொலைபாதகமற்ற
அகந்தைகள் கெடு குறும்புகடொகை
கணக்கேதயோ பொய்

புலை சொற்பழுது கோடிகளோகளவுக்கு
ரிய சித்திர வினாவுகளோ நடலத்து
விலைமாதர் கண்மைக்கண் வலையூடுயிர்ச்சிக்கி
விழுந்திடர்படு பெரும்பழுதுள
துடுக்கான கேடன்
எனை நேடவந்த குருநாதனே

6. புதரிற் புலிகள்போன் மளையாளொடு மக்கள்
எதிரிட்ட டமதாவுயிர் சோர்வுபடுத்தி
வினைசேர் கெறுவத்து மதமேறியுரத்து
நிதம்பொருது சமரந்தனையெவ
ரிடத்தே சொல்வேனான்
வெளியிற் பகடியோ பரிகாசவிதத்தி
னொடி சொற்றுவர்களோ வெறியாடிநகைத்து
மதியா தொருலட்சம் அவதூருடன்லட்சை
அழிம்பதுகளை விளம்புதடுள
சனத்தாரினோடு
புகழற் றெளிமையாயுற வாடியலுத்து
மதிகெட்டவனுமாய் முகநாடி கறுத்து
மெலிவாய் மனதுட்கி இருசேவடியுக்குள்
அடைந்தனனெனை மகிழ்ந்தடிமைகொள்
உனக் கோலமோலம்
ஆதுநேரம் என்கலிகடீரவே

7. சடலத்துயரினான் மனவேதனை யுற்று
னது பொஸ்தக மெய்யா மறையாகமசுத்த
சுவிசேட சமுத்திரநெறி ஞானசரித்திர
நலங்கனை யதிசயங்கனைரு
தயத்தே யெணாது
கவனத்துடனலோர் சொனநீதி கடப்பி
அலகைக் கடிமையா யொழியா விரகத்து
மயன்மீறி நச்சுமரமாகியு முட்ட

விடந்தருவிரியனின் பறழரு
வருப்பான பாவி
தவ சொப்பரவு தாழ்மையும் வாய்மையுமற்று
மனமெத்தனவு சாதுசினேகிதசற்கு
ணமு நேசமுமற்று விசுவாசமு மற்று
நடந்தவமதி அடைந்தெரிநர
கதிற்போய் விழாமல்
உனைநாடி நெஞ்சுருக ஞாயமே

8. தவிதுக் குமரனாகவுமே தினியுக்குள்
நரர் பக்கிஷமதாய் அழியாத பதத்தை
யிடவே மனதொத்தரிய பாடுகள் பட்டு
மடிந்துயிருடன் எழுந்தருளியு
னதத் தேறியாதி
வலமைப் பரமனாருடன் வானவர்துத்திய
மெனவர்ச்சனைகளேசெய மேன்மையின் முக்கிய
சரியான தத்துவ வலபாரிசநெட்டி
லிருந்தினி வருகையின் கடையுக
நடுத்தீர்வை யோது
சமையத் தெனை விடாதுனின் வானகரத்தின்
வளமைப் பிரபல சீவனினோர் கிரிடத்தை
முடிமீது தரித்தினிய வாழ்வினிதுலுய்த்து
நயம்பெற வருளியுங் கிருபைசெ
யுனைப் பாடும் ஏழை
உயிர் வாழ்க உம்பருடனூழியே

2 காண்டம். ஜெபமாலை 6 வரை செய்யுள் 89

தலைவரிசை அட்டவணை

7. ஜெபமாலை

வேதநூற் ஜெபங்கள்

இரண்டாம்பங்கு

அசனச் ஜெபம்

2 அடி

மனுடசீவத் தயாபரனே
வளமாயெமையு மற்றவெல்லாச்
சீவன்களையும் வகுத்தருளி
மாறாத்தயவாய்ப் பராமரித்தே
இனிதாய் நடத்தி வரும்பரம
எந்தாயெமக்கு நல்லீவா
யிங்கணிரங்கி யுவந்தளித்த
இப்போசனத்தா லெங்களுட
தனுவின் சடலஞ் சுகமடைந்து
சால்புற்றோங்கிப் பெலன்கொளவே
தயவா யதையாசீர்வதித்துச்
ஸ்வாமி யேசுக்கிறிஸ்துவுக்குட்
கனமாய் வளைந்த பரமநன்மை
களினாலெமதாற்றும்மதையுங்
களிக்கத் திருத்தி யாக்கியருள்
கருணை வேதத் தொருமுதலே
அசனத்தின் பின் ஜெபம்

2 அடி

அளவுக்கடங்காத் தயாபரனே
அடியோஞ் சனித்த திற்றைவரை
அநேகவித நன்றுகளை யெமக்
களித்த தயைக்கு மிப்போதெம்
உளமே மகிழத்திருத்தி செய்த

செய்யுள் அட்டவணை

உதவியதற்குந் துதியுமக்கே
யுவந்திங்கடியாரார் தினபோ
சனத்தாலெம்பால் உண்டாகும்
வளமைப் பெலன்கள் அனைத்தையு முன்
மகிமைப் பணிக்கென்றனுபவிக்க
வாகாய்ப் பரிசுத்தருபிக்கொண்டு
மகிழ்ந்தொத்தாசை யெமக்களித்து
நளமாயினியும் எங்கடனை
நயந்து தயவாற் பராமரித்தெந்
நாளு மேசுக்கிறிஸ்துவுக்குள்
நடத்தியருளும் ஒருமுதலே

ஆர்தல் = உண்டல்

காலைச் செபம்

4 அடி

எந்தன்பரம தாதாவே
என்னைப்போன ராத்திரியில்
எழுஞ்சே தமும்விக் கினமுமின்றி
இரங்கிக் காத்த நின்கிருபைக்
கேசுக் கிறிஸ்தி ரட்சகரென்
இறைவர் திருநா மத்திலுமை
இஸ்தோத் திரஞ்செய் கின்றேன்யான்
இற்றைப் பகலா திந்தமெனைச்
சிந்தைச் சகல பவங்களுக்குந்
தீங்குகளுக்குந் தற்காத்துச்
சிறியனினைவு சொன்னடக்கை
தேவரீருக் கேற்கவுமென்
செயலையெனதூ ழியத்தைமுற்றுந்
திடவுண்மையினாற் சுறுசுறுப்பாய்ச்
செய்துமுடிக்க வுங்கிருபை
செய்யுமெனதாத் துமஞ்சடலஞ்
சொந்தமெனுமற் றுளதனைத்துந்

துய்யகிறிஸ்து வச்சபையுந்
தொடர்ந்தே யதுவர்த் திப்பதற்காஞ்
சுவிசே டத்தின் கிரியையையுஞ்
சூட்டியுனது திருக்கரத்திற்
றொகுத்தொப் புவிக்கின் றேன்பணிந்து
சூதாய கமும் புறமுமெனைச்
சூழ்ந்த பலசத் துருக்களுட
தந்திர மிகுஞ்சோ தனையதனில்
தமியே னகப்பட் டழியாமற்
றாங்கி யுனதட் சயவான
சம்மன சைக்கொண் டெனைக்காத்துச்
சதாநித் தியசீ வனின்பாதை
தன்னிலுமதா வியைக்கொண்டெனைத்
தயவாய் நடத்தி அருள்புரியுஞ்
சத்திய வேதத் தொருமுதலே
இராச் ஜெபம்

3 அடி

எனது பரம ஐயாவே
என்னைச் சேதம் விக்கினமும்
இல்லா தின்று முழுவதுங்காத்
தியற்று தயைக்கே சுக்கிறிஸ்தென்
னிரட்சகரினா மத்திலுமை
இஸ்தோத் திரஞ்செய் கின்றேன்யான்
வனமா யான்செய் பவமனைத்து
மைந்த னேசுக் கிறிஸ்துவுக்காய்
மறுத்துப் பொறுப்பா யெனதாத்துமம்
வாய்ந்த சடல மற்றவையும்
வளமைக் கிறிஸ்த வச்சபையும்
வருத்திப் பாகுங் கிரியையையுந்
தனதா யுமக்குக் கையளித்தேன்
றயவா யெனையிவ் விரவினிலே
சதிசெய் யெனதுட் சத்துருக்கள்

செய்யுள் அட்டவணை

சகல புறச்சத் துருக்களுக்குந்
தற்காத் துமது தூதர்களைச்
சனுவாயெனக்குக் காவல்வைத்துக்
கனிவ துறநன் னித்திரையைக்
கற்பித் தருளிச் சுகத்தோடே
கடவு ளுமக்குத் துதியாகக்
காலை யதிலென் றனைநீயே
கடாட்சித் தெழுப்பி விட்டருளுங்
கடந்த வேதத் தொருமுதலே

சனு = உதவி

ஆராதனைக் காரம்பம்

2 அடி

கிறிஸ்து மான சகோதரரே
கேண்மோ கருத்த ருடசெபத்தின்
கிரக மெனுமிஸ் தலமிதிலே
கிருபை பெறயாங் கூடிவந்து
திறத்திங் கிருப்ப தானாமித்
திவ்விய தலத்துக் கேறாத
தீய குணங்கள் மேலெழுச்சி
சேர வனைத்தும் விலக்கிவிட்டுக்
குறித்து மனத்தைப் பரவசமாய்க்
கொண்டே காந்த மனதோடே
குழைந்தா வியினும் உண்மையினுங்
கூர்ந்து திருவா சனப்படியே
மறத்த லகற்றி ஒருமனதாய்
வாஞ்சித் தரிய பணிவோடே
மாறாக் கிருபைப் பராபரனை
வணங்கி வணங்கித் துதிப்போமே
ஆராதனைமுன் ஜெபம்

தலைவரிசை அட்டவணை

5 அடி

சருவா நன்மை சுபாவதயா
பரராயிருக்குந் தற்பரனே
தமியார்மீத திவிசேட
தயைகூர்ந் துமத்த தியாயபிர
சங்கத் தாலக் கியானவிரு
டன்னிலி ருந்தெங் களையுமது
சத்திய வெளிச்சத் துட்புகுதச்
சாற்றி யழைத்து மெஞ்ஞானஸ்
நான வரத்தா லுமதுதிருச்
சபைக்குட் சேர்த்துக் கொண்டுமது
நிறையின் வசனந் தனையெமக்கு
நிகழ்த்தும் பரிசா ரகராலே
நீடி யெமையெம் மீட்பினுக்கே
நேரின ழைக்கு நின்கிருபை
நெடிய தொனியை அடிக்கடியாங்
கேட்க விடஞ்செய் கின்றனையே
நித்தா விவைகள் அனைத்தையுநீ
நேசித் தெமக்கா யிலவசமாய்
நிருபித் தருள்கின் றாயதனால்
நின்வி சேட சகாயமிதைத்
திறமாய் நாங்கள் மகாபெரிய
திரவிய மெனச் சிந்தைகொண்டு
தேவா வுமது விலைமதியாத்
திருவாய் மொழியைக் கருத்துவைத்துச்
சிந்தை யுறக்கேட் டுட்கொளவுஞ்
சிறியோர்க் கதனால் எழுப்புதலுந்
திரணற் பலனும் உண்டாகத்
தினமு மெமக்குக் கிருபைசெய்வாய்
திடமெய்ப் பரனா நின்னையுநீ
சித்த மிரங்கி யனுப்பினஎம்
இறைவ னேசுக் கிறிஸ்துவையும்

எண்ணத் தறியும் உயிரறிவ
தெங்க ளிடத்தில் உண்டாகி
ஈடாய்ப் பெலன்செய் யவுமதனால்
எழுநித் தியசீ வனைநாங்கள்
இயன்று விழிப்பாய்த் தேடவுநூல்
இசைக்குங் குருமார் தமக்குமவை
கேட்குஞ் சபையாம் எங்களுக்கும்
இன்றே பரிசுத் தருபியைக்கொண்
டிரக்கம் புரியும் ஒருமுதலே
ஆராதனைப்பின் ஜெபம்

4 அடி

எங்கள் பிரதா னாரியருஞ்
சருவ லோக மீட்பருமா
யிருக்கு மேசுக் கிறிஸ்திறையே
இரட்சிப் பெமக்காய் விரித்துரைத்த
எழிலுச் சிதஞா யங்கடனை
இப்போ நாங்கள் கேட்டறிந்தோம்
எனினு மதைக்கேட் கிறவணமே
இயன்று செயும்பே ராயடியார்
தங்கிப் பரம சீவனிற்போஞ்
சாரிக் கதனைக் கைவிளக்காய்த்
தாவிப் பிடித்துச் சுடரொளிவின்
றனைய ரெனவெஞ் சீவனுறுஞ்
சகல நாளு நேரோடே
தரித்து நடந்து வருவதற்குத்
தயவா யெமக்குப் புத்தியையுஞ்
சத்தியந் தனையுந் தந்தருளுன்
றுங்க வசனத் திறத்தால்யாஞ்
சூழ்ந்தெம் பேரில் வருந்துரிதஞ்
சோதனை யிலும் பின்வாங்காத்

துணிவாய் நின்று நாளடவிற்
றொகுப்பீ டேற்றத் தறிவினிலுந்
தோன்றும் விசுவா சத்தினிலுந்
தொடர்ந்தே யுமையும் பிறர்களையுந்
துறுவிப் புரியும் அன்பினிலு
மங்காப் பொறைநம் பிக்கையினு
மன்னா வுமக்குப் பிரியமுள
மற்றுஞ் சகல கிரியையினு
மரணம் வரைவர்த் திப்பதற்கும்
வான நாட்டுக் காளாயாம்
வரவும் பரிசுத் தருபிகொண்டு
வளமா யெமக்குத் துணையருளு
மட்டி லாத ஒருமுதலே

துறுவல் = தேடல்

பள்ளிக்கூடத்தாதிச் ஜெபம்

4 அடி

சகல ஞானத் தறிவினுக்குந்
தனிக்கா ரணமெய்ப் பராபரனே
சற்று மறிவொன் றில்லாத
தனைய ரெமையிப் பள்ளியினிற்
றரிக்க நிறுத்தி நின்மேன்மைச்
சத்திய மறையைக் கொண்டுமையுந்
தமியா ரெமையும் அறியவுமோட்
சத்துக் கடுத்த ஞாயமெல்லாம்
பகுத்தா ராய்ந்து படிக்கவுநீ
பரிவா யெமக்கு நற்சமயம்
பணித்த பெரிய உபகாரப்
பட்சந் தனக்கிஸ் தோத்திரமே
பால ரெமக்குண் டாயிருக்கும்

பழுது விளையாட் டுத்தனமேன்
பாரக் கோடசதி சோம்பல்பினும்
பலதுற் குணங்க ளையுநீக்கி
மிகவே யடியார் படிப்புகளில்
வினாவுங் கருத்துஞ் சுறுசுறுப்பும்
விழிப்பு முடைத்தோ ராயிருக்க
மேலாந் தெளிந்த புத்தியையும்
வீரந் தனையுந் தந்தருள்வாய்
மீண்டு மடியார் உம்மையுமெம்
மீட்ப ரேசுக் கிறிஸ்துவையு
மேவி யறியும் அறிவினிலும்
புகலு மெமக்கு மற்றவர்க்கும்
பிரயோ சனமாம் படிப்பினிலும்
பூரித் துமக்கும் அயலார்க்கும்
போர்ந்த பணிசெய் சமர்த்தர்களாய்ப்
போகும் படிக்கும் அரூபியினாற்
புகலொத் தாசை யெமக்கருளிப்
பொதுவா யெமக்கு நின்னாசீர்
வாதம் புரியும் ஒருமுதலே
பள்ளிக்கூடத்தந்தச்ஜெபம்

4 அடி

அளவுக் கடங்காத் தயவுடைத்த
அரிய பரம தாதாவே
அடியா ருயிர்க்கும் உடற்குநல
மான படிப்பு களைப்படிப்பித்
தருளி னதற்குத் துதியுமக்குண்
டாக யாங்கேட் டுணர்ந்திருக்கும்
அறிவு களைச்சற் றயராதெம்
மதிஞா பகத்தும் இருதயத்தும்
வளமாய்ப் பதனப் படுத்துவுமவ்

வாறே பயபத் தியிற்செலவும்
வலிய துணைசெய் தருளுமிந்தப்
பள்ளிக் கூடத் துன்றயவால்
வறியோ ரெமக்கித் தனையாக
வருநன் மைகள்யா வையுமுனது
மகத்துவ நாமந் துதிபெறவும்
மைந்த ரெமக்கு நலமுறவும்
எளியா ரனுப விக்கநன்றி
யறியு மிதயம் எமக்கருள்வா
யித்தா திந்த நன்மைகளை
எல்லா மடைந்த நாங்களினி
இடும்பாய் நன்றிக் கேடர்களா
யிராம லுமக்கன் புறுமகரும்
எங்க ளுபகா ரிகட்குமகிழ்
வெய்தும் பெயரு மற்றவர்கட்
குளமாய் நன்மா திரிகாண்பிப்
போர்க ளெனவு மொழுகவெமக்
குமது பரிசுத் தருபியைக்கொண்
டொத்தா சைகள்செய் திதற்கான
உரிய வரங்கள் கட்டளையிட்
டுதவு மரிய செபங்கடெரிந்
தொலியாய் வேத நாயகன்பா
வோதும் வேதத் தொருமுதலே

மகர் = பிள்ளைகள்

2 காண்டம். ஜெபமாலை 7 வரை செய்யுள் 98

8. ஜெபமாலை

அத்தனாசி விசுவாசப் பிரமாணம்

சத்திய கிறிஸ்து மார்க்கத்தை யறிக்கை பண்ணுதற்
குத்த வேதசாஸ்திரத் துணர்ந்து கண்ட பொக்கிஷம்
அத்தனாசியார் விசுவாசப் பிரமாணமா மெனப்
பத்தனக் கருள் செய்வாய் பராபரம் பராபரம்.
தானதான தானதான தானதான தானவன்
தானதான தானதான தானதான தம்பிரான்

ஆவியுய்த்து வாழ்வதற் கியாரெனும் விரும்பினாற்
பூவிலத்தனாசி பொதுவான விசுவாசமே
மூவிய தனைத்தினுக்கு முன்ன நெஞ்சிறுத்துதல்
தேவையான காரியந் திருச்சபைக் குழாங்களே

மூவுதல் = முடிவு

2. இந்த விசுவாச மெவரேனு முழுதாகவே
புந்தியிற் கறைப்படாது போதவைத் திராவிடில்
அந்தமானிட னழிந்தவனுயிர்க்க நர்த்தமாய்ச்
சந்தேகமறச் சதாகாலமுங் கெடுவனே

3. ஆண் மகத்துவங்களை அளாவறச் சுபாவமுஞ்
சேண் மிதத்து நீத்திடாமலே திரித்துவத்தையோ
ராண்மறைக் கணத்தனாகவு மொருத்துவத்தையே
யேண்மிகத் திரித்துவமெனத் துதித்தல் மேரையே

அளாவற = கலக்காமல்; சேண் = தூரமாய்;
நீத்திடாமல் = பிரிக்காமல்; ஏண் = நிலை

தலைவரிசை அட்டவணை

4. இத்தகை யிறைஞ்சல் பொதுவான விசுவாசமே
வித்தமே தெனிற்பிதாவி னாண்மகிமை வேறதே
யுத்தமக் குமாரனா ருடையதும் வேறேபரி
சுத்தரூபி யினுடையதுஞ் சொல வேறானதே

5. ஆயினும் பிதாவுடையவுஞ் சுதனுடையவுந்
தூயவாவியினுடையவுந் தெய்வத்துவத்துடன்
சாயலுஞ் சரிசமான தத்துவமனாதியா
யோய்விலா மகத்துவமனைத்து மொன்றதொன்றதே

6. எப்படிப் பிதாவிருக்கு தோவியைந்த வண்ணமே
அப்படிக் குமாரனும் அரூபியு மிருக்கிறார்
மெய்பிதா விதிப்படார் மெய்யனும் விதிப்படார்
செப்பமிட்ட ரூபியுஞ் சிரிட்டிக்கப்படாதவர்

7. தந்தையா ரளவிடப் படாதவர் பிதாவுட
மைந்தனா ருமேவகுத் தளவிடப்படாதவர்
அந்தநேர் பரிசுத்தாவியு மளவறுக்கவே
யுந்திடாத விந்தையாள ருண்மை யுண்மை யுண்மையே

8. வலபிதாவு நித்தியர் மைந்தனாரு நித்தியர்
பலவரங்களைத்தரும் பரிசுத்தாவி நித்தியர்
இலகுநீதியேனு மூன்று நித்தியரெனத்தகா
துலகனாதி நித்தியத்த ரொன்ற தொன்ற தொன்றதே

9. அந்தவாய்மை மூன்றள விடப்படார்களுமலப்
பந்தமூன்று சிஷ்டிக்கப் படாதவர்களுமல
விந்தையி னொரேயொரு விதித்திடப்படாதவர்
சுந்தரத்தொரே யளவிடப்படாத சோதியே

10. அப்பிரகார மப்பனார் சமஸ்த வல்லபத்தினர்
தப்பறக் குமாரனுஞ் சமஸ்த வல்லபத்தினர்
துப்பரூபியுஞ் சமஸ்தவல்லபத்தர் தோற்றலால்
ஒப்பதற்ற மூவரன்றோரே சமஸ்தவல்லவர்

11. அத்திறத்தி லத்தனார் தேவனே குமாரனு
முத்ததேவனே பரிசுத்தாவியாருந் தேவனே
சித்திரமிதேனு மூன்று தேவர்களெனத்தகா
தொத்துணர்ந்து நொக்குவீர் தெய்வ மொன்ற தொன்றதே

12. அத்தகை பிதாவுமாண்டவர் குமாரனாண்டவர்
சுத்தமே செயும் பரிசுத்தாவியாரு மாண்டவர்
இத்தகமையேனு மூன்றாண்டவ ரெனத்தகா
தொத்துணர்ந்தறியு மினோராண்டவ ரொராண்டவர்

13. ஏனெனிற் றனித்தனித் தொவ்வொருத்தரையுமே
ஆனதற்பராபரன் ஆண்டவரென்றுஞ் சொலி
ஞானமுற் றறிக்கைசெய நாங்களெங்களின் கிறிஸ்து
மான சத்தியத்தினா லுடந்தையாய் வயங்குதல்

14. எப்படி யோவப்படியே மூன்று தேவரென்கவும்
அப்புற மூன்றாண்டகைய தாயிருப்பதாகவுஞ்
செப்புதற் றகாதெனத் திருத்தமாக நம்முட
மெய்ப்பொதுவின் மார்க்கமே விலக்குதறிவீர்களே

15. அப்பனா ரொருத்தனா லுண்டாக்கப்பட்டவரலச்
செப்பும் வாய்மையாற் சிருட்டிக்கப்பட்டவருமலத்
தப்பிலாமையே சனிப்பிக்கப்பட்டவருமல
இப்படியிருப்பதே ஏகமெய்ப்பராபரம்

16. மைந்தனார் பிதாவினால் மாத்திரமிருக்கிறா
ருந்தினின்று நோக்குவீ ருண்டாக்கபட்டவரலச்
செந்துக்களுக் கொப்பதாய்ச் சிருட்டிக்கப்பட்டோரலத்
தந்தையின் கணின்றுமேதான் சனிக்கப்பட்டவர்

17. ஆவியோ பிதாவினாற் குமாரனாலும் வைகிறார்
ஓவியங்களாகவே யுண்டாக்கப்பட்டவரல
சீவசிஷ்டியுமலச் செனிப்பிக்கப்பட்டோரல
மேவியே புறப்படுகிறா ரிதறிவீர்களே

18. அத்தகமையே யொரேபிதா மூன்றுபிதாக்களன்
றுத்தமத்தொரே குமாரன் முக்குமாரனுமல
சுத்திகரிக்கின்ற வரொரே பரிசுத்தாவியே
பத்திரங் கவனியும் பரிசுத்தாவிமூன்றல

19. இந்தமெய்த் திரித்துவத்திலே யொருதர்க் கோர்தரே
முந்தினவருமிலை முறபிந்தினவருமிலை
விந்தையி னொருத்தருக்கு மேலொருத்தரென்னவே
தந்தனி லுயர்ந்தவருந் தாழ்ந்தவருமில்லையே

20. ஏனெனி லிம்மூவரும் அனாதி காலமாகவே
தானொருமித்தே யனைத்தினுஞ் சரிசமானமா
யீனபற்றிருக்கிறார்கள் என்பது சுபாவமே
மானிட குழாங்களே வகுத்ததறிகுவீர்களே

21. அத்தகையனைத்தினுமுன் சொல்லியதிடத்திலொ
ருத்துவத்தையே திரித்துவத்தினு முச்சத்திரித்து
வத்தையே யொருத்துவத்தினும் வணங்கவேண்டிய
துத்தமப்பிரமாண மீதுண்மை யுண்மை யுண்மையே

22. ஆகையா லிரட்சிக்கப்படுவதற்கு வேண்டினோ
னேகசத்தியத்தி லிவ்விதந் திரித்துவத்தையே
யூகமாய்ச் சிந்திக்கவேண்டும் உத்தமத்திலுத்தமம்
வாகதான காரிய மாற்றதொன்று மில்லையே
அனாதி திருவிரக்கத்தை சூரியம்
அற்புத வற்புதப் பரமாச்சரியம்

வேறு

23. அப்புறம் நமதாண்டவரான
அருமைக் கிறிஸ்தேசு நாதனாரின்
றப்பிலா மனுடவதாரத்தை நீ
தானமாய் விசுவாசிப்பதுதானே
செப்பமே நித்திய இரட்சிப்புக்குத்
தேவையானதுவே திருச்சபையே
ஒப்பிலான் மாங்கிஷத்தில் வெளியான
உன்னதப் பரமரகசியந்தானே

24. ஆவிப் பராபரன்றன் சுதனான
அண்ணல் கிறிஸ்தேசு நாதர்தானே
தேவனு மனுடனுமா யிருந்தல்
திடமென் றுறுதி கொண்டறிவிப்பதே
ஓவிய நிதான விசுவாசமாமே
உலகங்க ளுண்டாகு முன்னர்தானே
சீவப் பிதாவின் சுபாவத்தினாற்
றேவனாய்ச் செனிக்கப்பட்டவராமே

25. மாதாவுடைய சுபாவத்தாலே
வையகத்தில் மனுடனாகத் தோன்றினோர்
கோதேது குறையற்ற தேவனாரே
குறையற்ற மனுடனு மானாரே

வேதா விவேகமுள்ள ஆத்துமமு
மெய்மனுஷ மாங்கிஷமு முடைத்தோரே
தாதாவுக்குச் சரியானவரே
தம்முடைய தேவத்துவத் தன்மைதானே

26. தமது மனுஷ தத்துவத்தின்படியே
தந்தை பிதாவுக்குத் தாழ்ந்தவரே
விமலனு மனுடனுமாயிருந்தும்
வேறாமிருவரல்ல ஓர் கிறிஸ்துவே
அமலத்துவமேதையாக மாறு
பட்டதினா லொருவ ரல்லத்தானே
சமயத்தெழுந்து தெய்வமே மனுஷ
தத்துவத்தை யெடுத்ததினாற்றானே

27. சுவாபத்தை யொருமிக்க கலந்ததினாற்
றுய்ய கிறிஸ்துவும் ஒருவரல்ல
அவாவுக்கடங்கா அற்புதமான
ஆண்மகிமையின் அயிக்கத்திற்றானே
விவேகமுடைத்தான ஆத்துமாவு
மேதையுமொரே மனுடனானதுபோ
லிவாறாகத் தேவனுமனுடனுமோ
ரேககிறிஸ்துவா யிருக்கின்றதே

28. பாடுபட் டெங்களீடேற்றத்துக்காய்ப்
பாதாளத் திலிறங்கி மூன்றாம்நா
ளீடுடன் மரித்தவரிடத்திலிருந்
தெழுந் தருளிப் பரத்துக்கேறித்தானே
நீடுஞ் சமஸ்தவல்லமைத் தேவ
நித்திய பிதாவலத்தில் வீற்றிருக்கிறார்
நாடியே சீவியர் மரித்தோரையும்
நடுவிட அங்கிருந்து வருவாரே

29. இறுதியி லவர்வரும்போது மனுட
ரெல்லாருந் தங்கள் சரீரத்தோடே
மறுபடியு மெழுந்து தங்கள் கிரியை
வழிப்படு கணகொப்புக் கொடுப்பார்கள்
நறுமை செய்தோர் நித்திய சீவனிலும்
நன்றலார் நரக நித்தியாக்கினியிலும்
அறுதி அறுதியாய்ப் போவார்கள்
அனந்த வனந்த சதாகாலந்தானே

30. இதே பொதுவான விசுவாசமாமே
இத்தையுண்மையாய் விசுவாசித்தாலன்றிப்
பதாரத்தொருவன் கடத்தேறி ரட்சிக்கப்
படக்கூடாது கூடாதுதானே
பிதாவுக்குஞ் சுதனுக்கும் அருபியர்க்கும்
பெருமை மகிமை யுண்டாவதாக
சதாகாலத் தாதியி லிப்போதெப்போதுந்
தங்கிய பிரகாரமே ஆமனாமன்

2. காண்டம். ஜெபமாலை 8 வரை செய்யுள் 128

9. ஜெபமாலை

நிசியா சங்கத்தின் விசுவாசப் பிரமாணம்

விருத்தம்

பரமுல குந்தரு மொருவனை யன்பொடு
பழுதற நம்புகிறேன்
நரருருல கம்பட மரிதரு தந்தையர்
சுதனையும் நம்புகிறேன்
அருபியை நம்புகி றேனதி னைந்தையு
முறுதியி னம்புகிறேன்
றரணமு வந்துன தடிமைகொ ளுந்துதி
தருமசி தம்பரமே

திவிய பிதாச்சுதனாவியுமான
திரியேக வஸ்துவுக்குத் தோத்திரமே

பரமண்டலம் பூதலமுங் காணப்
பட்டதுங் காணப்படாதது மான
சரமசரஞ் சராசரங்களென்ற
சகல வஸ்துக்களையுமே படைத்த
பெருமைச் சருவவல்லமை யுடைத்த
பிதாவாகிய பராபரனான
ஒருவனையே விசுவாசிக்கிறேன்–
உறுதியுறுதி உறுதியிற்றானே – திவிய

2. பராபரன் றன்னொரே பேறான
பாலனொரே யாண்டவருமான
பிரானமதேசுக் கிறிஸ்துவையே
பிரியமுடன் விசுவாசிக்கின்றேன்
சராசர சகல உலகங்களுக்கு முன்

செய்யுள் அட்டவணை

றமது பிதாவிடத்திற் சனிக்கப்பட்டோர்
நிராணியனிடத்தி னிராணியனுபாய்
நித்திய பிரகாசத்திற் பிரகாசமுந்தானே – திவிய

நிராணியன் = கடவுள்

3. மெய்யான பரமேசுரனிடத்தில்
மெய்யான தேவனாய்ச் செனிக்கப்பட்டோர்
உய்யாதிராதொரு காலத்தினும்
உண்டாக்கப்பட்டவ ரல்லத்தானே
ஐயாபிதாவின் சுபாவத்தையே
ஒய்யாரமா யுடைத்தானவரே
எய்யாத துண்டுமோ இவரைக்கொண்டே
எல்லா முண்டாக்கப்பட்டதுதானே – திவிய

4. நரராகிய நமக்காகவிவரே
நம்முடைய இரட்சிப்புக்குமாகத்தானே
பரமண்டலத்திருந் திறங்கியுமே
பரிசுத்த ரூபியகற் கன்னியாஸ்திரி
மரியாளிடத்திற் சரீரத்தையே
எடுத்துக்கொண்டு மனுடனானாரே
குருசினிற் பொந்தியுப் பிலாத்துவின்கீழ்
கொடியருக்கா யறைப்பட்டாரே – திவிய

5. பாடுபட்டடக்கப்பட்ட மூன்றாம்நாள்
பரிசுத்த வேதாட்சரத்தின்படியே
ஈடுடனே யுயிர்த்து வானங்களில்
ஏறிப்பிதாவின் வலபாரிசத்திலே
கூடியே வீற்றிருக்கிறார் சீவியர்
வீடித பெயரையும் நடுத்தீர்த்து
வீடுதர மகிமையோடு வருவார்
மீண்டிவரி ராச்சியத்துக் கில்லை முடிவே – திவிய

வீடியர் = மரித்தோர்

தலைவரிசை அட்டவணை

6. பரிசுத்த ரூபிச் சருவேசுரனைப்
பத்தியுடனே விசுவாசிக்கின்றேன்
அருள்செய்து சீவனைத்தருகிறவ
ராண்டவருமாக விருக்கின்றாரே
பெருமை பிதாவிடத்துஞ் சுதனிடத்தும்
புறப்படுகின்ற பிரதாபத்தாரே
மருவிப்பிதாவோடு மைந்தனோடும்
வணங்கப்படு மகிமை யுடைத்தோரே – திவிய

7. தீர்க்கதரிசிகளைக் கொண்டோதினார்
திடத்தொரப்போஸ்தலப் பொதுச்சபையும்
பார்க்குளுண்டென்று விசுவாசிக்கின்றேன்
பாவப்பொருத்தற் கொரே ஞானஸ்நானம்
ஆர்க்குமுண்டென் றறிக்கை செய்கிறேனா
ளருகின ருயிர்த்தெழுதற்கும் வரப்போம்
ஏர்க்கையுலகத்தின் சீவனுக்கும்
எதிர்நோக்கி நோக்கியிருக்கின்றேனே – திவிய

நாளருகினர் = மரித்தோர்

2. காண்டம். ஜெபமாலை 9 வரை செய்யுள் 135

10. ஜெபமாலை

திருச்சபையூஞ்சல்

விருத்தம்

விருட்சமொன் றாகா தென்று
விலக்கின விமலன் மைந்தன்
பரிட்சை பார்த்தேவை தின்ற
பழவினை தீர்த்தா னென்றே
குருச்சபை யோரை வாழ்த்திக்
குலவிவா கத்தோர் கேட்கத்
திருச்சபை யூஞ்சல் பாடத்
திவ்விய ரூபி காப்பாம்

பொன்னுலகும் பூவுலகும் படைத்தானந்த
பூரணமாய் நின்றபரா பரனைப்போற்றி
உன்னதனா ராதாமின் குலத்தைமீட்க
ஒருசுதனை யனுப்புவித்த உண்மையாலே
இந்நிலத்துக் கொளிவுதித்த தேஜைமக்கள்
எல்லவருங் கிருபைபெற்றார் என்றேதேர்ந்து
பன்னுகலைக் கிறிஸ்தவர்நீர் ஆடிரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல்

2. ஆதிசுதன் மானிடவ தாரமானார்
அம்புவியைத் தமக்குறவ தாக்கிக்கொண்டார்
வாதையுறப் பாடுபட்டார் சிலுவைமீது
மரித்தடக்கப் பட்டுயிர்த்தார் வான்போய்நின்றார்
நீதியெல்லாம் நிறைவேற்றி முடித்தாரொன்றும்
நிலுவையில்லை வாழ்வனைத்துஞ் சம்பாதித்தார்
பாதகர்க்குப் பயமினியேன் ஆடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல்

3. வானுலகை தூதருக்காய்ப் படைத்தநாதன்
மண்ணுலகை மானிடர்க்காய் வகுத்தாரேனும்
ஈனமுறும் பாவிகளின் அகந்தைக்காக
எரிநரகத் தையும்படைத்தங்க முத்தாதெம்மைத்
தானவரோ டேயிருத்திச் சரியதாக்கித்
தாரணியும் வானுலகஞ் சமனாய்ச்செய்யப்
பானுவெனக் கிறிஸ்துதித்தார் ஆடீரூஞ்சல்
பாபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல்

4. காடவர்க்கு நாடெமக்குத் தலமாயிற்று
கனத்தமா ளிகைநமக்கு அவர்க்கோகொட்டில்
பூடணங்கள் புற்பமெத்தை பொன்னுமெத்தை
புண்ணியர்க்கோ கல்லுமெத்தை புல்லுமெத்தை
மாடுயர்ந்த வலமையுண்டு தலைமையுண்டு
மன்னவர்க்கோ கந்தையுண்டு நிந்தையுண்டு
பாடுமுண்டு பலனமக்குண் டாடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல்

5. சீரான வாழ்வெதல்லாம் எங்கட்குண்டு
சேனையுண்டு தானையுண்டு செங்கோலுண்டு
நேரான பந்துக்களின் கூட்டமுண்டு
நித்தியகல் யாணசோ பனங்களுண்டு
ஊராளு மாதிபத்தியந் தானுமுண்டு
உத்தமர்க்கோ என்னவுண்டிங் கொன்றுமில்லை
பாரீரோ சிநேகமிதென் றாடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள் நீர்ஆடீரூஞ்சல்

6. வச்சிரத்தி னாலிழைத்த கால்கணாட்டி
மரகதத்தி னாலரிய விட்டம்போட்டுத்
தற்சீசின் ரத்தினத்தாற் பலகைசேர்த்துத்
தங்கச்சங் கிலிகள்தக தகெனப்பூட்டி
உச்சிதமுத் தாபலத்தாற் கொடுங்கைகூட்டி
உன்னதபத் திராசனத்துக் கொப்பதாக்கிப்

பட்சமுடன் கிறிஸ்துவைக் கொண்டாடீரருஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடிரூஞ்சல்

கொடுங்கை = தேரின்கொடுங்கை

7. மட்டதில்லா மகத்துவப்பு தெருசலேமின்
வாழ்வனந்தம் வாழ்வனந்தம் வளமோகோடி
கட்டுயர்ந்த சுத்தக்கண் ணாடித்தங்கங்
கனத்தபளிங் கொளிவஸ்பிக் கற்போற்காந்தி
திட்டமதின் மதிட்பனிரண் டஸ்திவாரந்
திவ்வியமாம் விலையுயர்ந்த ரத்தினங்கள்
பட்டணத்தின் மகிழ்ச்சிபெற ஆடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடிரூஞ்சல்

8. உண்டான நன்மையெல்லாம் நமக்குண்டாச்சு
உம்பரமும் அம்பரமும் நமக்கென்றாச்சு
அண்டசரா சரங்களெல்லாம் நமக்கேசொந்தம்
அனாதிசுதன் றானும்நமக் கருளப்பட்டோர்
கண்டகண்ட சிஷ்டியெல்லாம் நமக்கல்லாமற்
கடவுளுக்குத் தேவையென்ன கவைகளென்ன
பண்டோரே நன்றியறிந் தாடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடீரூஞ்சல்

9. யேசுவினால் மேன்மைபெற்றோங் கிருபைபெற்றோம்
இன்முறப் பரிசுத்தா வியையும்பெற்றோம்
யேசுவினாற் புத்திரசுவி காரம்பெற்றோம்
எத்தனையோ பாக்கியங்கள் எல்லாம்பெற்றோம்
யேசுவினால் நித்தியசீ வனையும்பெற்றோம்
எண்ணூழி காலமும்வாழ்ந் திருக்கப்பெற்றோம்
பாசம்வைத்துக் கிறிஸ்தவர்நீர் ஆடீரூஞ்சல்.
பாபரனின் பிள்ளைகள்நீர் ஆடிரூஞ்சல்

தலைவரிசை அட்டவணை

10. சத்தியத்தின் மேலான பாதைகண்டோஞ்
சாங்கமா யுலகத்தைத் தள்ளிப்போட்டோம்
பித்தர்களின் சாஸ்திரத்தைக் குலைக்கச்செய்தோம்
பிசாசினா டம்பரங்கள் அனைத்தும்விட்டோ
மெத்தமெத்தக் கிருபைபெற்றோந் தேறிப்போனோம்
வேதநா யகன்பாடல் விரும்பிக்கொண்டோம்
பத்தியுள்ளோர்க் கென்னகுறை ஆடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள்நீர் ஆடிரூஞ்சல்

2. காண்டம். ஜெபமாலை 10 வரை செய்யுள் 145

முற்றும்

ஜெபமாலை (Jepamalai)

by

வேதநாயக சாஸ்திரியார் (Vedanayaga Sastriyar)

THERE IS NO COPY RIGHT

but quotations may please be properly attributed

This digital edition published in 2014

by

Judah S. G. Vincent

Grace Cottage

No. 11 & 12 North Street (New No. 21)

V. P. Colony

Ayanaavaram

Chennai – 600023

India

Email: **judah.vincent@gmail.com**

Web: **www.vedanayagamsastriar.com**

Phone: **+91 44 2674 1962**

Mobile: **+91 99829 86320**

Composed by **Shem Vedanayagam Sastriyar**:

1810 – 1855

First published in print in **1974** by **Shem Vedanayagam Sastriyar**, Evangelical Hall, Thanjavur

மின்னூல் கோர்வை: **எஸ்.கே. இராசன்**, டக்கரம்மாள்புரம். (திருநெல்வேலி-7) E-Mail: skrajann@gmail.com

தலைவரிசை அட்டவணை